# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச் சுவடுகள்

( பகுதி-3)

## 1) திட்டை சுப்ரமணியத்தின் காலத்தினாற் செய்த உதவி

என் தந்தையாரின் மாதுலர்கள் இருவர். அதில் மூத்தவர் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் என்று அழைக்கப்பட்டு வந்த சீமா அய்யங்கார். அவருடைய பத்தினியின் பெயர் ருக்மிணி. இன்னொரு மாதுலர் திருநாமம் கிருஷ்ண அய்யங்கார். கீழைப் பனையூரில் இவருடைய எதிர்வீட்டில் இன்னொரு கிருஷ்ண அய்யங்கார் வசித்து வந்ததால் வயதில் மூத்தவரான அவரை பெரிய கிருஷ்ண அய்யங்கார் என்றும், அவரைவிட வயதில் குறைந்தவரான இவரை சின்னக் கிருஷ்ண அய்யங்கார் என்றும் அழைத்துவந்தனர்.

நான் பிறப்பதற்கு முன்பே சீமா அய்யங்கார் பரமபதித்து விட்டார். தந்தையாருக்கு பெரிய மாமாவான சீமா அய்யங் காரிடம் அளவு கடந்த மரியாதையும் மதிப்பும் உண்டு. சிறுவயதில் தன் தகப்பனாரை இழந்தபின்பு, பெரிய மாமாவின் அரவணைப்பில் வளர்ந்துவந்தார் என் தந்தையார். அவருக்குத் தன்னுடைய பெரியமாமியான ருக்மிணியிடம் பாசம் அதிகம். கணவனை இழந்தபிறகு என் தந்தையாரின் பெரியமாமியான ருக்மிணி தஞ்சாவூரில் வசித்து வந்தார். ருக்மிணியின் தமக்கை குமாரர் ஸ்ரீரங்காசார்யர்.

இவர் வெண்ணாற்றங்கரை நிலச்சுவான் தாரான ஸ்ரீ.உ.வே. சம்பத் அய்யங்கார் என்பாரிடம் வேலை பார்த்து

வந்தார். ஸ்ரீ.உ.வே. சம்பத் அய்யங்காருக்கு நெருங்கிய நண்பராய்த் திகழ்ந்தவர் திட்டை சுப்ரமணியம் என்ற சட்டமன்ற உறுப்பினர். இவர் திட்டை தொகுதியிலிருந்து 1952, 1957 மற்றும் 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். திட்டை சுப்ரமணியத்தின் பரிந்துரையால் ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழிருந்த ஒரத்தநாடு முத்தம்மாள் சத்திரத்தில் சேர்வதற்கான அனுமதி கிடைத்தது.

## 2) மராட்டிய மன்னர்களின் கொடை

ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ் ஒரத்தநாடு மற்றும் ராஜாமடம் ஆகிய இரு ஊர்களில் இருந்த மராட்டிய மன்னர் களால் ஏற்படுத்தி வைக்கப்பட்ட சத்திரத்தில் ஒவ்வொரு சத்திரத்திலும் 400 மாணவர்கள் தங்கியிருந்து கல்வி பயின்றனர். இவர்களுக்கு உணவு, இருப்பிடம், கல்வி, பயில்வதற்கான கட்டணம் ஆகிய அனைத்தும் ஜில்லா போர்டின் ஆளுமைக்கு உட்பட்ட சத்திரம் நிர்வாகத் தினரால் வழங்கப்பட்டது. அன் றைய தினம் மராட்டிய மன்னர்களால் ஏற்படுத்தி வைக்கப் பட்ட இந்த அறக்கட்டளைகள் இல்லாமலிருந்தால் நான் உயர் நிலைப் பள்ளிக் கல்வியைப் பெற்றிருக்க இயலாது.

அவ்வாறே திட்டை சுப்ரமணியம் செய்த உதவியையும் என்னால் மறக்க இயலாது. திட்டை சுப்பிரமணியம் திருக்குலத் தார் என்று அழைக்கப்படும் ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்தவர். அவரை நேரில் பார்த்து கடிதம் பெற்று ஜில்லா போர்டு அலுவலகத்திற்குச் சென்று அனுமதிச் சீட்டு பெறு வதற்கு வெண்ணாற்றங்கரை சம்பத் ஐயங்காரும், ஸ்ரீரங்கா சார்யரும் பெரிதும் உதவிபுரிந்தவர்.



## 3) திரு. பன்னீர்செல்வத்தின் ஈடு இணையற்ற சமூக நலப் பணிகள்

தஞ்சையின் தவப்புதல்வர்களில் ஒருவர் திரு.பன்னீர் செல்வம். அவரே மராட்டிய மன்னர்களாலும் அரச குடும்பத் தினர்களாலும் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளைகளில் குடி கொண்டிருந்த ஊழலை ஒழித்தார்.

தஞ்சை மாவட்டத்தில் செல்வபுரம் என்ற சிற்றூரில் புகழோடு தோன்றிப் போராட்டத்தோடு வாழ்ந்து, தியாக வாழ்வை நிலைநிறுத்திச் சென்றவர் திரு.பன்னீர் செல்வம். தஞ்சை நகராட்சித் தலைவராக, சென்னை மாநில சட்டமன்ற உறுப்பினராக, தமிழ்த் தளபதி என்று எல்லாச் சிறப்பி னையும், பெற்று பெருமைக்குரியவராகத் திகழ்ந்த பன்னீர் செல்வம் 1.6.1888இல் பிறந்தார்.

1918இல் தஞ்சை நகராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். இவரது நிர்வாகத்தின் கீழ் தஞ்சை நகராட்சி நிர்வாகம் மிகச் சிறப்பான நிலையை எட்டியது. தஞ்சை வட்டக் கழகம், தஞ்சை மாவட்டக் குழு ஆகிய வற்றில் உறுப்பினராகப் பணியாற்றினார். கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். 1924 முதல் 1930 வரை தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராகவும் (District Board President) பணி புரிந்தார்.

தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக இவர் சிறப்பாகப் பணிபுரிந்தார். மாநில அளவில் இவரது புகழ் பரவியது. இந்தியாவில் அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட 'சைமன் கமிஷன்' தஞ்சை மாவட்டக் கழக நிர்வாகத்தை நேரில் காண வந்தது. அந்த அளவிற்கு இவரது நிர்வாகம் புகழ் பெற்றிருந்தது.

திருவையாறு கல்லூரியில் இவர் கவனம் செலுத்தி சாதி வேறுபாடில்லாமல் எல்லா மாணவர்களையும் அங்கு சேர்த்துக் கொள்ளச் செய்தார். தொடக்க நிலையில் வடமொழி வகுப்புக் களை ஏற்படுத்தினார். பின் தமிழ் வகுப்புகள் தொடங்க ஏற்பாடு செய்தார். ஸம்ஸ்க்ருதக் கல்லூரி என்ற பெயரை மாற்றி அரசர் கல்லூரி என்ற புதுப்பெயரைச் சூட்டினார். கடும் எதிர்ப்புக்கிடையே இதைச் செய்து முடித்தார்.

தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக இருந்தபோது மாவட்டக் கழக அலுவலகக் கட்டிடத்தினை எழுப்பினார். 22.08.1925ஆம் நாள் பனகல் ராஜாவைக்கொண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1927ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டிடத்திற்கு 'பனகல் கட்டிடம்' என்று பெயரிட்டார். 4.6.1928இல் இவர் இராவ் பகதூர் பட்டம் பெற்றார். சட்ட சபையில் அரசின் தவறுகளை இவர் கண்டித்து பேசும் நேரங் களில் ராஜாஜியும் சரி, மற்ற அமைச்சர்களும் சரி, பதில் அளிக்க முடியாது மௌனம் காப்பதே வழக்கமாக இருந்தது. **காரணம் உண்மை என்று அறிந்தால் அன்றி எத்தகைய குற்றச்சாட்டு களையும் எழுப்ப மாட்டார் என்பதை அவர்கள் அறிவார் கள்.** தஞ்சை விவசாயிகளுக்காகச் சட்ட மன்றத்தில் பேசி தேவையான நீர்ப்பாசன வடிகால் வசதிகளைச் செய்தார். மிக உயர்ந்த பதவிகளை வகித்து வந்த போதிலும், அனைவரிடமும் மிக எளிமையாகப் பழகும் இயல்புடையவர்.

1937இல் நீதிக் கட்சி மந்திரிசபை அமைத்தபோது திரு. பன்னீர் செல்வம் சென்னை மாநிலத்தின் நீதி, உள்துறை அமைச்சராகப் பணியேற்றார். பின்னர் சட்டமன்றத்தில் எதிர் கட்சித் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

1940ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் போர்க்கால நிலை



யால் அமைந்திருந்த பிரிட்டிஷ் அமைச்சரவையில் இந்திய விவகார அமைச்சருக்குத் துணையாக அமைக்கப்பட்ட ஆலோ சனைக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். நீதிக் கட்சியின் நியாயத்தை ஆங்கில அரசு உணரச் செய்வார் என்ற எதிர்பார்ப்புடன் அக்கட்சியினர் எழுச்சி கொண்டிருந்தனர். இப்பதவியை பொறுப்பேற்க 1.3.1940 ஆம் நாள் விமானத்தில் சென்றபோது விமானம் ஓமான் கடலில் விழுந்து விபத்திற் குள்ளாகியது. தனது 52ஆவது வயதில் விமான விபத்தில் இவர் உயிர்நீத்தார்.

## 4) திரு. பன்னீர் செல்வத்திற்கு நான் கடமைப் பட்டுள்ளேன்

இவருடைய காலத்தில்தான் மராட்டியர்களால் ஏற் படுத்திவைக்கப்பட்ட தர்ம சத்திரங்களில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதுவரை இந்தச் சத்திரங்களில் வழிப் போக்கர்களுக்கு உணவு அளிப்பது, உலுப்பைகள் வழங்குவது, விழாக் காலங்களில் அன்னதானம் செய்வது போன்ற பணிகள் மட்டுமே நடைபெற்றுவந்தன. திரு. பன்னீர்செல்வத்தின் தொலைநோக்குப் பார்வையால், ஏழ்மையின் பிடியில் சிக்கிக் கொண்டிருந்த என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக் கல் வியைக் கற்க முடிந்தது.

## 5) தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர்கள்

பிற்காலச் சோழர்கள் ராஜராஜசோழன் காலம் வரை தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்துவந்தனர். அதன் பிறகு, ராஜேந்திரசோழன் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் சோழமன்னர்களின் தலைநகரமாக மாற்றம்

பெற்றது. அதன்பிறகு பழையாறையைத் தலைநகராகக் கெண்டு சோழர்கள் ஆட்சிபுரிந்துவந்தனர். சோழர்களுக்குப் பிறகு பாண்டிய மன்னர்களின் ஆட்சியின் கீழ்த் தஞ்சை இருந்து வந்தது. பாண்டியர்களுக்கிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டம் காரணமாகக் குழப்பங்கள் நேர்ந்தன. முகம்மது பின் துக்ளக்கின் படையெடுப்பிற்குப் பிறகு மதுரை சுல்தான் களின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது தஞ்சை. கி.பி.1370 தொடங்கி 1600 வரை விஜயநகர அரசர்களும், 1600 தொடங்கி 1676ஆம் ஆண்டுவரை நாயக்க மன்னர்களும் தஞ்சைப் பகுதியை ஆண்டு வந்தனர். விஜயராகவ நாயக்கன் காலத்தில் செஞ்சியிலிருந்த ஏகோஜி 3.2.1675ஆம் நாள் தஞ்சை மீது படையெடுத்து வெற்றி கொண்டான்.

## 6) மராட்டிய மன்னர்கள் வரலாறு

பீஜப்பூர் சுல்தானிடம் படைத்தலைவனாகப் பணி புரிந்த ஷாஜிக்கும், ஜீஜாபாய்க்கும் பிறந்தவர் சத்திரபதி சிவாஜி. ஷாஜிக்கும், அவருடைய இரண்டாம் மனைவியான துக்காபாய் மூலம் பிறந்தவர் வெங்காஜி என்ற ஏகோஜி. தனது தந்தையைப் போலவே, ஏகோஜியும், பீஜப்பூர் சுல்தானிடம் படைத் தலைவனாகப் பணிபுரிந்தார். ஏகோஜி தஞ்சையை ஆண்ட நாயக்கர்களை வீழ்த்தி தஞ்சையைக் கைப்பற்றித் தானே ஆளத் தொடங்கினான்.

ஏகோஜியின் அமைச்சர் இரகுநாத நாராயண அனுமந்த் பந்த், தனது அமைச்சர் பதவியைவிட்டு விலகி, காசிக்கு தன் குடும்பத்துடன் செல்வதாகக் கூறிவிட்டு, பீஜப்பூர் சென்று பின்னர் சிவாஜியை சந்தித்தார். ஏகோஜியிடம் உள்ள ஷாஜிக்குரிய சொத்துக்களில் சிவாஜிக்கும் பங்குள்ளது எனவும், தனது பங்குக்காக தஞ்சைமீது படையெடுத்துப் போகுமாறு சிவாஜியை ரகுநாத நாராயண அனுமந்த்பந்த் வற்புறுத்தினார்.



சிவாஜியும் கி.பி.1677ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்தில் படையுடன் புறப்பட்டு, வெள்ளாற்றைக் கடந்து வந்து, கொள்ளிடக்கரையில் தஞ்சைக்கு வடக்கே பத்து கல் தூரத்திலிருந்த திருமழபாடியில் தங்கினார்.



ஏகோஜி சிவாஜி யைச் சந்திக்க தொடக்கத்தில் தயங்கினாலும், பின்னர் திருமழபாடியில் சிவன் கோயிலில் ஜூலை மாதத்தின் நடுவில் சந்தித்தார். சிவாஜி, ஷாஜியின் சொத்தில் பாதியைத் தனக்கு அளிக்குமாறு வற்புறுத்தினார். ஏகோஜி எவருக்கும் தெரியாமல் ஜூலை 23ஆம் நாள் இரவு ஆற்றைக் கடந்து தஞ்சைக்குத் திரும்பிவிட்டார். சிவாஜி தனது அலுவலர்களை தஞ்சைக்கு அனுப்பி ஏகோஜியை அழைத்து வரக் கூறினார். ஆயினும் ஏகோஜி செல்லவில்லை.

ஷாஜியின் சொத்துக்களை முன்னர் கண் காணித்து வந்த ரகுநாத நாராயண அனுமந்த் பந்த்திடம் ஏகோஜியை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தும்படி கூறிவிட்டு, சிவாஜி தனது தலைநகர் திரும்பிவிட்டார். சிவாஜி தலைநகருக்குத் திரும்பி விட்டதை அறிந்ததும், ஏகோஜி அச்சம் நீங்கி, வாலிகண்ட புரத்திலிருந்த சிவாஜியின் படையைத் தாக்கினார். சிவாஜியின் படையினர் தஞ்சைப் படையின் தாக்குதலைத் தாங்கமுடியாது தோற்று பின்வாங்கினர். ஆனால் நள்ளிரவில் தஞ்சைப் படை யினரின் முகாமில் தூங்கிக்கொண்டிருந்தபோது சிவாஜியின் படையினர் தாக்கி சேதத்தை உண்டாக்கிவிட்டனர். இதனால் ஏகோஜி, சிவாஜியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள இணங் கினான். ஏகோஜியின் மனைவி தீபாபாயின் ஆலோச னையின் பேரில், ஏகோஜி ரகுநாத நாராயண அனுமந்த் பந்த்தை தஞ்சைக்கு வரவழைத்து, அவருடைய அறிவுரை களை ஏற்றான்.

செஞ்சிப் பகுதியையும், கோலார் பகுதிகளையும் சிவாஜி எடுத்துக்கொள்வதுடன் ஏகோஜி, சிவாஜிக்கு 6 லட்சம் ரூபாயைக் கொடுப்பது என்றும் தஞ்சை முதலிய பகுதிகளை யும், பெங்களூர், ஹாஸ்கோட் ஆகிய ஊர்களை ஏகோஜி எடுத்துக்கொள்வது என்றும் உடன்பட்டனர். இந்த உடன் படிக்கையின் காரணமாக தஞ்சை மற்றும் அதனை அடுத்துள்ள பகுதிகளை ஆட்சிபுரியும் உரிமையை ஏகோஜி நிலை நாட்டிக் கொண்டார். தஞ்சைமராட்டிய மன்னர்கள் வம்சத்தின் முதல் மன்னராக ஏகோஜி விளங்கினார்.

ஏகோஜி பல சிக்கல்களை சமாளிக்க வேண்டி யிருந்தது. மதுரையை ஆண்ட ராணி மங்கம்மாள் ஏகோஜிக்கு எதிராக சூழ்ச்சியில் இறங்கினாள். வாணிகம் செய்ய வந்த டச்சுக் காரர்கள், போர்த்துக்கீசியர்கள், ஆங்கிலேயர்கள் முதலிய வர்களுடைய வர்த்தக கம்பெனியார்களை சமாளித்து நாட்டைக் காக்க வேண்டியிருந்தது.



## 7) ஏகோஜிக்குபின்பு ஆண்ட ஸாஹஜி

ஏகோஜிக்குப்பின் அவரது மூத்த மகன் ஸாஹஜி (1684-1712) தஞ்சை அரசுக் கட்டிலில் அமர்ந்தார். ஏகோஜியின் காலத்தில் இவர் சாக் கோட்டையிலிருந்து ராஜப்பிரதிநிதியாக ஆண்டுவந்தார். இவரது சகோதரன் முதலாம் சரபோஜி, மன்னார்குடிக்கு அண்மையில் இருந்த மஹாதேவ பட்டினத்தில் ராஜப்பிரதி நிதியாக ஆண்டு வந்தார். ஸாஹஜி பீஜப்பூர் சுல்தானின் படைத்தலைவன் முல்லா வின் எதிர்ப் பையும், சுல்பீர்கானின் எதிர்ப்பையும் சமாளித்து வெற்றி பெற்றார். கி.பி.1685இல் இவருக்கு மகன் பிறந்தான். இரண்டாம் ஏகோஜி என்று பெயரிடப்பட்ட இம்மகன் 'பாவாசாகிப்' என்றே அழைக்கப்பட்டான்.

## 8) ஸாஹஜியின் ஆட்சி ஒரு பொற்காலம்

வேங்கடேச கிருஷ்ண தீக்ஷிதர் என்பவர் ஸாஹஜியின் அரசவைப் புலவராகத் திகழ்ந்தார். கி.பி. 1693இல் திருவாச நல்லூர், சுகஜிராஜபுரம் என்ற ஊர்களை அவரது அரச வையில் இருந்த நாற்பத்தாறு புலவர்களுக்கு தானமாக அளித்தார். நாற்பத்தாறு புலவர்களில் வெங்கடேச தீக்ஷிதர் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இம்மன்னருடைய அரசவையில் இசை வித்வானாக, 'கிரிராஜா கவி' என்பவர் இருந்தார்.

இவர் வேதாந்தப் பாடல்களுக்கு இசை வகுத்தவர். யக்ஷகானங்கள் என்ற தெலுங்கு நாடகங்களை இயற்றினார். வடமொழியிலும், தெலுக்கு மொழியிலும் பல நூல்கள் இவர் காலத்தில் தோன்றின. ஆங்கிலேயர்கள் குறிப்பிலிருந்து இவருடைய ஆட்சி காலம் பொற்காலமாகத் திகழ்ந்தது என அறியமுடிகிறது.

## 9) முதலாம் சரபோஜி

ஸாஹஜி கி.பி.1711இல் இறந்தார். இவருக்குப் பிள்ளைகள் இல்லை. சரபோஜி, துக்கோஜி என்ற இரு சகோதரர்கள் இருந்தார்கள். ஸாஹஜியின் மரணத்திற்குப்பின் அவருடைய தம்பி முதலாம் சரபோஜி, அரசு பீடத்தில் அமர்ந்தார். இவரது ஆட்சிகாலம் 1712-1728. இவர் காலத்தில் தான் காவிரி அணையில் (கல்லணையில்) ஏற்பட்ட உடைப்பு சரிசெய்யப்பட்டது.

சதாரா வம்சத்துப் பெண்ணை மணந்த இவருக்கு குழந்தைப்பேறு இல்லாது போயிற்று. இந்த சதாரா வம்சத்துப் பெண் 'ருபி' என்பவளின் குழந்தையை தத்து எடுத்துக் கொண்டாள். ஆனால் மன்னர் இதை ஏற்கவில்லை. இக் குழந்தை வயது வந்த பின்னர் 'காட்டுராஜா' என்ற பெயரில் தஞ்சையை சிறிது காலம் ஆண்டான். மன்னர் கி.பி.1728இல் இறந்த போது அவருடன் சுலோசனாபாய், ராஜன் பாய் என்ற இரு மனைவியர் உடன் கட்டை ஏறினர்.

## 10) துக்கோஜி

முதலாம் சரபோஜிக்கு பிள்ளைப் பேறு இல்லாததால், இவருடைய தம்பி துக்கோஜி தஞ்சைக்கு மன்னரானார். இவர் தஞ்சையை எட்டு ஆண்டுகள் (1728 - 1735) ஆட்சி புரிந்தார். முகம்மதியர்களின் தாக்குதலிலிருந்து மதுரையைக் காத்து, ராணி மீனாட்சிக்கு வழங்கினார். இவர்கள் திருச்சியைத்தாக்கி, அதை கைப்பற்றியதும் தஞ்சையைத் தாக்கினர். இவர்களை சமாளிக்க இயலாத நிலையில் நாட்டில் கலவரம் ஏற்பட்டது. துக்கோஜியின் ஆட்சிக்குப்பின் தஞ்சை ஆட்சியில் சிக்கல்கள் விளைந்தன.



## 11) பாபாசாகேப் ஒரு சந்தேகப் பிராணி

துக்கோஜி கி.பி.1735இல் மரணமடையவே, அவருடைய மூத்த மகன் பாபா சாகிப் என்று அழைக்கப்பட்ட ஏகோஜி தஞ்சை அரியணையில் அமர்ந்தார். இவர் எவரையும் நம்பவில்லை; பெரிய சந்தேகப் பிராணி. இவர் ஆட்சியின் போது சந்தா சாகிப் தஞ்சை மீது படையெடுத்து வந்தான். பாபா சாகிப் உடல் நலக் குறைவாக இருந்த நிலையிலும் எதிர்த்துப் போராடி எதிரிகளை பின் வாங்கச் செய்துவிட்டார். இவர் ஓராண்டு ஆட்சிபுரிந்தாலும் பெருமை குன்றாது அரசாண்டார். கி.பி.1736இல் இவர் மரணமுற்றார்.

## 12) சியோஜியும் பிரதாபசிம்மனும்

பாபா சாகிப் ஆண் சந்ததியில்லாமல் இறந்ததால், இவருடைய மனைவி சுஜன்பாய் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இரண்டாண்டுகள் ஆட்சி புரிந்தாள். அது சமயம், சரபோஜியின் காமக் கிழத்தி 'ரூபி' என்ற வேலைக்காரிக்குப் பிறந்த சுபானா என்பவன் முதலாம் சரபோஜியின் மகன் என்று கூறிக்கொண்டு அரசு உரிமைக்கு போட்டியிட்டான். இவன் காட்டு ராஜா என்ற பெயருடன் தேவனாம் பட்டினத்திலிருந்து ஆங்கில கம்பெனி யரின் உதவியுடன், சுஜன் பாயை நீக்கிவிட்டுத் தஞ்சை ஆட்சியைக் கைப்பற்றினான். இதனால் பாபா சாகிப்பின் தம்பியான சியாஜி பிரஞ்சுக்காரர்களுடைய உதவியை நாடி னான். அவர்கள் உதவியுடன் சியாஜி தஞ்சை மன்னன் ஆனார். இவன் ஓராண்டுவரை ஆட்சிபுரிந்தபிறகு இவனுடைய தம்பி பிரதாப் சிம்மன் மன்னனானார். இவர் அரசை ஏற்க விருப்பமின்றி இருந்தும், மக்களுடைய விருப்பத்திற்கு இணங்கி, அரசை ஏற்றார்.

பிரதாப் சிம்மன் அரசபீடம் ஏறும்போது தென்னிந்தியா

முழுவதும், குழப்பம், கொலை, கொள்ளை, கலகம் முதலியவை அன்றாட நிகழ்ச்சிகளாக இருந்தன. அரண்மனைக் குள்ளும் குழப்பம், சதித்திட்டங்கள் உருவாகி இருந்தன.

தஞ்சைமன்னர் பிரதாப்சிம்மன் உடல்நல குறைவு ஏற்பட்டு கி.பி.1763இல் இறந்தார். அவருடைய மனைவியர்கள் யமுனாபாய், சம்கார்பாய் இருவரும் அவருடன் உடன் கட்டையேறினர்.

## 13) டபீர் பண்டிதர்

இம்மன்னர் காலத்தில் அரசு சிறப்பாக நடைபெற 'டபீர் பண்டிதர்' காரணமாக விளங்கினார். நிதித்துறை, வெளியுறவுத் துறை அமைச்சராக, விசுவநாத பண்டிதர் என்பவர் பணி யாற்றினார். இவரை மக்கள் 'டபீர்' பண்டிதர் என அழைத்தனர். தஞ்சை மாவட்டத்தில், பல ஊர்களில் 'டபீர்' குளம் என்ற பெயரில் குளங்கள் வெட்டப்பட்டன. மாயவரத்திலும், தஞ்சையிலும் டபீர் குளத்தெரு உள்ளன. காஞ்சி சங்கர மடத்தை கும்பகோணத்துக்கு மாற்ற டபீர் பண்டிதர் ஏற்பாடு செய்தார்.

## 14) அம்முணுவின் காதல்

பிரதாப் சிம்மன் மன்னரின் மாமன் மகள் அம்முணு அம்மணி என்ற பெண்மணி இருந்தார். இந்தப் பெண்மணி மீது மன்னர் அளவுகடந்த காதல்கொண்டு இருந்தார். மன்னர் இவளை மணக்க விரும்பினார். இருவருக்கும் திருமணம் நிச்சயம் செய்தனர். ஆனால் திருமணம் நடைபெறுவதற்கு முன்னர் மன்னர் இறந்துவிட்டார். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் சுவாமியின் தமக்கையார் திலகவதியாரைப் போல இந்தப் பெண்மனி, மன்னர் மாய்ந்தாலும், கணவர்



மாய்ந்ததாகக் கருதி, கைம்பெண் கோலத்தை எற்றுக் கொண்டார். மன்னருடைய நினைவாக லட்சதீபங்கள் ஏற்றுவித்து, தன் உருவத்தையும் பாவை விளக்காக கோயிலில் நிற்கச்செய்து விட்டாள். திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் ஸந்நிதியில் கையில் தீபம் ஏந்திய பித்தளையிலான விளக்கு சுமார் நாலடியில் உள்ளதைக் காணலாம். அதன் பீடத்தில் 'மனசினால் வரிக்கப்பட்ட பாரியை' என்ற தமிழ் எழுத்துக்கள் உள்ளன.

## 15) இரண்டாம் துளஜா

பிரதாப் சிம்மனுக்குப் பின் அவரு டைய மகன் இரண்டாம் துளஜா தஞ்சை அரியணையில் (1763 -1767 ) அமர்ந்தார். தஞ்சைமீது படையெடுக்க மைசூர் மன்னர் ஹைதர் அலி ஏற்பாடு செய்வதை அறிந்து, தஞ்சை மன்னர், ஸ்வார்ட்ஸ் பாதிரியாரை சமாதான தூது வராக ஹைதரிடம் அனுப்பி வைத்தார். ஹைதர் அலி சாமாதனம் செய்து கொள்ள இணங்க வில்லை. ஹைதர் அலி ஆற்காடு மீதும், தஞ்சை மீதும் படையெடுத்து வந்தான். துளஜா மன்னரிடம் ஒரு லட்சம் பகோடாக்களைப் பெற்றுக் கொண்டு நாடு திரும்பினான். ஹைதர்அலி தஞ்சைப் படையெடுப்பின்போது பல கொடுமைகள் புரிந்தான். இதனால் கொடிய பஞ்சம் தோன்றி யது. ஹைதர் அலியின் மகன் திப்பு சுல்தானும் தஞ்சை மீது படை யெடுத்தான்.



இரண்டாம் துளஜா

இந்தப் படையெடுப்பின்போதுதான் களப்பாள் கோயில் பாழ்படுத்தப்பட்டது. (மன்னார்குடிக்குத் தென் மேற்கே

*10 கி.மீ. தொலைவில் மஹாதேவப்பட்டனம் என்ற ஊர் அமைந்துள்ளது. மன்னர் துக்கோஜி காலத்தில் 5 வேலி பரப்பில் பெரிய கோட்டை ஒன்று இங்கு இருந்தது. 1781ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியருக்கும், ஹைதர் அலிக்குமிடையே இந்த ஊரில் பெரும் போர் நிகழ்ந்தது. இந்த ஊரில் உள்ள ஆதி வராஹர் கோயிலிலும் சம்போ மஹாதேவர் கோயிலிலும் தற்போது சிதைந்த நிலையில் காணப் படுகின்றன. இந்த ஊரிலிருந்து தென்மேற்கில் 5 கி.மீ. தொலைவில் களப்பாளில் அமைந்திருந்த கைலாசநாதர் கோயிலும், ஆனைகாத்த பெருமாள் கோயிலும் இந்த போரின் முடிவில் ஹைதர் அலியின் படைகள் திரும்பிச் செல்லும்போது பாழ்படுத்தப்பட்டன. வரலாற்று ஆசிரியர்கள் திப்பு சுல்தானையும், ஹைதர் அலியையும் கதாநாயகர்கள் அந்தஸ்துக்கு உயர்த்தியுள்ளனர். ஆனால் இவர்கள் முகம்மது கஜினியை விட மோசமானவர்கள்.*

*அடுத்த நூற்றாண்டில் மாலிகாஃபூர், முகம்மதுபின் துக்ளக், மதுரை சுல்தான்கள் ஆகியோர் நாட்டைக்காக்க வந்த தெய்வங்களாக சித்தரித்து வரலாற்று புத்தகங்கள் வெளிவந்தாலும் ஆச்சர்யப் படுவதிற்கில்லை. ஏனெனில் எந்த முறையைக் கைக்கொண்டேனும் சிறுபான்மையரான முகம்மதியர்களை திருப்திப்படுத்துவதே தற்போதைய அரசின் கொள்கையாக உள்ளது. அதை நிறை வேற்றுவதற்கு பகல் வேஷம் போடும் கம்யூனிஸ்டுகளோடு கூட்டுச் சேர்ந்து வரலாற்று உண்மைகளைத் திரித்து எழுதுவதற்கும் தயங்க மாட்டார்கள். இனிவருங்காலங்களில் பல்கலைக் கழகங்களில் இந்தப் ''புதிய வரலாறு'' பாடநூல்களாகத் திகழும்.)*

ஆற்காடு நவாப் முகமது அலி தனது இரண்டாம் மகன் 'முல்லுக்' தலைமையில் தஞ்சைக்கு படையை அனுப்பினான் இவன் தஞ்சையைக் கைப்பற்றிக் கொண்டு, தனது படையை தஞ்சையில் தங்க வைத்தான். 17.09.1773 முதல் 11.4.1776 வரை தஞ்சை, நவாப்பின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது. மன்னரையும், அவர் குடும்பத்தினரையும் சிறைப்படுத்தினான் நவாப்.



## 16) மீண்டும் துளஜா

கிழக்கிந்திய கம்பெனியாருக்கு நவாபின் செய்கை ஏற்புடையதாகவில்லை. துளஜாவை மீண்டும் தஞ்சை மன்னராக அமர்த்துமாறு நவாப்பிடம் கோரினர். ஆங்கில தளபதி 'லார்டு பிகாட்' என்பவன் தஞ்சைக்கு வந்து, துளஜாவை மீண்டும் தஞ்சை மன்னராக அமர்த்தினான். துளஜா நன்றிக் கடனுக்காக ஆங்கிலேய கம்பெனியாருக்கு லட்சம் பொன் அளித்து, நாகூரையும் அதைச் சுற்றியுள்ள 227 கிராமங் களையும் அளித்தார். நவாப், அரண்மனையில் தங்கியிருந்த காலத்தில் விலை உயர்ந்த நகைகளை கைப்பற்றிக் கொண்டுவிட்டதால் கப்பம் செலுத்த முடியாது எனத் தெரிவித்துவிட்டார். தஞ்சைக் கோட்டையில் ஆங்கிலேயப் படையை வைத்துக்கொள்வது என்றும், அப்படைக்கு உரிய செலவை தஞ்சை மன்னர் ஏற்பது என்றும், அத்துடன் மன்னர் பிற மன்னர்களுடன் நட்பு கொள்ளக் கூடாது என்றும் நிபந்தனைகளை விதித்தனர், ஆங்கிலேயர்கள். அவர்கள் ஆட்டியபடி ஆடும் பதுமையாக தஞ்சை மன்னர் விளங்கினார்.

## 17) துளஜா எதிர்கொண்ட துன்பங்கள்

துளஜாவிற்கு மூன்றாவது மனைவியின் மூலம் ஆண் குழந்தை பிறந்து, இறந்துவிட்டது. ஆண் வாரிசு வேண்டும் என்ற எண்ணத்தில் இரு மனைவியரை மணந்து கொண்டார். **மோகனாபாய் என்பவளுக்கு ஆண் குழந்தை பிறந்தாலும், இரண்டு வயதில் அம்மை கண்டு இறந்துவிட்டது. மகள் மூலம் பெற்ற பேரக்குழந்தைகளும் மகளும், அடுத்து அடுத்து இறந்து விடவே மன்னர் வாழ்வில் துயரம் சூழ்ந்தது.** துன்ப சூழ்நிலையில் உடல் நலனும் ஊறுபட்ட நிலையில் இறந்த போது ஹைதர் அலி தஞ்சையைத் தாக்கி சூறையிட்டான். நாட்டில் பஞ்சம் பத்தாண்டுகளுக்கு பின்னரும் நிலவியது.

மக்கள் மிகவும் வாடினர். ஒரு கிராமத்தில் வாழ்ந்த 300 பேரில் 120 பேர் பட்டினியால் மடிந்தனர்.

## 18) அமர்சிங்குக்கும் இரண்டாம் சரபோஜிக்கும் இடையே எழுந்த வாரிசு உரிமைப் போராட்டம்

தனக்குப்பின் நாட்டை ஆள ஆண்மகவு இல்லாத நிலையில் ஒரு மகனை தத்து எடுத்துக்கொள்ள நினைத்து, சதாராவில் இருந்த அரசகுலத்தைச் சார்ந்த ஒருவரைத் தத்து எடுத்துக்கொண்டு அவனுக்கு சரபோஜி என்று பெயர் சூட்டி னார். இவரே சரஸ்வதி மஹாலை நிறுவிய இரண்டாம் சரபோஜி ஆவார்.

சரபோஜியின் கல்விக்காக ஸ்வார்ட்ஸ் என்ற பாதிரி யாரை நியமித்தார். மன்னர் தர்பாரைக் கூட்டி சரபோஜியை அரசு பீடத்தில் அமர்த்தி இந்தச் செய்தியை சென்னை யிலிருந்த கிழக்கிந்திய கம்பெனிக்குத் தெரிவித்தார். ஆனால் அரண் மனையில் செல்வாக்கு மிக்க சிலருக்கு இச்செயல் பிடிக்க வில்லை. இதனால் அவர்கள் ‘அமர்சிங்’ என்பவரை தஞ்சை மன்னராக அமர்த்த விரும்பி அமர்சிங்கை தஞ்சைக்கு வரவழைத்து, மன்னர் அமர்சிங்கே தஞ்சை மன்னராக இருந்து ஆளவேண்டும் என விரும்புவதாக சென்னைக்கு அரசு முத்திரையுடன் செய்தி அனுப்பினர். அடுத்தநாள் தனது 49ஆவது வயதில் கி.பி.1787இல் துளஜா இறந்துவிடவே, அமர் சிங் மன்னரின் இறுதி சடங்குகளை நிறைவேற்றி வைத்தார். கல்கத்தாவிலிருந்த ஆங்கில கவர்னர் தஞ்சை வந்து விசாரணை நடத்தினான். பன்னிரெண்டு பண்டிதர்கள், அமர்சிங்கே உரிய வாரிசு எனக் கூறினர். 1787இல் அமர்சிங்கை தஞ்சை மன்னராக்கினர். துளஜா மன்னர் மிகச் சிறந்த புலமை பெற்றவர். தெலுங்கு, மராத்தி ஆகிய மொழி நூல்களுக்கு ஆதரவு அளித்தார்.



துளஜா மன்னர் மரணமடையவே தஞ்சை அரச பதவிக்குப் போட்டி எழுந்தது. மன்னர் இறப்பதற்கு முன் எழுதிவைத் திருந்த உயிலில், தனக்குப் பின் தனது வளர்ப்பு மகன் சரபோஜி அரசபட்டம் பெற வேண்டுமென்றும், அவன் வயது வந்து பொறுப்பு ஏற்கும் வரை தனது ஒன்றுவிட்ட சகோதரன் அமர்சிங் (1787-1798), சரபோஜியின் சார்பாக அரசுப் பணிகளைக் கவனித்து வரவேண்டும் என்றும் தெரிவித்தி ருந்தார். மன்னருடைய உயிலைப் பற்றி கவலைப்படாமல், அரசு உரிமை தனக்கே உரியது என வாதிட்டான் அமர்சிங். மன்னர் மனநலம் குன்றி யிருந்தபோது ஸ்வீகாரம் ஏற்றது தன்னைக் கட்டுப்படுத் தாது என தெரிவித்தான். சரபோஜி தன் தந்தைக்கு ஒரே மகன் என்பதால் அவனை தத்து எடுத்துக் கொண்டது இந்து தர்மப்படி செல்லாது என வாதித்து அமர்சிங் வெற்றி பெற்றான். உள்ளூர் பஞ்சாயத்தாரும் அவனுக்கு அனு சரணையாக இருந்து விட்டனர். அப்போது சரபோஜிக்கு பதினோறு வயது. தஞ்சையில் அரசை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த அதிகாரிகளும் சரபோஜியை அரசு கட்டிலில் அமரவிடவில்லை.

ஆங்கிலேயர்களுடன் அமர்சிங் ஒப்பந்தம் செய்து கொண்டான். பின்னர் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு புதிய ஒப்பந்தம் செய்துகொண்டான். இதனால் அமர்சிங் வெறும் பதுமை அரசனானான். சிறுகசிறுக தஞ்சை அரசியலில் ஆங்கிலேயர்களின் செல்வாக்கு மிகுந்தது. அமர்சிங், சரபோஜியை அரண்மனையில் அடைத்து வைத்தான். அத்துடன் அவனைக் கொல்லவும் முயற்சித்தான். அவனை அடைத்த அறையில் மிளகாய் புகை போட்டு கொல்லவும் முயன்றான். சரபோஜியை கொன்று விடுவார்கள் என்ற அச்சத்தில், துளஜாவின் நண்பரான ஸ்வார்ட்ஸ் பாதிரியார் சரபோஜியை சென்னையில் வசிக்க ஏற்பாடு செய்தார்.

அமர்சிங், ஆங்கிலேயர்களுடைய நாடுபிடிக்கும் சூழ்ச்சியை வெறுத்து அவர்களை எதிர்க்கத் திட்டமிட்டான். மராட்டிய மன்னர்களுடனும், வட இந்தியாவில் ஆங்கி லேயர் களுக்கு எதிராக எழுந்த மன்னர்களுடனும் தொடர்பு கொண்டு ஆங்கிலேயர்களை விரட்டப் பலதிட்டங்களைத் தீட்டினான். இதனால் புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுகாரர்களுடன் நட்பு கொண்டான். இது ஆங்கிலேயர்களுக்குப் பிடிக்கவில்லை.

## 19) இரண்டாம் சரபோஜிக்காகப் போராடிய ஜெர்மன் பாதிரியார்

ஸ்வார்ட்ஸ் பாதிரியார் சென்னையிலிருந்த ஆங்கில அதிகாரிகளுக்கு, சரபோஜியின் அரசு உரிமையைப் பெற பல கடிதங்களை எழுதினார். இந்துச் சட்டப்படி தத்து எடுத்துக் கொள்ளப்பட்ட மகனுக்கு அரசு உரிமை உண்டு என்ற அவருடைய வாதத்தை சென்னை ஆங்கில அதிகாரிகள் ஏற்க மறுத்துவிட்டனர்.


அமர்சிங் தன் இறுதிநாட்களைக் கழித்த திருவிடைமருதூர் அரண்மனை





பின்னர் சரபோஜியைக் கொண்டு இந்திய கவர்னர் ஜெனரலுக்கு முறையிடுமாறு செய்தார். காசி, வங்காள பண்டி தர்கள் வாயிலாக சரபோஜி தத்து செல்லும் என்று கூறப்பட்டது. தனது சொந்த தாயாதிகள் வகையில் வந்த பையனை தத்து எடுப்பது இந்து தர்மப்படி செல்லும் என அவர்கள் கூறி னார்கள். இதனால் கவர்னர் ஜெனரல் சில நிபந்தனைகளுடன் சரபோஜியின் கோரிக்கையை ஏற்றார். உடன் சென்னை கவர்னருக்கு, அமர்சிங்கை அரச பதவியிலிருந்து அகற்றுமாறு ஆணையிட்டான். அமர்சிங், மானியம் பெற்றுக்கொண்டு திருவிடை மருதூர் சென்று இறைப் பணியில் தனது காலத்தைக் கடத்தி, வாழ்ந்து மறைந்தான்.

அமர்சிங்குக்குப் பிறகு சரபோஜி கி.பி.1798இல் மன்ன ராக ஆட்சிப் பொறுப்பேற்றார். தஞ்சை ஆட்சியைக் கைப்பற்றி இருந்த ஆங்கிலேயர்களை எதிர்த்துப் பயனில்லை என்பதை உணர்ந்த சரபோஜி, அவர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். தஞ்சை அரசருக்கும், கும்பினிக்காரர்களுக்கும் உள்ள நட்பையும் தொடர்பையும் வலுப்படுத்தவும் தஞ்சை ஆட்சியை நிலையான அடிப்படையில் அமைக்கவும் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த ஒப்பந்தம் 22.10.1799இல் கையெழுத்து இடப்பட்டது. இதில் பதினைந்து பிரிவுகள் உண்டு. இந்த ஒப்பந்தத்தில் தஞ்சை மாநகரம் மட்டும் சரபோஜி மேற்பார்வையில் ஆள வகை செய்யப்பட்டது.

## 20) இரண்டாம் சரபோஜியின் அறப்பணிகள்

போரில் பல வெற்றிகளைக் கண்டு வரலாற்றில் இற

வாப் புகழ் பெற்ற மாமன்னர்கள் உண்டு. ஆனால் இரண்டாம் சரபோஜியைப் போன்று அறிவாற்றலாலும், அன்பாலும் மக்கள் உள்ளத்தில் இடம்பிடித்து, வரலாற்றில் நீங்கா இடம் பிடித்துள்ள மன்னரைக் காண்பது அரிது.

இம்மன்னர் கிறிஸ்துவ பாதிரியார்களான ஸ்வார்ட்ஸ், கெய்ரிக் முதலியவர்களிடம் பல கலைகளை நன்கு கற்றார். தாய்மொழியான மராட்டியுடன் பல மொழிகள் பயின்று அறிந்தார். ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், தமிழ் போன்ற மொழிகளில் புலமை பெற்றிருந்தார். இம் மொழிகளில் பல பாடல்களைப் புனைந்துள்ளார். தனது குரு, ஸ்வார்ட்ஸ் பாதிரியாரின் நினைவாகத் தஞ்சை சிவகங்கைக் குளத்தை அடுத்து எழுப்பிய ஆலயத்தில் இவர் தன் கைப்பட எழுதிய ஆங்கில மொழியில் அமைந்துள்ள அஞ்சலிக் கவிதையை இன்றும் காணலாம்.



ஸ்வார்ட்ஸ் பாதிரியார் நினைவாக சரபோஜி எழுதிய கவிதை

தஞ்சைப் பெரிய கோயிலில் திருப்பணிகளை மேற் கொண்டார். கி.பி.1803இல் குடமுழுக்கு விழா நடத்தினார். இதைத்தவிர மேலவீதி கிருஷ்ணன் கோயில் முன் மண்டப கோபுரம் இவரால்



கட்டப்பட்டது. காமாட்சி அம்மன் கோயில் மண்டபமும், மடைப்பள்ளியும் கட்டி வைத்தார். கீழ ராஜ வீதியில் விட்டோபா கோயிலையும், கொண்டி ராஜ பாளயத்தில் நரசிம்மசுவாமி கோயில் மண்டபத்தையும் கட்டினார். வெண்ணாற்றங் கரையிலுள்ள ஆனந்தவல்லி அம்மன் கோயில் முன் மண்பத்தையும் எழுப்பினார். புன்னை நல்லூர் மாரியம்மன் கோயில் கோபுரத்தையும் விஜய கோதண்ட ராமர் கோயில் மண்டபத்தையும் பழுதுபார்த்தார்.

அரண்மனையில் ஏழு அடுக்குக் கட்டிடத்தை கட்டியதுடன், சங்கரவிலாஸ், விஜயவிலாஸ் என்ற இரு கட்டிடங்களை தாஸ்தான மஹால் தோட்டத்தில் கட்டினார். இவை குளிர்காலத்தில் வெட்பத்துடன் கூடியதாகவும், கோடையில் குளிர்ச்சியாகவும் இருக்கக்கூடிய அமைப்பில் அமைந்திருந்தன. திருவையாற்றிலும், கும்பகோணத்திலும் 'திவான்வாடா' என்ற அரண்மனைகளை உருவாக்கினார். கும்பகோணம் ஸ்ரீகாம கோடி சங்கராசார்யரின் மடத்தில் சந்திர மௌீஸ்வரர் க்ருஹத்தை அமைத்தார். வாட்டர்லூ போரில் நெப்போலியனை ஆங்கிலேயர்கள் வெற்றி கொண்டதற்கு அந்த வெற்றியைக் குறிக்க எட்டு அடுக்குடைய சீனபாணியில் மனோராவை எழுப்பினார்.

நீடாமங்கலத்தில் தன் மனைவியின் பெயரில் யமுனாம்பாள்புர சத்திரமும், மகள் பெயரில் அம்மா சத்திரத்தில் சக்குவார் அம்மணிபுரம் என்ற சத்திரமும், தன் ஆசை நாயகி முத்தாம்பாள் பெயரில் ஒரத்த நாட்டில் அழகிய சிற்ப வேலைகளுடன் கூடிய சத்திரத்தையும், பெரிய குளத்தையும் உருவாக்கினார். பல சத்திரங்களை உருவாக்கி அதற்கு நிதி ஒதுக்கி அங்கு பள்ளிகளையும் ஏற்படுத்தினார். திருவையாற்றில் தமிழும், ஸம்ஸ்க்ருதமும் கற்பிக்க புலவர் கல்லூரி,

ஓரியண்டல் காலேஜையும் ஏற்படுத்தினார். நவவித்யா கலாநிதி சாலா என்ற கல்விக்கூடம் மூலம் ஆங்கிலமொழி, அறிவியல் பாடங் களைக் கற்பிக்க ஏற்பாடு செய்தார்.

மக்கள் மருத்துவ உதவி பெற 'தன்வந்திரி மஹால்' என்ற மருத்துவமனையை ஏற்படுத்தி, அங்கு ஆயுர்வேத, சித்த, யுனானி போன்ற வைத்திய முறைகள் கையாளப் பட்டன. தற்சமயம் செயிண்ட் பீட்டர் பள்ளி உள்ள இடத்தில் மருத்துவ மனை அமைத்து அங்கு கண் வைத்தியம் பற்றி தினசரி நாட் குறிப்பை எழுதச் செய்தார். இதை தஞ்சை சரபோஜி சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் இன்றும் காணலாம்.

## 21) சரஸ்வதி மஹால்

பல கலைகளைப் போற்றி பேணி வளர்த்த சரபோஜி மன்னர் பல நூல்களைக் கற்றதுடன், அவைகளை வாங்கிச் சேகரிப்பதிலும் மிகவும் நாட்டம் கொண்டிருந்தார். தன்னு டைய ஆங்கில நண்பர்கள் மூலம் மேல் நாடுகளிலிருந்து நல்ல புத்தகங்களை வரவழைத்து சேகரித்து வைத்தார். குறிப்பாக ஆங்கில மொழிப் புத்தகங்களையும், பிரஞ்சுமொழி புத்தகங் களையும் நிறைய சேர்த்தார். பலதரப்பட்ட விஷயங்களைப் போதிக்கும் புத்தகங்கள் நிறைய அவரிடம் இருந்தன. மருத்துவம் விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் அவர் கவனம் செலுத்தினார். வடநாடு மற்றும் தென்நாட்டில் உள்ள புனிதத் தலங்களை தரிசிக்க யாத்திரை மேற்கொண்டார். காசிக்குச் சென்றபோது பல அரிய சுவடிகள் பலரிடம் இருப்பதை அறிந்து அவைகளை விலை கொடுத்து வாங்கி தஞ்சைக்கு கொண்டு வந்தார்.

தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம் இவருடைய ஆதரவில் முழுவளர்ச்சி அடைந்தது. பல அரிய நூல்களும், பழங்கால அரிய சுவடி களும் இங்கு இடம் பெற்றன. தற்போது தஞ்சை சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம் பெருமையுடன் விளங்க இம்மன்னரே காரணம். 30,000 ஸம்ஸ்க்ருத ஓலைச் சுவடிகளும், பல மொழிகளில் நிறைய நூல்களைக் கொண்டு விளங்கும் இந்த நூலகம், சிறந்த உலக நூலகங்களில் ஒன்று என்ற சிறப்புப் பெற்று தஞ்சைக்கு உலக அரங்கில் புகழ்சேர்த்து வருகிறது. அச்சு இயந்திரத்தை நிறுவி பல நூல்களையும் வெளியிட்டார்.



மேற்கத்திய இசையையும் கர்நாடக இசையையும் இணைத்து புதிய எழுச்சியை உண்டாக்கினார். நாதஸ்வரத் திற்கு பதிலாக 'கிளாரினட்' என்ற மேற்கத்திய இசைக் கருவியை அறிமுகப்படுத்த இவரே காரணமாக இருந்தார். பாண்டு வாத்தியக்குழுவை உருவாக்கியவர், இவர். இதற்காக பல பாடல்களை எழுதினார்.

## 22) உலுப்பை மானியம் அளித்த சரபோஜி

சரபோஜி உலுப்பை மானியம் அளித்தார். (சத்திரத்திற்கு வர இயலாதவர்க்கும், பெரிய அதிகாரிகளுக்கும், வந்து உண்பதற்கு விரும்பாதவர்களுக்கும், அரிசியும், அதற்கு உரிய உப்பு, புளி முதலிய பொருள்களும் அளிப்பது வழக்கம். இது உலுப்பை எனப்படும். இங்ஙனம் உலுப்பைகள் அந்தணர்களுக்கும், பைராகிகளுக்கும், வெள்ளையர்களாகிய பெரிய அலுவலர்களுக்கும் அளிக்கப்பெற்றன.) விதவைகளுக்கும் உடல் ஊனமுற்ற வர்களுக்கும் நெல்லாக வழங் கினார். இதனை அம்மணிச் சத்திரம், ராஜமடம் சத்திரம், அண்ணா சத்திரம், சேதுபாவாசத்திரம் போன்ற சத்திரங்கள் வாயிலாக மாதாமாதம் அளித்தார்.

## 23) தியாக பிரஹ்மத்தை நேரில் தரிசித்த சரபோஜி

சரபோஜி மன்னர் பெரியபுராணத்தைக் கொண்டு 'பக்த விலாசம்' என்ற மராட்டிய நூலை இயற்றினார். குறவஞ்சியை மராட்டிய மொழியில் மொழி பெயர்த்துள்ளார். குதிரை சாஸ்திரத்தை இவர் நன்கு அறிந்திருந்தார். இவர் காலத்தில் வேத நாயக சாஸ்திரியார் ஆஸ்தான கவிஞராக இருந்தார். இவரும் மன்னரும் சிறந்த நண்பர்களாக இருந்தனர். சரபோஜி இவரை அண்ணா என்றே அழைத்தார். மராட்டிய மன்னர் களின் 'பான்ஸ்லே சரித்திரம்' என்ற கவிதையை வேதநாயக சாஸ் திரியார் இயற்றியுள்ளார். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இம்மன்னரைப் பற்றி சரபேந்திர பூபாலக் குறவஞ்சி என்ற நூலை இயற்றினார். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகையர் இவர் காலத்தில் திருவையாற்றில் வாழ்ந்தார். தியாகையரின் கீர்த்னைகள், மன்னர் சரபோஜி சங்கீதம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட காரணமாகியது. இத்தகைய ஆராய்ச்சி கள் தஞ்சை சங்கீத மகாலில்நடைபெற்றன.

## 24) ''அன்னசத்திரங்கள் ஆயிரம் வைப்போம்''

மராட்டிய மன்னர்களால் கீழ்க்கண்ட சத்திரங்கள் ஏற்படுத்தி வைக்கப்பட்டன.

1. தஞ்சாவூர்க் கோட்டை அன்ன சத்திரம்
2. முக்தாம்பாள் புரம் அன்ன சத்திரம்
3. ராஜகுமாராம்பாபுரம் அன்ன சத்திரம்
4. மோகனாம்பாபுரம் அன்ன சத்திரம்
5. சக்வாரம்பாபுரம் அன்னசத்திரம்
6. ராஜஸம்பாபுரம் அன்னசத்திரம்
7. யமுனாம்பாபுரம் அன்னசத்திரம்
8. சைதம்பாபுரம் அன்னசத்திரம்



9. சுலக்ஷணம்பாபுரம் அன்னசத்திரம்
10. மகாதேவபட்டணம் அன்னசத்திரம்
11. சைதாம்பாபுரம் ராமேசுவரம் பழைய சத்திரம், புது சத்திரம்
12. மல்லியம் அன்னசத்திரம்
13. பஞ்சநத மோகனாம்பாபுரம் அன்ன சத்திரம்
14. ராஜகுமாராபாயி அமணிராஜே அன்ன சத்திரம்
15. மாதுஸ்ரீ அஹல்யாபாயி அன்னசத்திரம்

## 25) ராஜாமடம் சத்திரம்

இவற்றில் ராஜாமடம் சத்திரம் எனப்படும் மோகனாம் பாள்புர சத்திரம் கி.பி.1784இல் ஏற்படுத்தி வைக்கப் பட்டது. இந்த சத்திரத்தை இரண்டாம் துளஜா தனது மனைவியான மோகனா சாகேபாவின் நினைவாக ஏற்படுத்தி வைத்தார்.

இந்த சத்திரத்தின் வருமானத்திற்காகப் புதுக் கோட்டை உப்பளம், மகிழங்கோட்டை உப்பளம், தாமர கோட்டை உப்பளம், ராஜாமடம் நாட்டு உப்புக் காளவாய் ஆகியவை சுரோத்ரியம் செய்யப்பெற்றனவாக ஒரு குறிப்பால் அறியப் பெறுகிறது. இது தவிர இந்த சத்திரத்திற்கு பல ஊர்களில் நஞ்சை நிலங்களும், புஞ்சை நிலங்களும் அளிக்கப்பட்டன.

## 26) ஒரத்தநாடு முக்தாம்பாள் சத்திரத்தின் சோகப் பின்னணி

இது ஒரத்தநாடு சத்திரம் எனப் பெறும். இது 16.1.1802 'துன்மதி புஷ்யசுத்த திரயோதசியில்' கட்டத் தொடங்கப் பெற்றதாதல் வேண்டும். இச்சத்திரத்தோற்றம் பற்றிப் போன்ஸ்லே வம்ச சரித்திரம் தமிழாக்கம் கூறப் பெற்றுள்ளது.

''முக்தாம்பாள் என்பவர் சரபோஜி தம் திருமணத்துக்கு முன்னரே சேர்த்துக் கொண்டிருந்த காமக் கிழத்தியாவர். இவ் வம்மையார் தாம் இறக்கும்பொழுது தம் பெயரால் ஒரு அன்னசத்திரம் ஏற்படுத்த வேண் டும் என்று அரசரை வேண்டிக் கொண்டார். அவ்வேண்டுகோட்கிணங்க இரண்டாம் சர போஜி இச்சத்திரத்தைத் தொடங்கினார்.

முக்தாம்பாள்புரம் சத்திரத்தில் நாடோறும் மூன்று வேளை உணவு அளிக்கப்பெற்றது; உலுப் பைகளும் தரப்பெற்றன. சத்திரங்களில் இருந்த நடைமுறைக் கேற்பத் தரும கலியாணம் நடத்தப்பெற்றது. இச்சத்திரத்துக்கு உமையாள் புரத்திலிருந்து கி.பி.1825இல் 13,007 கலங்கள் நெல் அனுப்பப் பெற்றது. என்றதினின்று அச்சத்திரத்தின் உணவுச் செலவு எவ்வளவாக இருந்திருக்கலாம் என்பதை ஊகித்தறி யலாம். கி.பி.1825 இல் ரெஸிடெண்டு ஜான் ஃபைஃப் இச்சத்திரத்துக் சென்றிருந்தார். அவர் அங்கிருந்த ஐந்து கல்வி நிலையங்களைப் பார்த்தார்; எத்தனைப் பேர் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் படிக்கிறார்கள் என்பதைக் கேட்டறிந்தார். படிக்கிற மாணவர் களின் எண்ணிக்கை 641. ஒரு நாளைக்கு 3 வேளையும் சாப்பிடு கிறவர்கள் 4020 பேர், பைராகிகளுக்கும், உலுப்பைதாரர் களுக்கும் ஓராண்டிற்குக் கொடுக்கும் நெல் 45,000 கலம்; மாதச் சம்பளக்காரர் செலவான தொகை ரூ.9000 என்று பல செய்திகள் ஓராவணத்தினின்று அறியமுடிகிறது. இச்சத்திரத்துக் கல்வி நிலையங்களில் ஆங்கிலப் படிப்பும் உண்டு. திருநெல்



முக்தாம்பாள்



வேலியினின்று வெள்ளாளர் ஒருவர், சொக்கலிங்கம் என்ற பெயருடையவர், முக்தாம்பாள்புரச் சத்திரத்தில் ஆங்கிலப் படிப்பை முடித்துக்கொண்டு தன் ஊருக்குப் போனார்; அவர் ஊருக்குச் செல்லும்போது ரூ.10 இனாம் வழங்கப்பட்டது.

முக்தாம்பாள்புரச் சத்திரம் நல்ல வருவாய் உடையது; ஆகையால் சத்திரத்துக்குரிய சேமிப்புத்தொகையினின்று பெருந்தொகை சர்க்காரில் கடன் வாங்கப்பெற்றது என்றும், அவ்வாறு பெற்ற தொகைக்கு வட்டி ஒரு மாதத்துக்குச் சக்கரம் 600 என்றும் ஓர் ஆவணம் கூறுகிறது. இதனால் சத்திரத்தின் சேமிப்புத் தொகை வட்டிக்கு விடப்படுவதுண்டு என்பது அறியப்படுகிறது. மாதத்துக்கு 600 சக்கரம் வட்டி எனின், 12% வட்டியாகக் கொண்டு நோக்குமிடத்து, 60,000 சக்கரம் சர்க்கார் கடனாகப் பெற்றிருக்கலாம் என்று தோன்றுகிறது.

மராட்டிய மன்னர்கள் கட்டிய சத்திரங்களில் மிகப் பெரியதும் சிறப்பு மிக்கதும் முத்தாம்மாள் புரச் சத்திரம் ஆகும். இது தஞ்சையின் தெற்கே பட்டுக்கோட்டை செல்லும் பெரு வழியில் 22 கி.மீ. தொலைவில் ஒரத்த நாட்டில் அமைந்துள்ளது.

சத்திரத்தின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள கருங்கல் சிற்பமும் உள்ளே அமைந்துள்ள செங்கல் சிற்பங்களும் மாடியில் அமைந்துள்ள மரச்சிற்பங்களும் அரிய நுட்பமான வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. முத்தம்மாள் எனத் தமிழ்க் கல்வெட்டுகளில் பெறிக்கப்பட்ட இப்பெயர் முக்தாம்பாள் என மராத்தி, மோடி ஆவணங்களில் காணப் படுகிறது. இச்சத்திரத்தின் தோற்றம் பற்றித் தஞ்சைப் பெரிய கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் பின்வரு மாறு காணப்படுகிறது.

''சரபோசி மகாராசா தனக்கு விவாகமாவதற்கு முன் எல்லாக் குணங்களும் பொருந்திய ஒரு ஸ்திரியை எடுத்துக் கொண்டு இருந்தார். அவள் இரண்டு தடவை கர்ப்பந்தரித்துப் பிரசவித்து இரு குழந்தைகளும் இறந்து போயின. இரண்டாவது பிரசவ சமயத்தில் அந்த அம்மாளும் இறந்தபடியால் நற்குணங் களோடு கூடிய அவள் மரணம் அரசரின் சோகத்துக்குக் காரண மாயிற்று. ஆனால் அந்த அம்மாள் இறக்கும் தருவாயில் தன் பெயரால் ஒரு அன்ன சத்திரம் ஏற்படுத்த வேண்டுமென்று மகா ராஜாவைக் கேட்டுக் கொண்டாள். மகாராஜாவும் அதற்கு இசைந்து சேதுவுக்குப் போகும் வழியில் உத்தமமானதும், யாத்திரீகர்களுக்கு மிகவும் உபயோகமுள்ளதுமான ஒரு சத்திரத்தையும், பக்கத்தில் ஒரு அக்கிரகாரத்தையும், ஒரு கோயிலையும், ஒரு சிங்காரவனம், குளம் இவைகளையும் கட்ட ஏற்பாடு செய்து அவ்விடத்திற்கு முக்தாம்பாள்புரம் என்று பெயரிட்டு அதை நன்றாய் நடத்து வதற்கான ஏற்பாடுகளையும் செய்து வைத்தார். இவைகளெல்லாம் அந்த அம்மாளின் சாசுவதமான ஞாபகச் சின்னங் களாக இருக்கின்றன''.

## 27) ஸ்ரீமான் கோபாலதீக்ஷிதரின் நல்லாசி

*1953ஆம் வருடம் ஜூன் மாத இறுதியில் ஒரு திங்கட் கிழமை ஒரத்தநாடு சத்திரத்தில் சேருவதற்காகக் கீழைப் பனையூரிலிருந்து நானும் என் தந்தையாரும் புறப்பட்டோம். அன்றைய தினம் கீழைப்பனையூர் கஸ்தூரி ரங்கநாதப் பெருமா ளுக்குத் திருமஞ்சனம் ஸமர்ப்பித்து சர்க்கரைப்பொங்கல் தளிகை கண்டருளப் பண்ணப்பட்டது. ஸ்ரீமான் கோபால தீக்ஷிதர் என்பவர் அர்ச்சகக் கைங்கர்யம் செய்துவந்தார். அந்தக் கால கட்டத்தில் கோட்டூரில் ஸ்ரீநிவாஸப்பெருமாள்கோயில் சிறப்புற்று விளங்கியது.*

*கோட்டூர் பெரிய வரதாசார்யர், சின்ன வரதாசார்யர்*



*ஆகிய இருவரும் பல்வேறு இடங்களுக்குச் சென்று தனிகர் களைக் கண்டு நித்யப்படி மற்றும் விழாக்காலங்களில் சிறப் பான ஆராதனங்கள் மற்றும் அமுதுபடிகள் ஸமர்ப் பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். மேலும் கோட்டூர் பாடசாலை என்று புகழ்பெற்றிருந்த வேதபாடசாலை ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதித்தெருவில் இயங்கிவந்தது. பஞ்சபர்வ புறப்பாடுகளின்போது வேதம் மற்றும் திவ்யப் பிரபந்த அநுஸந்தானங்களோடு பெருமாள் புறப்பாடு கண்ட ருளும் அழகே அலாதியானது. பாஞ்ச ராத்திர ஆகமப்படி திருவாராதனம் ஸமர்ப்பித்து வந்தவர் ஸ்ரீகோபாலதீக்ஷிதர். இவர் மன்னார்குடி தீக்ஷிதர் பரம் பரையைச் சார்ந்தவர். மன்னார்குடி தீக்ஷிதர்கள் என்று புகழ் பெற்ற ஆகமஅதிகாரிகள் ராஜமன்னார் குடி, வடுவூர், காரப்பங்காடு, சேரன் குளம்,கோட்டூர், திருக்குடந்தை, திருச்சேறை, தேரெழுந்தூர், கோயிலடி, காட்டு மன்னார் கோயில் போன்ற புகழ்பெற்ற திருத்தலங்களில் அர்ச்சக கைங்கர்யங்களை மேற்கொண்டு வந்தனர். அர்ச்சாவதார எம்பெருமான்களுக்கு எவ்விதக் குறை யுமின்றி இன்றும் திருவாராதனங்களை ஸமர்ப்பித்து வருகின்றனர் மன்னார்குடி தீக்ஷிதர்கள் பரம்பரையினர்.*

*ஸ்ரீமான் கோபால தீக்ஷிதர் அஷ்டோத்தர ஶதநாமா வளி சொல்லி அர்ச்சனை செய்வது இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. கஸ்தூரி ரங்கநாதப் பெரு மாளுடைய ப்ரஸாதங்களை என் தகப்பனாரிடம் கொடுத்து ''உம்முடைய குமாரர் நன்றாகப் படித்து தனம் சேகரித்து தெற்கே இருக்கின்ற இந்தப் பெருமாளை கிழக்குநோக்கி புதிதாகக் கோயில்கட்டி எழுந்தருளப் பண்ணுவார்'' என்று மங்களாசாஸனம் பண்ணினார்.*

*(1953ஆம் ஆண்டு அவர் செய்த மங்களாசாஸனம் வீண்*

*போகவில்லை. 1983ஆம் ஆண்டு எங்கள் குடும்பத்தின் சார்பில், ஊர் பொதுமக்களுடைய உதவியைக் கொண்டும் கஸ்தூரி ரங்கநாதப் பெருமாள் கோயில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு ஒரு நூற்றாண்டுக்கு மேல் தெற்கு நோக்கி எழுந்தருளியிருந்த பெருமாள் கிழக்கு நோக்கி எழுந்தருளப்பண்ணப்பட்டார்.)*

## 28) ஒரத்தநாட்டிற்குப் பயணம்

கீழைப் பனையூரிலிருந்து புறப்படும் போதே மழை பெய்து கொண்டிருந்தது. பல மணி நேரம் கோட்டூர் பேருந்து நிலையத்தில் கால் கடுக்க நின்ற பிறகு ஏதோ ஒரு வழியாக மன்னார் குடியைச் சென்றடைந்தோம். மன்னார்குடியில் நிலையான, முறையான பேருந்து நிலையம் கிடையாது. ஏதாவது ஒரு பழுதுபார்க்கும் நிலையத்திற்கு முன்பு பேருந்துகள் நின்று கொண்டிருக்கும். அதில் கரியை நிரப்பி, காற்றைச் செலுத்தித் தயார் நிலைக்குக் கொண்டுவரவேண்டும். மன்னார் குடி கல்கி திரையரங்குக்கு எதிரில் தஞ்சைக்கு செல்வதற்கான பேருந்துகள் நின்று கொண்டிருக்கும். மழை பெய்து கொண்டிருந்ததின் விளைவாகப் பேருந்தில் நிரப்பப்பட்ட கரி சரியான வெப்ப நிலையை அடையாததால் இரண்டு மணி நேரம் தாமதமாகப் பேருந்து புறப்பட்டது.

மாலை 4 மணிக்குள் தஞ்சையைச் சென்றடைய வேண் டும் என்று காலை 10 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் இரவு 8 மணிக்குத்தான் தஞ்சையைச் சென்றடைந்தோம். ஆகவே அன்றைய தினம் ஜில்லாபோர்டு நிர்வாக அலுவலகத்திற்குச் சென்று அனுமதிச்சீட்டை வாங்க இயலவில்லை. தஞ்சை வரகப்பய்யர் தெருவில் குடியிருந்த காளாஸ்தி அய்யர் வீட்டு வாசல் திண்ணையில் படுத்துறங்கி மறுநாள் காலையில் ஜில்லா போர்டு அலுவலகத்திற்குச் சென்றோம்.



என்னைப்போன்று இன்னும் சிலரும் அனுமதிச் சீட்டிற்காக அங்கே கூடியிருந்தனர். அனைவருக்கும் ஒரத்தநாடு முத்தம்மாள் சத்திரத்தில் சேர்வதற்கான அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டது. எல்லோரும் மாலை 3 மணியளவில் ஒரத்த நாடு சென்றடைந்தோம்.

## 29) கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை

*ஒரத்தநாடு சத்திரத்தில் எங்களுக்கு இடம் கிடைத்த போதிலும் ஜில்லாபோர்டு நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்த உயர்நிலைப் பள்ளியில் 9ஆவது வகுப்புக்கு மாணவர் சேர்க்கை இல்லையென்று தலைமை ஆசிரியர் கூறிவிட்டார். இதற்கு என்ன செய்வது என்று நாங்கள் அவரிடம் ஆலோசனைக் கேட்டோம், அதற்கு அவர் நீங்கள் மறுபடியும் தஞ்சைச் சென்று ஜில்லாபோர்டு நிர்வாகத்திடம் முறையிடுங்கள் என்று கூறினார். புதிதாக இவ்வாறு வந்து சேர்ந்த மாணவர்கள் மட்டும் சத்திரத்தில் தங்கியிருக்க பெற்றோர்கள் வெளியே விடுதியில் தங்கி யிருந்தனர். அனைத்து மாணவர்களின் சார்பாகவும் மீண்டும் தஞ்சைக்குச் சென்ற என் தந்தையார், அங்கே சத்திரம் தாசில்தாரை நேரில் கண்டு முறையிட்டார். அவர் அதிகாரி களுடன் கலந்தாலோசித்தபிறகு, ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழ் அமைந்துள்ள, ராஜாமடம் சத்திரத்தில் சேர்வதற்கான அனுமதியையும் அங்கே 9ஆவது வகுப்பிற்குக் கூடுதல் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கடிதத்தையும் கொடுத்தார். இந்தக் கடிதங்களைப் வாங்குவதற்காக என் தந்தையார் இரண்டுநாட்கள் தஞ்சையில் தங்க நேரிட்டது. இந்த அனுமதிக் கடிதத்துடன் அனைவரும் ராஜா மடத்திற்குப் புறப்பட்டுச் சென்றோம். மராட்டிய மன்னர்களில் இரண்டாம் துளஜாவின் மனைவியான மோகனாம் பாளுடைய நினைவாக ஏற்படுத்தி வைக்கப்பட்ட சத்திரம் இது.*

## 30) ராஜாமடத்தில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பு

ராஜாமடம் என்னும் ஊர் அதிராம்பட்டினத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கடற்கரையோர கிராம மாகும். ராஜாமடம் அக்ரஹாரம் அதிகக் குடியிருப் புகளைக் கொண்டது. அக்ரஹாரத்தின் மேற்குப் பகுதியில் ஸ்ரீநிவாஸப் பெருமாள் திருக்கோயிலும், அக்ரஹாரத்தின் ஈசான்யத்தில் சிவன் கோயிலும் கொண்ட அமைதியானதொரு ஊர்.

## 31) ஆர்.வெங்கட்ராமன்

இந்திய நாட்டின் முதல் குடிமகனாக விளங்கி தமிழ் நாட்டின் விலை மதிக்க முடியாத மாணிக்கம் என்று போற்றப் படும் ஆர்.வெங்கட்ராமன் ராஜாமடத்தில் பிறந்தவர். பட்டுக் கோட்டை கழக உயர்நிலைப் பள்ளியில் பயின்ற இவர், பின்னர் சென்னையில் கல்லூரிப் படிப்பையும் சட்டப் படிப்பையும் முடித்தார். கல்லூரியில் படிக்கும் நாட்களில் தொண்டாற்றி வந்தார். இனிய இயல்புகளையும், பழகு வதற்குரிய நற்பண்புகளையும் பெற்றவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுப் பல முறை சிறை சென்றுள்ளார்.

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினராகவும், தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர், பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் அமைத்த அரசியல் தொழில் அமைச்சராக இடம் பெற்று, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர். தமிழகத்தில் தொழிற் புரட்சியை உருவாக்கிய இவர், சேலம் இரும்பாலை ஏற்படக் காரணமாக விளங்கியவர். மத்திய அரசில் இந்திரா காந்தியின் மந்திரி சபையில் நிதி அமைச்சராகவும், பின்னர் பாதுகாப்பு அமைச் சராகவும் பணியாற்றியவர். அதன் பிறகு குடியரசுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



## 32) ராஜாமடம் சத்திரம்

வெள்ளிக்கிழமை காலை உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரும், சத்திரத்தின் நிர்வாக அதிகாரியுமான ஜி.ராமச் சந்திர நாயுடு அவர்களைச் சந்தித்து ஜில்லாபோர்டு நிர்வா கத்தினர் தந்த கடிதங்களை நேரிலே கொடுத்தனர் அனைத்து மாணவர்களுடைய பெற்றோரும். எங்கள் அனைவருக்கும் ராஜாமடம் சத்திரத்தில் தங்கி படிப்பதற்கான அனுமதி அவரால் வழங்கப்பட்டது.

ராஜாமடம் சத்திரம் மிகப்பெரிய பரப்பளவைக் கொண்டது. சத்திரத்திற்கு எதிரில் சுமார் 700 அடி நீளமும், அகலமும் கொண்ட குளம் அமைந்திருந்தது. சத்திரத்தின் முகப் பில் பெரியதொரு தாழ்வாரம் உண்டு. இதில் நாடோடிகளும், பிச்சையெடுப்பவர்களும், வழிப் போக்கர்களும் படுத்துறங் குவர். இவர்களுக்கென ஒவ்வொருநாள் இரவிலும் தயிர்சாதம் வழங்கப்படும். 400 மாணவர்கள் இந்த விடுதியில் தங்கிப் படித்து வந்தனர். 6ஆம் வகுப்பிலிருந்து 11ஆம் வகுப்பு ஈறாகப் படிக்கும் மாணவர்களே சத்திரத்தில் இருந்து படிக்க முடியும். தஞ்சை மாவட்டத்து மாணவர்களே இந்தச் சத்திரத்தில் அதிக அளவில் தங்கிப் படித்து வந்தனர். சத்திரம் நீளம் 800 அடியும், அகலம் 600 அடியும் கொண்டது. அதனுள் மாணவர்கள் தங்கி இருப்பதற்கு அறை அறையாகப் பல பகுதிகள் அமைந் திருந்தன. ஒவ்வொரு நாளும் மாலை 7 மணிக்கு அனைவரும் பெரியதொரு கூடத்தில் கூடியிருக்க அவர்களுடைய இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படும். மாணவர்களுக்கு தரப் படும் ரேஷன் எனப்படும் பண்டங்கள் எத்துணை மாணவர்கள் இந்தப் பதிவேட்டின்படி கணக்கிடப்படுவார்களோ அத்துணை அளவிற்குத்தான் வழங்கப்படும்.

***(இத்தகையதொரு முறையில் பெரியதொரு இடர்ப்பாடு அவ்வப்போது நிகழும். குறிப்பாக விடுமுறை கழிந்து மாணவர்கள் விடுதிக்கு வரும்போது அன்றைய தினம் கொடுக்கப்படும் ரேஷன் அளவு முதல்நாள் மாணவர் பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில்தான் கொடுக்கப்படும். விடுமுறை தினமாதலால் 100 மாணவர்களே விடுதியில் தங்கியிருப்பர். விடுமுறை கழிந்து வருபவர்களின் எண்ணிக்கைக் கூடுத லாக இருக்கும். அதனால் அடுத்த நாள் உணவு அனைவர்க்கு அரைவயிற்றுக்கே கிடைக்கும். சத்திர நிர்வாகத்தின் பொது விதியாதலால் இதை மாற்ற இயல வில்லை.)***

அந்தந்த வட்டாரத்தைச் சார்ந்த மாணவர்கள் குழுக் களாக ஒவ்வொரு அறையிலும் தங்கி இருப்பார்கள். அவரவர்களுடைய மன ஓட்டங்களுங்கும், எண்ணங் களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும், வட்டாரப் பிணைப்பு களுக்கும் ஏற்ப நண்பர்கள் குழாம் உருவாகும். காலையில் காபி போன்ற பானங்கள் கிடைக்காது. காலை 8.30 மணிக்கு காலை உணவாக அன்று காலை வடித்த அன்னம், மோர், பருப்புக் குழம்பு, அல்லது மிளகாய்பொடி ஆகியவை மாணவர்களுடைய தட்டில் பரிமாறப்படும். ***(அனைவரும் தமக்கென ஒரு அலுமினியத் தட்டு, குடிநீர்க் குவளை, ஹரிகேன் விளக்கு ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும். மின்சாரம் கிராமங்களைச் சென்றடையாத காலம் அது. சத்திரத்து மாணவர் களுக்கு 10ml. மண்ணெண்ணெய் தினந்தோறும் வழங்கப்படும். இந்த ஹரிக்கேன் விளக்கையே, சாப்பாட்டுக் கூடத்திற்கும், தங்கி இருக்கும் அறையில் படிப்பதற்கும் உபயோகித்தில் கொள்ள வேண்டும். )***

காலை 9.30 மணிக்கு உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டும். சத்திரத்தின் தெற்குத் திக்கில் உயர்நிலைப் பள்ளி அமைந்திருந்தது. மதியம் 12.30 - 1.30 இடைவேளை. அப்போது சத்திரத்தில் மதிய உணவு பரிமாறப்படும். மதிய



உணவில் குறிப்பிட்ட அளவு அன்னம், நெய், சாம்பார், ரசம், பொறியல் ஆகியவை பரிமாறப்படும். சமையற்காரர் இருவர் பெரிய தொரு அண்டாவில் அன்னத்தை அடைத்து அதை உருட்டிச் செல்வர். ஒரு மாணவனுக்கான ரேஷன் அளவின் அடிப்படையில் அன்னம் பரிமாறப்படும். நெய், சாம்பார், ரசம், பொறியல் ஆகியவற்றை மாணவர்கள் கமிட்டி எனப் படும் தன்னார்வத் தொண்டில் ஈடுபட்டோர் பரிமாறிடுவர்.



## 33) கமிட்டியின் செயல்பாடுகள்

இந்தக் கமிட்டியில் 7 மாணவர்கள் இருப்பார்கள். அதில் ஒருவர் தலைவர். அவர் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை சத்திர நிர்வாகம் காய்கறிகள் வாங்குவதற்காகக் கொடுக்கும் 100 ரூபாயை வாங்கிக் கொண்டு பேராவூரணி சந்தைக்குச் சென்று காய்கறிகளை வாங்கிவருவார். ஞாயிற்றுக் கிழமை எந்தக் கமிட்டியின் தலைவர் பேராவூரணி சென்று வருகிறாரோ அவர் வாங்கிவரும் காய்கறிகள் 'ராஜா மடம்' ரோடு என்னும் பெயர் கொண்ட 'இரயில்வே ஹால்ட் ஸ்டேஷனில்' இறக்கி வைக்கப்படும். வாடகை சைக்கிளை எடுத்துச் செல்லும் கமிட்டி அங்கத்தினர்கள் ராஜாமடம் ஸ்டேஷனிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்திலிருக்கும் சத்திரத் திற்கு அவற்றை எடுத்து வரவேண்டும். இது தவிர ஒவ்வொரு நாளும் ஒருவர் பள்ளிக்குச் செல்லாமல் சமையல் அறையில் கொடுக்கப்படுகின்ற உணவுப் பண்டங்களை பாதுகாத்து சமையற்காரர்களுடைய பணியை மேற்பார்வையிட வேண்டும். இவர்களே அன்னம் தவிர மற்றைய உணவுப் பண்டங்களைப் பரிமாறவும் வேண்டும். இத்தகையத் தன்னார்வத் தொண்டில் என்னை ஈடுபடுத்திக்கொண்டேன்.

இந்தக் கமிட்டி உறுப்பினர்களில் ஒருவர் ஒவ்வொரு நாளும் காலை 6 மணிக்கு சத்திரக் கணக்கரிடம் சென்று முதல் நாள் இருப்புப் பதிவேட்டில் கண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உணவுப் பண்டங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அதன் 1 மாணவர்க்கான அளவுகோல்

அரிசி - ¼ படி, பருப்பு - 1/32 படி, மிளகாய் - 1/64 சேர், புளி - 3/64 சேர், உளுந்து - 1/ 320 படி, கொத்தமல்லி 1/ 64 சேர், மிளகு 1/ 640 சேர், கடுகு 1/160 சேர், வெந்தயம் 1/800 சேர், உப்பு 1/64 படி, நெய் 3/64 சேர், நல்லெண்ணெய் 1/64 சேர், மஞ்சள் 3/6400 சேர், சுக்கு 1/3200 சேர், மோர் 3/8 படி, விறகு 2.5 சேர். Metric அளவுகோல் அப்போது அமுலில் இல்லை. பலம், சேர், படி போன்ற திட மற்றும் திரவஅளவு கோல்களே வழக்கத்தில் இருந்தன. இவற்றைத் தவிர மாணவர்கள் வாரம் இரண்டு முறை நல்லெண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும் என்பதற்காக 3/16 சேர் நல்லெண்ணெயும், அரைப் பைசா அரப்பும் வழங்கப் பட்டது. (பெரும்பாலான மாணவர்கள் சுத்தமான இந்த நல்லெண் ணெயைத் தலைக்குத் தேய்த்துக் குளிக்கமாட்டார்கள். மாறாக வேளாளர் தெருவிலிருக்கும் கடையில் கொடுத்துவிட்டு நிலக்கடலை, கடலை மிட்டாய் போன்ற தின்பண்டங் களை வாங்கிக் கொள்வர்.)

மேலும், திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளில் நாவிதர் வருகை தருவார். புதன் சனி ஆகிய இரு நாட்களில் அதிராம் பட்டினத்திலிருந்து M.B.B.S. பட்டம் பெற்ற மருத்துவர் சத்திரத்திற்கு வருகைதந்து மாணவர்களின் உடல் நிலையைப் பரிசோதிப்பார்.

மாலை நேரங்களில் குழு, குழுக்களாக 1 கி.மீ. தூரத்தில் இருக்கும் அக்னி ஆறு என்னும் காட்டாற்றிற்கோ, கல்லணைக் கால்வாயின் வாய்க்கால்களுக்கோ சென்று அங்கேயே நீண்ட நேரம் அமர்ந்து பேசிக் கொண்டிருப்போம். இவ்வாறாக உருவாகும் நண்பர் குழாங்களே 11ஆம் வகுப்பு வரை தொடர்ந்து நீடிக்கும்.

## 34) காவிரி ஆற்றின் கிளைநதிகள்

கல்லணையில், வெண்ணாறு, கல்லணைக்கால்வாய் என்று பிரிந்த காவிரி மேலும் கிழக்கு நோக்கிப் பாய்ந்து சென்று திருக்காட்டுப்பள்ளி என்னுமிடத்தில் குடமுருட்டி என்ற கிளை

நதியாகப் பிரிந்து மேலும் சென்று கபிஸ்தலம் என்னுமிடத்தில் அரசலாறு என்ற கிளை நதியாகவும் பிரிகிறது. அடுத்து கும்பகோணத்திற்கு கிழக்கே திருமணஞ்சேரி என்னுமிடத்தி லிருந்து வீரசோழன் ஆறாகப் பிரிகிறது. தொடர்ந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்து செல்லும் காவிரி, திருவாலங்காடு என்னு மிடத்திலிருந்து விக்ரமன் ஆறு பிரிகிறது. காவிரி பூம்புகார் என்னுமிடத்தில் வங்கக்கடலில் கலந்துவிடுகிறது. கடலில் கலக்கும் முன் மேலையூர் என்னுமிடத்தில் பாசனத்திற்கான கடைசி அணை உள்ளது. காவிரி கடலுடன் கலக்குமிடத்தில் முப்பது அடி அகலமுள்ள ஒரு சிறிய கால்வாய் போன்று தோற்ற மளிக்கிறது. (இது கடலில் கலக்கும் இடத்தில் தற்போது பெரிய தொரு மணற்குன்று உருவாகியுள்ளது. அதன் விளைவாகக் காவிரி கடலோடு கலப்பது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.)

காவிரியின் பிரிவான குடமுருட்டியிலிருந்து திருமலை ராசன், முடிகொண்டான், சோழசூடாமணியார், புத்தார், வளப்பார் போன்ற ஆறுகள் பிரிகின்றன. காவிரியிலிருந்து பிரிந்த அரசலாற்றிலிருந்து நாட்டார், வாஞ்சியார், கீர்த்திமனார், நூலார் போன்ற ஆறுகள் பிரிகின்றன.

## 35) வெண்ணாறு

கல்லணையில் காவிரியாற்றிலிருந்து பிரிந்து செல்லும் வெண்ணாறு சுமார் 17 மைல்வரை ஓடி, வெண்ணாறு வெட் டாறு தலைப்பில் (தென் பெரம்பூர்) வடவாறு, வெட் டாறு என்ற கிளை நதிகளாகப் பிரிகிறது. வெண்ணாறு தொடர்ந்து மேலே சென்று அடுத்த 26 மைல் தூரத்தில் கல்லணையிலிருந்து 43வது மைலில் கோரையாறு, பாமணியாறு தலைப்பில் (நீடாமங்க லத்தில்) கோரையாறு, பாமணியாறு என்ற கிளைகள் பிரிகின்றன. மேலும் ஏழு மைல்கள் ஓடிய வெண்ணாறு, பாண்



டவையாறு தலைப்பில் (திருவாரூருக்கு மேலே) பாண்ட வையாறு என்ற கிளைநதி பிரிகிறது. மேலும் இரண்டு மைல் தூரம் வெண்ணாறு ஓடி வெண்ணாறு தலைப்பில் வெள்ளை யாறு எனற கிளைநதி பிரிகிறது. மேலும் வெண்ணாறு தொடர்ந்து ஓடி ஹரி சந்த்திரா நதியுடன் கலந்து விடுகிறது, வெண்ணாறு நேரிடையாகக் கடலில் கலப்பதில்லை. கல்லணை யிலிருந்து 57வது மைல் தொலைவில் கோரையாற்றி லிருந்து ஹரிசந்திராநதியும், முள்ளியாறும் பிரிகின்றன. முள்ளி யாற்றிலிருந்து அடப்பார், அய்யனார், மரக்காகோரை யாறுகள் பிரிகின்றன. வெட்டாற்றிலிருந்து, ஓடம் போக்கி ஆறும், ஓடம் போக்கி ஆற்றிலிருந்து கருவையாறும் பிரிகின்றன. இதைத்தவிர காட்டுவாரி, தென்பரை வடிகால், காட்டு வாய்க்கால் போன்ற வடிகால் ஆறுகள் உள்ளன. இந்த ஆறுகள் வடிகாலாக பயன்படுவதுடன் விவசாயத்திற்கும் பயன் படுகின்றன. வெண்ணா றும், அதன் கிளை நதிகளும், தஞ்சை, மன்னார்குடி, நன்னிலம், மாயூரம் திருத்துறைப்பூண்டி, நாகைப் பட்டினம் பகுதிகளை வளம் பெறச் செய்கின்றன.

## 36) கல்லணைக்கால்வாய்

கல்லணையில் காவிரியிலிருந்து பிரிந்து கல்லணைக் கால்வாய் என்ற பெயரில் ஒரத்தநாடு பட்டுக்கோட்டை பகுதிகளிலும், புதுக்கோட்டை மாவட்டத்தின் சில பகுதி களிலும் ஓடி பாசனத்திற்குப் பயன்படும் இக்கால்வாய் 1927-ஆம் ஆண்டு வெட்டப்பட்ட ஆறாகும். மொத்தம் 147 கி. மீட்டரும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 45 கி.மீட்டரும் ஓடி, மணமேல் குடிக்கருகில் வெள்ளாறு கடலில் கலக்கு மிடத்திற்கு அருகில் உள்ள மும் பாலை ஏரியில், கடைசியாகக் கலந்து விடுகிறது. இந்த கல்லணைக் கால்வாய், புது ஆறு என்று மக்களால் அழைக்கப் படுகிறது. இக்கால்வாயிலிருந்து

இரு கால்வாய்கள், கே.பி. கெனால், ஆர்.பி.கெனால் ரெகுலேடர் அணை மூலம் பிரிக்கப்படுகின்றன. இக்கால் வாய்களிலிருந்து 327 கிளை வாய்க்கால்கள் பிரிந்து செல் கின்றன. இதைத் தவிர பாசனத்திற்கு பயன்படும் மொத்தம் 1232 கி.மீட்டர் நீளம் உள்ள பல சிறுசிறு வாய்க் கால்கள் பிரிந்து செல்கின்றன.

கல்லணைக் கால்வாயின் மூலம் மொத்தம் 2,27 லட்சம் ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது. கல்லணைக் கால் வாயின் போக்கில் பல காட்டாறுகள் குறுக்கிடுகின்றன. இந்த காட்டாறுகளில் அணை கட்டப்பட்டு விவசாயமும் நடை பெறுகிறது. அணையிலிருந்த வாய்க்கால்கள் மூலமும், பம்பு செட்டுகள் மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டு விவசாயம் நடை பெறுகிறது. முக்கியமாகக் குறுக்கிடும் காட்டாறுகள்.

1. சோளகம் பட்டிவாரி, 2. முதலி முத்துவாரி, 3. வல்லம் வாரி, 4. மகாராஜ சமுத்திரம் ஆறு, **5.அக்னி அறு**, 6. வில்லுளியாறு, 7. அம்புலியாறு, 8. மருதன் குடியாறு, 9. முடியனாறு, 10. நரசிங்க காவிரி முதலியன இவைகள் மூலம் 720 குளங்கள் நீர் பெற்று சுமார் 80,000 ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. காவிரியும் அதன் கிளைகளும் பாய்ந்து பாசனம் அளிக்கும் பகுதிகளை காவிரி துணைக் கழிமுகம் என்றும் வெண்ணாறும் அதன் கிளை நதிகளும் பாசனம் அளிக்கும் பகுதிகளை வெண்ணாறு துணைக் கழிமுகம் என்றும், கல்லணைக்கால்வாய் பாசனம் அளிக்கும் பகுதிகளை புதிய கழிமுகம் என்றும் பெயர்பெற்றுள்ளன.

## 37) அக்னியாறு

காட்டாறான அக்னியாற்றில் அடிக்கடி வெள்ளம் கரை புரண்டு ஓடும். ராஜாமடம் பகுதியில் அக்னி ஆற்றின் அகலம்



சுமார் 0.5 கி.மீ. இந்த ஆறு கடலில் கலக்குமிடத்தில் பெரியதொரு கழிமுகம் உண்டு. இந்த கழிமுகத்தின் நடுவே சில குட்டித் தீவுகளும் உண்டு. இந்தத் தீவுகளில் மீன்பிடி தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட பல குடும்பங்கள் வசித்து வந்தன.

## 38) "Home Sickness" எனப்படும் வீட்டு நினைவு

என் தந்தையார் 1953அம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் சத்திரத்தில் சேர்த்துவிட்டு ஊர் சென்றுவிட்டார். 13 ஆண்டுகள் குடும்பத்தாரோடு தங்கி அன்பைப் பரிமாறிக்கொண்ட எனக்கு சத்திர வாழ்க்கை ஓர் புதிய அனுபவமாய் இருந்தது. நண்பர்களோடு அளவளாவிக் கொண்டு பள்ளிக்குச் சென்று வந்தாலும் வீட்டு நினைவு அவ்வப்போது நிழலாடும். அம்மா அளிக்கும் உணவின் சுவை அப்பொழுதுதான் புலப்பட்டது. களப்பாளுக்குச் சென்று எல்லோருடனும் ஓரிரு நாட்கள் பொழுதைக் கழிக்க வேணும் என்ற அவா மீதூர்ந்தது.

சத்திரத்திலிருந்து விடுப்பில் செல்லவேண்டுமானால் விடுதிக் காப்பாளரிடம் முறையான அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும். திரு.ரங்கராஜு என்னும் எழுத்தர் விடுதிக் காப் பாளராக இருந்தார். இவர் மதிய உணவு உண்டுவிட்டு பீடாவை வாயில் மென்றுகொண்டு பள்ளிக்கு வருவார். அப்போது அவரிடம் விடுப்புக் கேட்டு காகிதத்தை நீட்டினால் உடனே அனுமதி வழங்கிடுவார். மற்றைய நேரங்களில் அவரிடம் அனுமதி வாங்கமுடியாது. இந்த யுக்தியை எனக்கு சொல்லிக் கொடுத்தவன் என்னுடைய தோழனான கிருஷ்ணன் என்பான். இவன் தஞ்சாவூரிலிருந்து வந்து சத்திரத்தில் என்னுடன் படித்தவன். மராட்டிய ராவ் பரம்பரையைச் சேர்ந்தவன். தன்னை சிவாஜி வம்சத்தவன் என்றும் சொல்லிக் கொள்வான்.

## 39) அதிராம்பட்டினம்

களப்பாளுக்குச் செல்லவேண்டுமானால் காரைக் குடியிலிருந்து மயிலாடுதுறை செல்லும் ரயிலில் அதிராம் பட்டினம் புகை வண்டி நிலையத்தில் ஏறவேண்டும். திருத் துறைப் பூண்டி செல்வதற்கு இரயில் கட்டணம் 10 அணா. ராஜா மடத்திலிருந்து அதிராம்பட்டினம் செல்லும் சாலையின் இரு மருங்கிலும் நெடிதுயர்ந்த தென்னை மரங்கள் காணப்படும். சாலையின் இடது புறம் பெரிய தொரு பாசன ஏரி அமைந்திருந்தது. இந்தச் சாலையில் 2 கி.மீ. சென்ற பிறகு தாழங் காடுகள் நிறைந்த (நெய்தல் நிலத்திற்கு உரிய கருப்பொருள்களில் தாழையும் ஒன்று) வழித்தடத்தில் சென்றால் விரைவாகப் புகை வண்டி நிலையத்தைச் சென்றடையலாம். பட்டுக்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள துறை முகப்பட்டினம் இது.

கி.பி.1563 முதல் 1605 வரை ஆட்சி புரிந்த ஸ்ரீவல்லாளா என்ற பெயருடன் கூடிய அதிவீரராம பாண்டியன். தஞ்சை மன்னனை வெற்றி கொண்டதால், வெற்றியின் நினைவாக இத்துறைமுகத்திற்கு அதிவீரராமன் பட்டினம் என்று பெயரிட் டான். பின்னர் இப்பெயர் மருவி அதிராம்பட்டினம் என்று பெயர் பெற்றது. இங்கு உப்பளங்கள் உள்ளன. அதிராம் பட்டினத்தில் முகம்மதி யர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். அரிசி தேங்காய் போன்ற பொருள்கள் இத்துறையிலிருந்து இலங் கைக்கு ஏற்றுமதியாகின்றன.

கி.பி.1530இல் தஞ்சையை ஆண்ட செவப்ப நாயக்கர், அதிராம்பட்டினத்தில் ஹாஜி அலாவுதீன் கிஸ்திசாகிபின் தர்காவை அழகிய முறையில் அமைத்துத்தந்து, நிலத்தையும் மான்யமாக கொடுத்தார் என்று வரலாறு தெரிவிக் கிறது. இங்கு



தனியார் துறையினால் கலைக்கல்லூரியான காதர் மொஹைதின் கலைகல்லூரி 1953ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. ஒரு கல்லூரி என்றால் எப்படித் தோற்றமளிக்கும் என்பதைப் பார்ப்பதற்காகக் கல்லூரித் திறப்புவிழாவிற்கு நான் சென்று வந்தேன்.

## 40) ஊர்ப்பயணம்

மாலை 6.30 மணிக்கு அதிராம் பட்டினத்திற்கு வந்து சேரும் காரைக்குடி பாசஞ்ஜரில் ஏறினால் இரவு 8 மணிக்கு திருத்துறைப்பூண்டியைச் சென்றடையலாம். அங்கே கருணாநிதி அரிசி ஆலையில் (இந்த அரிசி ஆலையில்தான் என் தந்தையார் சில மாதங்கள் கணக்கராகப் பணிபுரிந்துவந்தார் என்பதை முன்பே தெரிவித்துள்ளேன்.) இரவு உறங்கிவிட்டு விடியற் காலை கால்நடையாக 6 கி.மீ. தூரம் நடந்தால் களப்பாளில் உள்ள எங்கள் வீட்டைச் சென்றடையலாம். இரண்டு நாட்கள் தங்கிய பிறகு மீண்டும் பள்ளிக்குச் செல்வதற்கு மனது இடம் கொடுக் காது. ஆயினும் மாலை 4 மணிக்கு புறப்பட்டு மீனமநல்லூர் மருதவனம், தென்பாதி வழியாக குறுக்கே நடந்து சென்றால் திருத்துறைபூண்டியைச் சென்றடைவேன். இளம் வயதில் அவ்வப்போது நேரம் கிடைக்கும் போதெல்லாம் சினிமா பார்ப்பது என்பது ஒரு பொழுதுபோக்கு. மாணவர்கள் மத்தியில் அதிக எண்ணிக்கையில் சினிமாபார்த்து விமர்சிப் பவன் ஒரு ஹீரோ. நானும் ஒரு'ஹீரோவாக' ஆவதற்காக வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் சினிமாப் பார்ப்பதுண்டு. இது மாதிரியான பிரயாண காலங்களின் போதுதான் திருத்துறை பூண்டி ப்ரஹந்நாயகி தியேட்டரில் 6 மாதத்திற்கு முன்பு வெளிவந்த படங்களை பார்க்க இயலும்.

(இதெல்லாம் சரியா தவறா என்று ஆராய்வது கூடாது.

*அந்தந்த பருவத்தின்போது ஏற்படும் உணர்வுகளுக்கேற்ப காண விரும்பும் காட்சிகளும் மாற்றம் பெறும். இது அடிப்படை மனித இயல்பு.)*

## 41) தலைமையாசிரியர் G.R.

*1953ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் பொறுப்பில் இருந்தவர் திரு.G.ராமச்சந்திர நாயுடு. சத்திரம் கெஸ்ட் ஹவுஸின் எதிர்புறம் இவருடைய வீடு அமைந்திருந்தது. அதுவும் சத்திரத்தைச் சார்ந்த ஒரு கட்டிடம். சில்க் ஜிப்பாவும், மில் வேட்டியும் அணிந்து கொண்டு காலை 9.25 மணிக்கு தன் வீட்டிலிருந்து பள்ளிக்குப் புறப்பட்டு வருவார். இவருக்கு முன்பு பள்ளிக்கூட ப்யூன் பெரியதொரு மரப்பெட்டியை தலையில் முண்டாசுடனும் பில்லை அணிந்த டவாலியுடனும் சுமந்துகொண்டு வருவான். இந்தப் பெட்டி வந்தாலே மாணவர்கள் சாலையில் நடமாடமாட்டார்கள். எலிகள் பொந்துக்குள் சென்று ஓடி ஒளிந்துகொள்வது போல மாணவர்கள் ஆங்காங்கே ஓடி ஒளிந்துகொள்வர்.*

## 42) பேச்சுப்போட்டியில் முதல் பரிசு

*சமூக அறிவியல் பாடம் போதிப்பதற்கு திரு.சம்பூர்ணம் ஐயர் என்பார் ஆசிரியர் பொறுப்பிலிருந்தார். இவர் நீண்டதொரு கோட்டும், தலைப்பாகையும் அணிந்திருப்பார். கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்கள் முறையே திரு.விட்டல், திரு. டெல்லிதுரை ஆகியோரும், தமிழாசிரி யர்களாக வி.பண்டரி நாதன், திரு.சி. கோபாலன் ஆகியோர் பணியாற்றிவந்தனர்.*

*இவர்களில் சமூக அறிவியல் பாடம் நடத்திவந்த திரு. சம்பூர்ணம் ஐயர் என்னிடம் பரிவுகாட்டி வருவார். அவருடைய வீடு அக்ரஹாரத்தின் முன் பகுதியில் பள்ளிக்கு அண்மையில் இருந்தது. ஞாயிற்றுக்கிழமையில் அவருடைய வீட்டிற்குச் சென்றால் ஏதாவது சிற்றுண்டி தருவார். அவர் தந்த ஊக்கத்தினால் 1953ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பள்ளியில் நடைபெற்ற ஆங்கிலம் மற்றும் தமிழ் பேச்சுப் போட்டிகளில் நான் கலந்து கொண்டேன். ஷேக்ஸ்பியரைப் பற்றியோ, அவர் எழுதிய ஜூலியஸ் சீஸர் நாடகத்தைப் பற்றியோ ஏதும் அறியாத எனக்குப் பலநாள் அவருடைய வீட்டில் பயிற்சி கொடுத்தார். உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆங்கில பேச்சுப் பேட்டியில் முதல் பரிசும், தமிழ் பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றேன். ஆசிரியர் சொல்லிக்கொடுத்த ஒலி மாற்றங்களோடு கைகளை விரித்தும் மடக்கியும் மேடை யில் நான் மார்க் ஆண்டனியின் பேச்சினை ஒப்பித்தது அனைவரையும் கவர்ந்தது. அன்றைய தினத்திலிருந்து அனைவருடைய கவனமும் என் மீது விழ ஆரம்பித்தது.*



"Friends, Romans, Countrymen, lend me your ears
I come to bury Caesar, not to praise him
The evil that men do lives after them
The good is oft interred with their bones
So let it be with caesar. The noble Brutus
Hath told you Caesar was ambitious
If it were so, it was a grievous fault
And grievously hath Caesar answered it.
Here under leave of Brutus and the rest
(For Brutus is an honorable man,
So are they all, all honorable men)
Come I to speak in Caesar's funeral
He was my friend, faithful and just to me
But Brutus says he was ambitious
And Brutus is an honorable man
He hath brought many captives home to Rome
Whose ransoms did the general coffers fill

Did this in Caesar seem ambitious?
When that the poor have cried, Caesar hath wept
Ambition should be made of sterner stuff
Yet Brutus says he was ambitious
And Brutus is an honorable man
You all did see that on the Lupercal
I thrice presented him a kingly crown
Which he did thrice refuse. Was this ambition?
Yet Brutus says he was ambitious
And sure he is an honorable man
I speak not to disprove what Brutus spoke
But here I am to speak what I do know
You all did love him once, not without cause
What cause witholds you then to mourn for him?
O judgment, thou art fled to brutish beasts
And men have lost their reason! Bear with me
My heart is in the coffin there with Caesar
and I must pause till it come back to me"

என்ற புகழ்பெற்ற மார்க் ஆண்டணியின் வஞ்சப் புகழ்ச்சியான பேச்சை அன்று ஒப்புவித்தேன். என்னுடைய குரல் கணீர் என்று ஒலிக்கும். அத்துடன் உச்சரிப்பு நன்றாக அமைந்திருந்ததால் எனக்கு முதல் பரிசு கிடைத்தது.

## 43) உடற்பயிற்சி ஆசிரியர் (*P.T.*) விக்டர்

தினந்தோறும் காலை அனைத்து ஆசிரியர்களும், பள்ளி மாணவர்களும் கலந்து கொள்ளும் அணிவகுப்பில், கடவுள் வணக்கம் முடிந்த பிறகு, அன்றைய நாட்டு நடப்புகளை செய்தித் தொகுப் பாக நான் படித்து வந்தேன். செய்திகளைச் சுடச்சுட தர வேண்டும் என்னும் ஆர்வத்தில் காலையில் கோபால் ‘‘டீ’’க்கடையில் (தலைமை ஆசிரியர் அறைக்கு முன்பு சாலையின்



மறுபக்கத்தில் அமைந் திருந்த தேனீர் விடுதி. இவர் கடையில் ஒவ்வொரு நாளும் காலையில் சுதேச மித்திரன் நாளேட்டிலிருந்து செய்திக் குறிப்பு களை நான் சேகரித்து அணி வகுப்பில் படித்து வருவேன்.) விக்டர்



என்பவர் உடற்பயிற்சி ஆசிரி யராக பணியாற்றி வந்தார். நான் செய்தி வாசிக்கும் போது நேராக நிற்காமல் வலது காலை சாய்வாக வைத்துக் கொண்டு நின்றதற்காக தன் அறைக்கு வர வழைத்து காலிலே பிரம் பால் ஒரு தட்டு தட்டினார். அவருடைய அடிக்குப் பயந்து கொண்டே 11 ஆம் வகுப்புவரை ஒழுங்காக நின்றுகொண்டு செய்திகளைப் படித்தேன். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பலரை நாம் சந்திக்கிறோம். அவர்கள் அனைவரையும் நாம் நினை வில் கொள்வதில்லை.

53 ஆண்டுகளுக்கு முன்பு என் முழங்காலில் அடித்த விக்டர் என்ற பெயர்கொண்ட உடற்பயிற்சி ஆசிரியரை இன்றும் நினைவில் கொண்டுள்ளேன். அதற்குக் காரணம் அவர் என்னை நிமிர்ந்து நில், அச்சம் கொள்ளாதே எனத் தண்டித்ததுதான். அந்த தண்டனையின் விளைவாக நான் ‘இன்று நிமிர்ந்து நிற்கிறேன்’. அச்சம் கொள்ளாது இன்னல் களை எதிர்கொள்கிறேன்.

## 44) அட்டைகள் போல் சுவைப்பர்

சத்திரத்தைச் சுற்றிப் பல ஏரிகள் அமைந்திருந்தன.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர்கள் குழுக்களாக இந்த ஏரிகளுக்குச் சென்று சில மணி நேரம் நன்றாக நீரில் மூழ்கி குளித்து வருவது வழக்கம். முதன் முதலில் குளிக்கச்சென்ற எங்களிடம் 11ஆம் வகுப்பு மாணவ நண்பர்கள் கையில் ஒரு நெருப்புப் பெட்டியைக் (Match Box) கொடுத்து அனுப்பி வைத்தனர். ஏன் இவ்வாறு நெருப்புப் பெட்டியைக் கொடுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, ஏரிக்கரையில் உனக்கு விடை கிடைக்கும் எ ன்று சொல்லி அனுப்பினார்கள். ராகிங் கொடுமையெல்லாம் அப்போது கிடையாது. மாறாக மூத்த மாணவர்கள் புதிய மாணவர்களுக்கு நல்ல அறிவுரையை அவ்வப்போது வழங்கிவருவர். ஏரிக்கரைக்குப் போன பிறகு குளிக்க வந்த ஊர் மக்கள் ஒவ்வொருவரும் ஒரு தீப்பெட்டி யோடு வந்ததைக் கண்டோம். குளித்துக்கொண்டிருந்த ஒருவர் திடீரென்று ''ஐயோ! ஐயோ!! அட்டை கடித்து விட்டது'' என்று அலறிக்கொண்டு கரைக்கு ஓடி வந்தார். அப்போது பக்கத்தில் இருந்த ஒருவர் தீக்குச்சியைக் கொளுத்தி அவருடைய உடலில் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் அட்டையின் மேல் வைத்தார். அட்டையின் சுருண்டு கீழே விழுந்தது. அங்கே அதற்கு தகனமும் நடைபெற்றது.

*(நம்மாழ்வார், அட்டைகள் மனித இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதை திருவாய்மொழி 9-1-2இல் வர்ணித்துள்ளார்.*

***துணையுஞ் சார்வுமாகுவார்போல் சுற்றத்தவர் பிறரும்***
***அணையவந்தவாக்கமுண்டேல் அட்டைகள் போல் சுவைப்பர்***

*(சுற்றத்தவர்பிறரும்) - ஜ்ஞாதிகளும், மற்றுமுள்ளாரும். (அணையவித்யாதி) - கைக்கெட்டின ஸம்பத்துண்டாகில். ''இவன் பக்கலிலே ப்ரயோஜநம் தங்களுக்கு உண்டாம்'' என்று தோற்றி யிருக்கிலென்னுதல் ''தங்கள்பக்கல் இவனுக்கு ஒரு ப்ரயோஜந முண்டு'' என்று தோற்றியிருக்குமாகில் என்னுதல். (அட்டைகள் போல் சுவைப்பர்) - ரக்த ஸ்பர்ஶமற வாங்காநிற்கச்செய்தே, இவனுக்கு ஹிதஞ்செய்தனவாயிறே இவையிருப்பது; அப்படியே, உபகாரங் கொண்டாராய்க்கொள்ளாதே, ஹிதஞ்செய்கிறார்களாய்க் கொண்டு உஜ்ஜீவிப்பர்கள். ''உன் பக்கலிலே தநங் கிடக்கில் வாங்கிக் கொள் வர்கள், அவற்றை என் மேலே ஏறிட்டுவை'' என்று அவனுக்கு ஹிதஞ் செய்கிறார்களாயாயிற்று, உபஜீவிப்பது. - என்று நம்பிள்ளை இதற்கு உரையருளிச்செய்துள்ளார்.)*



அட்டைகள் உடலின் மேற்பகுதியில் ஒட்டிக் கொள் ளும் ஒருவகைப் புழு இனம். இவை 5 மி.மீ. நீளத்திலிருந்து 46 செ.மீ. நீளம் கொண்டவை. இவற்றின் முன்புறத்திலும் பின்புறத்திலும் பல்லைப் போன்ற அமைப்புக்கொண்ட கூர்மையான பகுதிகள் உள்ளன. இவற்றின் உதவியால் உடலின் மேல்பகுதியை அவை துளையிட்டு இரத்தத்தை உறிஞ்சு கின்றன. 3 கூர்மையான அலகுகளின் துணை கொண்டு Y வடிவத்தில் உடலின் உட்பகுதியில் வெட்டுப் பகுதியை உண்டாக்குகின்றன. அதன் வாயிலிருந்து சுரக்கும் உமிழ்நீர் மயக்கமருந்து செலுத்தினால் ஏற்படும் உணர்வினை ஏற்படுத்து கிறது. கடியுண்ட பகுதிக்கு இரத்த ஓட்டம் அதிக அளவில் வருவதற்கு இந்த உமிழ்நீர் வழிவகுக்கிறது. அதே சமயம் அந்த இரத்தம் திடத் தன்மையைக் கொள்ளாமல் திரவத் தன்மையிலே இருக்குப் பதற்கு இந்த உமிழ்நீரிலுள்ள வேதியற் பொருள்கள் துணைசெய்கின்றன. அட்டையால் கடிக்கப்பட்ட ஒரு மனிதன் அதை உணர்வதில்லை. கடிக்கப்பட்ட இடத்தி லிருந்து இரத்தம் வழியும்போதுதான் அதை உணர்கிறான். இவ்வாறு உறிஞ்சப் படும் இரத்தத்தை பல மாதங்கள் சேமித்து வைத்து அட்டை அதை உணவாக்கொள்ளும் தன்மை கொண்டது. ஒரு அட்டை மனித இரத்தத்தை உட்கொள்வது

*10 மி.லி. அளவுதான். அதாவது தன் எடையைப் போல 3 மடங்கு இரதத்தை உறிஞ்சும் தன் வயறு நிரம்பியவுடன் மனித உடலிலிருந்து விடுபட்டு கீழே விழுந்து துடிக்கும்.*

*பண்டைய நாட்களில் மனித உடம்பிலுள்ள கெட்ட இரத்தத்தை வெளியில் எடுப்பதற்கு மருத்துவர்களும் நாவிதர் களும் அட்டைப் பூச்சிகளைப் பயன்படுத்தி வந்தனர். தற்போது இத்தகைய முறைகள் கையாளப் படுவதில்லை. இவ்வாறு உறிஞ்சப்பட்ட இரத்தத்தை அட்டைகள் தங்களுடைய உமிழ் நீருடன் கலந்து உடலில் சேமித்து வைத்துக்கொள்கின்றன. இந்த உமிழ் நீருக்கு Hirudin என்று பெயரிடப்பட்டுள்ளது. இரத்தப் பெருக்கை சீரான நிலையில் வைத்துக்கொள் வதற்கு 'ஹிருடின்' எனப்படும் இந்த இரசாயனப் பொருளை அட்டைகளைக் கொன்று சேகரிக்கி றார்கள். அறுவைசிகிச்சை யின்போது இரத்தம் உறைந்து போகாமல் இருப்பதற்கு இந்த 'ஹிருடின்' உடலில் செலுத்தப் படுகிறது.*

***(மனித இரத்தத்தின் பல்வேறு வியப்பூட்டும் தன்மைகளில் ஒன்று அது உடலிலிருந்து வெளிப்படும்போது கொண்டுள்ள 'உறையும்' தன்மை - ability to clot. இவ்வாறு இரத்தம் உறையும் போது சிவப்பு இரத்த அணுக்கள் Fibrils என்று அழைக்கப்படும் நூலிழை போன்ற பொருளோடு கூட்டு சேர்ந்து Fibrinஆக மாறுகிறது. இரத்தம் உறைவதற்கும் அது உறையாமல் ஒரே சீராக இருக்கும் தன்மைக்கும் பல்வேறு இரசாயனப் பொருள்கள் உதவிபுரிகின்றன. இரத்தம் உறையும் தன்மை கொள்வதற்கு முன்பு ஏற்படும் இரசாயன மாற்றத்திற்கு Hemostasis என்று பெயர். இரத்தத்தில் கரையக்கூடிய Plasma Protein Fibrinogen என்னும் இரசாயன பொருள் இரத்தத்தில் கரையாத தன்மைகொண்ட Fibrinஆக மாறுவதே இரத்தம் உறைவதற்கு உதவிசெய்கிறது. இரத்தம் வெளிப்பட்ட 10 வினாடிக்குள் பெரிய தொரு இரசாயன மாற்றம் உடலில் ஏற்படுகிறது.***



***உடலில் அசைவற்ற நிலையில் இருக்கும் Proteolytic enzymes இரத்தம் வெளிப்பட்டவுடன் ஒன்று சேர்ந்து Prothrombin தூண்டு பொருளாக மாறுகின்றன. இவை உடலில் இருக்கும் கால்சியத்துடன் ($ca^{++}$) சேர்ந்து Thrombinஆக மாறுகின்றன. இதுவே இரத்தத்தை உறையச்செய்கின்றது. உடலில் சோடியம் சிட்ரேட் செலுத்தப்படும் போது அது கால்சியத்தை இரத்தத் திலிருந்து பிரித்தெடுப்பதால் இரத்தம் உறையும் தன்மையை இழக்கின்றது. உடலில் வைட்டமின் K குறையும் போது Thrombin சுரப்பதில்லை. உடலில் ஓடும் இரத்தம் உறைந்து போகாமல் இருப்பதற்கு கல்லீரலில் சுரக்கும் Heparin உதவிசெய் கின்றது. இவ்வாறு இரத்தம் உறையாமல் இருப்பதற்கு அட்டையின் உடலிலிருந்து எடுக்கப்படும் Heparin / Hirudin தேவையானபோது உடலில் செலுத்தப்படுகிறது. )***

*அட்டையின் உமிழ்நீர் சுரக்கும் பகுதியில் அமைந்துள்ள Hiduro Medicinalis என்ற சுரப்பியிலிருந்து சுரக்கும் ஒருவகைப் புரதப்பொருளே 'ஹிருடின்'. அறுவை மருத்துவ பணி மேற்கொள்ளப்படும்போது உடலில் இரத்த ஓட்டம் சீராக இருப்பதற்கும், அது உறைந்து போகா மலிருப்ப தற்கும் ஹிருடின் பயன்படுத்தப்படுகிறது. அட்டையினுடைய பற்கள் மிக சிறிய அளவில் அமைந்திருந்தபோதிலும் அதனால் கடியுண்டவனுடைய உடலிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்படுகிறது.*

## 45) ஆந்தையின் அலறலும், நரியின் ஊளையும்

*ராஜாமடத்திலிருந்து தஞ்சை செல்வதற்கானப் பேருந்து விடியற்காலை 5.30 மணிக்கு புறப்பட்டுச் செல்லும். முன்பே குறிப்பிட்டுள்ளபடி பேருந்துகள் அனைத்தும் அடுப்புக் கரியால் இயக்கப்பட்டு வந்தன. K.R.T. பேருந்து இரவு 10 மணிக்கு ராஜா மடத்திற்கு வரும். அதன்பிறகு காலையில் 5.30 மணிக்கு புறப்பட்டுச்செல்லும். விடியற் காலை 3 மணியிலிருந்து*





பேருந்துடன் இணைக்கப் பட்டிருக்கும் காற்றாலை கொண்டு இதிலுள்ள கரிக்கட்டை களைத் தேவையான வெப்பநிலையை அடையச் செய்வார்கள். இந்த காற்றாலையைச் சுற்றும் ஒலி காலை 3 மணியிலிருந்து வெளிப்படும். இந்த ஒலிதான் எங்களுக்கான மணிக்கூண்டு. இரவு சிறுநீர் கழிப்பதற்காகக் கட்டிடத்தின் பின்புறம் வந்தால், எங்கும் இருள் சூழ்ந்திருக்கும். தேய்பிறை நாட்களில் வானத்தில் மின்னும் நட்சத்திரங்களே ஒளியூட்டிக் கொண்டி ருக்கும். தற்போது நாம் காணும், தெரு மின் விளக்குகள் கிடையாது. அதற்கு பதிலாக முச்சந்திகளில் கருங்கல் தூணில் லாந்தர் விளக்குகள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். பல நாட்கள் காற்றில் இவை அணைந்து போயிருக்கும். ஊரைச் சுற்றி பனங் காடுகள், தாழைப் புதர்கள், ஈச்சஞ்செடிகள், காரை முட்கள், காட்டுச் செடிகள் அதிக அளவில் காணப்படும். இவற்றின் ஊடே பதுங்கியிருக்கும் நரிகளுக்கு இரவு வந்தால் கொண் டாட்டம். தொலைவிலிருந்து அவை ஊளையிடும் ஒலியும், ஆந்தை அலரும் ஒலியும் அவ்வப்போது அச்சத்தை உண்டு பண்ணும்.

## 46) ஹிந்தி நஹி மாலும்' - எனக்கு ஹிந்தி தெரி யாது

விருப்பப்பாடங்களில் ஒன்று ஹிந்தி. கிராமப் பள்ளி யில் எட்டாம் வகுப்புவரை படித்துவிட்டு சென்ற எனக்கு ஹிந்தியில் ஒரு எழுத்துக்கூடத் தெரியாது. ஹிந்தி ஆசிரியரிடம் எனக்கு ஹிந்தி எழுத்துக்களைக் கற்றுத் தருவதற்குத் தனிப் பயிற்சி தந்திடுமாறு கேட்டுக் கொண்டேன். அதற்கு, அவர் செவிசெய்க்கவில்லை. பஞ்சநதம் என்னும் சக மாணவன் தஞ்சை கல்யாணசுந்தரம் உயர் நிலைப்பள்ளியில் படித்தவன். ஹிந்தியில் நன்றாக எழுதவும் படிக்கவும் தெரிந் தவன். ஹிந்தி ஆசிரியர் வகுப்பில் நடத்திய பாடங்களைப் புத்தகத்தை

வைத்துப் படித்திடுமாறு கட்டாயப் படுத்துவார். இதற்காகப் பஞ்சநதம் உதவியுடன் ஒவ்வொரு ஹிந்தி சொற்றொடரின் கிழே தமிழ் எழுத்துக்களில் வாக்கியங்களை எழுதிக்கொண்டு உரத்த குரலில் வகுப்பில் படித்திடுவேன். வகுப்பாசிரியருக்கு மிகுந்த மகிழ்ச்சி. நான் இவ்வாறு படிப்பதை கேட்ட சில மாணவர்கள் அவர்களுக்கு நான் ஹிந்தி சொல்லித் தர வேண்டும் என்ற வேண்டுகோளோடு என்னிடம் வந்தனர். அதற்கு என்ன பதிலைக் கூறியிருப்பேன் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

## 47) 'சித்திரமும் கைப்பழக்கம்'

அருணாசலம்பிள்ளை என்பவர் எங்கள் பள்ளியின் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். எனக்கும் ஓவியத் திற்கும் வெகு தூரம். என்னால் ஒரு வட்டத்தையோ அல்லது சதுரத்தையோ சரியாக வரைய முடியாது. இவர் வகுப்பில் விதவிதமான பூக்களை வரைவார். நாங்கள் அந்தப் பூக்களை ஓவிய நோட்டில் வரைய வேண்டும். அடுத்த வகுப்பில் ஒவ்வொருவருடைய ஓவிய நோட்டையும் பார்வையிடுவார். சரியாக சித்திரம் வரையாதவர்கள் தலையில் குட்டு விழும். வாரத்திற்கு ஒருநாள் இந்த வகுப்பு. இந்த வகுப்பில் குட்டு படாமல் தப்பிப்பதற்கு உதவி செய்தவன் என்னுடைய விடுதித் தோழனும், களப்பாளில் என்னுடன் படித்தவனுமான சம் பந்தம். அவன் நன்றாக ஓவியம் வரைவான். அவன் உதவி கொண்டு ஒன்பதாம் வகுப்பில் ஓவிய ஆசிரியரின் கெடுபிடியி லிருந்து தப்பித்தேன். 9ஆவது வகுப்போடு 'சித்திர அவஸ்தை' முடிந்தது.

## 48) தேர்ச்சி பெற்றும் உயர் வகுப்பிற்குச் செல்ல இயலவில்லை

பல நாட்கள் வகுப்பறையைப் புறக்கணித்து, வீட்டு



நினைவாக ஊர் சென்று வந்ததால் நல்ல மதிப்பெண்களைப் பெற்றும் தேவையான அளவு நாட்கள் வருகை பதிவேட்டில் பதியப் படாததால் 10ஆம் வகுப்பில் படித்துக்கொண்டு 9ஆம் வகுப்பில் ஆஜர் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதாவது மாவட்ட கல்வியதிகாரியின் Condonation பெறப்படும் வரையில் 9ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப் படவில்லை. பாடப்பகுதியினை இழக்காமல் இருப்பதற்காகப் பத்தாம் வகுப்பில் உட்கார்ந்து கொள்ளலாம். ஆனால் 9ஆம் வகுப்பு ஆஜர் பட்டியலில்தான் பெயர் இருக்கும். பள்ளி திறந்த பிறகு 30 நாட்களில் இந்த Condonation கிடைக்கப்பெற்றேன்.

## 49) பழையன கழிதலும் புதியன புகுதலும்

ஆசிரியர்கள் பலர் மாற்றம் பெற்றனர். திரு.S.தண்ட பாணி ஐயர் என்பார் கணித ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் கட்டுக் குடுமியுடன் கதர் சட்டை, கதர் வேட்டி, தோளிலே தொங்கும் துண்டு இவற்றுடன் காட்சி யளிப்பார். உட்கார்ந்து கொண்டு பாடம் நடத்துபவர் தலைமை ஆசிரியர் வருவதைக் கண்டால் பரபரப்புடன் கரும்பலகை அருகே சென்று பாடம் நடத்துவார். இவரே வேதாரண்யத்திற்கு மாற்றல் பெற்றபிறகு மீண்டும் நான் 11ஆம் வகுப்பு படிக்கும் போது தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

சமூக அறிவியல் ஆசிரியரான சம்பூர்ணம் ஐயர் ஒருநாள் திடீரென மாரடைப்பில் மரணமடைந்தார். பள்ளியே சோகத் தில் ஆழ்ந்தது. மாணவர்கள் அனைவரும் இடுகாடுவரை சென்று அஞ்சலி செலுத்தினோம். என்னுடைய படிப்பில் மிகுந்த அக்கறை கொண்ட இவருடைய மரணம் எனக்கு ஓர் பேரிழப்பாக இருந்தது. அதன்பிறகு சுந்தர வரதாசார்யர்

என்பவர் தஞ்சை மாவட்டம் குற்றாலம் உயர்நிலைப் பள்ளியிலிருந்து மாற்றல் பெற்று ராஜாமடம் பள்ளிக்கு வந்தார். இவர் சுமார் 3 கி.மீ. தூரத்திலிருந்த ராஜாமடம் ரோடு ஸ்டேஷன் பகுதியிலிருந்து தினந்தோறும் நடந்தே வருவார். ஆசார சீலர், நெற்றியில் திருமண் காப்புடன் காட்சியளிப்பவர்.

தினந்தோறும் துவைத்த ஆடைகளையே அணிந்துவருவார். மற்றைய ஆசிரியர்கள் போல சலவைத் துணியை அணியமாட்டார். இவரைப் 'பண்டாரம் வருகிறது' என்று மாணவர்கள் கேலி செய்வர். அதைப் பற்றியெல்லாம் அவர் என்றும் கவலைப்பட்டதில்லை. வெளியில் எங்கும் உணவு அருந்தமாட்டார். அவர் உண்டு, அவர் வேலை உண்டு என்று இருப்பார். இவரைப் போன்ற ஆசிரியர்களை நினை வோட்டத்தில்தான் பார்க்கலாமே யொழிய இன்று நேரில் பார்க்க முடியாது. கல்வி கற்பதற்கு அடிப்படை பணிவும் பண்புமேயாகும்.

## 50) மர்ம மனிதன்

பள்ளியில் படித்துக்கொண்டிருந்த நாட்களில் நான் விரும்பி படித்தது தமிழ்வாணன் எழுதிய மர்ம நாவல்கள். இவை கல்கண்டு வார இதழில் வெளிவந்து கொண் டிருந்தன. மர்ம மனிதன் நாவலில் சங்கர்லால், அசிஸ் டென்ட் கமிஷனர் வஹாப், கத்தரிக்காய் போன்ற கதா பாத்திரங்களை உலாவவிட்டு நாவலை எழுதியுள்ளார் தமிழ் வாணன். சங்கர்லாலை மையமாகக் கொண்டு பல துப்பறியும் நாவல்களை இவர் படைத்துள்ளார். மர்ம மனிதன் நாவலைப் படித்துவிட்டு மாலைக்குள் அந்த புத்தகத்தைக் கொடுத்தவரிடம் திருப்பிக் கொடுப்பதற்காக 'வயிற்றுவலி' என்று இல்லாத ஒரு காரணத்தைக் கூறிப் பள்ளிக்குச் செல்லவில்லை. பகலில் அந்த மர்மக் கதையை படிக்கும் போதே அச்சமாக இருந்தது.



## 51) திகம்பர சாமியார்

நான் விரும்பிப் படித்த நாவல்களில் வடுவூர் துரைசாமி ஐயங்கார் எழுதிய திகம்பர சாமியார் நாவலும் ஆகும். இது திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. வடுவூர் துரைசாமி ஐயங்காருடைய நாவல்கள் எழுத்துலகில் பெரிய புரட்சியை உண்டுபண்ணிய காலகட்டம் அது. தமிழ் நாவல்களில் துப்பறியும் பாத்திரங்களைப் புகுத்திக் கதையின் நிகழ்ச்சிகளில் விறுவிறுப்பையும், திகைப்பையும் உண்டாக்கி, திருப்பங் களையும் தந்து படிப்போரின் ஆவலைத் தூண்டும்படியான நாவல்களை எழுதிப் புகழ் பெற்ற துரைசாமி ஐயங்கார், தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடிக்கு அருகில் உள்ள வடுவூரில் கிருஷ்ணஐயங்காரின் மகனாகப் பிறந்தார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1880-1940.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான இவர், பொழுது போக்காகத் தமிழில் நாவல்களை எழுதினார். பல ஆண்டுகள் அரசு ஊழியராகப் பணியாற்றிய இவர் ''மேனகா'' என்ற நாவலை எழுதிப் பெரும் புகழ் பெற்றார். இவருடைய இந்த நாவல் நாடகமாக நடிக்கப் பட்டது. பின்னர் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது. அக்காலத்தில் இது ஒரு சமூக சீர்திருத்தப் படமாக கருதப்பட்டது. இவருக்கு மேலும் புகழைத் தந்த நாவல் 'கும்பகோணம் வக்கீல்' அல்லது 'திகம்பர சாமியார்' என்ற நாவலாகும். இந்த நாவலும் திரைப்படமாக்கப் பட்டது. இதைத் தவிர மாயா விநோதப் பரதேசி, பாலாமணி அல்லது பக்காத்திருடன், மதனகல்யாணி, சௌந்திரகோகிலம், திடும் பிரமவேச மாயாஜால பரதேசி அல்லது மோஹனாங்கி முதலிய சிறந்த நாவல்களை, எழுதினார். நகைச்சுவையுடன் எழுதக்கூடியவர். நாவலைத் தவிர பல கதைகளையும், எழுதியுள்ளார். செய்யுள் உரைநடையுடன் கூடிய மாணிக்க

வாசகர் என்ற நாடகம் ஒன்றையும், திலோத்தமா என்ற முழுச் செய்யுள் நூல் ஒன்றையும் படைத்துள்ளார். இவருக்கு ஆங்கிலத்திலும் நல்ல புலமை இருந்தது. மறைந்த இணைப்புகள் (Missing Link) என்ற ஆராய்ச்சி நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். இவருடைய நாவல்களை மக்கள் விரும்பி படித்து மகிழ்ச்சி அடைந்தனர்.

## 52) திகம்பர சாமியாராக *M.N.* நம்பியார்

1935ல் நடிக்கத் தொடங்கி 2005லும் நடித்துக் கொண்டிருக்கும் எம்.என்.நம்பியார் கதாநாயகனாக நடித்த படம். ‘திகம்பர சாமியார்’ - டி.ஆர். சுந்தரம் தயாரித்து இயக்கிய இப் படத்தில் நம்பியாரின் முழுத்திறமையும் வெளிப்பட்டது. ‘திகம்பர சாமியார்’ ஒரு துப்பறியும் நிபுணர்.



வடுவூர் துரைசாமி ஐயங்காரின் திகம்பரசாமியார் நாவலில் வரையப்பட்ட சில சித்திரங்கள்



அவர் செவிட்டு மந்திரவாதி, முஸ்லீம் பணக்காரர், வெற்றிலை வியாபாரி, நாதஸ்வர வித்வான், மைனர் மற்றும் தபால்காரர் போன்ற 9 வேடங்களைப் புனைந்துகொண்டு, ஒரு நீதிபதி, ஒரு வழக் குரைஞர் ஆகியோர் செய்யும் சட்டவிரோத செயல்களைத் துப் பறிந்து கண்டு பிடித்து அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தருவார். இந்த வேடங்களில் அனைத்தையும் ஏற்று சிறப்பாக நடித்திருந்தார் எம்.என்.நம்பியார். கொடுமையின் அவதாரமாக டி.பாலசுப்ரமணியம், நரசிம்மபாரதி, எம்.ஜி. சக்ரபாணி, வி.கே.ராமசாமி, எம்.எஸ்.திரௌபதி மற்றும் சி.கே.சரஸ்வதி ஆகியோரும் நடித்திருந்த ‘திகம்பர சாமியார்’ 29.09.1950 அன்று வெளியானது. ஜி.ராமநாதன்- எஸ்.எம்.சுப்பையா நாயுடு இருவரும் இசையமைத்திருந்தனர். அப்படத்தில் இடம் பெற்ற ஊசிப் பட்டாசே வேடிக்கையாக வைச்சாலே வெடி டபார் டபார்.. ‘‘பாருடாப்பா பாருடப்பா பாருடாப்பா நீ..’’ - ஆகிய பாடல்கள் இன்றளவும் அனைவராலும் விரும்பிக் கேட்கப்படுகிறது.

## 53) ‘மனோரா’வைப்பார்

புதிதாக வரும் மாணவர்களைப் புதிய சூழலுக்கு கொண்டுவருவதற்காக மூத்தமாணவர்கள் சில நேரங்களில் சில குறும்புச் செயல்களில் ஈடுபடுவதுண்டு. சத்திரத்திற்கு எதிரே உள்ள குளத்தின் தெற்குக் கரை சற்று மேடானது அதன் ஓரத்தில் கல்லணைக் கால்வாயிலிருந்து பிரிந்த சிறு வாய்க் காலில் நீர் சலசலவென ஓடிக்கொண்டிருக்கும். குளத்தின் தென்மேற்கு மூலையில் நீர் பாய்ச்சுவதற்கான சிறு மதகு உண்டு. புதிதாகச் சேர்ந்துள்ள மாணவர்களில் ஒருவனை அந்த மதகின் மேல் ஏற்றி கீழே குனிந்துபார் ‘மனோரா’ தெரியும் என்று சொல வார்கள். அவனும் ஆர்வத்துடன் குனிந்து பார்ப்பான். அப்பொழுது அந்த வாய்க்காலில் அவனைப் பிடித்துத் தள்ளி

விடுவார்கள். வாய்க்காலின் அடிப்பகுதி மணற்பாங்கானதாக இருந்ததால் எந்த ஆபத்தும் நேராது. இதே செயலை அடுத்த வருடம் கீழே விழுந்த அதே மாணவன் மற்றொரு மாணவனுக்குச் செய்ய முனைந் திடுவான்.

## 54) போரில் வெற்றி கண்டதற்கு ஓர் நினைவுச் சின்னம் மனோரா

பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது விடுதியில் இருந்த அனைத்து மாணவர்களும் ராஜா மடத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் கடற்கரை ஓரம் அமைந்துள்ள 'மனோரா' என்று அழைக்கப்படும் வரலாற்றுச் சின்னத்தினைப் பார்ப்பதற்காக விடுதிக் காப்பாளர் தலைமையில் கடற்கரையோரமாக நடந்துச் சென்றோம்.

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம், சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் சரபேந்திர ராஜபட்டினம் என்றும் முன்னாளில் சாளுவநாயக்கன் பட்டினம் என்றும் அழைக்கப்பட்ட ஊரில் அமைந்துள்ளது மனோரா. வங்கக் கடலோரம், தென்னை மரங்கள் அடர்த்தி யாகச் சூழ்ந்த இயற்கை எழிலோடு திகழும் ஓர் சிற்றூர் சாளுவநாயக்கன் பட்டினம். இச்சிறிய கிராமத்தோடு இணைந்துள்ள மல்லிப் பட்டினம் பேரூராகத் திகழ்கின்றது.

பட்டுக்கோட்டை , பேராவூரணி, அதிராம்பட்டினம் ஆகிய ஊர்களிலிருந்து சாலை வழியே மல்லிப்பட்டினம் சென்று அங்கிருந்து சரபேந்திர ராஜபட்டினத்தை அடை யலாம். இயற்கை எழிலோடு திகழும் இவ்வூரில் கடற் கரையை ஒட்டி அமைந்துள்ள 'மனோரா' எனும் கோட்டை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நினைவுச்சின்னமாய்த் திகழ் கின்றது. எழில் வாய்ந்த இந்தச் சின்னம் அகழி, கோட்டை,



தங்கும் அறைகள், ஒன்பது அடுக்கோடு கூடிய கலங்கரை விளக்கக் கோபுரம் ஆகியவற்றோடு திகழ்கின்றது. தஞ்சையை ஆட்சி செய்த இரண்டாம் சரபோஜி எனும் மராட்டிய மன்னர் ஆங்கிலேயர்களின் மேலாதிக் கத்தின் கீழ் தம் அரசை நடத்த வேண்டிய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார். உலக நாடுகளில் காலனி ஆதிக்கத்தை நிறுவும் போட்டியில் ஆங்கிலேயர்களும், பிரஞ்சுக்காரர்களும், மற்ற மேலை நாட்டவர்களும் தீவிரமாக ஈடுபட்டு, ஒருவருக் கொருவர் போரிட்டுக் கொண்டிருந்த நாளில், ஆங்கிலேயர்களுக்கு இந்திய அரசர்கள் உதவ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அச்சூழலில் கி.பி.1813 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களுக்கு எதிரியாய்த் திகழ்ந்த நெப் போலியன் போனபார்ட் எனும் பிரஞ்சுப் பேரரசன் லீப்சிக் எனும் இடத்தில் தோல்வியைத் தழுவினான். பின்பு இரண்டாவது முறையாக கி.பி.1815 ஆம் ஆண்டு வாட்டர்லூ சண்டையில் தோல்வியுற்றான்.

## 55) மாவீரன் நெப்போலியன்

நெப்போலியனின் முதல் தோல்வி ஆங்கில ஆதிக்கத்திற்குப் பெருமகிழ்வளித்தது. அவ்வெற்றியை ஆங்கில ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாட்டினரும், மன்னர் களும் கொண்டாடி மகிழ்ந்தனர். அப்போது தான் ஆங்கி லேயர் களுடன் நட்போடு திகழ்ந்த தஞ்சை அரசர் இரண்டாம் சரபோஜி இந்த மனோரா கோட்டையை ஓராண்டுக்குள் கட்டுவித்து நெப்போலியனின் தோல்விக்கும், ஆங்கிலேயர் களின் வெற்றிக்கும் நிரந்தர நினைவுச் சின்னமாக்கினார். அதன் வரலாற்றையும் பன்மொழிகளில் கல்வெட்டாக்கி அங்கு பதித்தார்.

ஒருபுறம் அரசியல் வெற்றி தோல்விகளைக் காட்டும்

ஒரு நினைவுச் சின்னமாக மனோராக் கோட்டை திகழ்ந்த போதும் மறுபுறம் அது சிறந்த கடல் வணிகமையமாகவும், பாதுகாப்புமிக்க அரணாகவும், அவ்வப்போது அரச குடும் பத்தினர் வந்து தங்குமிடமாகவும் இருந்தது. முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று நிகழ்வுகளும் அங்கு அரங்கேறியுள்ளன.

## 56) மனோராவின் கட்டமைப்பு

மனோராக் கோட்டையின் நடுவே அமைந்துள்ள ஒன்பது அடுக்குக் கோபுரம் கலங்கரை விளக்கத் தூணாகவும் விளங்குகின்றது. இக்கட்டிடத்தில் பல்வேறு கலை மரபுகள் திகழ்ந்த போதிலும், மராட்டியர்களின் தாயகமான மராட்டிய மாநிலத்தில் விளக்குகள் ஏற்றும் தீபத்தூண் (தீபஸ்தம்பம்) என்ற கட்டுமானத்தின் மறுபதிப்பாக இது விளங்குகின்றது. இதனை ஒத்த தீபத்தூண்கள் தஞ்சை நகரில் பல இடங்களிலும், திருவையாறு காவிரிக் கரைப்பாலத்திலும் இருப்பதை இன்றும் காணலாம்.

ஒரு கோட்டையை எவ்வாறு அமைக்க வேண்டும் அதன் வடிவமைப்பில் காணப்படும் அமைவிடங்களின் நுட்பம் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக மனோராக் கோட்டையைக் கூறலாம். அத்தகைய சிறப்பிற்குரிய வடிவமைப்பையும் தொழில் நுட்பத்துடன் கூடிய செயல்தன்மையையும் பெற்று மனோரா விளங்குகின்றது .

அறுகோண அகழியைச் சுற்றி சுமார் பன்னிரண்டு அடி உயரத்தில் கோட்டைச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இச்சுவரின் மேற்பகுதியில் கொத்தளங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவை குவிந்து பின்னர் விரிந்து செல்வது போன்று அமைக்கப் பட்டுள்ளன. குவிந்த பகுதியிலிருந்து படைவீரர்கள்



ஆயுதங்களைப் பொருத்திக் தாக்குவதற்கு ஏற்ப இவை அமைகின்றன. இவற்றின் இடையே பீரங்கி களும் வைக்கப்பட்டிருந்தன என்பதை கி.பி.1814 ஆம் ஆண்டினைச் சார்ந்த மோடி ஆவணம் (19-66) கூறுகின்றது. எனவே கோட்டைச் சுவர்கள் பீரங்கிகளைத் தாங்கி நிற்பதற் கேற்ப வடிவமைக்கப் பட்டிருந்தன என்பது தெளி வாகின்றது. மேலும் இக்கோட்டையில் பீரங்கிகள் வைக்கப் பட்டிருப் பதால் பாதுகாப்புச் சிறப்பிற்குரிய இடமாக திகழ்ந்து வந்தது எனக் கருதலாம்.

கோட்டைச் சுவரின் மேற்குப் பகுதியில் பாதுகாப்பு அறைகள் உள்ளன. இவ்வறைகளில் 'கப்பல் கட்டு வதற்குரிய துணைப் பொருட்கள் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்தன என்றும், அந்த அறைகளில் முத்திரையிடப்பட்ட கதவுகள் இருந்தன என்றும் மோடி ஆவணங்கள் கூறுகின்றன. இவ்வாறு பாதுகாப்பதற்கு வைக்கப்பெற்ற பொருட்கள் சிதைவுற்றும், பதிவுமுறை இல்லாமல் பொருட்களை வெளியே எடுத்துச் சென்ற குற்றம் பற்றியும் மோடி ஆவணக்கடிதங்கள் கூறுகின்றன. இப்பாதுகாப்பு அறையின் சிறப்பு, அதன் செயற்பாட்டுத் தன்மைகள் என்ன என்பது பற்றியும் மிகவும் தெளிவாக ஆவணங்களில் குறிக்கப்பட்டுள் ளன எனவே இக்கோட்டையின் உட்பகுதியில் அமைந்திருந்த அறைகள் பொருட் பாதுகாப்பிற்கும் ஆயுதங்கள் வைப்பதற்கும் பயன்பட்டு வந்தன என்பதும் தெளிவா கின்றது.

மனோரா கட்டடத்தின் மையத்தில் கட்டப்பட்டுள்ள நிலைமாடம் உப்பரிகை என்றும் அழைக்கப்படுகின்றது. இதனைத் தூண் என்றும் கல்வெட்டுக் கூறுகின்றது. இம்மாடத்தின் மொத்த உயரம் 22.3 மீட்டராகும். ஒன்பது அடுக்குகளைக் கொண்ட வடிவமைப்புடைய இந்நிலை மாடம்

அறுகோண வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது. அடித்தளம் முதல் மேல்தளம் வரை அறுகோண வடிவமாகவே இடம் பெறுகின்றது. இம்மாடத்தின் ஆறு புறங்களிலும் ஆறு வளைவுச் சன்னல்கள் உள்ளன. புறச்சுவரின் சிறிய வளைவுகள் முதலிரண்டு நிலையில் 28 எண்ணிக்கையும் பிற நிலைகளில் 22 எண்ணிக்கையும் கொண்டுள்ளன. இவ்வளைவுக் கூடுகளை வெளியே இருந்து பார்க்கும்போது தெளிவாகக் காணலாம். ஆனால் உள்ளே காண இயலாதவாறு பூசப்பட்டுள்ளது. பூச்சுகள் வழவழப் புடன் வெள்ளை நிறமாக (சங்கு நிறமாக) இன்றும் காட்சி யளிக்கின்றன. நிலைகளில் உள்ள படிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நிலைக்கும் ஒன்று வீதம் குறைந்து கொண்டே செல்கின்றன. மேல்மாடிச் சுவரின் கீழ்ப் பகுதியில் கல்லில் வடிக்கப்பெற்ற அலங்கார வளைவுகள் அழகு செய்கின்றன. இவ்வலங்காரத்தின் மேல் எழுப்பப்பட்டுள்ள மேல்மாடிச் சுவர்ப் பகுதியுடன் கட்டிய தளம் திறந்த வெளியாகக் காணப்படுகின்றது. மனோராக் கோட்டையில் அழகிய எழுத்துருவம் கொண்ட ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன.

## 57) நெப்போலியனின் எழுச்சி

நெப்போலியன் போனபார்ட் (கி.பி. 1769 - 1821) பிரான்சு நாட்டின் ஒரு தலைசிறந்த பேரரசனாகத் திகழ்ந்தவர். மத்தியதரைக்கடலில் உள்ள கார்சிகா (Corsica) தீவின் போன பார்ட்டுக் குடும்பத்தைச் சார்ந்த கார்லோ போன்பார்ட்டுக்கும் (Carlo Bonaparte) லடிசியா ராமோலினோ (Letiz a Ramolino) போனபார்ட்டுக்கும் மகனாக கி.பி.1769ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் கார்சிகாவில் உள்ள அஜாசியோ (Ajaccio) என்னும் ஊரில் பிறந்தார். பிரான்சில் பிரெய்ன் (Brienne) என்னும் இடத்தில் உள்ள இராணுவப் பள்ளியில் தம் பத்தாம்



வயதிலேயே சேர்ந்து பயிற்சி பெற்றார். ஏழைக் குடும்பத்தில் பிறந்த நெப்போலியனுக்கு இராணுவப் பயிற்சிக்குரிய கல்விக்காக பிரஞ்சு மன்னன் பதினாறாம் லூயி உதவித் தொகையை அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரஞ்சுப் புரட்சி கி.பி. 1789 -இல் ஏற்பட்ட போது அப்புரட்சியில் நெப்போலியன் ஈடுபாடு கொண்டார். கி.பி.1795 முதல் 1799 வரை பிரான்சின் சிக்கலான அரசியல் சூழ்நிலை நெப்போலியனைப் படைத் தலைமை ஏற்க வாய்ப்பளித்தது. கி.பி. 1796 -இல் ஆஸ்திரியாவிற்கு எதிராகப் போர் தொடுக்கும் நிகழ்வில் இவர் மாபெரும் வெற்றியைப் பெற்றார். வட இத்தாலி நாட்டுப் பகுதிகள் நெப் போலியனுக்கு உரியதாயிற்று. இந்நிலையில் ஆங்கி லேயரின் செல் வாக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பிரான்சு அரசு கருதியது. பிரான்சு அரசின் வணிக முயற்சிகளுக்கு ஆங்கி லேயரின் வணிக முயற்சிகள் பெரும் தடையாகவே இருந்தன.

ஆங்கிலேயரும், பிரான்சு நாட்டவரும், போர்ச்சுக் கீசியரும் புதிய வணிகப் பகுதிகளை ஏற்படுத்தியும், கீழை நாடுகளில் இடங்களைப் பிடித்தும் பெரும் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு வரும் அக்காலக் கட்டத்தில் பிரான்சு, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தது. ஆங்கிலேயரின் உயிர் நாடியான கீழைநாட்டு வணிகத்தை அழிக்கும் நோக்கத்துடன் நெப்போலியனது போர் உத்திகள் மேற்கொள்ளப்பட்டன. நெப்போலியனது போர் அறிவிப்புக்களை ஆங்கிலேயரின் கீழ்த்திசை நாட்டு வணிக முயற்சிகளுக்கு எதிரான ஒரு பெரும் திட்டம் என ஆங்கிலேய அரசு கருதியது. இதனை எதிர்க்க ஆங்கிலேயர் தீவிரம் காட்டினர்.

இந்த நிலையில் நெப்போலியன் முதன் முதலில் எகிப்தின் மீது படையெடுத்தார். ஆங்கிலேயக் கப்பற்படைத் தலைவன் நெல்சன் தலைமையில் கி.பி. 1798-இல் நைல்நதிக் கரையில் பெரும் போர் நிகழ்ந்தது. இதில் நெப்போலியன் தோல்வியடைந்தார். இத்தோல்வியால் கிழக்கு நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் நெப்போலியனது முயற்சி பயனற்ற தாகியது. கி.பி. 1799-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9-ஆம் நாள் நெப்போலியனை பிரான்சு நாட்டின் முதல் தலைவராகக் (Consul) கொண்ட புதிய அரசு அமைந்தது. கி.பி.1799 முதல் 1815 வரை ஐரோப்பாவின் வரலாறு என்பது நெப்போலியனது வரலாறு என்றே கருதப்பட்டது.

ஆங்கிலேயரின் கடல் வணிக முயற்சிகளை அழிக்க நெப்போலியன் பெரும் திட்டத்துடன் செயல்படுவதை பிரிட்டன் முன் கூட்டியே உணர்ந்து கொண்டதால் ''ஐரோப்பிய நாடுகளின் கூட்டிணைப்பு'' என்னும் திட்டத்தினை வகுத்தது. இங்கிலாந்து தனது கடற்படையின் வலிமையையும் பெருக்கிக் கொண்டது. இக்கடற்படையின் விரிவான திட்டங்களால் கீழ்த்திசை நாடுகளின் வணிகம் பெரும் மாற்றங்களை அடைந்தது. பல்வேறு புதியபுதிய வணிக மையங்கள் தோன்றின. இம்முயற்சிகளுக்கு இங்கிலாந்தின் கூட்டிணைப்பு நாடுகளான ஆஸ்திரியா, பிரஷ்யா, உருசியா முதலிய நாடுகள் துணைநின்றன. 'ஆசுத்தர்லிட்சு' என்ற இடத்தில் ஆஸ்திரியா படைகளையும், 'கினாப்' போர்க்களத்தில் உருசியாவையும் தோற்கடித்த தனால் கி.பி.1806 -இல் நெப்போலியனின் ஆதிக்கம் ஐரோப்பாவில் ஏற்பட்டது. கி.பி. 1807-இல் பிரான்சு நாட்டின் மாபெரும் பேரரசனாகத் திகழ்ந்தார் நெப் போலியன்.

பிரான்சு குடியரசுக்கும் சில ஐரோப்பிய நாடு களுக்குமிடையே கி.பி.1803 முதல் 1815 வரை போர்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. இப்போர்கள் நெப்போலி யனுக்கும், பிற ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே நிகழ்ந்த தால் இப்போரினை ''நெப்போலியப் போர்'' என்றே வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். கி.பி.1803ஆம் ஆண்டு முதல் நெப்போலியனது போர் முயற்சிகள் தொடங்கின. பிரான்சுக்கு ஸ்பெயின் நாடும், பிரிட்டனுக்கு ஆஸ்திரியா, ரஷ்யா, ஸ்வீடன், நேபிள்சு ஆகிய நாடுகளும் உதவின. நெப்போலியன் 2000 படகுகளைக் கொண்டு ஆங்கிலக் கால்வாயைக் கடந்து சென்று பிரிட்டனை வெற்றி கொள்ள முயன்றார். அச்செயல் பெரும் பயனளிக்கவில்லை.



ஆனால் பிரிட்டனுடன் சேர்ந்திருந்த நாடுகளில் பெரும் பாலானவற்றை அதனிடமிருந்து உடைத்து சில நாடுகளைத் தனிமைப்படுத்தினார். இருப்பினும் பிரிட்டனின் வணிகத் தொடர்புகள் தடைபெறவில்லை. பிரிட்டனுடைய ஐரோப்பிக் கடல்வழி வணிகத் தொடர்புகளும் விரிவாக்கம் கண்டன. இதனை ஒட்டு மொத்தமாக அழித்துவிட நெப்போலியன் திட்டமிட்டார். இதற்காக ''கண்டத் திட்டம்'' (Continental system) ஒன்றை ஏற்படுத்தினார். பிரிட்டனின் கடல் வணிகம் தடை செய்யபட்டுவிட்டால் நெப்போலியனுக்கு பிரிட்டன் அடிபணிந்து விடும் என்று கருதினர்.

பிரிட்டன் தன் கடலாதிக்கத்தைப் பயன்படுத்தி வேறெந்த நாடுகளுடனும் வணிகத் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என நெப்போலியன் கட்டளைகளை அறிவித்தார். இக்கட்டளை பெர்லின் கட்டளை, வார்சா கட்டளை, திரையனான் தீர்வை, பான்டெயினி புளூ கட்டளை என்று குறிப்பிடுவர். இக்கட்டளைகளால் பிரிட்டனின் வணிகத் தொடர்பு திருட்டுத்தனமாக நடைபெற்று வந்தது. இத்திருட்டுத் தனத்தைக் கட்டுப்படுத்தக் கடற்கரை வணிகத் தலங்களை

நெப்போலியன் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார்.

கி.பி. 1812 இல் 'மாஸ்கோ' நகர் போர் தொடங்கியது. 6,00,000-க்கும் மேற்பட்டோர் இப்போரில் மாண்டனர். மாஸ்கோ படைகள் பின்வாங்கின. குளிர்காலப் போர் என்பதால் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் இறந்தனர். இப்போரினைக் கண்ட இங்கிலாந்து; ஆஸ்திரியா, ஸ்பெயின், பிரசியா , ஸ்வீடன் போன்ற நாடுகளுடன் சேர்ந்துகொண்டு நெப்போலியனுக்கு எதிராகப் போர் தொடங்கியது. கி.பி.1813 இல் லிப்சிக் (Leipzing) என்னும் இடத்தில் போர் நிகழ்ந்தது. இதில் நெப்போலியன் மாபெரும் தோல்வியைச் சந்தித்தார். தன் பதவியைத் துறந்தார். இதனால் எல்பா (Elba) தீவிற்குச் சென்றார். பின்னர் இறுதி முயற்சியாக கி.பி.1814-இல் மீண்டும் ஒரு சிறுபடையைத் திரட்டிப் போரிட்டார். ஆனால் தோல்வியே இவருக்கு ஏற்பட்டது. கி.பி.1815-இல் மீண்டும் ஒரு சிறு படையைத் திரட்டி வாட்டர்லூ (Waterloo) என்னும் இடத்தில் போரிட்டார். இப்போர் முதலாம் நெப்போலியனுடைய இறுதிப்போராகும். இப்போரில் முழுமையாக நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டார். இத்தோல்வியால் நெப்போலியன் போனபார்ட்டு ஆங்கிலேயரிடம் சிறைப் படுத்தப்பட்டார். எளிதில் தப்பிச் செல்ல வாய்ப்பில்லாத புனித ஹெலினா (St.Helena)என்னும் தீவில் நெப்போலியன் போனபார்ட் சிறைவைக்கப்பட்டார். இம்மாபெரும் வீரன் தனது இறுதிக் காலத்தை இத்தீவில் கழித்தார். இவர் மறைந்த நாள் 05.05.1821.

## 58) லிப்சிங்போரும்-மனோரா நினைவுச் சின்ன மும்

ஆங்கிலேயரின் வெற்றியைச் சிறப்பித்தும் மகிழ்ந்தும் நெப்போலியன் போனபார்ட்டின் தோல்வியை நினைவு



கூர்ந்தும் இந்த உப்பரிகையை மராட்டிய மாமன்னர் இரண்டாம் சரபோஜி கட்டினார் என்று குறிப்பிடும் மனோரா கல்வெட்டில் சுட்டப்படும் ஆண்டு கி.பி.1814 ஆகும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் போர் கி.பி.1813-இல் லிப்சிக் (Leipzing) என்னும் இடத்தில் நடைபெற்ற நிகழ்வாகும். இங்குதான் நெப்போலியன் முதன் முதலில் மாபெரும் தோல்வியைச் சந்தித்தார்.

இப்போரின் விளைவாகவே பதவி இழந்தார். இப்போரில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றியே கீழ்த்திசை நாடுகளில் அவர்களது கடல் வணிகம் சிறக்க வழிவகுத்தது. பிரான்சுக்குரிய கடல்வணிகம் தளர்ந்தது. இதனால் ஆங்கிலேயரின் ஆதிக்கம் பரவியது. நெப்போலியன் மீதும் அவனது செயல் முறைகள் குறித்தும் ஆங்கிலேயரின் விளம்பரங்களும் செய்திகளும் அக்காலக்கட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கின. எனவே, மன்னர் இரண்டாம் சரபோஜி ஆங்கிலேயரின்மீது கொண்ட ஆர்வத் தாலும் கடல்வணிகம் மற்றும் கடற்கட்டுமானப் பணிகளின் ஈடுபாட்டாலும் நெப்போலியனுடைய லிப்சிக் போரின் நினைவாக ஒரு கடற்படைக் கோட்டையைச் சாளுவ நாயக்கன் பட்டினப் பகுதியில் கட்டினார். இக்கோட்டையை காண்பதோடு அதன் வரலாற்றுப் பின்புலத்தை அறிவதும் பயனுள்ள ஒன்றாகும்.

*( தற்போதைய பாடத்திட்டங்களில் வரலாற்றுச் செய்திகள் முழுமையான அளவில் இடம்பெறுவதில்லை. வரலாற்றுத் திரிபுகளே அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. பாடத்திட்டங்களில் பெரியார், அண்ணா, கருணாநிதி, கனிமொழி, ஆகியோருடைய படைப்புகளே இடம்பெற்றுள்ளன. இதன் விளைவாக நூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த போராட்டங்களை நம் இளைய தலைமுறையினர் அறிந்து*

கொள்ள வாய்ப்பில்லை.ஆகவே மாவீரன் நெப்போலியனைப் பற்றிய செய்திகள் இந்தக் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் நிகழ்ச்சியும் ஒரு அறநெறியை நமக்குப் புகட்டுகின்றன.) பகல் முழுவதும் மனோராவின் அழகைக் கண்டு களித்த பிறகு கடற்கரையோரமாகக் கடல் அலைகள் மீது குதித்து விளை யாடிக் கொண்டு மாலை ராஜா மடத்திற்கு திரும்பினோம்.

## 59) அரிசித் தட்டுப்பாடும் அதன் விளைவும்

சத்திர நெற்களஞ்சியத்தில் அவ்வப்போது அரிசித் தட்டுப்பாடு ஏற்படும். சத்திரத்திற்குச் சொந்தமான நிலங்களிலிருந்து பெறப்படுகின்ற குருவை அல்லது கார் நெல்லை அரைத்துத் தான் அரிசி பெறப்படும். அரிசி வந்து சேருவதற்குத் தாமதமானால் சில நாட்கள் மாலை மூன்று மணிக்குத்தான் மதிய உணவு கிடைக்கும். பெரும்பாலான மாணவர்கள் சத்திரத்திலிருந்து படிப்பதால் பள்ளியின் இடைவேளை நேரமும் அந்த நாட்களில் மாற்றமடையும். திரு.பிச்சுமணி ஐயர், திரு.மணி ஐயர் , திரு.ராமச்சந்திர ஐயர் மற்றும் திரு.ஸ்ரீவாஞ்சியம் ஐயர் ஆகியோர் சமையற் காரர்களாகப் பணிபுரிந்து வந்தனர். பெரும்பாலான சத்திரங்களில் ப்ராஹ்மணர்களே சமையல் வேலையில் அமர்த்தப்பட்டிருந்தனர். பெரியதொரு கோட்டை அடுப்பில் இவர்கள் சமையல் செய்திடும் போதும் அவர்கள் வீட்டிற்கு போகும் போதும் சமையலுக்குரிய பொருள்களை எடுத்துச் செல்லாதவாறு பாதுகாக்க வேண்டியது கமிட்டியின் பொறுப்புகளில் ஒன்றாகும்.

## 60) களப்பாளை விட்டு வையச்சேரியில் குடி புகுந்தோம்

1955-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் களப்பாளை விட்டு



நீங்கி தஞ்சை கும்பகோணம் இருப்புப் பாதையில் திட்டை என்ற ஊருக்கு வடமேற்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள வையச்சேரி என்ற ஊருக்கு குடிபுகுந்தோம். 1938 ஆம் ஆண்டு தொடங்கி பதினெட்டு ஆண்டுகள் குமரப்ப முதலியார் பண்ணையில் கணக்கெழுதி வந்தார் என் தந்தையார். முதலியார் ஆண்டுக்கு ஆண்டு எந்த சம்பள உயர்வும் கொடுக்கமாட்டார். ஐந்து கலம் நெல்லும் இருபது ரூபாய் ரொக்கச் சம்பளமும் தான் என் தந்தையார் பெற்று வந்தார். பெருகி வரும் குடும்பம் ஒருபக்கம், குடும்பத்தில் நிகழும் மங்கல, அமங்கல நிகழ்ச்சிகள் மற்றும் தீபாவளி போன்ற பண்டிகைகள் ஆகியவற்றை கொண்டாடு வதற்குத் தேவையான வருவாய் கிட்டவில்லை. முதலி யாரிடம் நூறு ரூபாய் கடன் வாங்கினால் ஒவ்வொரு மாதமும் நெல் வரும்படி குறைந்து போகும்.

## 61) 110 பெருமாக்கநல்லூர் கிராமம்

முன்னரே, கிராமக் கணக்குப்பிள்ளை வேலைப் பார்ப்பதற்கான சர்வேயர் டிரெயினிங் எடுத்துக் கொண் டதால் வையச்சேரிக்கு அண்மையில் இருந்த பெருமாக்கநல்லூர் கிராமத்துக் கணக்குப்பிள்ளையாக பொறுப் பேற்றுக் கொண்டார் என் தந்தையார். அந்தக் காலக்கட்டத்தில் கணக்குப்பிள்ளை பதவியென்பது வம்சாவளியாய்த் தொடர்ந்து வந்தது. வயது வரம்பு கிடையாது. எந்த ஒரு கிராம கணக்குப்பிள்ளையும் தன்னால் இந்தப் பணியைச் செய்ய இயலவில்லை, என்னுடைய உறவினரான இன்னாரை இந்தப் பதவிக்கு நான் சிபாரிசு செய்கிறேன் என்று மனுச்செய்தால் அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அவருக்கே அந்தப் பதவியை கொடுப்பது வழக்கம். பாபநாசம் தாலுக்கா 110 பெருமாக்கநல்லூர் கணக்குப்பிள்ளையான சக்ரவர்த்தி

ஐயங்கார் பணியைத் தொடர்ந்து செய்ய இயலாத போது அவருக்கு இருநூறு ரூபாய் பணத்தைக் கொடுத்து, என்னுடைய தந்தையார் அவருடைய நெருங்கிய உறவினர் அவரைத் தனக்கு வாரிசாகப் பணியில் அமர்த்த வேண்டும் என்று கடிதம் எழுதச் சொல்லி அந்தக் கடிதத்தை பாபநாசம் தாலுக்கா அலுவலகத்தில் கொடுத்துத் 'தற்காலிகமான' கிராம கணக்குப் பிள்ளை பதவி பெறப்பட்டது.

கிராம கணக்குப்பிள்ளைக்கு அரசாங்கம் கொடுத்து வந்த சம்பளம் மிகக் குறைவே. கிராமங்களில் அறு வடையாகும்போது ஒரு மாவிற்கு இவ்வளவு நெல் என்று அளவிட்டு அதனை கிராமகணக்குப்பிள்ளைக்கு அன்பளிப் பாகக் கொடுப்பார்கள் கிராமத்து மக்கள். பெரும்பாலான கிராம கணக்குப்பிள்ளைகள் நிலச்சுவான்தார்களாக இருப்பார்கள். கிராம முன்சீப் பதவியும் கணக்குப்பிள்ளை பதவியும் ஒரு சமூக அந்தஸ்து பெற்ற மனிதர்களாய் அவர்களைக் காட்டிவிடும். மேலும் கிராம பஞ்சாயத்துக் கூட்டங்களில் கிராம கணக்குப்பிள்ளை மற்றும் முன்சீப் பங்குகொண்டு கிராமத் திற்கு வேண்டிய நலப்பணிகளை ஆராய்ந்து வருவர். பாப நாசம் தாலுக்கா எல்லைக்குட்பட்டதான பெரு மாக்கநல்லூர் கிராமத்தில் உள்ள நிலங்களில் பெரும்பகுதி குமரப்ப முதலியாருக்குச் சொந்தமானது. அந்த நிலத்தில் விளையும் நெல்லை கண்டுமுதல் செய்து அவற்றை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக குருவை மற்றும் சம்பா அறுவடையின் போது பல நாட்கள் அங்கே தங்கியிருந்தபோது சக்ரவர்த்தி ஐயங்காருடன் தொடர்பு ஏற்பட்டது.

## 62) வையச்சேரி-ஊர் வளம்

தஞ்சையிலிருந்து கும்பகோணம் செல்லும் இருப்புப்



பாதையில் அமைந்துள்ள ரயில் நிலையங்கள் முறையே வடவாறு, திட்டை, பசுபதி கோயில், அய்யம்பேட்டை, ஆகியன. திட்டைக்கும் பசுபதி கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது வையச்சேரி கிராமம். தஞ்சை கும்பகோணம் நெடுஞ்சாலையில் நடார் என்னும் பாதையில் வெட்டாறு மேற்கு கிழக்காக பாய்ந்து செல்லுகிறது. இதன் கரையோரமாகச் சென்றால் 1 கி.மீ. தொலைவில் ஆறு போன்ற அமைப்புக் கொண்ட பாசன வாய்க்கால் (மாங்குடி வாய்க்கால்) வெட்டாற்றிலிருந்து பிரிந்து செல்லுகிறது. இந்தப் பாசன வாய்க்காலின் கரையோரமாகச் சென்றால் வையச் சேரியைச் சென்றடையலாம். ஆனால் பெரும்பாலானோர் திட்டை ரயில் நிலையத்தில் இறங்கி வடக்கு நோக்கி இருப்புப் பாதையோடு சென்று ஊரையடைவர்.

இந்த ஊரின் அக்ரஹாரத்தில் ஸ்ரீனிவாசர் கோயில் கொண்டுள்ளார். பசுபதி கோயிலிலிருந்து அர்ச்சகர் தினந் தோறும் வயல்களில் ஊடே நடந்து வந்து திருவாராதனம் செய்து செல்வார். மழை காலத்திலும் கூட ஒரு நாள் கூட தவறாது இவர் இந்த கைங்கர்யத்தைச் செய்து வந்தார். அக்ரஹாரத்தில் சுமார் பத்து வீடுகள் அமைந்திருந்தன. ஊரின் ஈசான்யத்தில் சிவன் கோயில். அக்ர ஹாரத்தில் பல வீடுகள் பூட்டிய நிலையில் இருந்தன. ***(அந்தக் கால கட்டத்திலேயே கிராமத்தைத் துறந்து மக்கள் சென்னை மாநகரை நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்துவிட்டனர். தற்போது தென் மாவட்டத்து கிராமங்கள் பல குறிப்பாக அந்தணர் குடியிருப்புப் பகுதிகளான அக்ரஹாரங்கள் பொலிவிழந்து விளங்குகின்றன. அந்தக் காலகட்டத்தில் அக்ரஹாரத்தில் ப்ராஹ் மணர்களைத் தவிர வேறு யாரும் குடியிருக்க விரும்பமாட்டார்கள். ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தேரழுந்தூர் போன்ற கிராமங்களில் இருந்த***

***புகழ் பெற்ற அந்தணர் வீதிகளில் இன்று முகம்மதியர்கள் குடியேறியுள்ளனர். வேத ஒலி முழங்கிய தேரழுந்தூரில் இன்று அல்லாவிற்கான அழைப்பு ஒலி நாள்முழுதும் கேட்கின்றது. இவையாவும் ''மூவாவுருவின்மறையாளர் அந்திமூன்றும் அன லோம்பும் அணியார்வீதி அழுந்தூரில்'' காணப்படும் காட்சிகளாகும்.)***

***(2010ஆம் ஆண்டு வையச்சேரிக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டியது. நாங்கள் இருந்த வீடு பாழ்பட்ட நிலையில் காணப் பட்டது. சிவன்கோயில் குருக்கள்தான் ஸ்ரீனிவாசப்பெருமாள் கோயில் அர்ச்சகராகச் செயல்பட்டு வருகிறார். கிராமத்து மக்கள் ஓரிருவர் என் தகப்பனாரை நினைவு கூர்ந்தனர். ஊரின் தோற்றமே மாற்றம் அடைந்துள்ளது.)***

## 63) ஹனுமத் உபாசகர் சூரியநாராயணக் குருக் கள்

சூரியநாராயணக் குருக்கள் என்பார் சிவன்கோயில் பூஜையை மேற்கொண்டு வந்தார். இவர் ஒரு ஹனுமத் உபாசகர், என் தந்தையாரின் நெஞ்சுகந்த நண்பர். யாருடைய பொருள் காணாமல் போயிருந்தாலும், அவர்கள் குடும்பத்தில் குழப்பங்கள் இருந்தாலும் பெண்ணுக்கு எப்போது கல்யாணம் ஆகும், கல்யாணம் ஆன பெண்ணுக்கு எப்போது குழந்தை பிறக்கும், கணவன் மனைவியிடையே நிலவும் மனத் தாங்கலுக்கு விடிவுண்டா? போன்ற கேள்விகளுக்கு இவர் மூலம் மக்கள் தகுந்த பதிலைப் பெற்றுச் சென்றனர்.

இவ்வாறு கேள்விகேட்டு பதில் பெற விரும்பும் நபர்கள் ஒரு காகிதத்தில் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் கேள்விகளை எழுதி மடித்து, குருக்களிடம் கொடுக்க வேண்டும். அவர் அந்த காகிதத்தைப் பிரித்துப் பார்க்காமல் விடைதேடி வரும் நபருக்கு முன்பாகவே கற்பூரத்தை இட்டுக் கொளுத்தி விடுவார்.



பிறகு அந்த சாம்பலின் மேல் ஒரு பித்தளைப் பாத்திரத்தைக் கவிழ்த்து மூடி விடுவார். வெளியில் வந்து மற்றையோருடன் பேசிக்கொண்டிருப்பார். சில மணி நேரம் கழித்து விடை வந்து விட்டது என்று சொல்லி உள்ளே சென்று கவிழ்த்திருந்த பித்தளைப் பாத்தி ரத்தை எடுப்பார். அதில் ஓர் வெண்மையான காகிதத்தில் எந்த மொழியில் கேள்வி கேட்கப்பட்டிருந்தோ அந்த மொழியில் பதில் இருக்கும். அந்தக் காகிதத்தை கேள்வி கேட்ட நபரிடம் கொடுத்திடுவார். அதில் உள்ள பதிலை அவரே படித்துத் தெரிந்து கொள்ளலாம். கொடுக்கப்படும் பதில் காகிதத்திலேயே கட்டணமும் குறிப்பிடப் பட்டிருக்கும். இந்தக் கட்டணம் பெரும்பாலும் பத்துரூபாய் அல்லது முப்பத்தைந்து ரூபாய் என்று காணப்படும். இந்தத் தொகைக்கு மேல் அவர் ஏதும் பெற்றுக் கொள்ளமாட்டார்.

***(சுமார் பத்தாண்டுகள் சூரிய நாராயணக் குருக்களின் தொண்டு நடைபெற்று வந்தது. ஆனால் அவர் தம்முடைய நாற்பதாவது வயதிலேயே சிவலோக பதவியை அடைந்தார். அவர் கற்ற வித்தையே அவருக்கு யமனாக முடிந்தது என அவர் குடும்பத்தினர் கதறி அழுதனர். குடும்பத்திற்கென அவர் எந்தப் பொருளையும் சேர்த்து வைக்கவில்லை. அவர் இறக்கும் போது அவருடைய பையனுக்கு வயது ஆறு. அவருடைய தம்பியான ஜகதீசன் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தன் அண்ணா பையனையும், மன்னியையும் காப்பாற்றி வந்தார்)***

## 64) மாந்தோட்டம்

பெருமாக்கநல்லூர் கிராம முன்சீப்பாக பொறுப் பிலிருந்தவர் திரு.துரைசாமி மூப்பனார் என்பார். இவருக்குச் சொந்தமான புஞ்சை தோட்டங்கள் பாசன வாய்க்காலின்

கரையின் மீது அமைந்திருந்தன. இந்தத் தோட்டங்களில் வரிசையாக ஒட்டுமாமரங்கள் பயிரிடப்பட்டு வந்தன. ஒவ்வொரு மரத்தின் உயரமும் மூன்று அல்லது நான்கு அடியே இருக்கும். ஒவ்வொரு மரத்திலும் சுமார் நூறு காய்களுக்கு மேல் காணப்படும். இந்தத் தோட்டத்திற்குச் சென்று வேண்டிய மாங்காய்களை நாங்களே பறித்துக் கொள்ளலாம். களப் பாளைப் போல வையச்சேரியிலும் அதன் சுற்று வட்டாரத் திலும் பச்சைப் பசேலென்று வயல்கள் காணப்படும். ஆங்காங்கே புஞ்சைத் திடல்கள். அந்தத் திடல்களில் வாழை மற்றும் மல்லிகை செழித்தோங்கி வளர்ந்திருக்கும். விளா மரங்கள் அதிக அளவில் சில புஞ்சைத் தோட்டங்களில் காணப்படும்.

## 65) ''கன்றுகுணிலா எறிந்தாய் கழல் போற்றி !''

வன தேவதையின் பெயரையே விஞ்ஞானப் பெயராகக் கொண்டுள்ள விளாமரம் கனிகளிலே மிகவும் அதிகப் புரதச்சத்து உடையது; உண்பதற்கும் ஏற்றது. வலு வுள்ள மரம். அளவற்ற மருத்துவப் பண்புகளை யுடையது.

பெரோனியா லிமோனியா (Feronia limonia (L) Swingle; Syn: Feronia elephantum) தாவரக்குடும்பம்; ரூட்டேசி, பெரோனியா என்ற முதற்பெயர் முட்கள் உள்ள தன்மையைக் குறிப்பிடும் பெயராகும்; அதாவது விளா மரத்திலுள்ள முட்களைக் குறிப்பிடுகிறது. விளா மரம் 20 மீட்டர் உயரம் வளருகிறது. 60 - 120 செ.மீ விட்டமுள்ள உருளை போன்ற அடிமரத்தில் சற்று உயரத்தில் பெரிய பந்து போன்ற அடர்ந்த தழையமைப்புடன் காட்சியளிக்கும். கிளைகள் முள்ளுள் ளவை, மரம் கருப்பு நிறப் பட்டையுடையது; கிளைகளும் அவ் விதமே. பட்டை சொர சொரப்பாக வெடிப்புகளுடன் இருக்கும். விளா மரம் ஜனவரி - மார்ச் மாதங்களில் பூக்கும்.



(கடற்கரைப் பகுதியில் ஜூலையில் பூக்கும்.) கலப்பு மஞ்சரிகளில் ஒரு பால் பூக்களும் இரு பால் பூக்களும் கலந்திருக்கும். கிரீம் நிறமுடையவை.

நவம்பர் - மார்ச் மாதங்களில் (இது இடத்திற்கு இடம் வேறுபடும்) கனிகளைக் காணலாம். உருண்டையாகவோ அல்லது தட்டையான உருண்டையாகவோ இருக்கும். சாதாரணமாகக் கனியின் அளவு 8 செ.மீ. எனினும் இதில் இரு வகைகள் உள. ஒன்று சிறிய கனிகளைக் கொண்டது; இதன் சதை துவர்ப்பான புளிப்புடன் இருக்கும்; துவையல் செய்ய ஏற்றது. கனிச்சதையினுள், பல விதைகள் பொதிந்த நிலையில் இருக்கும். பூக்களில் தேன் திரவம் உள்ளது. மார்ச் மாதத்தில் தேனீக்கள் மொய்த்துக் கொண்டிருக்கும்

பழச் சதையை உண்ணலாம். இப்பழச் சதையிலுள்ள சத்துக்கள்: நீர் 69.50%, புரதம் 7.30%, கொழுப்பு 0.60% , நார்ப்பொருள் 5.20%, மாவுப்பொருள் 15.50 % உலோக உப்புக்கள் 1.90% , இதில் கால்சியம் 0.13%, பாஸ்பரஸ் 0.11% இந்த மரம் மஞ்சள் சாயையுடைய சாம்பல் நிறத்துடன் காணப்படும். இந்த விளா மரத்தைக் கற்பகம் என்று மருத்துவ நூல்கள் புகழாரம் சூட்டுகின்றன. விளாம்பழம் வைட்டமின் C பற்றாக்குறையை நீக்கும். **பழங்களிலே அதிக புரதச்சத்துக் கொண்டது விளாம்பழம்.**

**'கன்றினால் விளவெறிந்து கனிஉதிர்த்தகாளை'** என்று பெரிய திருமொழி 3-10-8 பாசுரத்தில் திருமங்கை யாழ்வார் கொண்டாடியுள்ளார். கிருஷ்ணாவதார லீலைகளிலே வத்ஸாஸுரன் கன்று வடிவில் கிருஷ்ணனைக் கொல்ல வந்த போது அந்தக் கன்றினை விளா மரமாக நின்ற கபித்தாஸுரன் மேலெறிந்து இருவரையும் கொன்ற வைபவம் பேசப்படுகிறது.

களப்பாளிலிருந்து வையச்சேரிக்கு குடிபெயர்ந்த போது நான் ராஜாமடத்தில் பத்தாம் வகுப்பு படித்துக் கொண் டிருந்தேன். எனக்கு அடுத்தபடியாக என் தங்கை கமலா நான்காம் வகுப்பிலும், இன்னொரு தங்கையான ராஜலக்ஷ்மி இரண்டாம் வகுப்பில் படித்து வந்தனர். என்னுடைய இன்னொரு தம்பியான ஸ்ரீநிவாஸனுக்கு அப்போது வயது ஐந்து. ஆகவே படிப்பு சம்பந்தமான குழப்பங்கள் எழவில்லை. உள்ளூர்ப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டதால் கமலாவையும், ராஜலக்ஷ்மியையும் அந்தப் பள்ளியில் சேர்த்துவிட்டார் என் தந்தையார்.

குழந்தைகளுக்குக் கிருஷ்ணாவதாரக் கதைகளை அவ்வப்போது சொல்லிவைப்பார் என் தந்தையார். கிருஷ்ணன் கன்றினைக் கொண்டு விளவெறிந்தது சுப்ப ராயலு தோட்டத்திலுள்ள விளா மரத்தில் தான் நடந்தது எனச் சொல்லிவைத்திருந்தார். *(இந்த சுப்பராயலு என்பார் ஒரு சுமாரான பணக்காரர். கையில் ஒரு தடியுடன் எல்லா தெருக் களையும் சுற்றி வருவார். காக்கி நிறத்தில் ஒரே சட்டையை ஆண்டு முழுவதும் அணிந்திருப்பார். அவர் என் தந்தையாருடம் பேசிக் கொண்டிருந்தால் நாங்கள் வியர்வை நாற்றம் தாங்காமல் ஓடிவிடுவோம்)*

நான் விடுமுறைக்கு ஊர் சென்ற போது என் தங்கைகளும், தம்பியும் என்னை அழைத்துக் கொண்டு சென்று சுப்பராயலு தோட்டத்தில் உள்ள விளா மரத்தைக் காட்டினர். இங்கு தான் கிருஷ்ணன் இரண்டு அசுரர்களைக் கொன்றான் என்று தமக்குத் தெரிந்த அளவில் கிருஷ்ணா வதார லீலைகளை சொல்லி மகிழ்ந்தனர். *(இன்று விளாம்பழத்தை நாம் வாங்கிச் சுவைப்பதில்லை. ஏதோ ஸ்ரீஜயந்தி அன்று கிடைத்தால் வாங்கி மற்றைய பழங்களோடு அமுது படைப்போம். இந்த மரத்தை தற்போதைய தலைமுறையினர் பார்த்திருக்க வாய்ப்பில்லை. இது போன்ற மரங்களையெல்லாம் ஒரு காலத்தில் ''காட்சித்தோட்டங் களில்'' (Exhibition Garden) பயிரிட்டு இதுதான் விளாமரம், இது தான் குருந்த மரம், இது தான் பாதிரி மரம், இது தான் புன்னை மரம் என்று வகைப்படுத்த வேண்டிய காலத்தை நோக்கிச் சென்று கொண் டிருக்கிறோம்.)*



## 66) குருப்பெயர்ச்சியும், திட்டை திருத்தலமும்

திட்டை சுப்ரமணியத்தின் காலத்தினால் செய்த உதவியினை முன்னரேகுறிப்பிட்டுள்ளேன். தஞ்சாவூர் பேருந்து நிலையத்திலிருந்து மெலட்டூர் வழியாகத் திருக்கருகாவூர் செல்லும் வழியில் திட்டை என்னும் ஊர் அமைந்துள்ளது. இந்த ஊரில் ஸ்ரீ வசிஷ்டேச்வரர் திருக்கோயிலில் நவக்ரஹங் களில் ஒன்றான குருவிற்கு த் தனிக்கோயில் அமைந்துள்ளது. ஒருவரது ஜாதகத்தில் மிகக் கடுமையான பாபக்ரஹங்களால் ஏற்படக்கூடிய விளைவு களைக் கூட தனது அருட் பார்வை யினால் தடுத்து நிறுத்தும் வல்லமை படைத்தவர் குரு என்று ஜோதிட நிபுணர்கள் கூறுகின்றனர். சிவன் கோயில்களில் தெற்கு திக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் தட்சிணா மூர்த்தியையே குருவாகப் பாவித்து வழிபடுகின்றனர்.

ஆனால் திட்டையில் சிவனுக்கும் அம்பாளுக்கும் இடைப்பட்ட பகுதியில் தனி ஸந்நிதியில் தனி விமானத்துடன் ராஜகுருவாக நின்ற கோலத்தில் குருபகவான் காணப்படுகிறார். இத்தகைய அமைப்பு வேறெந்த சிவாலயத்திலும் இல்லை என்று கூறுகின்றனர். குருப் பெயர்ச்சியை முன்னிட்டு ஒருசிலரே அப்போதெல்லாம் இந்தக் கோயிலுக்கு வருகை தருவர். அவர்களும் ஜோதிடரின் அறிவுறுத்தலின் பேரில் வந்து போவர். என்னுடைய தந்தையார் ஜோதிடக் கலையை ஓரளவிற்கு அறிந்தவர்.

*( எனக்கும் ஜோதிடக் கலைக்கும் வெகுதூரம். ஜாதகப் பொருத்தம் பார்க்காமல் தான் நான் திருமணம் செய்து கொண்டேன். என்னுடைய பிள்ளைகளுக்கும், பெண்ணுக்கும் ஜாதகப் பொருத்தம் பார்க்காமல் தான் திருமணங்கள் நடைப்பெற்றன. எங்கள் இல்லத்தில் எந்த தோஷத்திற்கும் பரிகாரங்கள் செய்வதில்லை. எம்பெருமான் விதித்த படியே எல்லாம் நடக்கும் என்ற உறுதியான கொள்கையினைக் கொண்டுள்ளதால் வாழ்க்கையை பற்றிய எந்த அச்சமும் அடியேனுக்குக் கிடையாது.)* அவ்வப்போது சிலருக்கு ஜாதகம் கணித்து இன்ன தேதியில் குருப்பெயர்ச்சி நடக்கின்றது என்று என் தந்தையார் கூறிடுவார். திட்டைக்குச் சென்று குருபகவானுக்கு அர்ச்சனை செய்திடுங்கள் என்றும் கூறிடுவார். *(இந்த விஷயத்தில் ஏனோ நான் என் தந்தையாரின் குணத்தைக் கொள்ளவில்லை. ஆனால் என்னுடைய மற்றைய இரண்டு தம்பிகளுக்கும் ஜோதிடத்தில் பிடிப்புண்டு. ஜோதிடத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை நன்கறிந்தவர்கள்.)*

## 67) மாணவர்சங்கத் செயலாளராகத் தேர்ந் தெடுக்கப்பட்டேன்

பத்தாம்வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது மாணவர் சங்கத்துக்கான தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் செயலாளர் பதவிக்குப் பதினோராம் வகுப்பு படித்து வந்த ராமதுரை என்ற மாணவனும், பத்தாம் வகுப்பு படித்து வந்த நானும் போட்டியிட்டோம். இந்தத் தேர்தலில் ராமதுரையால் பதினோராம் வகுப்பு படித்து வந்த மாணவர்களின் வாக்கினை மட்டுமே பெற முடிந்தது. ஆனால் எனக்கு ஆறாம் வகுப்பு தொடங்கி பத்தாம் வகுப்பு ஈறாக அனைத்து மாணவர்களும் வாக்களித்தனர். பெரும் பான்மை யான வாக்கு வித்தியாசத்தில் நான் செயலாளராகத் தேர்வு பெற்றேன். இதன் பிறகு ராமதுரையும் நானும் நண்பர்



களானோம். இவன் ராஜா மடம் அக்ரஹாரத்தில் வீடு ஒன்றினை வாடகைக்கு எடுத்து அதில் வசித்து வந்தான்.

## 67-(அ) கால்பந்தாட்ட போட்டியும் S.P.சிவாவின் பங்கும்

அந்த ஆண்டு புதிய கணித ஆசிரியராக திரு.நாராய ணனும், சமூகஇயல் ஆசிரியராக திரு.குமரேசன் M.A.,B.Ed என்பவரும் பணியில் சேர்ந்தனர். மாணவர்சங்கத் தலைவரான திரு.கோவிந்தராஜன் விளையாட்டுப் போட்டி களில் அதிக கவனம் செலுத்தி வருவான். உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு விளையாட்டு விழா 1954-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்றது. திரு.கோவிந்தராஜன் தலைமையிலான கால்பந்து அணியில் நான் இடம் பெற்றேன். என்னை விங்ஸ் எனப்படும் கோட்டுப் பகுதியில் நிற்க வைத்து விட்டார் அணித்தலைவர். என்னுடன் படித்து வந்த S.P.சிவா என்பவன் எங்கள் அணியில் இடம்பெற்றிருந்தான்.

விளையாட்டில் கைதேர்ந்தவன். அவனுடைய அபார ஆட்டத்தால் எங்கள் அணி வெற்றி பெற்றது. ஆனால் தேர்வுகளில் பத்து மதிப்பெண்களுக்கு மேல் பெற இயலவில்லை அவனால். இவனுடைய தந்தையார் தஞ்சை மாவட்டத்துக் குற்றாலத்தில் புகழ் பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆசிரியர். ஆனால் இவருடைய மகனுக்கோ படிப்பு ஏறவில்லை. அவ்வப்போது விடுதிக்கு வருகை தந்து என்னிடம் ''தம்பீ நீங்க நல்லா படிப்பீங்கன்னு கேள்விப் படறேன். என் பையனுக்கு கொஞ்சம் பாடம் சொல்லிக் கொடுத்து பாஸ் பண்ண வையுங்க'' என்று வேண்டிக் கொள்வார். *(நான் பதினோராம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 1956 - ஆம் ஆண்டு திருச்சி தேசிய கல்லூரியில் புகுமுக வகுப்பில் (PUC) சேர்ந்தேன். 1957-ஆம் ஆண்டு முதல் வகுப்பில் தேர்ச்சிப் பெற்ற நான்*

ஒருவருடைய கடைசி நிமிட அறிவுரையின் பேரில் தூயவளவனார் கல்லூரியில் வேதியியல் பாடப்படிப்பில் சேர்ந்து 1960 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றேன். அந்த ஆண்டே தஞ்சை மாவட்டம் பூண்டி புஷ்பம் கல்லூரியில் வேதியியல் செய்முறைப் பயிற்சியாளராகப் (Demonstrator in Chemistry) பணி புரிந்து வந்தேன். அதே ஆண்டு ராஜா மடத்தில் என்னுடன் படித்த S.P.சிவா அவன் தந்தையாருடன் புகுமுக வகுப்பில் (P.U.C) சேருவதற்காக என்னிடம் உதவி கேட்டு வந்தான். கல்லூரி மாணவர் சேர்க்கைக் குழுவினரிடம் சொல்லி அவனுக்கு இடம் வாங்கிக் கொடுத்தேன்.

விளையாட்டு வீரனுக்கு இடம் வாங்கி கொடுத்த நிறைவினை அன்று பெற்றேன். என்னுடன் படித்தவனுக்கே நானே ஆசிரியனாய் மாறிய நிகழ்ச்சி இன்றும் என் நெஞ்சை விட்ட அகலவில்லை.)

## 68) அக்னியாற்றின் கழிமுக வளம்

ராஜா மடத்தில் அக்னியாறு கடலோடு சங்கமிக்கும் இடத்திற்குக் கழிமுகம் (டெல்டா) என்று பெயர். இந்தக் கழிமுகத்தின் நடுவிலே பல குடியிருப்புகள் உண்டு. கடலியல், கடலோரப் புவிப் புறவியல் ஆகிய இரண்டும் ராஜா மடத்தின் இயற்கை வரலாற்றை அறிய உதவுகின்றன. மீன் பிடித்தல், கடல் வணிகத் தொடர்பு ஆகியவற்றின் மரபு வழி வரலாறு என்பது கடலோரப் புவிப்புறவியல் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடையது.

மீன் வளம், கடல் போக்குவரத்திற்குரிய கடலோரக் கரைகளின் இயற்கை அமைப்புகள், கப்பல் படகுப் போக்கு வரத்திற்குரிய கடல்வழி வாய்ப்புக்களாகின்றன. இயற்கையின் வாய்ப்புகள் எவ்வாறு சாளுவநாயக்கன் பட்டினத்தின்; மீன் பிடித் தொழில், கடல் வணிகம், கடற்கட்டுமானங்கள் போன்ற பணிகளுக்கு உதவியுள்ளன என்பதை அறிய மனோரா



கோட்டை, சேதுபாவா சத்திரம், ராஜாமடம் ஆகியவற்றை உள்ளடக்கிய சாளுவ நாயக்கன் பட்டினக் கடலோரப் பகுதிகள் குறித்த கருத்துக்கள் சுற்றுப்புறச் சூழல் குறித்து அறியப் பெரிதும் துணை நிற்கின்றன. சேதுபாவா சத்திரம், மனோராக் கோட்டை, ராஜா மடம் ஆகிய பகுதிகள் உள்ளிட்ட சாளுவநாயக்கன் பட்டினத்தின் கரையோரப் பகுதிகளில் பண்டைய காலத்திலிருந்து இன்று வரை நிகழ்ந்துள்ள புவிப் புறவியல் மாற்றங்களை அறிய முடிகின்றது.

இதில் நாகப்பட்டினம் முதல் கோடியக்கரை - சாளுவநாயக்கன் பட்டினம் - சேது பாவா சத்திரம் - தொண்டி -தேவிப்பட்டினம் வரையுள்ள பகுதிகள் பண்டைத் தமிழர்களின் கடல் வணிகத்திற்கும் மீன் பிடித்தலுக்கும் உரிய வளமான பகுதிகளாக இருந்துள்ளதை உணர முடிகின்றது.

## 69) மணல் தட்டைகள்

ஓத நீரேற்றத்தால் ஏற்படும் நீரோடைகளின் போக்கால் கடலோரத்தின் தொடர்ச்சியான புவியமைப்பை அவை அறுத்து விடுகின்றது. இச்செயலால் பல்வேறு திட்டுகளாகக் கரைப்பகுதிகள் காட்சியளிக்கின்றன. ராஜாமடம் பகுதிகளின் கடலோரப் பகுதிகளில் களிமண் கலந்தச் சேற்றுப் படிவுகள் பெரிதும் காணப்படுகின்றன. இங்கு அமைந்துள்ள காயல்களின் தனித்தன்மைகளைக் காணும் போது, இக் காயல்களின் அமைவுகளே பண்டையக் கடற்கரை விளிம்பாக இருந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது. குறிப்பாக ராஜாமடம் பகுதியிலுள்ள தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில், பல்வேறு மணல்தட்டைகளை அமைந்துள்ளன. இம்மணல்தட்டைகள் ‘கொக்கி’ போன்ற வடிவமைப்புடன் திகழ்கின்றன.

ராஜாமடம் மனோரா பகுதிகளில் வளர்ச்சியில்லாத பிறைக் கதுப்பின் முற்புற நிலப்பரப்புக் காணப்படுகின்றது. எனவே பிறைக்கதுப்பு முற்புற நிலப்பரப்புகள் கோடியக்கரை வரை வளரும் மணல்திட்டுகள் போன்றவை. இவை வெட்டாறு, வெள்ளாறு, உப்பனாறு, அரசலாறு, திருமலை ராஜனாறு, பாமணியாறு, வெண்ணாறு, அக்னியாறு போன்ற (Ephemeral) ஆறுகளின் முகத்து வாரங்களில் காணப்படுகின்றன. சாளுவநாயக்கன் பட் டினம், சேதுபாவா சத்திரம், ராஜாமடம் ஆகிய பரப்பளவைக் கொண்ட இக்கடற்கரைப் பகுதிகளில் பிறைவடிவ (Parabolic), நீள் (Longitudinal) மற்றும் குறுக்கு (Transverse) வடிவங்களிலான மணற் குன்றுகளின் தொகுப்புகள் காணப்படுவதால் பண்டைய நீர்க்கால்வாய்கள் (Palaeo - Channels) இருந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

ராஜாமடம் பகுதியில் சேற்றுச் சமவெளிகள் உருவாகி வருகின்றன. ஆறுகளின் கழிமுகப் பகுதிகளில் ஆற்று நீர் வேகம் மற்றும் கடல் அலைகளின் வேகம் ஆகிய இரண்டிற் குமிடையே ஏற்படும் மோதல் நிகழ்வுகளால் களிமண் ஏற்படும் நிலை ஏற்படுகின்றது. இத்தகைய மாற்றங்களை ஆற்று நீர் கடலில் கலக்கும் இடங்களில் காண வாய்ப் பாகின்றது. நீள்முகட்டுப் பகுதிகளில் பல்வேறு கடற்கரைக் குடியிருப்புகள், கிராமங்கள் ஏற்பட்டுள்ளன.

## 70) மீனவ நண்பன் ஆறுமுகத்தின் விருந் தோம்பல்

கழிமுகப்பகுதியில் குடியிருந்த என்னுடன் படித்த மாணவன் ஆறுமுகம் . இவன் தினந்தோறும் மூன்று கிலோ மீட்டர் தூரம் பனங்காடுகள், முந்திரிக்காடுகள், மாங்குரோவ் காடுகள், ஊடே சென்று சதுப்பு நிலப்பகுதியைத் தாண்டிக்



கடலின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள ஒரு மணல் திட்டில் உள்ள அவனுடைய வீட்டைச் சென்றடைய வேண்டும். மழை காலங்களிலும் புயல் சின்னம் தோன்றும் காலங்களிலும் இவன் வீடு சென்று சேருவது மிக கடினமானதொரு செயலாகும். வானம் இருண்டிருந்தால் முன்னதாகவே அனுமதி கேட்டு தன் வீட்டிற்குப் புறப்பட்டுவிடுவான். பல நாட்களாக என்னைத் தன்வீட்டிற்கு வந்து சில மணிநேரம் தங்கிப்போக வேண்டும் என்று வற்புறுத்தி வந்தான்.

''மீனவர் வீட்டிற்கு எப்படிப் போவது என்ற என் தயக்கத்தைப் புரிந்த கொண்ட அவன் எங்கள் வீட்டில் எந்த உணவையும் உனக்கு அளிக்க மாட்டோம். கழிமுகப் பகுதியில் உள்ள நாவல் மரங்களிலிருந்து பெருப்பெருத்த நாவல்பழங்களையும், முந்திரிப்பழங்களையும் மட்டுமே தருவோம். அதனால் நீ பயமில்லாமல் வரலாம்.ஒரு ஞாயிற்றுக் கிழமை நான் விடுதிக்கு வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன் என்று கூறினான்.''

மிக மென்மையான இயல்புகளையும் நற்பண்பு களையும் கொண்டவன் ஆறுமுகம். அதனால் அவனுடைய வேண்டுகோளைத் தட்டிக்கழிக்க இயலவில்லை என்னால். ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆறுமுகத்தின் துணையுடன் அவன் இல்லத்தைச் சென்றடைந்தேன். அக்னியாற்றில் முகத்து வாரத்தில் அமைந்துள்ள பல்வேறு மணல் தட்டைப் பகுதிகளில் ஒரு தட்டைப் பகுதியில் அவன் வீடு அமைந் திருந்தது. மூன்று பக்கமும் அக்னியாற்றின் நீர் சூழ்ந்திருக்க ஒரு பக்கம் கடல் ஆர்ப்பரித்துக் கொண்டி ருந்தது. ஆறுமுகம் குடியிருந்த பகுதியில் ஐந்தாறு குடியிருப்புகள் காணப்பட்டன. அவன் வீட்டு திண்ணை சாணத்தாலும், கரித்தூளாலும், நன்றாக மெழுகிக் கோலமிடப்பட்டு இருந்தது. வீட்டின் நிலைப்

படியில் திருமண் மற்றும் சங்கு சக்கரம் காணப்பட்டது. நீங்கள் ஏன் இந்த வீட்டின் முகப்பில் இந்தச் சின்னங்களை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு இவ்வாறு திருமண் சங்குசக்கரம் இருந்தால் அந்த வீட்டிற்கு அதுவே பாதுகாப்பு என்று அவன் பதில் கூறினான். அவன் வீட்டு கதவில் மீன் வடிவு கொண்ட நாராயணனுடைய உருவம் காணப்பட்டது. அந்தத் திட்டின் பல்வேறு இடங்களில் உலரவைக்கப்பட்ட மீன்கள் காணப்பட்டன. நெடு நேரம் என்னால் அங்கு இருக்க இயலவில்லை.

ஆறுமுகத்தின் துணையுடன் கழிமுகத்தின் அண்மையில் உள்ள காட்டுப்பகுதிக்குள் சென்று பல வினோதங்களைக் கண்டேன்.

## 71) மாங்குரோவ் எனப்படும் கண்டல் செடிகள்

**'ரைஸோபோரா ம்யூக்ரனேட்டா'** தாவரக் குடும்பம் : **'ரைஸோபோரேசி'** 'ரைஸோபோரா' என்றால், வேர்கள் உடையது அல்லது வேர்களைத் தாங்கிக் கொண்டிருப்பது எனப் பொருள்படும்; அதாவது இம்மரத்திலிருந்து நில மட்டத்திற்கு மேல் உருவாகும் வேர்கள், மரத்தைத் தாங்கிக் கொண்டிருப்பது போல் தோற்றமளிக்கும் நிலையை இப்பெயர் எடுத்துக் காட்டுகிறது. இலையின் கூர்மையான முனையை 'ம்யூக்ரனேட்டா' என்ற இணைப்புப் பெயர் அறிமுகப் படுத்துகிறது. தமிழ்நாட்டில் பிச்சாவரம் பகுதியில் , கண்டலின் மற்றொரு இனமான 'ரைஸோபோரா ஏபிகுலேட்டா' உள்ளது. இது சிறிய மரம்; இலைகள் மற்றதை விடக் கரும்பச்சை நிறமுடையது; இலையும் சற்று ஒடுக்கமானது; ஆனால் மற்றதைவிட, அடர்ந்த தழையமைப்பு உடையது; இந்த மரங்கள் தான் பிச்சாவரத்தில் அதிகமாக உள்ளன.



கண்டல் மரங்கள் கடலை ஒட்டி வளரும் மரங்களாகும். அதற்கு அடுத்த உள்நாட்டுப் பகுதியில்தான் பிற மரங்கள் வளர இயலும். அதிலும் கண்டல் மரங்கள் வளர, நீரில் உப்பின் கடுமை அதிகமாக இருக்க வேண்டும். கண்டல் மரம் வளர்ந்திட நீரில் 10,500 ppm உப்பு இருக்கவேண்டும்.

உப்பு நீரை விரும்பும் கண்டல், அதற்கு ஏற்ற வகையில் மூன்று வகையான வேர்களைக் கொண்டுள்ளது. நடு மரத்திலிருந்து உருவாகி, செங்குத்தாக நிலத்தை நோக்கி வளர்ந்து , நிலைக்கும் வேர்கள் ஒரு வகை. இந்த வேர்கள் கடல் அலைகள் மரத்தை ஆட்டி அசைத்திடாமல் காக்கின்றன. இரண்டாம் வகை, நில மட்டத்தில் வளரும் வேர்களாகும்; பாய்ந்து வரும் அலைகள் கொண்டு வரும் மணல் துகள்களையும் பாசிகளையும் பிடித்து வைத்து, அங்கு நிலப்பகுதி உருவாகிட உதவுகின்றன; மற்றும் அலைகளின் வேகத்திற்கு அணையிடவும் செய்கின்றன. மூன்றாம் வகை வேர்கள், மரத்தின் நாசிகளாகச் செயலாற்றுகின்றன. இவை மரத்தின் சுற்றிலும், முளைக்குச்சிகளைப் போன்று விண்ணோக்கி நீட்டிக் கொண்டிருக்கும்; கார்கைப் போன்ற தன்மையுடையவை; காற்றிலிருந்து ஆக்ஸிஜனைப் பெற்று நீரில் அமிழ்ந்திருக்கும் வேர்களுக்கு ஊட்டுகின்றன.

கண்டல் மரம் 12 மீட்டர் உயரம் வளரக் கூடிய நடுத்தர உயரமுடையது. பிச்சாவரத்தில் 15 மீட்டர் உயரமுடைய மரங்களும் உள்ளன. அடர்ந்த தழையமைப்பு உடையவை. மரப்பட்டை கருமை நிறமாக, மொழு மொழுப்பாக இருக்கும். அதில் குறுக்கு வாட்டத்தில் பிளவுகளும் இருக்கும். அடிமரம் 1.5மீட்டர் சுற்றளவுடன் தடித்திருக்கும் பசுமை மாறாதமரம்.

கிளைகள் நெருக்கமாக உருவாகி, அவற்றில் 7.0 - 15.0

செ.மீ நீளமும், 4.0 - 7.5 செ.மீ அகலமும் உடைய இலைகள் நீண்ட முட்டை வடிவில் இருக்கும். இளம் பச்சை நிறமுடையவை; நுனிப்பகுதி, கூர்மையாக இருக்கும். இலைக் காம்புகள் 1.0 - 4.0 செ.மீ அளவில் பச்சை நிறத்தில் சிகப்புப் புள்ளிகளைக் கொண்டிருக்கும். நீரைப் பிடித்து வைத்துக் கொள்வதற்காக, 'ட்ரெகியெட்ஸ்' என்ற அமைப்புகள் இலையில் உள்ளன. மழைக்காலத்தில் கண்டல் மரங்கள் பூக்கும். இலைச் சந்துகளில் பச்சைச் சாயையுள்ள வெள்ளை நிறப் பூக்கள் உருவாகும். ஒவ்வொரு பூவும் 2.0 செ.மீ அளவுடையது. ஜூன்-அக்டோபர் மாதங்களில் பூக்களைக் காணலாம்.

## 72) ஆண்டவனின் அதிசயப் படைப்பு மாங்குரோவ்

இதன்பின் , ஆகஸ்டு - ஜனவரி மாதங்களில் 4.0. - 5.0 செ.மீ அளவுள்ள கருமை நிறக் கனிகள் பெருமளவில் மரத்தில் நிறைந்திருக்கும். கனியில், ஒரு விதை இருக்கும். மரத்திலேயே இக் கனிகள், உதிராமல் நிலைத்திருக்கும். அந்நிலையில், விதைகள் முளைத்து விடும். இம்முளைகள் 45.0 - 60.0 செ.மீ அளவில் வளர்ந்து குட்டிக் கன்றுகளாக வளர்ந்துவிடும்; அதுவரை தாய்மரத்திலிருந்தே சத்துக்களைப் பெற்றுக் கொண்டிருக்கும்; நிறைய உப்பையும் சேமித்து வைத்துக் கொண்டிருக்கும் பின்னர் தக்க பருவத்தில், இக்குட்டிக் கன்றுகள் உதிர்ந்து, அலைகளினால் அடித்துச் செல்லப்பட்டு, உகந்த இடத்தில் தங்கி, வேர்களைப் பதித்துக் கொண்டு, புது வாழ்க்கையைத் துவங்கும். ஆண்டவனின் அதிசயப் படைப்பு களில் இது மிகவும் அதிசயமானதாகும். ஒவ்வாத சூழ் நிலைக்கு ஏற்ப, கன்றுகளை வளர்த்து, பயிற்சியளித்து, தக்க சமயம் பார்த்து உதறிடும் கண்டல் ஒரு அதிசய மரம் எனலாம்.

இந்த மரத்தின் வெளிப்பகுதி பழுப்பு நிறமுடையது. இந்த மரம் நல்ல விறகாகவும் பயன்படுகிறது. தற்போது



கண்டலினக் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆழிப்பேரலையின் போது (சுனாமி) இந்த கண்டலினக் காடுகளே கோடியக்கரை, முத்துப்பேட்டை, அதிராம் பட்டினம், போன்ற இடங்களில் வாழ்ந்த கடற்கரை ஓர மக்களுக்கு பாதுகாப்பு அளித்தது. இவ்வாறு கண்டல் மரக் காடுகளைக் கண்டுக்களித்த பிறகு விடுதிக்குத் திரும்பினேன்.

## 73) மணி ஐயர் உணவு விடுதி

ராஜா மடம் ஒரு சிறிய கிராமம். அந்த ஊரில் மணி ஐயர் உணவு விடுதி, ஸ்ரீநிவாஸப்பெருமாள் திருக்கோயிலில் மேற்கு மதில் சுவரையொட்டி அமைந்திருந்தது. இதன் அண்மையில் தான் பேருந்துகள் வந்து நிற்கும். சத்திரத்தில் தங்கிப் படிக்கும் சைவ உணவு உட்கொள்ள விரும்பும் மாணவர்கள் மற்றும் அவர்களைக் காண வருகை தரும் பெற்றோர்களுக்கும் இந்த உணவு விடுதி ஒன்றே புகலிடம். மணி ஐயர் அவருடைய மனைவி, அவருடைய மகன் கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் இந்த உணவு விடுதியை நடத்தி வந்தனர். இதில் மணி ஐயருக்குச் சரியாக காது கேளாது. தோசை வேண்டு என்றால் வடை வேண்டுமா என்பார். மிக மெல்லிய குரலில் பண்டங்களை சுட்டிக்காட்டி அவரிடம் உணவுப் பொருள்களை கேட்க வேண்டும். சாப்பாடு வேண்டும் என்றால் பதினோரு மணிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வப்போது பொருளாதார நிலையைப் பொருத்தே உணவு விடுதியில் காபி அருந்த முடியும்.

(ஒரு மாணவன் கையில் ஐந்து ரூபாய் இருந்தால் அவன் பணக்கார வர்க்கத்தவன் என்று அறியப்படும். மூன்று ரூபாய் இருந்தால் சுமார் பணக்காரன். நான் இந்த இரண்டு வகையும் சார்ந்தவன் அல்லன். இரண்டு ரூபாயை வைத்துக் கொண்டு ஒரு வாரத்தை ஓட்ட வேண்டும்.

*இதில் துணிக்கு சலவைக்கட்டி, மாலை வேளைகளில் கொரிக்க வறுகடலை, ஏதோ சில நாட்கள் காபி அருந்திட, வாரத்தில் ஒரு நாள் தோசை வடை சாப்பிட இவையனைத்திற்கும் இந்த இரண்டு ரூபாய் தான் மூலதனம். பற்றாக்குறை ஏற்பட்டால் மணிஐயர் மகன் கிருஷ்ணமூர்த்தியிடம் அடுத்த வாரம் தருகிறேன் என்று சொல்லிவிட்டு Current account வைத்துக் கொள்ள வேண்டும். அன்றைய விலைப்பட்டியல் காபி இரண்டணா, டீ ஒன்றரை அணா, சாதா தோசை ஓரணா, மசால் தோசை ஒன்றரையணா, சாப்பாடு எட்டணா . (ஒரு ரூபாய் என்பது பதினாறு அணாக்கள் கொண்டது) 1957 ஆம் ஆண்டு தான் புதிய நாணய முறை அமுலுக்கு வந்தது. நயா பைசா நாணயமாற்று என்று அதற்குப் பெயர் இடப்பட்டது.)*

*அசைவ சாப்பாடு சாப்பிடுபவர்களுக்கு ஊர் எல்லையில் அமைந்துள்ள பாப்பம்மாள் உணவு விடுதி ஒன்றே கதி. பெரும்பாலான ஆசிரியர்கள் அசைவ உணவு உட்கொள்பவர்கள், மாமிச பக்ஷிகள். மாற்றல் பெற்றுவரும் சில ஆசிரியர்கள் தனி வீடுகளில் தங்கியிருந்து இந்த உணவு விடுதியில் உணவு அருந்தி வந்தனர்.*

## 74) கல்கியின் மரணம்

*பொன்னியின் செல்வன் தொடர் நாவலின் கடைசி அத்தியாயம் 1954-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் தேதியிட்ட கல்கி இதழில் வெளியாயிற்று. அந்த ஆண்டின் டிசம்பர் மாதம் 5-ஆம் தேதி அதிகாலையில் கல்கியின் மானிட வாழ்வு அவருடைய 55-ஆவது வயதில் முடிவுற்றது. பொன்னியின் செல்வன் தொடர் நாவல் முடிந்தபிறகு 1954-ஆம் ஆண்டு ஜூலை மாதத் தில் 'அமரதாரா' தொடர் கதைக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டார் கல்கி. அதே ஆண்டு செப்டம்பர் ஐந்தாம் தேதி இதழில் 'அமரதாரா' தொடர் நாவலின் முதல்*



*அத்தியாயம் வெளி வந்தது. அந்தக் கதை - நெஞ்சைப் பிழியும் சோகக் கதை; தாயையும் தந்தையையும் இழந்து, அநாதை யாகும் இந்துமதி யின் கதை; வெள்ளித்திரையில் அவள் அமரதாராவாய் ஒளிவீசிக்கொண்டிருக்கையில் அபாண்டமாய்க் கொலைக் குற்றத்துக்கு உள்ளாகும் கதை; மரண தண்டனை அடைந்து சிறையில் தவிக்கும் கதை.*

*'அமரதாரா' நாவல் தொடர்ந்து கல்கி இதழில் வெளிவந்து கொண்டிருக்கையில் கல்கியின் உடல் நிலை முழுமையாக குலைந்து போயிற்று; நெடுநாளைய ஆஸ்துமா வுடன் "புளூரஸி"யும் வேறு கோளாறுகளும் தோன்றி அவரை வருத்தலாயின. மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி, சிகிச் சைக்காகவும் வெவ்வேறு வைத்திய சோதனைகளுக்காகவும் அக்டோபர் முதல் வாரத்தில் பொது மருத்துவமனையில் அவர் சேர்ந்து கொண்டார். அங்கே ஒரு தனி அறையில் (ஸ்பெ ஷல் வார்டில்) இருந்தபடியே அவசியமான வேலைகளை யும் செய்து வந்தார். ஓரளவிற்கு அவர் உடல்நிலை தேறி வந்தது. வீட்டிற்குத் திரும்பிய சில நாட்களுக்குப் பிறகு அவர் உடல்நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்தது. அவர் இறப்பதற்கு முதல் நாள் பாலாற்றுத் தண்ணீரை அருந்த விரும்பினார். அவருடைய நண்பன் வரதப்பன் அவருடைய வேட்கையைத் தீர்ப்பதற்காக பெரிய குடம் ஒன்றைக் காரில் எடுத்து வைத்துக்கொண்டு செங்கல்பட்டை நோக்கிப் புறப் பட்டார்.*

## 75) நிலமகளும் துயிலுகையில் நெஞ்சகந்தான் விம்முவதேன்!

தன் மகள் ஆனந்தியை ‘‘எனக்குத் தூக்கம் வருகிற வரை பாடிக்கொண்டே இரு.’’ என்று கேட்டுக்கொண்டார் கல்கி.

''மறவேன் மறவேன் என்று வேலின்மேல் ஆணை யிட்ட மன்னரும் மறப்பாரோ - நீலமயிலே'' என்று சிவகாமியின் சபதத்தில், சிவகாமி ஆனந்தபைரவி ராகத்தில் பாடிய பாட்டைப் பாடினாள் அவர் மகள் ஆனந்தி. அதன் பிறகு, பூங்குழலியின் கடல்பாட்டுப் பாடு என்று அவர் வேண்டிக் கொண்டார்.

***அலைகடலும் ஓய்ந்திருக்க***
***அகக் கடல்தான் பொங்குவதேன்?***
***நிலமகளும் துயிலுகையில்***
***நெஞ்சகந்தான் விம்முவதேன் ?...***

கோடியக்கரையிலே, அமைதியான அந்தி நேரத்தில் கடலழகி இசைத்ததான அப்பாடல், மேலே மேலே விம்மிக் கொண்டிருக்கையில், மெல்ல மெல்ல கண் அயர்ந்தார் கல்கி.

பாலாற்றுத் தண்ணீருடன் நடுநிசியில் சென்னைக்குத் திரும்பிய வரதப்பன், அந்த அகாலவேளையில் அதைக் கல்கியிடம் கொடுக்க வேண்டாம் என்று எண்ணி, நேரே தம் வீட்டுக்கே சென்று குடத்தை இறக்கி வைத்துக் கொண்டார். 1954 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை விடியற்காலை கல்கியின் உயிர் பிரிந்தது. அன்றைய தினம் காலை 7.15 மணித் தமிழ் செய்தி அறிக்கையில் அவர் இறந்தது பற்றித் தெரிவிக்கப்பட்டது. வரதப்பன் கொண்டு வந்த பாலாற்று நீரைக்கொண்டு அவரது உடல் தூய்மைப் படுத்தப்பட்டது. தான் அருந்த விரும்பிய பாலாற்று நீரை அருந்தாமலேயே இறந்தார் கல்கி.

கல்கியின் மறைவு ராஜாமடத்தில் இருந்த எனக்கு அடுத்த நாள் சுதேசமித்திரன் பேப்பர் மூலமாகத்தான்



தெரிய வந்தது. அன்றைய தினம் மாணவர் பேரணியில் வேறு எந்த செய்தியையும் நான் வாசிக்கவில்லை. கல்கியின் பெருமை யையும், அவர் எழுதிய நாவல்களைப் பற்றியும் ஐந்து நிமிடம் நினைவஞ்சலி போல செய்தித் தொகுப்பைப் படித்தேன்.

## 76) மலைக்கள்ளன்

அப்போதைய தமிழ்ப் பாடத் திட்டத்தில் Non-detailed text என்று ஒரு பகுதி உண்டு. 1954-55 கல்வியாண்டில் 11-ஆம் வகுப்புப் படித்த மாணவர்களுக்கு நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம்பிள்ளை அவர்கள் எழுதிய மலைக்கள்ளன் என்ற நூல் Non-detailed text ஆக இருந்தது. (***நான் 1955 - 56 கல்வியாண்டில் 11-ஆம் வகுப்பில் படித்தபோது மலைக்கள்ளன் Non-detailed text ஆக இல்லை. பரதநம்பி என்ற புத்தகம் Non-detailed text ஆகக் கொள்ளப் பட்டது.***)

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை 1888ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பிறந்தார். 1972 ஆம் ஆண்டு இறந்தார். இவர் விடுதலைப் போராட்டத்தின்போது 1932 ஆம் ஆண்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறை யில் தினந்தோறும் மாலையில் ராமலிங்கம்பிள்ளையும் மற்றையோரும் பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்திடுவர். அப்போது நடந்த நிகழ்ச்சிகளை திரு. ராமலிங்கம் பிள்ளை மலைக்கள்ளன் புத்தகத்தின் முன்னுரையில் கீழ்க்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

''ஒருநாள் என்னுடைய ''கிளிக் கண்ணிகளை'' ஒரு நண்பர் பாடினார். அந்தப் பாட்டு, கூட்டில் சிறைப்பட்டுக் கிடக்கும் ஒரு கிளியைப் பார்த்து அது விடுதலை அடை

வதற்கு வழி சொல்லிக் கொடுப்பதைப் பொருளாகக் கொண்டது. அந்தப் பாட்டு ஸ்ரீ சாம்பமூர்த்தியின் மனசைக் கவர்ந்தது. அதை மீண்டும் மீண்டும் பாடச் சொல்லி விளங் காத இடங்களில் அர்த்தத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு இன்புற்றார். முழுதும் கேட்டபின் அந்தப் பாட்டிலுள்ள கற்பனா சக்தியை மிகவும் மெச்சிவிட்டு ஆங்கிலத்தில், ''இது பாரதியார் பாட்டுத்தானே?'' என்றார். பக்கத்தி லிருந்த என் நண்பர் சேலம் ஸ்ரீ சி. அனந்தாச்சாரி யாராவர்கள்; ''அது பாரதியார் பாட்டல்ல. நம்ம ராமலிங்கம் பிள்ளை பாட்டு'' என்று என்னையும் என் கவித்திறத்தையும் புகழ்ந்து அறி முகப்படுத்தினார். ''ஓ! அப்படியா! ராம லிங்கம் பிள்ளை இவ் வளவு நல்ல கவிஞரா! எனக்குத் தெரியாமற் போச்சே'' என்றெல்லாம் ஆங்கிலத்தில் ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி என்னை மிகவும் பாராட்டினார். அன்று முதல் அடிக்கடி என்னிடம் தனியே வந்து என் பாட்டுகளில் எதையாவது சொல்லச் சொல்லி அர்த்தமும் கேட்டு மகிழ்வார்.

இப்படிச் சல்லாபித்து வருகிற நாட்களில் ஒரு நாள் நான் என்னென்ன இலக்கியங்களைத் தமிழில் செய்திருக் கிறேன் என்பதைப்பற்றிக் கேட்டார். நான் இரண்டொன்றைச் சொன்னேன். வசன ரூபமான கதைகளும் நாவல்களும் எழுதப்படவேணும் என்பதைப் பற்றிப் பேச்சு வந்தது. பல ஆங்கில, பிரஞ்சு, வங்காளி, மராத்தி எழுத்தாளர் களைப் பற்றி ஸ்ரீ சாம்பமூர்த்தியவர்கள் பேசிவிட்டு நானும் வசன நூல்களை எழுதவேண்டும் என்று வற்புறுத்தி ஓர் ஆசான் சீடனுக்குப் பேசுவது போல் சொன்னார். அதற்கு முன்னா லேயே வசனமாகவும் எழுத வேணும் என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்கு ஸ்ரீ சாம்பமூர்த்தி சொன்னவற்றைக்



கேட்டபின், உடனே எதையாவது எழுதிப் பார்த்து விட வேணுமென்று உறுதி உண்டாயிற்று. மறுநாளே 'மலைக் கள்ளன்' எழுத ஆரம்பித்தேன்.

சிறையில் ஏ.பி. வகுப்பு சத்யாக்ரகக் கைதிகள் கூடு மான வரையில் கண்ணியமாகவே நடத்தப்பட்டு வந்தார்கள். எழுதவும் படிக்கவும் எவ்வளவு வேணுமா னாலும் அவகாச மும் வசதிகளும் இருந்தன. என்னுடைய 'திருக் குறள் புது உரை', 'கம்பராமாயண ஆராய்ச்சிகள்' முதலான இலக்கியங் களும், பல கதைகளும், பாட்டுகளும் இந்தச் சிறை வாசத்தில் தான் உருவாயின. அவற்றுள் ஒன்று 'மலைக்கள்ளன்'.''

எளிய தமிழில் அனைவரும் ஆவலோடு படித்து மகிழும் வண்ணம் இந்தப் புதினம் எழுதப்பட்டது. இந்தப் புதினத்தில் **மலைக்கள்ளன்** கதாநாயகியான பூங்கோதை யை முரடர்களிடமிருந்து மீட்டுத் தன் இருப்பிடத்திற்கு கொண்டு செல்லும்போது ஆங்காங்கே பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். அப்போதெல்லாம் ஓர் அரணில் உள்ளே இருப்பவன் ''ஸ்ரீராமஜெயம்'' என்று சொல்வான். அதற்கு மலைக்கள்ளன் ''சீதை மீண்டாள்'' என்று சொல்வான். அப்போது தான் கதவு திறக்கப்படும். சிறிது தூரம் சென்றபிறகு மற்றொரு பாதுகாப்பு அரணின் கதவைத் திறப்பதற்கு முன்பு உள்ளே இருப்பவன் ''சேது பந்தனம்'' என்று சொல்வான். வெளிப்புறம் இருக்கும் கள்ளன் ''அசோகவனம்'' என்று பதில் சொல்வான்.

இன் னும் சிறிது தூரம் சென்றபிறகு கதவைத் திறப்பதற்கு முன்பு ''பாதுகை கொடுத்தாரா'' என்று உள்ளே இருப்பவன் கேட்க, மலைக்கள்ளன் ''பன்னசாலையோடு'' என்று பதில் சொல் வான். இவ்வாறாக இந்தப் புதினத்தில்

இராமாயண நிகழ்ச்சிகள் ஆங்காங்கே சங்கேதச் சொற்களாகக் கையாளப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டு இந்தப் புதினம் திரைப்படமாக வெளிவந்தது. அந்தக் காலகட்டத்தில் சிறந்த படத்தயாரிப்பாளராக விளங்கிவந்த திரு. எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு என்பார் தம்முடைய சொந்தத் திரைப்பட படப்பிடிப்பு தளமான கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோவில் இந்தப் படத்தை தயாரித்தார். எம்.ஜி. ராமச்சந்திரன், எம்.ஜி.சக்ரபாணி, டி.எஸ். துரைராஜ், பாலசுப்ரமணியம், சகாதேவன், துரைசாமி, பி, பானுமதி, பி.எஸ். ஞானம், சுரபி பாலசரஸ்வதி, சந்தியா ஆகியோர் இந்தப் படத்தில் நடித்திருந்தனர். இதற்கு வசனம் எழுதியவர் திரு. மு. கருணாநிதி. திரு. எஸ்.எம். சுப்பையா நாயுடு இந்தப் படத்திற்கு இசையமைத்திருந்தார்.

'தமிழன் என்றொரு இனமுண்டு', 'எத்தனை காலந் தான் ஏமாற்றுவார்', 'வாராய், இன்பம் தாராய்' போன்ற பாடல் கள் செவிக்கினிமையாய் அமைந்தன. இந்தத் திரைப்படத் திற்கான பாட்டுப் புத்தகத்தில் (***ஆண்டுக்கு ஆறு அல்லது எட்டு திரைப்படங்களே அப்போதெல்லாம் வெளி வந்து கொண்டிருக்கும். படம் பார்க்கச் செல்வோர் பாட்டுப் புத்தகம் வாங்கியபிறகுதான் உள்ளே செல்வர். அதில் கதைச் சுருக்கம் போட்டிருக்கும். ஆனால் முழுமையாக இருக்காது. படத்தில் உச்சக்கட்ட காட்சிகளைப் பற்றி ஏதுமிருக்காது. ''மற்றவை வெள்ளித்திரையில் காண்க'' என்ற சொற்றொடர் மட்டும் இருக்கும். தற்போது அனைவரும் கேட்டு மகிழுமாறு பாடல்கள் ஒலிபரப்பப்படுவதுபோல் அப்போதெல்லாம் பாடல்களை கேட்க முடியாது. பாட்டுப் புத்தகத்தின் துணை கொண்டு பாடல்களைப் பாடி வந்தோர் பலர்.***)



''மலையிலே வாழ்ந்து வந்தான் அவன். பொதுநலத் தொண்டு புரிந்தான். இதற்கு அவன் குடும்பத்திலே நடந்த நிகழ்ச்சிகள்தாம் காரணமாய் இருந்தன. பச்சோந்திகளுக்குப் பாடம் புகட்டினான். வஞ்சகத்தை வீழ்த்தினான். வெற்றி கண்டான். தனது கொள்கையிலே மட்டுமல்ல; காதலிலும் தான்'' என்ற கதைச்சுருக்கம் இடம் பெற்றிருந்தது.

மலைக்கள்ளனாக நடித்து, இடையில் மங்கியிருந்த பெயரைத் திரும்பப் பெற்று வெற்றி வாகை சூடினார், எம்.ஜி.ஆர். அவர் பல மாறுவேடங்களில் தோன்றித் தமது நடிப்பினால் மக்களைக் கவர்ந்தார்.

இன்ஸ்பெக்டராக நடித்த சக்ரபாணியும், கான்ஸ்டபிளாக நடித்த துரைராஜுவும் நகைச்சுவை நடிப்பின் வாயிலாகப் புகழ் பெற்றனர். பானுமதி, தமது இசையினாலும், நடிப்பினாலும் மகிழ்வித்தார். மற்றைய நடிக-நடிகையர் தாங்கள் ஏற்றிருந்த கதாபாத்திரங்களில் குறைவின்றி நடித்தனர்.

அனைவரும் பார்த்து மகிழ்ந்திடும் வண்ணம் படத்தினை இயக்கியிருந்தார், திரு. ஸ்ரீராமுலு நாயுடு, வெற்றி வாகை சூடிய படம். ஆறு மொழிகளிலும் தயாரிக்கப் பட்டு வெற்றி பெற்ற படம். விருதும் பெற்ற படம்.(***ஒரு சில புதினங்களே திரைப்படமாக வெளிவந்தும் வெற்றி வாகை சூடின. சில புதினங்கள் திரைப்படங்களாக வெளிவந்த போது அத்துணை வரவேற்பைப் பெறவில்லை. கல்கி எழுதிய பொய் மான்கரடு என்ற குறுநாவல், பொன்வயல் என்ற பெயரில் வெளிவந்தது. அதேபோல கள்வனின் காதலி, தியாக பூமி, பார்த்திபன் கனவு போன்ற படங்கள் பெரும் வெற்றியைத்***

***தரவில்லை. கொத்தமங்கலம் சுப்பு எழுதிய தில்லானா மோகனாம்பாள் மிகச் சிறந்த படமாக மக்களால் இன்றும் கொள்ளப்பட்டு வருகிறது. லக்ஷ்மியின் காஞ்சனையின் கனவு நாவல், காஞ்சனா என்ற தலைப்பில் திரைப்படமாக வெளி வந்தது. அகிலன் எழுதிய பாவை விளக்கு திரைப்படமாக வெளி வந்தபோது அது பெரிய வெற்றியைப்பெறவில்லை. ஒரு நாவலை சுவைகுன்றாமல் படம் எடுப்பது என்பது மிகக் கடின மானதொரு செயலாகும். ஆனால் மலைக் கள்ளன் படம் அடைந்த வெற்றியை இன்றுவரை எந்தப் படமும் பெற வில்லை என்பதே உண்மை.***)

## 77) அய்யம்பேட்டை - பெயர்க்காரணம்

திட்டை, பசுபதிகோவில் ஆகிய ரயில் நிலையங்கள் இடையே அமைந்துள்ளது வையச்சேரி கிராமம். திட்டை ரயில்நிலையத்திலிருந்து வடக்கே 2 கி.மீ. தூரத்தில் இருப்புப் பாதையின் ஓரமாக அமைந்துள்ளது. வெளியூருக்குச் செல்லவேண்டுமானால் இருப்புப் பாதையின் ஓரமாக நடந்து சென்று ரயில்நிலையத்தை அடைய வேண்டும். தேவையான அனைத்து மளிகைப் பொருள்களையும் மற்றும் காய்கறிகளையும் வாங்குவதற்கு இருப்புப் பாதையின் வழியாக பசுபதி கோயில் என்னும் ரயில் நிலையத்தை அடைந்து அங்கிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள அய்யம் பேட்டையைச் சென்றடைய வேண்டும்.

தஞ்சை நாயக்க மன்னர் கள் வரலாற்றில் அவர்களுக்கு இணையாக இருக்கையில் அமர்ந்து, மந்திரியாகவும் பிர தானியாகவும் பணிபுரிந்து, அச்சுதப்பன், இரகுநாதன் ஆகி யோர்க்கு ஆசானாகவும் திகழ்ந்து வரலாறு படைத்தவர் கோவிந்த தீட்சிதராவார். கோவிந்தபுரம், கோவிந்தகுடி, அய்யம்பேட்டை எனும் ஊர் களின் பெயர்களும், தஞ்சையிலுள்ள அய்யங்கடைத் தெரு, அய்யங் குளம், கும்பகோணத்திலுள்ள யாகசாலைத் தெரு ஆகியவையும் அவர் நினைவாகப் பெயர் பெற்றுள்ளன. பட்டீச்சரம் (பழையாறை) தேனு புரீச்வரர் திருக் கோயிலிலும், மன்னார்குடி ராஜகோபால ஸ்வாமி திருக்கோயிலிலும் கோவிந்த தீட்சிதரின் உருவச்சிலைகள் காணப்படுகின்றன. இவருக்கு அய்யன் என்ற ஒரு பெயரும் உண்டு. இவருடைய நினைவாக தஞ்சை நாயக்கர்கள் காலத்தில் ஏற்படுத்தப் பட்டதே அய்யம்பேட்டை என்னும் ஊர்.



இந்த ஊரில் செளராஷ்டிரர் கள் அதிகளவில் வசித்து வருகிறார்கள். அய்யம்பேட்டை, பண்டாரவாடை, ராஜகிரி ஆகிய ஊர் களில் தற்போது முகம் மதியர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். திப்புசுல்தான் மற்றும் ஹைதர் அலியின் படையெடுப்பால் நிகழ்ந்த சமுதாய மாற்றங்களில் ஒன்று பெரும்பாலான இந்துக்கள், முகம்மதியர்களாக ஆக்கப்பட்டனர். அதன் விளைவே அய்யம்பேட்டை, ராஜகிரி போன்ற ஊர்களில் தற்போது காணப்படும் முகம்மதியர்களுடைய பெருக்கம்.

## 78) Boatmail- யில் Boat- ஐப் பார்க்கமுடியவில்லை

ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோயிலைச் சுற்றி அடர்த்தியான தென்னந்தோப்பு உண்டு. அந்தத் தோப்பைத் தாண்டி 2 வயல்களைக் கடந்தால் இருப்புப் பாதையை அடையலாம். சென்னையிலிருந்து வரும் 109 எண் கொண்ட திருவனந்தபுரம் ஃபாஸ்ட் பாசஞ்ஜர் எங்கள் ஊரை காலை 7 மணிக்குக் கடந்து செல்லும். அவ்வாறே சென்னைக்குப் போகும் புகை வண்டி (110) மாலை 6.30

மணிக்கு கடந்து செல்லும். சென்னைக்குப் போவதற்கு ரயில் கட்டணம் 10 ரூபாய்.



சென்னைக்குப் போக முடியா விட்டாலும் விடுமுறை நாட்களில் வையச்சேரிக்குச் செல்லும் போதெல்லாம் தினந் தோறும் பெருமாள்கோயில் தோப்பின் பின்புறத்திலிருந்து ஓடும் ரயிலைப் பார்ப்பது ஓர் பொழுதுபோக்கு. கிராமங் களில் ஏதாவதொரு வீட்டில்தான் கடிகாரம் இருக்கும். கைக் கடிகாரம் என்பது பணக்காரர்கள் கட்டிக் கொள்வது. மத்யதர வர்க்கத்தினர் வீட்டில் சாவி கொடுத்தால் ஓடும் அலாரம் டைம்பீஸ் இருக்கும். எங்களுக்கு மணி தெரிய வேண்டுமானால் ரயில் ஓடவேண்டும். ஒவ்வொரு வண்டிக்கும் 8.30 வண்டி, 10.30 வண்டி, 4.30 வண்டி என்ற பெயர்கள்தான் உண்டு. ''போட்மெயில் '' (***வண்டி எண் 101 சென்னையிலிருந்து தனுஷ்கோடி செல்லும்-வண்டி எண் 102 தனுஷ் கோடி யிலிருந்து சென்னை செல்லும்.***)



போட்மெயில் எவ்வாறிருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. ஏனெனில், அது சென்னைக்கு செல்லும்போது இரவு 11 மணிக்கு எங்கள் ஊரைத் தாண்டி செல்லும். சென்னையிலிருந்து தனுஷ்கோடி போகும்போது விடியற் காலை 4 மணிக்குக் கடந்து செல்லும். இந்த போட்மெயில் எந்த வகை இன்ஜின் இழுத்துச் செல்லும். எவ்வளவு பெட்டி கள் உண்டு? ரயில் பெட்டியிலேயே ''Boat இருக்குமா'' என்பதை அறிவதற்காக ஒரு நாள் தஞ்சை ரயில் நிலையம் சென்று அங்கேயே இரவு உறங்கி பிளாட்பார்ம் டிக்கெட் வாங்கிக்கொண்டு அந்த ரயிலை சென்று பார்த் தேன். **YP Class** இஞ்சினுடன் 14 பெட்டிகள் இணைக்கப் பட்டிருந்தன. (***மீட்டர்கேஜ் இருப்புப் பாதையில் வேகமாக செல்ல வேண்டிய வண்டிகளில் YP இன்ஜின் இணைக்கப் பட்டிருக்கும். மீட்டர்கேஜ் இருப்புப் பாதையில் சரக்கு ரயில்களில் YG இன்ஜின் இணைக்கப்பட்டிருக்கும். பாசஞ்ஜர் வண்டிகளில் M Class இன்ஜின் அல்லது MT Class இன்ஜின் உபயோகத்தில் இருந்தன. திருத்துறைப்பூண்டி, கோடியக்கரை, ST Class இன்ஜின் உப யோகத்தில் இருந்தன.***)

## 79) அய்யம்பேட்டை வெற்றிலைக்கொடிக்கால் தோட்டம்

வையச்சேரியிலிருந்து அய்யம்பேட்டைக்குப் போகும் வழியில் வெற்றிலைக் கொடிக்கால்கள் பல இடங்களில் காணப்படும். நன்றாக வேலியிடப்பட்ட வயல் பகுதிகள் நான்கு பக்கங்களிலும் வாழை பயிரிடப் பட்டிருக்கும். அவற்றின் நடுவே அகத்திக்கீரைச் செடிகள் பயிரிடப்பட்டு அவற்றை கொழுகொம்பாகக் கொண்டு வெற்றிலை பயிரிடப்படும். கும்பகோணம் வெற்றிலை என்று கொண்டாப்படும். இந்த வெற்றிலை அய்யம்

பேட்டை, பண்டார வாடை, ராஜகிரி, தாராசுரம், நாரசிங்கம் பேட்டை போன்ற பகுதிகளில் பயிரிடப்பட்டு வருகின்றன. இத்தகைய வெற்றிலை கொடிக்கால் தோட்டங்களில் உள்ளே சென்று தோட்டக்காரனின் உதவியோடு 20, 30 வெற்றிலைகளை அவ்வப்போது கிள்ளி வருவது உண்டு.

## 80) நம்மாழ்வாரின் வர்ணனை

நம்மாழ்வார் திருவாய்மொழி 6-7 பதிகத்தில் 'உண்ணும்சோறுபருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்' என்று வெற்றிலையை சுகானுபவ பொருளாகக் கொண்டுள்ளார் (***போக்யவஸ்து***).

திருவாய்மொழி 8-9-7 பாசுரத்தில் குட்டநாட்டு திருப்புலியூர் ஊர் வளத்தைப் போற்றுகிறார்.

மெல்லிலைச்செல்வவண்கொடிப்புல்க வீங்கிளந்தாள்கமுகின்✸
மல்லிலைமடல்வாழை ஈன்கனிசூழ்ந்துமணம்கமழ்ந்து✸
புல்லிலைத்தெங்கினூடு காலுலவும்தண்திருப்புலியூர்✸
மல்லலஞ்செல்வக்கண்ணன்தாளடைந்தாள் இம்மடவரலே.

என்ற இப்பாசுரத்தின் வ்யாக்யானத்தில் (மெல்லிலை இத்யாதி) - ம்ருதுஸ்வப$_4$ாவமான இலையையுடைத்தாய், ஶ்ரத்தையையுடைத்தாயிருக்கிற வண்கொடியுண்டு- உதாரமான கொடி; தன்பர்த்தாவான கமுகுக்குத் தன்னுடம்பை முற்றூட்டாகக் கொடுக்கும் போலே. (வீங்கிளந் தாள் கமுகின்)-கொடிதழுவத்தழுவ வளராநின்று, ஒரு காலைக் கொருகால் இளகாநின்றுள்ள தாளையுடைய கமுகு. (யஸ்யஸாஜநகாத் மஜா-அப்ரமேயம்ஹிதத்தேஜ:) என்னும் ந்யாயத்தாலே. (ததௌபாஹுலதாம் ஸ்கந்தேகோபீ மதுநிகாதிந).(கமுகின் மல்லிலை மடல்வாழை)-



கமுகோடே கூடின பெரிய இலையையும்மடலையுமுடைய வாழை வெற்றிலைக் கொடிக்கும் கமுகுக்கும் வெயில் தட்டாதபடி நிழல் செய்து நிற்குமாயிற்று வாழை (ஈன்கனிசூழ்ந்து) - பழத்தாறுகள் தெற்றிக்கிடக்குமாயிற்று. (மணம்கமழ்ந்து) - காற்றானது விளைவதறியாதேபுக்கு, பரிமளத்தில் லோபத்தாலே அங்கேயிங்கே சுழித்து, பரிமளத்தை எறட்டுக் கொண்டு வாழைநெருக்கத்தாலே நெருக்குட்பட்டு, அல்பாவகாச முள்ள தெங்கின் சோலையிலே புறப்பட்டு ஸஞ்சரியா நிற்குமாயிற்று. (புல்லிலை)-புல்லப்பட்ட இலை; அந்யோந்யம் தழுவப் பட்ட இலையையுடைய தெங் கென்னுதல்; வாழை யிலையோடே தழுவின இலையையுடைய தெங் கென்னுதல், சோலை நெருக்கத்தாலே நேரிதான இலை யென்னுதல். (மல்லலம் செல்வக்கண்ணன்) - நிரவதி கமாய் அழகிதான ஸம்பத்தையுடைய க்ருஷ்ணன். ***(குட்ட நாட்டு திருப்புலியூர் திவ்யதேசத்திற்குச் செல்வோர் இன்றும் இந்தக் காட்சியைக் காணலாம். கோயிலுக்குச் செல்லும்வழியில் வாழைமரத் தோட்டங்களும், அதிலுள்ள பூக்களில் மடல் விரியும் போது வெளிப் படும் நறுமணமும், பாக்குமரங்களும், அவற்றின் மேலே படர்ந்து செல்லும் வெற்றிலைக்கொடிகளையும் கண்டு களிக்கலாம்.)***

## 81) அடைக்காய் திருத்தி நான் வைத்தேன்

பெரியாழ்வார் 2-ஆம் பத்து 3-ஆம் திருமொழி, முதல் பாட்டில்

**போய்ப்பாடுடையநின்தந்தையும்தாழ்ந்தான்**
**பொருதிறல்கஞ்சன்கடியன்✸**
**காப்பாருமில்லைகடல்வண்ணா!**
**உன்னைத்தனியேபோய்எங்கும்திரிதி✸**

**பேய்ப்பால்முலையுண்டபித்தனே! கேசவநம்பீ!**
**உன்னைக்காதுகுத்த✱**
**ஆய்ப்பாலர்பெண்டுகளெல்லாரும்வந்தார்**
**அடைக்காய்திருத்திநான்வைத்தேன்.**

என்று கண்ணனுக்கு அடைக்காய் எனப்படும் சுருள முது ஸமர்ப்பித்திட அழைக்கின்றார் பெரியாழ்வார். திரு வாராதனத்தின் போது போஜ்யாஸனம் ஸமர்ப்பித்தபிறகு, இந்தப் பாசுரத்தைச் சொல்லித்தான் சுருளமுது ஸமர்ப்பித் திடுகிறோம்.

## 82) வெற்றிலையின் பழம்பெருமை

மனிதனால் பேணி வளர்க்கப்பட்ட பயிர்களுள் முக்கியமான பயிர் வெற்றிலை. இந்தியாவின் காப்பிய நூலான இராமாயணம், மகாபாரதம் போன்ற பழம் நூல்களில் ''தாம்பூலமாக'' பேசப்படுகிறது. வெற்றிலைக் கொடி பல்லாண்டு வளரும் பயிர். இந்தியர்களில் சமூக-சமய வாழ்க்கையில் மற்ற பொருட்களைவிட தனிச் சிறப்பான இடத்தை இது பெற்றுள்ளது. நமது அன்றாட வாழ்விலும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் வெற்றிலை கொடுத்து உபசரிப்பது ஒரு முதன்மையான வரவேற்பு முறையாகும். இந்துக்களின் மதப்பற்றுக்கும், மதச்சடங்குகளுக்கும் வெற்றிலை மரியாதைப் பொருளாக விளங்குகிறது. திருமணம் நிச்சயிக்கும்பொழுது வெற்றிலைக்கு முதன்மை யான இடம் உண்டு.

## 83) வெற்றிலையைப் பற்றிய ''காரமான'' தகவல்கள்

வெற்றிலை, இனம், மதம், ஜாதி, குலம், கோத்திரம் போன்ற வருணாசிரமப்பிரிவுகளுக்கு எல்லாம் அப்பாற் பட்ட ஒரு உயர் பண்டமாகும். இதை எவரும் தொடலாம்; தொட்ட பின்னரும் உண்ணலாம். வெற்றிலை, பொற்குடம் போன்றது; பொற்குடத்தை யார் தொட்டாலும் அதற்கு அசுத்தி ஏற்படாது. உமிழ்நீரில் உள்ள மிகுதியாக அமிலத்தை வெற்றிலையோடு உண்ணும் போது சுண்ணாம்பு அதைச் சமப்படுத்தி விடுகிறது. வெற்றி லையில் அடங்கியுள்ள பச்சையம், **Chlorophyl** பற்களுக்கு பலம் ஊட்டவல்லது என சிலர் கருதுகின்றனர். இந்தியாவில் முக்கியமாக **13** மாநிலங்களில் **40.894 Hectare** பரப்பில் வெற்றிலை பயிரிடப்படுகிறது.



திருமண காலத்தில் கணவன், மனைவி இரு வருக்கும், பெண்ணின் சகோதரன் தாம்பூலம் மடித்துக் கொடுக்கவேண்டும் என்ற விதியை வேதங்கள் குறிப்பிடு கின்றன. மகாபாரதத்தில் சபாபர்வத்தில் ராஜசூய யாக சருக்கத்தில் சிசுபாலனுடைய வதம் நடக்கிறது. பிறகு ராஜசூய யாகம் நடைபெறுகிறது. யாகம் முடிந்தபிறகு யாருக்கு முதல் தாம்பூலம் தருவது எனும் பிரச்சினை ஏற் பட்டு கடைசியில் கண்ணனுக்கு வழங்கப்படுகிறது.

தமிழ் இலக்கியத்தில் வெற்றிலையை அடகு, மெல் லடகு, அடை சாகம், பன்னம், பாக்கிலை, பாசிலை, தாம்பூலம், திரையல், வெள்ளிலை, மெல்லிலை எனப் பல பெயர்களில் அழைத்தனர். தமிழ்நாட்டில் பண்டைய நாட்களிலிருந்தே வெற்றிலை பயிர் செய்து வரு கிறார்கள். வெற்றிலை விற்கும் இடத்தை ''இலையமுதுக் கூடம்'' என அழைப்பர். வெற்றிலை பயிர் செய்வதற்கென்றே ஓர் இனத் தார் பண்டைய நாட்களில் இருந்ததாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் ''இலைவாணிபர்கள்'' என அழைக்கப்பட்டனர். கொடிக்கால் வெற்றிலை பயிர் செய்த வர்களை ''கொடிக்கால் வேளாளர்கள்'' என பெயரிட்டனர்.

## 84) இலக்கியத்தில் வெற்றிலை

சங்க காலத்தில் வெற்றிலையோடு பாக்கும் சேர்த்து உண்ணும் பழக்கம் இருந்தது என்பதை சிலப்பதிகாரம் மூலம் (16,55) அறியமுடிகிறது. மதுரைப் புறஞ்சேரியில் கோவலன் தங்கியபொழுது கண்ணகி அவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கிறாள். ''அம்மென் திரைய லோடு அடைக்காய் ஈந்து'' என இளங்கோவடிகள் குறிப் பிடுகிறார். பாக்கிற்கு அடைக்காய் எனும் பெயர் சங்ககாலம் தொட்டே வழங்கி வருகிறது. ''பாசிலைத் திரையலும் பனிதமும் படைத்து'' என மணிமேகலை (28,243) குறிப் பிடுகிறது. மதுரைநகரில் வெற்றிலைப் பாக்கு விற்போரைப் பற்றி மாங்குடி மருதனார் ''நீடுகொடி இலையினர் கோடு சுடுநீற்றினர்'' (மதுரைக் காஞ்சி 400-401) எனக் குறிப்பிடு கிறார். தமிழ் மன்னர்கள் காலத்தில் அரசனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்பது அடைப்பக்காரன் எனும் ஒருவ னுடைய ஒரு கௌரவமான தொழிலாய் இருந்தது. அறிஞர் களும் இப்பதவியை வகித்து அரசனுடன் இனிது பேசி சம நிலையில் ஆலோசனை கூறும் வாய்ப்புப் பெற்று இருந்தார் கள். வெற்றிலை மடித்து கொடுக்கும் தொழிலுக்கு அக் காலத்தில் மிக்க மகத்துவம் இருந்தது.

## 85) வெற்றிலையும் வினோத பழக்கவழக்கங்களும்

வெற்றிலைக்கு நரம்பில் விஷம்; எள்ளிற்குத் தோலில் விஷம்; போன்ற பழமொழிகள் அதன் தன்மையை வெளிப் படுத்துகின்றன. சுமத்திராவில் மனைவியை விட்டுப் பிரிய விரும்பும் கணவன், வெற்றிலையையும், பாக்கையும் கொண்டு போய் அவளிடம் கொடுத்து ''தலாக்'' என மூன்று தடவை சொன்னால் போதும். விவாகரத்து ஆகிவிட்டதென்று பொருள்.



## 86) வெற்றிலையின் குடும்பம்

வெற்றிலை ''பைப்ரேசியே'' எனும் தாவரக் குடும்பத் தைச் சார்ந்த பயிர். இக்குடும்பத்தைச் சார்ந்த மற்ற முக்கிய பயிர்கள் மிளகும், வால்மிளகும் ஆகும். வெற்றிலை இரு பால் பண்புகளைத் தனியாகக் கொண்ட ஒரு பல்லாண்டுப் பயிராகும். வெற்றிலைக்கொடி நளினமானது. கொடியின் கணுக்களில் உண்டாகும் வேர்களைக்கொண்டு, கொழு கொம்பைப் பற்றிப் பிடித்துக்கொண்டு ஏறிவளரும் பல பருவக்கொடி. கொடியில் கணுவுக்கு ஒரு இலையாக உண்டாகும். தண்டில் இலைகள் இடவலமாக மாறிமாறிக் காணப்படு கின்றன. இலைக்காம்புகள் முனைப்பாக அரை அங்குலத் தில் இருந்து ஒரு அங்குலம் வரையில் நீளமாக இருக்கும். சராசரியாக இலையின் நீளம் 7.5 செ.மீ. முதல் 22.5 செ.மீ. வரை அமையும். பொதுவாக இவ்விலைகள் இதய வடிவமாக நீண்டு, 5-7 நரம்புகளைக் கொண்டு இருக்கும்.

வெற்றிலைக்கொடிக்கு பூ உண்டு. இப்பூக்கள் கொத்துக் கொத்தாய் நீண்ட உருளை வடிவில் அழகாய்த் தொங்கும். மிளகுக் கொடியின் பூங்கொத்தும் இதே மாதிரி தான். இப்பூங்கொத்துகளைக் 'கேட்கின்' என ஆங்கிலத்தில் அழைப்பர். பெண் பூக்களின் எண்ணிக்கை ஆண்பூக்களின் எண்ணிக்கையை விட அதிகம். நம்நாட்டில் பெண் பூக் களைக் கொண்ட கொடி வகைகளில் இருந்து விதைக் கொடிகள் தயாரிக்கப்படுவதில்லை. பொதுவாக ஆண் கொடிகளில் இருந்து நாம் விதைக் கொடிகளை தயார் செய்து நடவுக்குப் பயன்படுத்துவதால் அவை காய்ப்பதும் இல்லை. பொதுவாக தமிழ்நாட்டில் கற்பூரி, வெள்ளைப் பச்சைக் கொடி, கருப்பு பச்சைக் கொடி, வட்டக்கொடி

சென்னூர், சர்க்கரைக் கொடி, சீலாந்தி வெள்ளை எனும் வகைகள் பெருமளவில் பயிர் செய்யப்படுகின்றன.

## 86-அ) கும்பகோணம் வெற்றிலை என்றழைக்கப்படும் கருப்புப் பச்சைக்கொடி வெற்றிலை

இவ்வகையை ''கருப்பு வெற்றிலை'' ''கம்மார வெற்றிலை'' ''சித்துக்கொடி'' எனவும் அழைப்பர். வெள்ளைக்கொடிக்கு அடுத்து மிகுதியாகப் பயிராகும் வகை. இது ஒரு உயர்வகை. சாஞ்சி வகையைச் சார்ந்தது. இலைகள் கற்பூரி வகையை விடப் பெரியதாகவும் கரும்பச்சை நிறத்திலும் மிகத்தடித்தும் இருக்கும். இலைகள் வட்ட வடிவமாகவும் நுனிப்பகுதி சிறுத்தும் காணப்படும். இலைகள் தொடுவதற்கு வெல்வெட்டு போல் இருக்கும். சுவை அதிகம். காரம் இல்லாமலும் சப்பென்று இல்லாமலும் இருக்கும். இவ்வெற்றிலையை மெல்லுகிறவர்களுக்கு ஒரு சிறப்பு உணர்ச்சியை எழுப்பும். இலை அதிகநாட்கள் வராது. சென்னைச் சந்தையில் விற்கப்படும் கும்பகோணம் வெற்றிலை சித்துக் கொடியிலிருந்து விருத்தியான ஒருவிதமே. அதேமாதிரி சென்னைக்கு வரும் 'ரவேஸ்' வெற்றிலையும் சித்துக் கொடியுடன் சம்பந்தம் கொண்டதே.

வெற்றிலைப் பயிருக்குச் சீராக அளவாக தொடர்ந்து நீர் தேவைப்படுகிறது. அதன் மண் எப்போதும் ஈரமாக இருக்கவேண்டும். வெற்றிலை பாக்கு சுண்ணாம்புடன் பலமணம் ஊட்டும் பொருட்களும், பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி வால்மிளகு முதலியனவும் சேர்க்கப் படுகின்றன. பாக்குடன் வெள்ளரிப் பருப்பு, சாரைப் பருப்பு, கருஞ்சீரகம் முதலிய பலபொருட்களும் சில பகுதிகளில் சேர்வதுண்டு. தஞ்சை சரபோஜி மகாராஜா பயன்படுத்திய



தாம் பூலத்தில் இருபத்தி ஐந்து உபபொருட்கள் கூட்டுச் சரக்காக சேர்க்கப்பட்டதாம். இதுவே முதல் தர தாம்பூல மாகும் என்று அன்று பாராட்டப்பட்டது.

## 87) சுண்ணாம்பு

வெற்றிலையோடு சேரும் மூன்றாவது பொருள் சுண்ணாம்பு. (Calcium Oxide (CaO)*நீருடன்* (HOH) *கலக்கும் போது கால்சியம் ஹைட்ராக்சைடு* ($Ca(OH)_2$ *உண்டாகிறது. இதுவே சுண்ணாம்பாகும்.*) வெற்றிலை போடும் போது கற்சுண்ணாம்பு மற்றும் முத்துச் சுண்ணாம்பு போடுவதுதான் சிறப்பானது எனப் பலர் கருதுகின்றனர். மற்ற சுண்ணாம்புகளினால் பெரிய பலன் எதுவும் கிடையாது. பழங்காலத்தில் முத்துச்சுண்ணாம்பு மக்கள் உபயோகத்தில் மிகுதியாகப் பயன்பட்டது. சுத்தி செய்த முத்தைச் சாரணை வேரினால் செய்த குப்பியில் வைத்து புடமிட்டுச் சுண்ணாம்பாக்கலாம். முத்துச் சுண்ணத்தை நீரில் கொடுக்க வாத ரோகமும் நெய்யில் கொடுக்க வெப்பமும், மோரில் கலந்து கொடுக்க பித்த ரோகங்களும் நீங்கும். இதை வெற்றிலையுடன் பயன்படுத்தினால் பித்த உபாதைகள் நீங்கும்; பல் இறுகும்; காசம், அக்கினி மந்தம், விக்கல், அருசி முதலிய நோய்கள் நீங்கும். உடல் உரம் பெறும்; காயசுத்தி உண்டாகும். கற்சுண்ணாம்பையும் சிலர் பயன்படுத்து கின்றனர். இது இயற்கையாகக் கிடைக்கக் கூடியது. இதனைக் காளவாயிலில் இருந்து எடுத்து நீர்த்துக் கொள்ளவேண்டும்.

## 88) பொட்டி ஸ்ரீராமுலுவின் மரணமும், ஆந்திர மாநில உதயமும்

சுதந்திரத்திற்குப் பிறகு சென்னை மாகாணத்தில்

ஒரு பகுதியாக இருந்து வந்தன, ஆந்திரா மற்றும் ராயல்சீமா பகுதிகள். வல்லபாய்பட்டேல் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின் விளைவாகத் தெலுங்கானா பகுதி ஹைதராபாத் நிஜாமினுடைய பிடியிலிருந்து விடுவிக்கப் பட்டு தனித்துச்செயல்பட்டு வந்தது. ராயல்சீமா, ஆந்திரா, தெலுங்கானா பகுதிகளை உள்ளடக்கிய **விசால ஆந்திரப் பிரதேஷ்** உருவாக்கப் படவேண்டும் என்று ஆந்திராவைச் சார்ந்த தலைவர்கள் போராடி வந்தனர். தனி ஆந்திரதேசக் கோரிக்கையை முன் வைத்து சென்னை ராயப்பேட் டையில், பொட்டி ஸ்ரீராமுலு 1952 ஆம் ஆண்டு அக்டோபர் 13ம் நாள் உண்ணா விரதத்தைத் தொடங்கினார். 65 நாட்கள் நீடித்தது.

டிசம்பர் 15ம் நாள் அவர் மரண மடைந்தார். பொட்டி ஸ்ரீராமுலுவின் மரணம் தெலுங்கு பேசும் மக்களிடம் பெரும் புயலைக் கிளப்பியது. 16 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நிகழ்ச்சி மற்ற மாநிலங்களிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இதன் விளைவாகவே மத்திய அரசும் தன் நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வந்தது. சென்னை மாகா ணத்திலிருந்து ‘ஆந்திரா’ எனும் தனி மாநிலமாகப் பிரிக்கப்பட்டது.



1953ஆம் ஆண்டு அக்டோபர் முதல்நாள் கர்நூல் நகரைத் தலைநகராகக் கொண்ட ஆந்திரமாநிலம் உரு வாக்கப்பட்டது. சென்னை மாநகரை ஆந்திராவுடன் இணைக்க வேண்டுமென்று அந்தப்பகுதியின் தலைவர்கள் பெரும் கிளர்ச்சி செய்தனர். ''மதராஸ் மனதே'' (*மதராஸ் நகரம் எங்களுடையது*) என்ற கோரிக்கையை ஆந்திரர்கள்



விடாப் பிடியாக வலியுறுத்தி வந்தனர். ராஜாஜியின் பெரும் முயற்சி யால் சென்னை மாநகரம் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக நீடித்தது.

தெலுங்கு பேசும் மக்களுக்கு ‘ஆந்திரா’ எனும் பெயரில் தனி மாநிலம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியின் பழைய மாகாண அமைப்புகள் மொழி வாரியான நிர்வாக மாநிலங்களாக மறுசீரமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நாடெங்கும் பரவியது. இதன் விளைவாக மாநிலங்களின் மறுசீரமைப்பு ஆணையம் (**States Reorganisation Commission - SRC**) 1953 டிசம்பர் 22ல் அமைக்கப்பட்டது. திரு. சர்தார் கே.எம். பணிக்கர், திரு. சையத் பாசல் அலி, திரு. ஹிருதயநாத் குன்ஸ்ரூ ஆகியோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர் களாகச் செயல்பட்டனர்.

## 89) ஆரியர்-திராவிடர் பிரச்சினையும், விடுதி வாழ்க்கையும்

நாத்திகப் பிரசாரம் மிகுந்திருந்த காலக் கட்டத்தில் நான் விடுதியில் தங்கியிருந்து பள்ளியில் பயின்று வந்தேன். அந்தப் பிரசாரத்தை நடத்தியவர்கள் அப்போது நேர்முகமாய் அரசியலில் ஈடுபட்டிருக்கவில்லையாதலால், அது ஒன்றிலேயே தீவிரமாய் இருந்தார்கள். முதலில் அந்தப் பிரசாரம் பத்திரிகைகள் மூலமும் பேச்சு மேடைகளி லிருந்தும் நடந்தது; பின்னர் நாடக அரங்குகளிலிருந்தும் வெள்ளித் திரையிலிருந்தும் பரவலாயிற்று. திரு.C.N. அண்ணாத்துரையின் ***வேலைக்காரி, ஓர் இரவு, சொர்க்கவாசல், நல்லதம்பி,*** திரு. மு.கருணாநிதி கதை வசனம் எழுதிய ***மருதநாட்டு இளவரசி, மந்திரிகுமாரி, தேவகி, மணமகள், பராசக்தி,***

***பணம், நாம், திரும்பிப்பார், மனோகரா*** போன்ற திரைப்படங்கள் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் மக்க ளிடையே பரப்பப்பட்டு வந்தன.

## 90) பள்ளிமாணவர்களிடையே எழுந்த மோதல்

இதன் விளைவாகப் பெரும்பாலான தமிழாசிரி யர்கள் திராவிடக் கழகத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சார்ந்தவர்களாக செயல்பட்டு வந்தனர். உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களிடையே பிராம்மணர், பிராம்மண ரல்லாதார் என்ற பிரிவு ஏற்பட்டது. என்போன்ற பிராம்மணச் சிறுவர்கள் ஏச்சுக்கும், நகைப்புக்கும் ஆளாக்கப் பட்டனர். 'ஏய் பாப்பாரப் பயலே' என்று ஒருசில மாணவர் களும், தமிழாசிரியர்களும் பெயர் சொல்லி அழைக்காமல் இழிவு படுத்தி வந்தனர். அப்போது நிலவியிருந்த அரசியல் சூழல் இத்தகைய ஏச்சுக்களுக்குக் காரணமாய் அமைந் திருந்தது. 'கைபர் கணவாய் வழிவந்து புகுந்த ஆர்யபதரே' என் றெல்லாம் மனம்புண்படும்படியான வசவு மொழி களைக் கூறிவந்தனர்.

## 91) ஆங்கிலேயர் சூழ்ச்சியும், சிப்பந்தி வர்க்கமும்

இஸ்லாமிய-கிறித்துவ மதங்களின் வரவாலும், ஆங்கிலக் கல்வியாலும், விஞ்ஞான வளர்ச்சியாலும் வட புலத்திலுள்ள இந்துக்களிடையே சமயத்துறையில் புரட்சிகர மான மாறுதல்களைத் தோற்றுவிக்கும் சீர்திருத்த இயக்கங் கள் தோன்றின. அவற்றின் எதிரொலி தமிழ்நாட்டிலும் ஏற் பட்டதெனலாம். இதனால் தமிழ்நாட்டிலுள்ள அந்தணர் களும், புரோகிதர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். அவர்கள் அதுவரை தாங்கள் செய்து வந்த தொழில்களை மட்டுமே நம்பியிருப்பது சாத்தியமில்லை என்ற நிலை ஏற்பட்டது.



இதனால், அறிவுப் பாரம்பரியத்தினரான பிராமணர்கள் தங்களுடைய தகுதிக்கேற்ற புதிய தொழில் துறைகளைத் தேடலாயினர். இந்த நேரத்தில்தான் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியானது 'சிப்பந்தி வர்க்கத்தைத்' தோற்று விப்பதற்கென்றே ஆங்கிலத்தின் மூலம் போதிக்கப்படும் மெக்காலே கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

இதற்கு முன்பே பிரிட்டிஷ் ஆட்சியில் துவிபாஷி (இருமொழி வல்லுநர்)களாக இருந்து பணிபுரியும் வாய்ப் பினை பிராமணர்களிலே சிலர் பெற்றிருந்தனர். பிராமண ரல்லாதாரிலேயும் முன்னணியிலிருந்த வேளாளர், முதலி யார் எனப்படும் சாதியாரும் துவிபாஷிகளாக இருந்து கம்பெனி ஆட்சிக்குத் தொண்டு புரிவதிலே அந்தணர் களோடு போட்டியிட்டனர். இதிலிருந்துதான் பிரிட்டிஷ் ஆட்சியில் உத்தியோகம் பெறுவதிலே ஜாதி ரீதியான போட்டி தமிழருக்குள்ளே ஏற்படலானது.

மெக்காலேயால் அன்னிய ஆட்சிக்குச் சேவை புரியும் சிப்பந்தி வர்க்கத்தைத் தயாரிப்பதற்கென்றே வகுக்கப்பட்ட கல்வியைப் பயின்று, பட்டங்கள் பெற்று, உயர் உத்தியோகங்களைப் பெறுவதில் முதலில் அந்தணர் களே அதிக அளவில் ஆர்வம் காட்டினர். அதற்காகத் தங்கள் வருணா சிரம நெறிகளையும் கைவிட்டனர். ஆங்கிலத்தின் மூலம் ஆங்கிலேயரிடமே கல்வி பயில்வதற்கும் அந்தணர்கள் தயங்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தான் கடுமை யான உடல் உழைப்பின்றி மாத ஊதியம் பெறும் உத்தியோக வர்க்கம் என்பதாக ஒரு புதிய ஜாதி தோன்றியது.

## 92) ஜஸ்டிஸ் கட்சியின் தோற்றம்

உத்தியோகம் பெறுவதில் தமிழரிலே அந்தணருக் கும் அந்தணரல்லாதாருக்கும் ஏற்பட்ட போட்டியானது, நாள டைவில் வகுப்புவாதப் போராட்டமாகவும் மாறியது. இதன் விளைவாகத் தோன்றியதுதான் ஜஸ்டிஸ் கட்சி - அதாவது, பிராம்மண ரல்லாதார் இயக்கம். 1916-ஆம் ஆண்டுத் தோற்றுவிக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி பிராமண ரல்லாத ஜாதி இந்துக்கள் கட்சியாகவே தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டது. பிரித்தாளும் தந்திரத்தில் பெயர் போன ஆங்கிலேயர் தமிழினத்தை வகுப்புக் கோடரி கொண்டு வெட்டிப் பிளந்துவிட்டனர்.

ஜஸ்டிஸ் கட்சியானது அரசியல் பதவிகளை, அரசு உத்தியோகங்களை அடைவதில் மட்டுந்தான் பிராமணர் களுடன் போட்டியிட்டது. ஆனால், ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவோடு ஈ.வே.ராமசாமி நாயக்கரால் தொடங்கப் பெற்ற சுய மரியாதை இயக்கமானது. அரசியல்- சமய- சமூக- கலாச்சார ரீதியில் பிராமணருக்கு எதிராக ஒரு போராட் டத்தையே தோற்றுவித்தது. அது, வீரமணி தி.க., திருவாரூர் தங்கராசு தி.க., பெரியார் தி.க., தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. என்ற பல மாற்றுப் பெயர்களைக் கொண்டு இன்றளவும் நீடித்து வருவதைக் காண்கிறோம். **திராவிடம் என்ற முன்னோட்டு சொல்லை வைத்துக் கொள்ளாத கட்சியே இல்லை என்று சொல்லலாம். 'திராவிடம்' என்ற சொல்லிருந்தால் அது தமிழையும், தமிழர் நலனையும் பாதுகாக்கும் இயக்கத்தைக் குறிப்பதாக ஒரு மாயத்தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.**

## 93) ஆரியர் யார்? திராவிடர் யார்?

ஆரியர்-திராவிடர் என்ற நிறவழிப்பட்ட இன வாத மோ, அந்த இன அடிப்படையில் பிறந்த திராவிடத் தனி நாடு கோரிக்கையோகூட, ஈ.வே.ரா.வால் தோற்றுவிக்கப் பட்ட தல்ல. ஆரியர் - திராவிடர் என்ற இனப் பிரிவினை, 'ஆராய்ச்சி' என்ற போர்வையில் ஆங்கிலேய பாதிரிமார் களால் தொடங்கி வைக்கப்பட்டதாகும். அவர்கள் அப்படிச் செய்ததற்கு அரசியல் உள்நோக்கமும் இருந்தது. தமிழினத்த வரிடையே நிலவிய ஒருமைப்பாட்டைக் குலைப்பதற்காக ஆங்கிலேய பாதிரிமார் ஆரியர்-திராவிடர் பிரச்சினையைக் கிளப்பிவிட்டனர். இதனைப் பற்றுக்கோலாகக் கொண்டு திராவிட அரசியல்வாதிகள் அவ்வப்போது பிராமணர் களுக்கு எதிரான செயல்களில் இன்றும் ஈடுபட்டு வருகின்றனர்.



ஆராய்ச்சி அளவில் இருந்த ஆரியர்-திராவிடர் இன வாதத்தை முதன்முதலில் அரசியலுக்குக் கொண்டு வந்த ''பெருமை'' ஜஸ்டிஸ் கட்சிக்கே உண்டு. அந்தக் கட்சி யினரும் தமிழ் நாட்டளவில்தான் இந்த இனப் பாகு பாட்டைப் பெரிதுபடுத்திப் பிரசாரம் செய்தனர். ஜஸ்டிஸ் கட்சியின் தமிழ் நாளிதழுக்கு 'திராவிடன்' என்று பெயர் வைத்ததே இதற்குச் சான்றாகும்.

தமிழரிலே பிராமணரெல்லாம் ஆரியரென்றும், பிராமணரல்லாதாரெல்லாம் திராவிடரென்றும் ஜஸ்டிஸ் கட்சியார் தமிழ்நாட்டில் பிரசாரம் செய்தனர். இந்த வாதத் தை ஏற்றுக் கொள்வதினால், தமிழ்நாட்டில் மதம் மாறிய முஸ்லிம்களின் சந்ததியினர் அராபியராவரே! பிராமணர்கள் தமிழ்நாட்டிற்கு அன்னியர் என்ற கருத்தைத் தமிழரிடையே பரப்புவதற்காகவே இந்த ஆரியர்-திராவிடர் வாதம் பிராமணரல்லாதார் இயக்கத்தைச் சார்ந்தவர்களால் பயன் படுத்தப்பட்டது. இதனால், ஒன்றுபட்டு ஓரினமாய்

வாழ்ந்து வந்த தமிழர்கள் ஒருவருக்கொருவர் பகை யுணர்ச்சியுடைய இரு வேறு இனங்களாகப் பிளவுபட்டனர்.

தமிழ்நாட்டுப் பிராமணர்களுக்கு எதிராக வளர்க்கப் பட்ட 'பிராமணரல்லாதார்' அல்லது 'திராவிடர்' என்ற புதிய வகுப்பு உணர்ச்சியானது தமிழ் இனத்தவரை இருகூறாக வெட்டிப் பிளந்துவிட்டது. தங்கள் உத்தியோக வேட் டைக்குப் பயன்பட்டதால் பிராமணரல்லாத தமிழரிலே படித்துப் பட்டம் பெற்றவர்களெல்லாம் இந்த நிற வேற்று மையை ஆராய்ச்சியின்றியே ஏற்றனர் எனலாம். ஆனால் உண்மையில் ஆரியரென்றும் திராவிடரென்றும் தமிழர் பிளவுபடுத்தப்பட்டதால் உத்தியோகத் துறையில் அதிக மாகப் பயன் அடைந்தவர்கள் மலையாளிகளும் ஆந்திரர் களுமேயாவார்கள்.

## 94) தி.க.வினரின் பிள்ளையார் உடைப்புப் போராட்டம்

பிராமணர்கள் எவற்றையெல்லாம் ஆதிமுதல் மக்க ளுக்குப் போதித்து வந்தார்களோ, அவற்றையெல்லாம் எதிர்ப்பதுதான் அவர்கள் ஆதிக்கத்தி லிருந்து மக்களை விடுவிப்பதற்கு வழியாகுமென்று சுயமரியாதைக் காரர்கள் மக்களை மூளைச்சலவை செய்து வந்தனர். அந்த வகையில்தான் அவர்கள் பிராமணரல்லாத மக்கள் தெய்வ நம்பிக்கை, தெய்வ வழிபாடு, சாத்திர தோத்திர இலக்கி யங்கள், சமய வழிப்பட்ட கலைகள், காவியங்கள் ஆகிய வற்றையெல்லாம் வெறுத்துக் கைவிட வேண்டு மென்று இடைவிடாது பிரச்சாரம் செய்தார்கள், இன்றும் செய்து வருகின்றனர்.





கடவுள் நம்பிக்கையைக் குலைப்ப தற்கான ஒரு நேர் நடவடிக்கையாகப் பிள்ளையார் உடைப்புத் திட்டம் ஒன்றைத் திராவிடக் கழகத்தின் தலைவர் ஈ.வே. ராமசாமி நாயக்கர் அறிவித்தார். தமிழர்களில் மிகப் பெரும்பாலோர் வழிபடும் தெய்வம் என்பதே பிள்ளையாரை அவர் குறியாகக் கொண்டதற்குக் காரணம் எனலாம். 1953 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் தேதியன்று பிள்ளையார் உருவங் கள் செய்து உடைத்தார்கள்.

## 95) 1957ஆம் ஆண்டு தேர்தலில் போட்டி யிடும் முடிவினை மேற்கொண்ட தி.மு.க.

ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைச் சங்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் துணைகொண்டு உருவாகி வந்த ''திராவிடர்'' இயக்கமானது தேசிய எழுச்சிக்கு விரோதமாக வே செயல்பட்டு வந்தது. தமிழினத்தின் பொதுநலன் களைப் பலி கொடுத்துக் கட்சி நலனை வளர்க்கும் வெறித் தனம் ஜனநாயகமாகி விட்டது, தமிழகத்திலே!

திராவிட நாடு கோரிக்கை பிற சமூகச் சீர்திருத்தங் களெல்லாம் நிஜத்தில் செயல்படுத்தப்பட வேண்டு மானால், வெறும் உறுப்பினர் எண்ணிக்கையோ பலமான கட்சியோ போதாது என்று கருதத் தொடங்கியிருந்தார் திரு. C.N. அண்ணாத்துரை. ஒரு கட்சியில் எத்தனை சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர்கள் / நகராட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள் என்கிற கணக்குதான், ஜனநாயகத்தில் அடிப்படைத் தேவையாக அவருக்குத் தோன்றியது.

இதன் அடுத்த நிலையாக, சட்டமன்றத்தில் பெரும் பான்மை பலம் பெற்று ஆட்சியைக் கைப்பற்றினால்தான், சில சமூகச் சீர்திருத்தங்களைச் சட்டப்படி செயல் படுத்த

முடியும். நாம் அவசியம் செய்தாகவேண்டிய விஷயங் களை கட்டாயமாக்க முடியும். இதற்காகவாவது, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நின்று வெற்றி பெற்று சட்ட மன்றத்துக்குள் நுழையவேண்டும் என்கிற சிந்தனை மாற்றம் அடுத்த 5 ஆண்டுகளில் படிப்படியாக ஏற்பட்டது.

## 96)கைத்தறி நெசவாளர்களின் துன்பம் துடைக்க முற்பட்ட தி.மு.க

அப்போது தமிழகத்தில் அறிமுகமாகியிருந்த மில் துணிகளின் போட்டியைச் சமாளிக்கமுடியாமல், நமது கைத் தறித் தொழிலாளர்கள் திணறிக்கொண்டிருந்தார்கள். இயந்திரங் களின் மூலம் தயாரிக்கப்பட்ட துணிகள் அதிவேகத்தில் விற்பனையாவதால், கைத்தறித் துணிகள் தேங்கிப்போய்க் கொண்டிருந்தன. இதனால், ஏராளமான நெசவாளிகள் அவதிப்பட்டார்கள்.

மிகுந்த துயரத்தில் இருக்கும் கைத்தறித் தொழி லாளர்களுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்துடன், கைத்தறித் துணி விற்பனை இயக்கம் ஒன்றைத் தொடங் கியது திராவிட முன்னேற்றக் கழகம். திரு. அண்ணாத்துரை உள்ளிட்ட கழகத் தோழர்கள், தமிழகமெங்கும் நேரடியாகக் களத்தில் இறங்கி, கைத்தறித் துணிகளை விற்பனை செய்தார்கள்.

இதையடுத்து, தேங்கிக் கிடந்த துணிரகங்கள் மளமளவென்று விற்றுத் தீர்ந்தன. அதோடு நிறுத்தி விடாமல், கழகத் தோழர்கள் எல்லோரும் இனி கைத்தறி ஆடைகளையே அணிவார்கள் என்றும் முடிவு செய்யப் பட்டது.



## 97) 1954ஆம் ஆண்டு வீசிய புயல்

1954-ம் ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தைத் தாக்கிய கடும்புயல், ஏராளமான உயிர், பொருள் இழப்பை ஏற்படுத்தியது. புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவா ரணம் அளிக்கும் சேவையில் ஈடுபட்ட தி.மு.க., அவர் களுக்காக நிதி திரட்டுவது, உடைகள் மற்றும் பிற பொருள்களைச் சேகரித்து அளிப்பது போன்ற பல்வேறு பணிகளில் தனது குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.

இந்தக் காலகட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய தொடர் போராட்டங்களால், மக்கள் மத்தியில் அந்தக் கட்சி வேகமான வளர்ச்சியைப் பெற்றது. பொது மக்கள் ஆதரவும் உணர்ச்சிகரமான தொண்டர்களும் தாராள மாகக் கிடைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் முன்னின்று நடத்திய மூன்று முக்கியமான போராட்டங்கள், அதற்கு பரவலான கவனத்தையும் பெரு வாரியான மக்கள் ஆதவையும் திரட்டிக் கொடுத்தன. இவை மூன்றும் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்பட்ட காரணத்தால், ‘மும்முனைப் போராட்டம்’ என்றும் வர்ணிக்கப்பட்டன.

## 98) குலக்கல்வித் திட்டம்

குலக்கல்வித் திட்டத்திற்கு ஒருபக்கம் ஆதரவு இருந்தும், இன்னொரு பக்கம் எதிர்ப்பு வலுத்துக் கொண்டிருந்தது. ராஜாஜி புகுத்திய கல்வித் திட்டத்தில் அதுவரை போதிக்கப்பட்டு வந்த பாடங்களில் எதுவும் குறைக்கப்படவோ கைவிடப்படவோ இல்லை என்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும். ஆனால், துரதிர்ஷ்ட

வசமாக, தமது திட்டத்தில் இல்லாத ஒன்றைத் தமது பேச்சிலே ராஜாஜி வற்புறுத்தி வந்தார். ஆம்; ''அப்பன் தொழிலை மகன் செய்ய எனது திட்டம் வகை செய்கிறது''. என்று பேசி வந்தார். இதைப் பயன்படுத்தி ராஜாஜி திட்டத் திற்குக் ''குலக்கல்வித் திட்டம்'' என்று பெயர் தந்தது தி.மு.க.

என்ன செய்யப்படுகிறது என்பதை விட யாரால் செய்யப்படுகிறது என்பதற்கே முதன்மை தரப்பட்டது. அதனால், வகுப்பு வாத அரசியல் நோக்குடன், ராஜாஜியின் கல்வித் திட்டம் தி.மு.க.வால் எதிர்க்கப்பட்டது. கொஞ்சம் தாமதித்துத் திராவிடக் கழகமும் புதிய கல்வித் திட்டத்தை எதிர்க்கத் தொடங்கியது. தி.மு.க. **1953 ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் நாள் நேரடி நடவடிக்கையில் ஈடு பட்டது**. அதனால் மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான வர்கள் கைது செய்யப் பட்டனர்.

இந்த நிலையில், கல்வித் திட்ட எதிர்ப்பானது, பிராமண எதிர்ப்பாக, காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியாக மாறியது. ஆரம்பக் கட்டத்தில் இவ்வளவையும் கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்தது தமிழ்நாடு காங்கிரஸ். ஒரு கட்டத்தில் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசவும் முற்பட்டார் திரு. கு. காமராசர். தூத்துக்குடி-டால்மியாபுரம் துப்பாக்கிச் சூடுகளினால் பொதுமக்கள் அனு தாபம் தி.மு.க. பக்கம் திரும்பியது. அதே நேரம் பார்த்துப் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசினார் காமராசர். கல்வித் திட்டம் சரியா தவறா என்பதில் அவருக்குக் கவலை இல்லை. ராஜாஜி ஆட்சியை வெளியேற்றி, தான் அதிகாரத் துக்கு வர அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.



## 99) கருணாநிதியும், கல்லக்குடிப் போராட்டமும்

அடுத்து திருச்சி மாவட்டத்தில், டால்மியா தொழிற் சாலை அமைந்திருந்த 'கல்லக்குடி' என்ற ஊரின் பெயர், 'டால்மியாபுரம்' என மாற்றப்படுவதை, திராவிட முன் னேற்றக் கழகம் கண்டித்தது. 'நம்முடைய ஊருக்கு, வட நாட்டு முதலாளியின் பெயர் எதற்காக?' என்கிற அவர் களுடைய கேள்வியை அரசாங்கம் அலட்சியப்படுத்திய தால், இதற்கும் ஓர் அடையாள எதிர்ப்புப் போராட்டம் நடத்துவது கட்டாயமாகிவிட்டது.

## 100) நேருவால் 'நான்சென்ஸ்' என்று வர்ணிக்கப் பட்ட தி.மு.க

மூன்றாவதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சில போராட்டங்களைப் பற்றி இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம் கருத்து கேட்கப்பட்டபோது, அவர் 'நான்சென்ஸ்' என்று ஒரே வார்த்தையில் அவற்றை ஒதுக்கித் தள்ளியிருந்தார். திராவிடர்களின் கோரிக்கை களை உதாசீனப் படுத்துகிற இந்தப் போக்கைக் கண்டித்தும் போராட்டம் அறிவித்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

கட்சியில் எல்லாத் தலைவர்களையும் அரவ ணைத்துச் செல்லவேண்டும் என்று விரும்பிய திரு. அண்ணாத்துரை, குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்ட த்துக்கு ஈ.வெ.கி. சம்பத், கல்லக்குடி போராட்டத்துக்கு மு. கருணாநிதி ஆகியோரைப் பொறுப்பாளர்களாக நியமித்தார். மற்ற தி.மு.க. தலைவர்கள், பிரதமருக்கு எதிர்ப்பு தெரி விக்கும் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்றார்கள்.

இந்தப் போராட்டங்கள் மூன்றும், **1953-ம் ஆண்டு**

**ஜூலை 14, 15 தேதிகளில் ஏற்பாடாகியிருந்தன.** இவற்றைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அண்ணா, நெடுஞ்செழியன் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க. தலைவர்கள் மற்றும் தொண்டர்களைக் கைது செய்து உள்ளே தள்ளியது காங்கிரஸ் அரசு. ஆனால் அவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்காத விதமாக, கழகத்தின் மற்ற தலைவர்கள் மிகத் திறமையாகச் செயல்பட்டார்கள். பலத்த காவல்துறை பாதுகாப்புத் தடைகளையும் மீறி, திட்டமிட்ட படி மும்முனைப் போராட்டங்களை நிகழ்த்தினர்.

மும்முனைப் போராட்டங்களின்போது நடந்த தடியடி மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் இறந்தார்கள். எழுபது பேருக்கு மேல் காயமடைந்தார்கள். ஆயிரக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இப்படிக் கைது செய்யப் பட்டவர்கள்மீது பலவிதமான வழக்குகள் சுமத்தப்பட்டு, கடுமையான தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், இத்தனைக்குப் பிறகும் தி.மு.க. கழகத் தொண்டர்களின் வேகம் குறையாமல் அதிகரித்துக் கொண்டிருப்பதை, ஆளுங்கட்சியான காங்கிரஸ் பயத்துடன் பார்க்கத் தொடங்கியது.

## 101) இந்தி எதிர்ப்புப் போராட்டமும், ரயில் நிலையங்களில் இந்திப் பெயரழிப்பும்

இதேபோல், ரயில் நிலையப் பலகைகளில் ஹிந்திக்கு முதல் இடம் அளிப்பதை எதிர்த்து, தமிழுக்கு முக்கியத்துவம் கோரும் போராட்டத்தை அறிவித்தது தி.மு. கழகம். இப்படி ஹிந்தித் திணிப்பு எந்த வடிவத்தில் தலைகாட்டினாலும் அதை எதிர்த்து எழும் முதலாவது குரல், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையதாக இருந்தது.



தி.மு.க.வினர் இத்தகைய போராட்டங்கள் மூலம் மக்கள் கவனத்தைக் கவர்ந்தனர். இந்த அனுதாப அலை படிப்படியாக வளர்ந்து 1967ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடிக்கும் வரைச் சென்றது. ***(1967ஆம் ஆண்டு பலம் பொருந்திய காங்கிரஸ் கட்சியை வீழ்த்தியது தி.மு.க. அதன் பின்னர் 1972ஆம்ஆண்டு அக்டோபர் மாதம் 17-ஆம் நாள் அ.தி.மு.க. என்ற அமைப்பு தி.மு.க.விலிருந்து எம்.ஜி.ஆர். தலைமையில் பிரிந்து செயல்பட்டது. சுமார் 14 ஆண்டுகள் எம்.ஜி.ஆர். தமிழ் நாட்டின் முதல்வராக பதவி வகித்தார். இவர் காலத்தில்தான் 69 சதவீத இட ஒதுக்கீடு அமுலுக்கு வந்தது. மீதியுள்ள 31 சதவீதத் திலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகி யோர் மதிப்பெண்கள் அடிப்படையில் இடம் பிடிக்கலாம் என்றும் சட்டம் இயற்றப்பட்டது. இன்றுவரை எம்.ஜி.ஆர். அமுலுக்கு கொண்டுவந்த சட்டத்தின் முழுப்பயனை பிற்படுத்தப்பட்டோர் அனுபவித்து வருகின்றனர். மண்டல்மிஷன் பரிந்துரையின்படி 50 சதவிகிதமே பழங்குடியினர், பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற் படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட வேண்டும். தமிழ்நாடு தவிர்ந்த மற்றைய மாநிலங்களில் இந்த முறைதான் பின்பற்றப்படுகிறது. ஆனால் நம் தலைவிதி பராசரன் போன்ற முற்படுத்தப்பட்டோரில் தோன்றிய புல்லுருவிகள் உச்சநீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டோர் நலனுக்கு எதிராக வாதாடி பணத்தைச் சேர்த்து ஜீயர் ஸ்வாமி திருவடிகளில் கொஞ்சம் இறைத்துவிட்டு மேடையிலே ஏறி சிறப்புரை வழங்கும் தகுதியைப் பெற்றுள்ளனர். ''மீன் வித்த காசு நாறாது'', ''நாய் வித்த காசு குரைக்காது'' என்ற பழமொழியுடன் பராசரன் தரும் காசு முற்படுத்தப்பட்டோர் நலனைப் பாதுகாக்கும் என்றுதான் நாம் கொள்ளவேண்டும்.)***

## 102) நாணல் புதரும், முதலைகளும்

அக்னியாறு கடலோடு சேருமிடத்தில் ஆற்றின் இரு

கரைகளிலும் நாணல் புதர்கள் பெருமளவில் காணப்படும்.



இந்த நாணல் புதர்களைத் தொலைவிலிருந்து நோக்கிடும் போதுவெண்மேகங்கள் தரையில் அசைந்தாடுவது போலத் தோற்ற மளிக்கும். இந்த நாணல் புதர் களினூடே கரையோரத்தில் முதலைகள் காணப்படும். அக்னியாற்றில் வெள்ளம் சுழியிட்டுச் செல்லும். அப்போது விடுதி மாணவர்கள் குளிக்கச் செல்வர். அவ்வாறு நாங்கள் ஆற்றில் குளித் திடும்போது இந்த முதலைகள் நாணல் புதர்களிலிருந்து வெளிப்பட்டு நீரிலே அமிழ்ந்து கடலை நோக்கிப் பயணப் படும் காட்சி எப்போதாவது எங்கள் கண்களுக்குத் தென் படும்.

## 103) முதலைகளைப் பற்றிய சில முக்கியமான குறிப்புகள்

உலகில் மூன்று வகையான முதலைகள் உள்ளன. முதலைகள், அலிகேட்டர்கள் மற்றும் கரியால் போன்றவை யே அவையாகும். அவற்றுள் முதலை இனங்கள் 13, அலி கேட்டர் 7, கரியால் 2 என மொத்தம் 22 இனங்கள் இருக்



கின்றன. இந்தியாவில் மூன்று இன முதலைகள் இருக் கின்றன. உப்பு நீர் முதலை (**Salt Water Crocodile**) சுமார் 4.5 மீட்டர் (15 அடி) நீளம் வரை வளரும். இது மீனையும் சிறு பாலூட்டி களையும் விழுங்கும். சதுப்பு நில முதலை (**Marsh Crocodile**) என்பது சுமார் 15 அடி



வரை வளரும். இது மீன், மான், ஆடு, பன்றி ஆகியவற்றை உண்ணும். வாய் பகுதியில் நீளமான மூக்குக் கொண்ட கரியால் அல்லது கங்கை நீர் முதலை (**Gharial Gavialis Gangeticus**) மீன்களை விழுங்கி உயிர் வாழ்கின்றது.

முதலையின் முன்னங்கால்களில் ஐந்து விரல்களும், பின்னங்கால்களில் நான்கு விரல்களும் இருக்கின்றன. இதன் தடித்த தோல் கரடு முரடானதாகத் தோற்றமளிக்கும். முதலையின் செவிப்புலனும் பார்வையும் கூர்மையானவை. அதன் பற்கள் ரம்பம்போன்று கூர்மையானவை. முதலை இறக்கும்வரை வளர்ந்து கொண்டே இருக்கும். கோபத் தில் அது உரக்க ஒலி எழுப்பும், குரைப்பது போலவும் சப்தமிடும். முதலை ஒரு சமூக விலங்கு. அது எப்போதும் கூட்டமாகவே காணப்படும். அசைவற்றிருக்கும் முதலை களின் காட்சி நம்மை வியப்பில் ஆழ்த்தும், அதிசயப்பட வைக்கும். காற்றுகூட உட்புக முடியாத வகையில் கோரப் பற்கள் வெளியே தெரிய வாயை இறுக்கமாக மூடிக் கொண்டி ருக்கும் ஒரு முதலை. வாயைப் பிளந்தபடியே நீண்ட நேரம் அசைவற்றிருக்கும் ஒரு முதலை. தரையில் ஊர்ந்து செல்லும் ஒரு முதலை. தண்ணீரில் நீந்திப் பார்க்கும் ஒரு முதலை. ஒன்றின்மேல் ஒன்றாகப் படுத்து உறங்கும் ஒரு முதலை என்று முதலைகளைக் காணலாம். இறுகிய வெளிர் பழுப்பு நிறத் தோலைக் கொண்ட முதலை சுமார் 30 ஆண்டுகள் வரை வாழும்.

100 ஆண்டு காலம் வாழ்ந்த முதலையின் வர லாறும் உண்டு. முதலை வாயைத் திறக்கும்போது தாடையில் அழுத்தம் ஏற்படுவதால் அதன் கண்களிலிருந்து கண்ணீர் வரும். முதலை வாயைத் திறந்து சிக்கிய இரையை விழுங்கும் போது, வடிக்கும் கண்ணீர் அந்த

இரையின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பது போல் தோன்றும். இதுதான் முதலைக் கண்ணீர் ரகசியம்! இன்று மனிதரில் பலர் இத்தகைய முதலைக் கண்ணீரைத்தான் வடித்து வருகின்றனர்.***(குறிப்பாக ஸ்ரீவைஷ்ணவர்களிடையே (''முதலைக் கண்ணீர் வடிப்பவர்களே'' அதிகம்.)*** மனிதர்களில் சிலர் பிறர் துன்பப்படும்போது உதவாது, மனத்திற்குள் மகிழ்ந்து, அவர்களுக்காக போலியாக வருத்தப்பட்டு, நீலிக்கண்ணீர் வடிக்கிறார்களே. அவர்கள் பச்சோந்திகளாக வும் வாழ்கிறார்களே!

முதலை 40 முதல் 50 வரை முட்டைகளை மண்ணில் பள்ளம் தோண்டி போடும்; அவை வெளியே தெரியாதிருக்க மண்ணைத் தள்ளிமூடும். சுமார் 60 நாட்களுக்குப் பிறகு அம்முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவருகின்றன. இயற்கைச் சூழலில் பாதுகாப்பில்லாத நிலையில் அவை வளர்ந்து வாழ்ந்தால் உண்டு. பூங்காவில் முட்டைகளிலிருந்து வெளிவரும் குட்டிகள் பாதுகாப்பாக வளருகின்றன.

## 104) நெய்தல் நிலக்காட்சிகளும், நாரை மற்றும் வெண்காக்கைப் பறவைகளும்

ராஜாமடம் நெய்தல் நிலத்தைச் சார்ந்த பகுதியாகும். பண்டைத் தமிழரின் நிலப்பாகுபாட்டில் கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் நிலம் எனக் கொள்ளப்படும். தமிழ் கூறும் நல்லுலகத்தின் ஐவகை நிலங்களையும் பற்றிப் பொருளதி காரத்தில் எடுத்தோதும் தொல்காப்பியர், ஒவ்வொரு நிலத் துக்கு உரிய தெய்வங்களையும், மக்களையும் மரங்களையும் உணவு வகைகளையும் வகைப்படுத்தியுள்ளார். ஆகவே, பண்டைத் தமிழர் ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் என்பது தெளிவு.



உலகவழக்கிலும் செய்யுள் வழக்கிலும் பயின்றுவரும் பொருள்களை முதல், கரு, உரி என்று மூவகைப் பொருள் களாகத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். இவை அகத்திற்கும் புறத்திற்கும் பொருந்தும். முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றனுள் இந்த உலகமும், உலகத்துப் பொருள்களும் அடங்கி விடுவதைக் கண்டு அவற்றைப் பேசுகின்றபோது அகத்திணைக்குத் துணையாகும் முறையில்

**''முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங்காலை முறை சிறந்தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங்காலை''**

என்று சூத்திரமிட்டார். (பொருளதிகார நூற்பா- 3)

முதல்பொருள் என்றால் நிலத்தையும் பொழுதையும் சுட்டும் என்பதைத் தொல்காப்பியர், வருணன் மேய பெருமணல் உலகும் - நெய்தல் இடமாகிய கடலும் கடலைச் சார்ந்த இடத்தை வருணன் விரும்பி வாழும் இடம் என்று நெய்தல் நிலத்திற்குரிய தெய்வத்தைக் கூறுவர். பெரும் பொழுது என்பது ஓராண்டின் ஆறு பகுதிகளான கார், கதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் முதலாயின. நெய்தலுக்குரியது கார்காலமாகும். கடலும் கடல் சார்ந்த பகுதியுமான நெய்தல் நிலத்தின் சிறுபொழுது ஏற்பாடு (***நண்பகல்***). அந்தந்த நிலத்திற்குரிய தெய்வங்கள், உணவு வகைகள், விலங்கு வகைகள், மர வகைகள், புள்ளின வகைகள், பறவை வகைகள், தொழில் வகைகள், யாழ் வகைகள் என்பன போன்ற பிற பொருள்களையெல்லாம் கருப்பொருள் என்பர்.

ஒரு நிலத்திற்குரிய பூ, புள் முதலியன அந்த நிலத் திற்கு உரியன என்று கூறப்பெற்ற நிலத்தோடும் பொழு

தோடும் வாராது வேறு நிலங்கட்கு மாறி வந்தாலும் வந்த அவற்றை அந்த நிலத்திற்கு உரியனவாகக் கூறிக் கொள்ள லாம் என்பர். இதனை

**''எந்நில மருங்கிற்பூவும் புள்ளும்**
**அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்**
**வந்த நிலத்தின் பயத்ததாகும்.**

(பொருளதிகார நூற்பா-21)

பிரிந்தார் இரங்குமிடம் நெய்தல்நிலம் இதுவே இதன் உரிப் பொருளாகும்.

நெய்தல் நிலத்தில் பூத்துக் குலுங்கும் மலர்களாகக் கீழ்க்கண்டவை நெய்தற்கலியில் (127ஆம் பாட்டு) குறிப்பிடப்பட்டுள்ளது.

''தெரியிணர் ஞாழலும் தேங்கமழ் புன்னையும்
புரியவிழ் பூவின கைதையுஞ் செருந்தியும்
வரி ஞிமிறு இமிர்ந்தார்ப்ப, இருந்தும்பி யியைபூத
செருமிகு நேமியான் தார்போல பெருங் குடல்
வரிமணல் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப''

''ஒளிகிளர் ஞாழல் மலர்கள், கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்கித் திகழ்ந்தன; தேன்சிந்தும் நறும்புன்னை மரங்கள் பூத்துச் சிறந்து பொலிந்தன. தாழை மலர்கள் தளைய விழ்ந்து மணங்கமழ்ந்தன; செருந்தி மலர்ந்து சிதறிக் கிடந் தன; வரிவண்டுகள் இனிதுபாடி மகிழ்ந்திருந்தன. இவை யனைத்தும் நீலநெடுங்கடலருகே வெண்மணற் சோயையில் விரவிக்கிடந்தமை, **செருக்களத்தில் சக்கரந்தாங்கும் திருமாலின் பெருந்தோளிற் கிடந்தசையும் நறுமணத் திருமாலையையொத்திருந்தன**'' என்கிறார் நெய்தற்கலி பாடிய அற்புதக் கற்பனைக் கவிஞர் ஒருவர். நீலம், காவி,



குவளை என்பன ஏறத்தாழ ஒரே வகையினைச் சார்ந்த நீர்ப் பூக்கள் எனக் கொள்ளலாம். நெய்தல் நிலத்தில் அவைகளும் ஆங்காங்கே பூத்துப் பொலிந்தன என்ற செய்தியும் கூறப்படு கிறது.

தொல்காப்பியம் பதினெட்டாம் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர், 'நெய்தற்கு-புள், அன்னமும் அன்றிலும் முதலியன' என்று குறிப்பிட்டமை முதலில் எடுத்துக் கூறப் பட்டது. அச்சூத்திர உரையில் இளம்பூரணர், ''நெய்தற்குப் புள் கடற்காக்கை' எனக் கூறியுள்ளார். எனவே, நெய்தல் நிலத்துக்குரிய புட்கள், அன்னம், அன்றில், கடற் காக்கை முதலியனவாம்.

அன்னம் நெய்தலில் காணப்பட்டுவந்த பறவைகளில் ஒன்று வெண்ணிறமானது; வானில் மிக உயரத்தில் பறக் கக் கூடியது; கால்களில் நீரில் நீந்துவதற்கு ஏற்ற தோலடிக ளையுடையது; கடலிலும், கழியிலும் நீரைத் துழாவி மீன்க ளைப் பற்றி உண்ணும்; கடற்கரை மணலிலும், அங்கு படர்ந் துள்ள அடும்புக் கொடிகளின் மீதும் தங்கி இருக்கும், என்ற செய்திகளைச் சங்க இலக்கியங்களினின்றும் அறிகிறோம்.

விதியினால் பெடைமணக்கும் மென்னடைய அன்னங்காள்!
மதியினால்குறள் மாணாய் உலகிரந்தகள்வர்க்கு✸
மதியிலேன்வல்வினையே மாளாதோ? என்று✸ஒருத்தி
மதியெ(ல்)லாம் உள்கலங்கி மயங்குமால்என்னீரே.

(திருவாய் - 1-4-3)

என்று நம்மாழ்வார் அன்னங்களை நெய்தல் நிலத்தில் தூது விடுகிறார்.

அன்றில் நெய்தல் நிலத்தில் கழிகளிலுள்ள மீன்

முதலியவற்றையுண்டு, பனைமரத்தில் கூடமைத்து வாழும் பறவை. ஆண் அன்றிலின் உச்சிக் கொண்டை நெருப்புப் போல் சிவந்து தோன்றும். சிவந்து வளைந்த வாயினை யுடையது. இதன் கால் கரியது. ஆணும் பெண்ணும் இணை பிரியாது வாழும் இயல்பின. ஒன்றைவிட்டு ஒன்று பிரிய நேரின் சற்றும் துயிலாது வேதனையில் ஆழ்ந்து நடுங்கி நலியும். உளமார்ந்த அன்பில் ஆழ்ந்து இணைபிரியாது வாழும் காதலர்க்கு ஆணும் பெண்ணுமான அன்றில்களையே உவமை கூறுவர். பனைக்கூட்டில் இருந்துகொண்டு நள்ளிர வில் துணையை உருக்கத்துடன் அகவி அழைக்கும். இப்பற வை யினம் இப்பொழுது வாழ்வதாகத் தெரியவில்லை.

மகன்றில் என்னும் ஒரு பறவையும் குறிப்பிடப்படு கிறது; அது நீர் வாழ்வது; பூக்களில் பயில்வது. நிலத்தில் வாழும் அன்றிற் பறவையைப் போல ஆணும் பெண்ணும் பிரிவின்றி எப்பொழுதும் இணைந்தே வாழும்'' என்கிறார். டாக்டர் சாமிநாதையர். இக் கருத்தையே குறுந்தொகைப் பாடல் ஒன்றும் தெரிவிக்கின்றனது. அன்னத்தையும், மகன்றி லையும் நெய்தல் நிலத்தில் தற்போது காண இயலவில்லை.

என்நீர்மை கண்டிரங்கி இதுதகாதென்னாத✸
என்நீலமுகில் வண்ணற்கு என்சொல்லியான் சொல்லுகேனோ?✸
நன்னீா மையினியவர்கண் தங்காதென்றொருவாய்ச் சொல்✸
நன்னீலமகன்றில்காள்! நல்குதிரோ? நல்கீரோ?

(திருவாய் 1-4-4)

## 105) மற்றைய நெய்தல்நிலப்பறவைகள்

பறவைகள் 30,000 வகைப்படும். தற்போது 8600 வகைப் பறவைகளே இருக்கின்றன. சில பறவைகள் விமானம் பறக்கும் உயரத்தைவிட அதிக உயரத்தில் பறக்கக்கூடியன. ராஜாளி பறவை மணிக்கு 50 முதல் 65 கி.மீ. வேகத்திலும், கடற்பறவைகள் மணிக்கு 65 கி.மீ. முதல் 80 கி.மீ. வேகத்திலும், சில பறவைகள் 100 கி.மீ. வேகத்திலும் பறக்கின்றன. லேசான உடல்வாகு கொண்ட கிளி, குருவி, மைனா போன்றவை வேகமாகப் பறக்கும். அல்பெட்ராஸ் பறவைகள் கண்டம் விட்டு கண்டம் பறக்கும் ஆற்றல் பெற்றவை. 32 நாட்களில் 6400 கி.மீ. தூரம் அல்பெட்ராஸ் பறந்ததாக அறிவியல் செய்தி கூறுகிறது.



சதுப்புநில சிறிய ஏரியில் பருவகாலத்தில் பறவைகள் குஞ்சுகளைப் பொறித்து அவை வளர்ந்த பின் குடும்பம் குடும்பமாக பறந்து செல்கின்றன. இந்த ஏரியில் கிடைக்கும் மீன், இறால், நத்தை, தவளை, புழுபூச்சி போன்றவற்றையும், தண்ணீருக்குள் இருக்கும் சில தாவரங்களையும் பறவைகள் கொத்தித் தின்று வாழ்கின்றன. நாரை, வண்ண நாரை, சிப்பாய் நாரை, கருங்கழுத்து நாரை, வெண்கழுத்து நாரை, வெண் கொக்கு, அகலவாய் கொக்கு, சாம்பல்நிற கொக்கு, காகம், குருவி, வானம்பாடி, மைனா, கிளி, புறா, அன்னம், காடை, கவுதாரி, வௌவால், ஆந்தை ஆகியவை நெய்தல் நிலப் பறவைகளாகும். இவற்றில் பெரும்பாலானவற்றை அக்னி யாற்றின் கரைகளிலும், அதன் கரையிலுள்ள பனைமரக் காடுகளிலும் புதர்களிலும், கழிமுகக்காடுகளிலும் நான் அவ்வப்போது கண்டதுண்டு.

## 106) வெள்ளைக்காக்கையைப் பார்த்ததுண்டா?

சிறுவெண் காக்கை கடற்கரையிலும் நெய்தல் நிலக் கழிப் பகுதிகளிலும் காணப்படும் ஒரு வகைக் காக்கை. கடற் கரையில் வாழும் பழங்குடி மக்கள் இதனைக் கடற்காக்கை என்றே கூறுகின்றனர். இதன் கழுத்தின் கீழ்ப்புறம் மட்டும்

சிறிது வெளுத்து ஏனைய உடல் முழுவதும் மங்கிய கருமை யோடு இருப்பதால் இது சிறு வெண்காக்கை என வழங்கப் பெறுகிறது. இதனுடைய வாயின் உட்பகுதி செந்நிறமாய் இரு க்கும். இது நீர்நிலைகளில் மீன் பிடித்துண்டு கடற்கரையில் உள்ள மரங்களில் கூடு கட்டி வாழும். இதனை நீர்க்காக்கை என்றும் கூறுவர். இச் சிறுவெண் காக்கைகள் நெய்தல் நில த்து மரங்களாகிய புன்னை, தாழை, புலிநகக்கொன்றை, பனை முதலியவற்றில் தங்கியுறையும். இப்பறவைகள் சிறுசிறு அ யிரை மீன்களைப் பிடித்துத் தின்னும்.

**''மைஅற விளங்கிய மணிநிற விசும்பிந்**
**கைதொழும் மரபின் எழுமீன் போல,**
**பெருங்கடற் பரப்பின் இரும்புறம் தோய**
**சிறுவெண் காக்கை பலவுடன் ஆடும் துறை''**

(நற்றிணை 231)

''சிறுவெண் காக்கைகள் நீலத் திரைக் கடலில் தம் கரிய முதுகு நனையும்படி ஒருசேர நீர் குடையா நிற்கும் பாங் கினைத் தெளிந்த நீல வானிலே உலகோர் தொழும் உயர் வினை உடைய முனிவர்களின் தோற்றமாகிய எழுமீன்களு க்கு (சப்தரிஷி) உவமை கூறி விளக்கும் காட்சி மிகவும் நயம் பயப்பதாகும்''.

**''சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோடு**
**எறிதிரைத் திவலை ஈர்ப்புறம் நனைப்ப**
**பனிபுலந்து உறையும் பல்பூங் கானல்''**

''செவ்விய வாயினையுடைய வெண் காக்கைக் கூட் டம், நீரில் வேட்டையாடுங்கால், வீசும் அலைத்துளிகள், தம் குவிந்த முதுகினை நனைத்து விடுகின்றன; அக்குளிரை வெறுத்து அண்மையில் உள்ள பன்மலர்ச் சோலையில் தங்கி



இன்பம் பெறுகின்றது.'' இந்த வெண்காக்கையை கழிமுகப் பகுதியில் அவ்வப்போது காணலாம்.

ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் காலை வேளையில் பள்ளி விளையாட்டு மைதானத்தில் கால் பந்தாட்ட பயிற்சி நடைபெறும். அந்த விளையாட்டு அரங்க த்தின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் அடர்ந்த புதர்க் காடு களில் காட்டுப்பூனை, முள்ளம்பன்றி போன்றவைகள் காணப்படும்.

காட்டுப் பூனை வலிமை வாய்ந்தது. இதன் நடையும் ஓட்டமும் சிறுத்தை போன்றே இருக்கும். இது காட்டில் சிறு பாலூட்டிகள், பறவைகள் மற்றும் **முள்ளம்பன்றியை** அடித்து உண்ணும்.

## 107)முள்ளம்பன்றியின் முள்ளும், ஸீமந்தோந் நயனமும்

முள்ளம்பன்றி பிறக்கும்போது அதன் முட்கள் மிக மிருதுவாகவும், வளையக் கூடியதாகவும் இருக்கும். ஆனால் சிறிது நேரத்தில் அதன் முட்கள் கடினமானவையாக மாறிவிடுகின்றன. முள்ளம்பன்றி வேட்டையாடப்படும் போது தன் வாழ்விற்காக எதிர்த்துப் போராடும். இதன் பின்புற



முள்ள ஈட்டி போன்ற முட்கள் பாதுகாப்புக் கவசமாகத் திகழ்கிறது. இது தாக்கப்படும்போது இதன் முட்கள்

விரைத்துக் கொண்டு சிலுசிலுக்கும். அப்பொழுது இதன் எதிரி காயமடையவோ இறக்கவோ நேரிடும். இதன் முட்கள் உதிர்ந்துவிடும். சிறிது காலத்தில் திரும்பவும் புதிய முட்கள் முளைத்து அவற்றை ஈடுகட்டிவிடும். இது மரப்பட்டை இலைகள், மொட்டுகள், தண்டுகள், பழங்கள், பயிர்கள், மாமிசம் போன்றதைத் தின்னும். **இதற்கு உப்பு மிகவும் பிடிக்கும்.** இதன் முள்ளைக் கொண்டு ஸீமந்தோந்-நயனத்தில் (ஸீமந்தம் நடைபெறும் போது) வகிடு பிளப்பது என்னும் வைதிக காரியம் நடை பெறுகிறது.

ஸீமந்தோந்நயனம் **(வகிடுபிளத்தல்- வகிர்ந்த முன் தலைமயிரின் இடைவெளி ஒழுங்கு)** என்ற கார்யம் எந்தக் கர்மத்தில் அனுஷ்டிக்கப்படுமோ அந்தக் கர்மத்திற்கு ஸீமந்தோந் நயனம் என்று பெயர். அக்கார்யத்தை முதல்கர்ப்ப முண்டானபொழுது மட்டும் நான்காவது மாதத்தில் செய்ய வேண்டும். நாந்தீ ச்ராத்தத்தில் பிராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்து பிறகு அவர்களிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டு அக்னிபிரதிஷ்டை முதல் ஆஜ்யபாகம் என்ற கர்மம் வரை செய்துகொண்டு பத்னியானவள் தன்னைத் தொட்டுக் கொண்டிருக்கும்பொழுது மந்திரங்களால் 8- ஹோமம் செய்து, ஜயாதி ஹோமம் முதலியவற்றைச் செய்யவேண்டும்.

பிறகு பரிஷேசனம் என்ற கர்மம் வரை செய்து கொண்டு அக்னிக்கு மேற்கு திசையில் கிழக்கு முகமாகத் தனது பத்தினியை உட்காரவைத்து (மேற்கு முகமாக நின்று கொண்டு) மூன்று இடங்களில் வெண்ணிறம் பொருந்திய முள்ளம்பன்றியின் முள்ளு, தர்ப்பத்துடன் கூடிய பேய் அத்தியின் காய்க் கொத்து இவற்றை ஒன்றாகச் சேர்த்து எடுத்துக் கொண்டு இவற்றால் பத்தினியின் சிரஸின் நடுபாகத்தில் மேல்நோக்கிச் செல்லும்படி ஓர் கோடு கிழிக்க வேண்டும். அதாவது வகிடுபிளக்கவேண்டும். இதுவே ஸீமந்தோந்நயனம் எனப்படும்.



## 108) நெய்தல்நிலத்தில் இரவில் அலறும் ஆந்தை

ராஜாமடத்தில் அடிக்கடி இரவு நேரங்களில் ஆந்தையின் அலறல் கேட்கும் என்பதை முன்னமே குறிப்பிட்டுள்ளேன். ஆந்தை பறவைக்குக் கூர்மையான பார்வையும் காதுகளும் உள்ளன. ஆந்தையால் பகலைவிட இரவில் நன்றாகப் பார்க்க முடியும். அதன் கண்கள் இரவில் பார்ப்பதற்குப் பிரகாசமாகத் தெரியும். அதற்குக் காரணம் அதன் கண்களில் சிவப்பு நிறத்தில் இருக்கும் புரதக் கூறுதான். ஆந்தை ஆடாமல் அசையாமல் கழுத்தை மாத்திரம் திருப்பிப் பார்க்கும் திறமை பெற்றுள்ளது. குட்டையான உருவம் கொண்ட ஆந்தையில் 200 வகைகள் உள்ளன. ஆந்தை இரவில் ஓசைப்படாமல் பறந்து வயலில் பயிரை நாசமாக்கும், எலிகளைப் பிடித்துத் தின்னும்.

மணல்மலி மூதூர் அகல்நெடுந் தெருவில்
கூகைச் சேவல் குராலோடு ஏறி
ஆர்இருஞ் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்.
(நற்றிணை 319)

''மணல் மலிந்த பழைய ஊரில் நெடிய தெருவிலும், மக்கள் இயங்காத பெரிய நாற்சந்துகள் கூடுமிடங்களிலும் நள்ளிரவில் கூகைச் சேவல் அச்சமுறக் குழறிக் கொண்டிருக்கிறது'' என்று சங்க இலக்கியங்களில் ஆந்தை நெய்தல் நிலத்தில் அச்சமூட்டும்வகையில் அலறிக்கொண்டிருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 109) பார்வை இழந்த வாவல் எனப்படும் வௌவால்

ராஜாமடம் சத்திரம் மிகுந்த பரப்பளவைக் கொண்டது. அவற்றில் சில அறைகளில் விறகுகள் அடைத்து வைக்கப் பட்டிருக்கும். எப்போதாவதுதான் இந்த அறைகள் திறக்கப் படும். அவ்வாறு அந்த அறைகள் திறக்கப்படும்போது சடசட வென்ற ஒலியோடு வௌவால்கள் வெளியே பறந்தோடும். அந்த அறை முழுவதிலும் ஒரு வித துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கும்.

**''ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே;**
**எல்லியும் பூவீ கொடியின் புலம்பு அடைந்தன்றே**
**வாவலும் வயின்தொறும் பறக்கும்''**
(நற்றிணை 218)

**தாஅவல் அஞ்சிறை நொப்பறை வாவன்**
**பழுமரம் படரும் பையுள் மாலை''**
(குறுந்தொகை 172)

பழுமரம் நாடித் திரியும் வௌவாலின் பார்வையும், அந்த வெண்மணல் சோலையின் பக்கம்படத் தவறவில்லை. 'ஞாயிற்றின் கதிர் மழுங்கி- மறைந்து இருள் செறிந்த இரவு வந்ததும், பூங்கொடிகள் எல்லாம் அமைதியடைகின்றன. பழங்களைத் தேடியுலவும் வௌவால்கள் தாவிப்பறந்து திரிகின்றன. வௌவாலை வாவல் என்று சங்கப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாலூட்டிகளில் வௌவால்கள்தான் பறக்கும் தன்மை கொண்டவை. அவற்றிற்கு 6 அங்குல நீளத்திற்கு உடலும் 1.3 அடிக்கு இறக்கையும் உள்ளன. வௌவால்கள் பகலில் மரக்கிளைகளிலும், குகை அல்லது பாழடைந்த கட்டடப் பகுதிகளிலும் தலைகீழாகத் தொங்கும். வௌவாலின்



இறக்கைகளுக்கும் வாலுக்குமிடையே உள்ள சவ்வுகள் பறக்க உதவுகின்றன. வௌவால்களில் பெரு வௌவால் என்றும் சிறு வௌவால் என்றும் இரண்டு வகைகள் இருக்கின்றன. பார்க்கும் சக்தி அற்றதால், வௌவால்கள் ஒலி உணர்வால், மோப்பத்திறனால் நீண்ட தூரம் பறந்து பழங்களையும் பூச்சிகளையும் தின்னும், பயிர்களையும் அழிக்கும்.

## 110) மார்கழிமாதப்பொங்கலும் மலைப்பூவரசு இலையும்

ராஜாமடம் அக்ரஹாரத்தின் இருமருங்கிலும் வீடுகள் அமைந்திருந்தன. கிழக்கு திசை நோக்கி ஸ்ரீனிவாஸப் பெரு மாள் எழுந்தருளியுள்ளதை முன்னமே குறிப்பிட்டுள்ளேன். நெய்தல் நிலத்துக்கே உரிய மலைப்பூவரசு மரங்கள் ஒவ் வொருவர் இல்லத்திற்கு முன்பும் பயிரிடப்பட்டிருக்கும். மார்கழி மாதத்தில் எப்போதாவது காலையில் குளித்துவிட்டு ஸ்ரீனிவாஸப் பெருமாள் கோயில் பொங்கல் வாங்குவதற்கு நானும், சேஷாத்ரி என்ற சக மாணவனும் செல்வோம். நாங்கள் தங்கியிருந்த சத்திரத்தில் மூன்று மாணவர்களே ஐயங்கார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மூன்றாவதான துரை சாமி பூனைக் கண்ணன். இவன் எல்லாவகை சைவ, அசைவ உணவுகளையும் அருந்துவான். படிப்பில் ஒன்பதாம் வகுப் பில் முதல் மாணவனாய் விளங்கிய இவனைப் பத்தாம் வகு ப்பில் மூன்றாம் நிலைக்கு நான் தள்ளினேன். நான் முதல் நிலை மாணவனாக 10ம் வகுப்பில் விளங்கி வந்தேன். 11ஆம் வகுப்பில் பஞ்சநதம் என்ற மாணவன் முதல் மாணவனாக விளங்கினான்.

## 111) மலைப்பூவரசு ஓர் கடற்கரைக் குடிமகன்

ராஜாமடத்தில் அனைத்து வீதிகளிலும் நெய்தல்

நிலத்துக்கே உரிய மலைப் பூவரசு மரங்களைக் காணலாம். விஞ்ஞானப் பெயர்: ஹைபிஸ்கஸ் டிலியேசியஸ் (Hibiscus Tiliaceous L) தாவரக் குடும்பம்; மால்வேசி. ஹைபிஸ்கஸ் என்பது மல்லோ என்ற துத்திச் செடியின் இலத்தீன் மொழிப் பெயராகும்; மல்லோச் செடியைப் போன்று மலைப்பூவரசு இருப்பதால், ஹைபிஸ்கஸ் என்ற முதற்பெயர் ஏற்பட்டுள்ளது. குறுமரத்தைப் போன்றிருப்பதால், மலைப்பூவரசிற்கு இணைப்புப் பெயராக டிலியேசியஸ் என சூட்டப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்கரைகள் எங்கும் மலைப்பூவரசு காணப் படுகிறது. சதுப்பு நிலக்காடுகளின் உட்புறமாகவும், காயல் பகுதிகளிலும் வளருகிறது. அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இவை அதிகமாக உள்ளன. காவேரி கொள்ளிடம் ஆறுகளின் கரைகளில் அதிக அளவிலும் உள்நாட்டுப் பகுதியில் உள்ளன.

மலைப்பூவரசு சுமாரான உயரமுடைய மரம் 10 மீட் டர் உயரம் வளரக் கூடியது. 20-30 செ.மீ. விட்டமுள்ள அடி மரத்தில் சிறிது உயரத்திற்கு மேல் கிளைகளும் இலைகளும் அடர்ந்து பந்து போன்ற தழையமைப்புடன் காட்சியளிக்கும். கரும்பச்சை நிற இலைகள், தொடர்ந்து பசுமை மாறாமலிருப் பதால், எப்பொழுதும் நிழல் கொடுக்கும். மிகவும் கடுமை யான வறட்சிக் காலத்தில் ஓரளவிற்கு இலையுதிர்க்கும்.

சாதாரணமாக எப்பொழுதுமே ஒன்றிரண்டு பூக்கள் இருக்கும். பளிச்சென்று தெரிவதில்லை. டிசம்பர் மார்ச் மாதங்களில் நிறையப் பூக்கள் இருக்கும். 4.5 செ.மீ. அள வுள்ள இப்பூக்கள் 2 செ.மீ. காம்புடன் மஞ்சள் நிறமுடையவை. மே-ஜூன் மாதங்களில் 2.5 X 1.5 செ.மீ. அளவுள்ள காய்கள் உருண்டையாக உருவாகும்.



மரத்திலிருந்து வலுவான நார் உரிக்கலாம். பசுமை யான மரத்திலிருந்து, பட்டையை உரித்து, 1-2 நாட்கள் வெயிலில் உலர்த்தி, மரச்சுத்தியலால் அடித்து, நாரை மட்டும் தனித்து எடுக்கின்றனர் அல்லது பட்டையை நீரிலே ஊற வைத்து, நார் எடுக்கலாம். தாரில் தோய்த்த நார் மிகவும் வலு வானது. சணல் நார்களையும் விட மேம்பட்டது. போர்ச்சு கீசிய கிழக்கு ஆப்ரிக்காவில் நீர் யானையை வேட்டையாட, இந்த நார்களையும் உபயோகித்தனர் என்றால், இந்த நாரின் வலிமைக்கு வேறு சான்றே வேண்டியதில்லை. கப்பல் களிலும், பெரும் கட்டைகளை இழுத்து வரவும் இக்கயிறு பயன்படுகிறது. சிறந்த பாய்கள் முடைவதற்கு, ஸ்ரீலங்காவில் இந்த நாரை உபயோகிக்கின்றனர்.

படகுகளின் பலகைகள் செய்ய ஏற்றது. மிதவைகளும் செய்யலாம். நஞ்சைப் பகுதியில் குடிசைகள் அமைக்க ஏது வான மரம். வளமில்லா நிலத்திலும் வளர்ந்து, துரிதமாக விறகு உற்பத்தி செய்யக் கூடியது.

## 112) மலைப்பூவரசு உப்புநீரிலும், உவர்ப்பு நீரிலும் வளரக்கூடியது

கடற்கரைப் பகுதிகளில் காணப்படும். உப்புநீரையும் உவரையும் தாங்கி வளரக் கூடியது. உப்பு நீரிலுள்ள சோடி யத்தையும் எடுத்துக்கொண்டு வளரக்கூடியது. எங்கெங்கு சிறிது மண்ணும் மணலுடன் உள்ளதோ அங்கு செழித்து வளரும். மற்றும் மண்ணைப் புரட்டும் காற்றுள்ள இடங் களில் காற்றின் அரிமானத்தைத் தடுக்கும் மரமாக அமையும்; மலைப்பூவரசு இயற்கையிலே துரிதமாக வளரக் கூடியது. நட்ட 2-3 வருடங்களிலே நிழல் கொடுக்கக் கூடிய வளர்ச்சி யைப் பெற்றுவிடும். வெட்ட வெட்ட தழைப்பதால் தழைக் கும் விறகிற்குமாக வெட்டிப் பயனடையலாம்.

## 113) கணித ஆசிரியர் நாராயணன் இல்லத்தில் பரிமாறப்பட்ட இட்லியும், கெட்டிச்சட்னியும்

இந்த அக்ரஹாரத்தில் திரு. நாராயணன் என்ற கணித ஆசிரியர் வசித்து வந்தார். அவரும் அவரது தாயாரும் ஒரு வீட்டில் தங்கியிருந்தனர். அவருக்கு அப்போது திருமணம் ஆகவில்லை.

ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை வேளையில் அவருடைய இல்லத்திற்குச் சென்றுவிடுவேன். அவருடைய தாயார் சுடச் சுட இட்லி வார்த்து கெட்டி சட்னி, சாம்பார் ஆகியவற்றுடன் பரிமாறுவார். சத்திரச் சாப்பாட்டினால் ருசி யிழந்த நாக்கு சுவையுள்ள இந்த இட்லிகளை அளவுக்கு மீறியே சுவைக்கும். சிற்றுண்டிக்குப் பிறகு பில்டர் காபி வழங்கப்படும். இவர் பீடா போடும் பழக்க முடையவர். அம்மாவுக்குத் தெரியாமல் பீடாவைச் சுவைத்துக் கொண் டிருப்பார். பிரம்மச்சாரியான இவர் பீடா போடுவதை அவ ருடைய தாயார் அடிக்கடி கண்டிப்பார். பீடாவிற்கு அவர் வைத்த பெயர் 'ஜில்குஷ்'. இட்லி சாப்பிட்டதற்கு நன்றிக் கடனாக ஒன்பதாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு விடைத் தாள்களைத் திருத்தும் பணியில் நான் அவருக்கு உதவி செய் தேன். ஒரு கேள்விக்கு 4 விடைகள் கொடுக்கப்பட்டிருக்கு ம். அதில் சரியான விடையை 'டிக்' செய்ய வேண்டும். மாதா ந்திர மற்றும் காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளின்போது இந்தப் பணியில் நான் அவருக்கு உதவி செய்வேன்.

11ஆம் வகுப்பில் நான் தேர்ச்சி பெற்றபோது கல் லூரியில் சேர்வதற்கு ஊக்கம் அளித்தவர் திரு. நாராயணன். ***(1956ஆம் ஆண்டு நடைபெற்ற 11ஆம் வகுப்புத் தேர்வில் நான் 500 மதிப் பெண்களுக்கு 385 மதிப்பெண்கள் பெற்றேன். S.S.L.C.***



***சான்றிதழைப் பெற்றுக்கொண்டபிறகு திரு. நாராயணன் அவர்களை வீட்டில் சந்தித்தேன். அப்போது அவர் உன்னுடைய குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக இத்துடன் படிப்பை நிறுத்திவிடாதே. எப்பாடுபட்டேனும் கல்லூரியில் சேர்ந்து ஒரு பட்டம் பெற்றுவிடு. அப்போதுதான் எதிர்காலத்தில் நீ வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடலாம் என்று கூறி எனக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார். அன்று அவர் கொடுத்த ஊக்கத்தின் விளைவே பல இடர்ப்பாடுகளுக்கிடையே கல்லூரிப் படிப்பை மேற்கொள்ள உதவியது.)***

## 114) Strike செய்த பள்ளிமாணவர்கள்

திரு. குமரேசன் என்பவர் அண்ணாமலைப் பல் கலைக்கழகத்தில் M.A. பட்டம் பெற்றவர். M.Ed. எனப்படு ம் ஆசிரியர் பயிற்சிப் பட்டம் பெற்றவர். இவர் சமூக இயல் ஆசிரியராக 1954ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொறுப் பேற்றுக் கொண்டார். தலைமை ஆசிரியருக்கு அடுத்த நிலை யில் இவருடைய கல்வித் தகுதி கருதிக் கொள்ளப்பட்டார். தலைமை ஆசிரியர் விடுப்பில் செல்லும்போது இவரே தற்காலிகத் தலைமை ஆசிரிராகப் பொறுப்பு வகிப்பார். 1955ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தலைமை ஆசிரியர் பொறுப்பிலிருந்த திரு. தண்டாயுதபாணி ஐயர் விடுப்பில் சென்றபோது திரு. குமரேசன் தற்காலிக தலைமை ஆசிரிய ராகப் பொறுப்பு வகித்தார். பத்தாம் வகுப்பில் படித்துவந்த மாணவனான கழிமுகத்தைச் சார்ந்த ஆறுமுகம் பள்ளிக்குத் தாமதமாக வந்தான் என்று தன்னுடைய வகுப்பில் திரு. கும ரேசன் அவர்கள் அனுமதி தர மறுத்தார். அக்னியாற்றில் வெள்ளம் ஏற்பட்டதால் அதைப் பரிசல் மூலம்தாண்டி வருவ தில் காலதாமதம் ஆனதாக ஆறுமுகம் எடுத்துக் கூறியும் அவ னுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மாணவர் சங்கத் தலை

வரான (**Students' Union Leader**) திரு. கோவிந்தராஜனிடம் ஆறுமுகம் முறையிட அவனுடைய சார்பில் தலைமை ஆசிரியரான திரு. குமரேசனை சந்தித்து ஆறுமுகத்தை மன்னித்து வகுப்பில் உட்காருவதற்கு அனுமதி வழங்குமாறு திரு. கோவிந்தராஜன் கேட்டுக் கொண்டார். அப்போது நடந்த வாக்குவாதத்தில் மரியாதைக் குறைவான வார்த்தைகளை திரு. குமரேசன் அவர்கள் கூறியதாக திரு. கோவிந்தராஜன் மற்றைய மாணவர் சங்க உறுப்பினர்களிடம் கூறிட மாணவர் சங்கத்தலைவரை அவமதித்ததற்காக மின்னல் வேக வெளிநடப்பு செய்யப்பட்டது. அனைத்து மாணவர்களும் தெருவிலே நின்று கொண்டு தலைமை ஆசிரியர் குமரேசன் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்ற போராட்டத்தைத் தொடங்கினார்.

## 115) உரிமைக்குப் போராடுவேன், அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பேன்

மற்றைய ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டபோதிலும் மாணவர்கள் தங்கள் போராட்டத்தை விலக்கிக் கொள்ளவில்லை. அடுத்தநாள் மாணவர் அணி வகுப்பிற்கு முன்பு திரு. குமரேசன் தான் அவ்வாறு கூறிய வார்த்தைகளுக்கு வருத்தம் தெரிவிப்பதாகத் தெரிவித்திட, போராட்டம் திரும்பப் பெறப்பட்டது. மாணவர் சங்க உறுப்பினர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். அன்றைய தினம் போராட்டத்தில் வெற்றிகண்டோம். ***(அநீதி இழைக்கப்படும்போது அதற்கு எதிராகக் குரல் கொடுப்பது என்பது எனக்கு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதே ஏற்பட்டதொன்றாகும். அந்தப் போராட்ட குணம் இன்றும் என்னிடம் தொடர்ந்து குடி கொண்டுள்ளது. அதனால் தான் எப்போதெல்லாம் ஸ்ரீவைஷ்ணவ சமுகத்திற்கு பெரிய மனிதர்களால் அநீதி இழைக்கப்படுகின்றதோ அப்போதெல்லாம் நான் எதிர்க் குரல் கொடுக்கிறேன். விசாகப்பட்டினத்தில் என்னை தகாத வார்த்தைகளால் இகழ்ந்த கௌஸ் என்னும் கஸ்டம்ஸ் ஆபீசர் மீது புகார் கொடுத்தது. தற்போதைய சேதுசமுத்திர இடிப்புப் புகழ் பாலு பெட்ரோலியத் துறை அமைச்சராக 1996ஆம் ஆண்டு பொறுப்பிலிருந்தார். அவர் கொருக்குப்பேட்டை, இந்திய ஆயில் நிறுவனத்திற்கு வருகை தந்தபோது என் நெற்றியில் அணிந் திருந்த திருமண்காப்பினை இகழ்ந்தார்.***

***அப்போது அவரை எதிர்த்துப் போராடியது, திருக்குறுங்குடியில் பக்கம் நின்றார் பெயர்த் தெடுக்கப் பட்டபோது வழக்குத் தொடுத்தது, இராமர் பாலம் இடிப்பிற்கு எதிர்க்குரல் கொடுத்தது, திருவரங்கத்தில் ராஜ கோபுரத்திற்கு அண்மையில் ஈ.வே.ராமசாமி நாயக்கரின் சிலை வைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தது, ஸ்ரீவைஷ்ணவ சமூகத்திற்கு அவ்வப்போது தீங்கிழைத்துவரும் கறுப்பு அங்கி அணிந்த வழக்குரை (ற)ஞர்களுடைய செயலுக்குக் கண்டனம் தெரிவிப்பது ஆகியவை இதன் விளைவாக எழுந்தவையே.)***



## 116) இந்த நிகழ்ச்சி தந்த படிப்பினை என்ன?

ஆறுமுகம் அன்றைய தினம் காலதாமதமாக வந்ததற்கு நியாயமான காரணங்கள் இருந்தும் தன் அதிகாரத்தை முறையற்ற வழியில் பயன்படுத்தி அதனால் ஒரு தாழ்ச்சியை அடைந்தார் திரு. குமரேசன்.

இந்த நிகழ்ச்சி என்னுள் ஒரு தாக்கத்தை அந்த வயதிலேயே உண்டுபண்ணியது. பிற்காலத்தில் நான் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் மேலாண்மைப் பொறுப்பில் இருந்தபோது அதிகாரம் என் கையில் இருந்தது என்பதற்காக எந்த நீதிக்குப் புறம்பான செயலையும் நான் செய்ய முற்படவில்லை. ஆனால் ஒருவர் அத்துமீறிய செயல்களைச் செய்ய முற்படும்போதும், செய்திட்டபோதும் அவர்களுக்குரிய படிப்பினையைப் புகட்டுவதற்கு நான் என்றும் தயங்கியதில்லை. எத்தனை அச்சுறுத்தல்களும் வீண்பழிகளும் என் மீது சுமத்தப்பட்டபோதும் நான் கலக்கம் கொண்டதில்லை.

## 117) கொடுக்காய்ப்புளியும் அதில் அடங்கியுள்ள ஊட்டச் சத்துக்களும்

அக்னியாற்றில் கழிமுகத்தில் அடர்ந்த காடுகள் உண்டு. அவற்றில் உள்ள கொடுக்காப்புளி மரத்திலிருந்து பறிக்கப்பட்ட பழங்களை அவ்வப்போது ஆறுமுகம் வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் தந்திடுவான்.

தாவர இயல் பெயர்: பித்தசெல்லோபியம் டல்சி (Pithecellobium dulce (Roxb) Benth; Syn: Inga dulce; Pithecolobium dulce). தாவரக் குடும்பம்: மைமோசி. 'பித்தசெல்லோபியம்' என்ற முதற்பெயர் இரு கிரேக்கச் சொற்கள் இணைந்த பெயராகும்; குரங்கு மற்றும் காது வளையம் எனப் பொருள்படும் இச்சொற்கள் வளைந்த காய்களைக் குறிப்பிடுகின்றன. 'டல்ஸி' என்றால் இனிப் பானது எனப் பொருள்படும். கனியின் இனிப்புச் சதையை இப்பெயர் குறிக்கிறது.

கொடுக்காய்ப் புளி, ஓங்கி உயர்ந்தும் அடர்ந்தும் வளரும் மரமாகும். சுமார் 15-20 மீட்டர் உயரம் வரை வளரும். மரத்தில் சிறு தடிப்பான முட்கள் பல இருக்கும். சாம்பல் நிறப் பட்டையுடையது. இலை, கூட்டிலையமைப்புடையது; அவ்வப்பொழுது, முதிர்ந்த இலைகள் உதிர்ந்து, புது இலைகள் வந்து கொண்டிருக்கும். ஒரேயடியாக இலை யுதிர்ப்பது இல்லை.

கிளைகளின் நுனியில், டிசம்பர்- பிப்ரவரி மாதங் களில் பூங்கொத்துக்கள் உருவாகும். மஞ்சள் நிறப் பூக்கள் பல சேர்ந்து உருண்டையாக இருக்கும். பின்னர் அவற்றில் காய்கள் உருவாகும். 10-15 செ.மீ. நீளமுடைய இக்காய்கள் தடித்து, வளைந்த நிலையில் வளர்ச்சி பெறும். பழுத்த



கனிகளில், பழுப்புக் கலந்த வெண்மை அல்லது சிறிது சிகப்பு நிறமுடைய சதைப் பற்றும் (aril), அதனுள் ஒரு விதையும் கொண்ட பகுதிகள் பல இருக்கும். விதையின் நிறம் கறுப்பு.

100 கிராம் பழச்சதையில் உள்ள வைட்டமின்கள்: தையாமின் Thiamine Vitamin -B1 - 222 மியூகிராம், ரிபோ பிளேவின் Riboflavin- VitaminB2 -59 மியூகிராம்நிகோடினிக் அமிலம் (Water Soluble Vitamin B Complex) $C_5H_5N$-COOH-0.6 மில்லிகிராம் வைட்ட மின் 'சி' (Ascorbic Acid-$C_6H_8O_6$) - 120 மில்லிகிராம்

சதையில் உள்ள சர்க்கரைப் பொருளில் பெரும் பகுதி குளுகோஸ் சர்க்கரை உள்ளது. Hexotrans and Glycoside ஆகியன உள்ளன. இனிப்புடைய சதைப்பகுதி சிறார்களுக்கு விருந்து. இன்று வசதி படைத்தோர் இரவு உணவிற்குப் பின், நொறுக்குத் தீனியாக இக்கனிகளை உண்கின்றனர். அதன் காரணமாக பெரிய நகரங்களில் தள்ளுவண்டியில் ஏற்றி வந்து, கிலோ அளவில் விற்கப்படுகிறது. இந்த எண்ணெய் பச்சை நிறச் சாயையுடையது. உண்ணும் எண்ணெயாகப் பயன்படுத்தலாம். மற்றும் சோப்புத் தயாரிக்கவும் பயன்படும்.

**இலையில் இன்சுலினைப் போன்றதொரு சத்து இருப்பதாகக் கண்டுள்ளனர். பூக்களில் மகரந்தம் அதிகமாக உள்ளது. ஜனவரி மாதத்தில் தேனீக்களின் தேவையை அது பூர்த்தி செய்திடும்.** தேனும் நல்ல ருசியாக இருக்கும். மரம் நல்ல விறகாகும். ஆனால் எரியும்போது அதிக அளவில் புகையைக் கக்கும். செங்கல் சூளைக்கு ஏற்ற எரிதுரும்பு.

காற்று தடுப்பிற்குச் சிறந்த மரம், வேலி ஓரமாக நட்டு, தோட்டங்களில் காற்றின் பாதிப்பைக் கட்டுப்படுத்தலாம்.

கொடுக்காய்ப்புளி, பல்வேறு சூழ் நிலைளிலும் வளரக் கூடியது. தரிசாகக் கிடக்கும் மண் அரிப்பு ஏற்பட்ட இடங்கள், மணல் பகுதிகள், கடலோர மணல் பகுதிகள், உவர் நிலங்கள் எனப் பல்வேறு ஒவ்வாத சூழ்நிலை களுடைய இடங்களில் எல்லாம் வளர்ந்திடும். கடற்கரைப் பகுதிகளில், **உப்பு நீர் மட்டத்திற்கு வேர்கள் பரவினாலும் கூட, மரம் வளர்ந் திடும்.**

**மொத்தத்தில் கடலோரக் கிராமப் பகுதிகளுக்கு கொடுக்காய்ப் புளிமரம் ஒரு வரப் பிரசாதமாகும். இங்கு கடல் அலை வீசும் பகுதி வரை நடலாம்.** கொடுக்காய்ப் புளியை விதைகள் மூலமாகவும் போத்துக்களைக் கொண்டும் வளர்க்கலாம்.

## 118) தஞ்சை ஆனந்தா லாட்ஜ்

விடுமுறை தினங்களில் வையச்சேரிக்கு சென்றாலும் அங்கிருந்து தஞ்சாவூருக்கு அடிக்கடி சென்று வருவதுண்டு. குறிப்பாகத் திருமுருக கிருபானந்த வாரியாருடைய இராமாயண சொற்பொழிவையும், எம்பார் விஜயராகவாசார் யார் ஆற்றிவந்த ஹரி கதைகளையும் கேட்பதற்காக மாலை வேளைகளில் தஞ்சைக்கு சென்றுவிட்டு இரவு 9.30 மணிக்கு ஊர் திரும்பி விடுவேன். திட்டையிலிருந்து தஞ்சை சென்று வருவதற்கு 6 அணாக்கள்தான் தேவை. வெளியில் எங்கும் உணவு பண்டங்களை வாங்கிச் சாப்பிடுவதில்லை.

ஏனெனில் அதற்கு பொருளாதாரம் இடம் கொடுக் காது. எப்போதாவது கையில் ஒரு ரூபாய் இருக்கக் கூடுமா னால் தஞ்சை ரயிலடிக்கு அண்மையில் அமைந்திருந்த ஆன ந்தா லாட்ஜ் உணவு விடுதிக்குச் சென்று ரவாதோசை மட்டு ம் சாப்பிடுவதுண்டு. சுமார் 1930 முதல் 1960 வரை ஆன ந்தா லாட்ஜ் என்ற ஹோட்டலை ஒரு ராயர் நடத்திவந்தார்.



1955 ஆம் ஆண்டு வரை பிராமணர்கள் உணவு அருந்துவ தற்குத் தனி இடம் உண்டு. 1955 முதல் 60 வரை கோபா லஸ்வாமி ஐயர் என்பார் இந்த ஹோட்டலை நடத்திவந்தார். இந்த ஹோட்டலின் பின்பக்கம் குளிப்பதற்கும், ஓய்வு எடுப் பதற்கும் பெரியதொரு தாழ்வாரம் உண்டு. தஞ்சை சென் றால் இந்த இடத்தில் ஓரிரு நாட்கள் தங்கிக் கொள்ளலாம். இதற்கெனத் தனி கட்டணம் வசூலிப்பதில்லை. **(*1960 ஆம் ஆண்டுக்குப் பிறகு திருநெல்வேலி ரெட்டியார்கள் ஆனந்த பவன் என்று இந்த உணவு விடுதியின் பெயரை மாற்றி நடத்தி வந்தனர்*).**

## 119) பில்டர் காபியைத் தேடி அலைவோர்க்கு புகலிடம் அளித்த மங்களாம்பிகா லாட்ஜ்

எல்லையம்மன் கோயில் தெருவில் சரவணபவன் என்ற உணவு விடுதியைப் பாலக்காடு வெங்கடேச ஐயர் நடத்தி வந்தார். இதே போன்று மேற்கு அலங்கத்தில் அமை ந்திருந்த **நடார்** முத்தையர் ஹோட்டலில் வீட்டுச் சாப்பாடு போன்று உணவுத் தயாரிப்புகள் அமைந்திருக்கும். **(*தஞ்சை, கும்பகோணம் நெடுஞ்சாலையில் வெட்டாற்று பாலத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது நடார் கிராமம்.*)** இதில் பிராமணர் களுக்கென்று ஒரு பிரிவும், பிராமணரல்லாதார்க்கு ஒரு பிரிவும் உண்டு. தஞ்சை மணிக்கூண்டுக்கருகில் அமைந் திருந்த மங்களாம்பிகா லாட்ஜில் அருமையான பில்டர் காபி கிடைக்கும். வெளியூரிலிருந்து பலர் இந்த காபியை அருந்து வதற்காகவே மங்களாம்பிகா லாட்ஜிற்கு வருவார்கள். இந்த ஹோட்டலையும் பாலக்காடு ஐயர் ஒருவர் நடத்திவந்தார்.

## 120) தஞ்சாவூர்க் கதம்பமும், தலையாட்டி பொம்மையும்

தஞ்சாவூர் என்றாலே நம் நினைவுக்கு வருவது

(தஞ்சைப் பெரியகோயிலைத் தவிர்ந்து) தஞ்சாவூர் கதம்பம், தலையாட்டி பொம்மை, குடைமிளகாய், முந்திரிப்பருப்பு, முட்டை போன்று வெள்ளை நிறத்தில் முட்களுடன் கூடிய கத்திரிக்காய் முதலியனவாகும். தஞ்சை ரயில் நிலையத்திலிருந்து வெளியே வரும் மக்களை முதலில் வரவேற்பது, ரயிலடியில் காணப்படும் பூக்கடைகளே. ரோஜா, மல்லிகை, மருக்கொழுந்து, வெட்டிவேர், சிவந்திப்பூ, தாழம்பூ முதலிய பல்வேறு மலர்களும், ஒன்றாய் இணைந்து மணம் பரப்பும் தஞ்சாவூர் கதம்பமும், அவற்றைச் சுற்றி வட்டமிடும் தேனீக்களும், பூக்கடையை ஒட்டியுள்ள கடைகளில், அடிப்பகுதிகளில் மண்ணாலும், மேற்பகுதி காகிதக் கூழாலும் ஆன தலையாட்டி பொம்மைகளும் தஞ்சாவூருக்கே உரித்தானவை. நடைபாதையில் விற்பனையாகும் குடைமிளகாயும், முந்திரிப் பருப்பு கடைகளும் காண்போரைக் கவர்ந்திழுக்கும். ***(தற்போது இந்தக் காட்சிகளைக் காண இயலவில்லை.)***

## 121) திருவையாறு அவுட் ஏஜென்ஸி

தஞ்சையில் இன்று காணப்படும் பேருந்து நிலையம் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இருக்கவில்லை. ரயிலடியை அடுத்த சிறிய இடத்தில் சுமார் பத்து பேருந்துகள் நிற்கக் கூடிய அளவில் பேருந்து நிலையம் அமைந்திருந்தது. திருவையாறுக்கு செல்லும் பயணிகளுக்கு ரயில்வே ‘அவுட் ஏஜென்சி’ பேருந்துகளை அமைத்து ரயிலடியிலிருந்து ஏற்றிச் செல்லும். SMT என்றழைக்கப்பட்டு வந்த சுவாமி மோட்டார் டிரான்ஸ்போர்ட் பேருந்துகளே ரயிலடிக்கு வந்து சேரும். வெளியூர்களில் இருந்து திருவையாறு மற்றும் திருமானூர் (திருவையாறு தாண்டிக் கொள்ளிடத்தின் தென் கரைக்கு திருமானூர் என்று பெயர். இது தஞ்சை மாவட்டத்தின் வடவெல்லை. அங்குள்ள கொள்ளிடம் ஆற்றைத் தாண்டினால் பழுவூரை அடையலாம். திருமானூரையும் அக்கரையையும் இணைப்பதற்கு அந்தக் காலகட்டத்தில் பாலம் கிடையாது. பரிசிலில் தான் ஆற்றைக் கடக்கவேண்டும்.) திருவையாறு, திருமானூர் ஆகிய ஊர்களுக்குச் செல்வதற்கு வெளியூரில் இருந்து ரயில் பயணம் செல்பவர்கள் ரயில் டிக்கட்டையே வாங்கிக் கொள்ளலாம். அந்த டிக்கெட்டைக் காண்பித்து திருவையாறுக்குச் செல்லலாம். திருவையாறு மற்றும் திருமானூர் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் அந்த நாட்களில் ரயிலடிக்கு வந்து செல்லும். அந்நாளில் வல்லம் செல்வதற்கு இருபுறமும் அடர்த்தியான முந்திரிக்காடுகள் நிறைந்த சாலையில் அச்சத்துடன் குதிரை வண்டியில் தான் செல்ல வேண்டியிருந்தது. வல்லம் போவதற்கு தஞ்சையிலிருந்து 3 வழிப்பாதைகள் உண்டு. அதில் நம்பர் 1 ரோடு என்று அழைக்கப்பட்டு வந்த சாலையில் ஆங்கில துரைமார்கள்தான் சென்று வரமுடியும். சுதந்திரத்திற்கு பிறகு மாவட்ட ஆட்சியாளர்கள் போன்ற உயர் அதிகாரிகள்தான் இந்தப் பாதையை உபயோகித்து வந்தனர்.



## 122) தஞ்சை - பழைய பேருந்துநிலையம்

தற்சமயம் பேருந்துநிலையம் உள்ள இடம் அப்போது அகழியாக இருந்து தகர்க்கப்பட்டிருந்தது. தகர்க்கப்பட்ட இடம் கெட்டிப்பட்ட பின்னர்தான் பேருந்துநிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இந்த இடத்தில் ஒரு கம்பத்தில் நான்கு ஒலிபெருக்கிகள் அமைத்து, வானொலி நிகழ்ச்சிகளை மாலை 5.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை, நகர மன்றம் ஒலிபரப்பச் செய்தது. இதனால் இந்த இடம் பலரின் பொழுதுபோக்கும் இடமாக இருந்தது. 1953ஆம் ஆண்டில் உருவான இந்தப் பேருந்து நிலையம் முதலில் ஐம்பது பேருந்துகள் நிற்கக்கூடிய நிலையமாக அமைக்கப்பட்டு, காலப்

போக்கில் வளர்ச்சியுற்று இன்று மேலும் விரிவடைந்துள்ளது. (இதுவே பழைய பஸ்ஸ்டாண்டு என்று அழைக்கப்பட்டு வருகிறது.)

## 123) மெலட்டூர் பாகவத மேளா

தஞ்சைத் தரணியில் நாட்டுப்புறக் கலைகள் நீண்ட நாட்களாக மக்கள் ஆதரவைப் பெற்று வந்துள்ளன. மயில் ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், இன்னிசைச் சொற்பொழிவு, நாட்டிய நாடகம், தெருக்கூத்து, உடுக்கடிப்பாட்டு போன்ற கலைகள் தஞ்சையில் நன்கு வளர்ந்தன.

அபிநயம், ஆட்டம், பாட்டு, வசனம் ஆகியவைகளுடன் கூடிய நாட்டிய நாடகங்கள் இதிகாச புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டன. ஆந்திரப் பிரதேசத்தில் ஸ்ரீமத் பாகவதம் கதையில் சிலவற்றை இசை நாடகமாக நடித்தனர். 15ஆம் நூற்றாண்டில் விஜயநகர அரசர்கள் காலத்தில் தஞ்சையில் நாட்டிய நாடகங்கள் நடைபெற்றன. ஐம்பது குடும்பங்கள் தஞ்சையில் குடியேறி குச்சுபிடி அடிப்படையில் நாட்டிய நாடகம் நடத்தி வந்தனர். இவர்களுக்கு மானியமாக **அச்சுதபுரத்தை நாயக்க மன்னர் அளித்தார்**. அதுதான் இன்றைய மெலட்டூர். விஜயநகர வீழ்ச்சிக்குப் பின் இக்கலையும் வீழ்ந்தது. ஆயினும் இத்தகைய நாட்டிய நாடகங்கள் மீண்டும் 18ஆம் நூற்றாண்டில் புத்துயிர் பெற்றன. கி.பி. 1725 ஆம் ஆண்டில் குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகமும், கி.பி. 1734 ஆம் ஆண்டில் கும்பேசர் குறவஞ்சியும் நடைபெற்று வந்தன.

இசைக்கலையும், பரதக்கலையும் இணைந்த பாகவத மேளா நாடகங்கள் தஞ்சை மாவட்டத்தில் பல கோயில்களில் ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் உற்சவங்களின் போது



நடைபெறுவது வழக்கம். தஞ்சையை அடுத்துள்ள மெலட்டூரில் இன்றும் நடைபெற்று வரும் பாகவதமேளா நாட்டிய நாடகங்கள் மக்களைக் கவர்ந்து வருகின்றன.

தஞ்சைக்கு அருகில் உள்ள பசுபதி கோயிலின் அருகே உள்ள சூலமங்கலம் ஸ்ரீசௌந்தரராஜப் பெருமாள் ஸந்நிதிக்கு எதிரில் பெரிய கீற்றுக் கொட்டகை அமைத்து, அங்கே பிரகலாதா, ருக்மாங்கதன், மார்க்கண்டேயர், உமாபரிணியம் போன்ற நாடகங்களை பாகவதமேளா நாடகங்களாக பக்தி சிரத்தையுடன் ஆண்டுதோறும் நடிப்பர். சூலமங்கலத்தைச் சார்ந்த கலைஞர்கள் எங்கு இருந்தாலும், நாடகங்களில் நடிக்க வந்து சேர்ந்து விடுவார்கள். மே மாதத்தில் வந்துவிடும் இவர்கள் உடன் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். நடிப்பதற்காக ஒரு குழு, இசைக்காக ஒரு குழு பயிற்சிக்கு ஒரு குழு என அமைத்துக் கொள்கிறார்கள். இதற்காகும் செலவைக் கிராம மக்கள் ஏற்கிறார்கள். எந்தவித பலனையும் எதிர்பாராமல், கலைக்கு கட்டுப்பட்ட தொண்டாகச் செய்கின்றனர். இந்நாடகங்களை மக்கள் விடிய விடிய, மெய் மறந்து பார்த்து ரசிப்பார்கள். நாடகங்களில் வரும் பெண் கதாபாத்திரங்களை ஆண்களே ஏற்று நடிப்பர்.

19ஆம் நூற்றாண்டில் மெலட்டூர் வெங்கட்ராம சாஸ்திரிகளால் ‘பாகவதமேளா’ என்ற நாடகம் தெலுங்கில் நடத்தப்பட்டது. மராட்டிய மன்னர்கள் இக்கலைக்கு நல்ல ஆதரவு நல்கினர். தஞ்சையை ஆண்ட இரண்டாம் சரபோஜி மன்னர் வடுவூருக்கு அருகில் ஒரு கிராமத்தையே, நாட்டிய நாடக கலைஞர்களுக்கு மான்யமாக வழங்கியுள்ளார். அந்த ஊர் ‘பாகவதமேளா’ என்ற பெயரைப் பெற்றது.

திட்டை ரயில்நிலையத்திலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது மெலட்டூர் கிராமம். சித்திரை மாதத்

தின் இறுதியில் இங்கு பாகவதமேளா நடைபெறும். கம்ஸவதம், சத்திய ஹரிச்சந்திரா, ஹரிஹர லீலா விலாசம், சீதா கல்யாணம் போன்ற நாட்டிய நாடகங்கள் ஒரு வாரத்திற்கு நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் என் தந்தையார் தவறாது இந்த பாகவத மேளாவுக்குச் சென்று வருவார். நான் ஒரே ஒரு முறை பாகவத மேளாவின்போது இந்த ஊருக்குச் சென்று வந்துள்ளேன். நான் அந்த ஊருக்குச் சென்றபோது சத்திய ஹரிச்சந்திரா நாடகத்தைக் கண்டேன்.

இந்த வகை நாடகங்களில் பங்கு கொள்வோர் ஹைதராபாத், பாம்பே, சென்னை போன்ற நகரங்களில் வேலை பார்த்து வருபவர்கள். அனைவரும் விடுப்பில் இந்த ஊருக்கு வருகை தந்து இந்த மேளாவில் பங்கு கொள்வர். பக்கவாத்தியக்காரர்களும், உப நடிகர்களும் சாலியமங்கலம், நீடாமங்கலம் போன்ற ஊர்களில் இருந்து வந்து சேருவர்.

மேல ஊர் என்ற சொல்லே மெலட்டூராக மருவியது என்பர். மராட்டிய மன்னனான முதலாம் துளஜா காலத்தில் காஞ்சிபுரத்திலிருந்து ஒரு குடும்பத்தினர் இந்த ஊருக்கு குடி பெயர்ந்தனர் என்று சொல்லப் படுகிறது. முகம்மதியர் படையெடுப்புக்கு அஞ்சி சில காலம் காஞ்சி வரதராஜப் பெருமாள் இந்த ஊரில் கோயில் கொண்டிருந்ததாக செவி வழிச் செய்திகள் மூலம் அறியப்படுகிறது. மன்னர்கள் காலத்தில் மெலட்டூரைத் தவிர சுற்றியுள்ள கிராமங்களான சூலமங்கலம், சாலியமங்கலம், நல்லூர், ஊத்துக்காடு மற்றும் தேப்பெருமாள் நல்லூர் ஆகிய ஊர்களில் பாகவத மேளா நடைபெற்று வந்ததாக அறியப்படுகிறது. திரு. பரதம் நடேச ஐயர் என்பார் (கி.பி. 1865 - 1935) இந்தக் கலைக்கு புத்துயிர் அளித்தார். 1938ஆம் ஆண்டு பாகவத மேளா வின் வளர்ப்புத் தந்தை என்று போற்றப்படும் திரு.கணேச ஐயர் என்பார் மெலட்டூர் ஸ்ரீ லக்ஷ்மி



நருஸிம்ஹ ஜெயந்தி, பாகவதமேளா, நாட்டிய நாடக சங்கத்தைத் தோற்றுவித்தார். அதன்பிறகு பத்மஸ்ரீ ஸ்ரீபாலு பாகவதர் நீண்ட நாட்கள் இந்த நாட்டியக் குழுவின் தலைவராக இருந்து வந்தார்.

இன்று இக்கலைக்கு ஆதரவு குறைந்துவிட்டாலும், சாலிய மங்கலம், மெலட்டூர் போன்ற ஊர்களில் இவை நடைபெறுகின்றன. மெலட்டூர் பெருமாள் கோயிலின் வெளிப்புறத்தில் நரசிம்ம ஜெயந்தி அன்று (மே மாதத்தில்) பக்த பிரகலாதன் கதையை நாட்டிய நாடகமாக இன்றும் நடத்தி வருகின்றனர். இந்நாடகத்தைக் காண இறைவனே அங்கு எழுந்தருள்கிறார் என அவ்வூர் மக்கள் நம்புகின்றனர். நரசிம்மர் வேடம் தாங்குபவர், ஆசாரத்துடன் இருப்பார். அன்று ஒரு நாள் அவர் எந்த உணவையும் அருந்தமாட்டார். அவருக்கு நரசிம்மர் முகமூடி அணிவிக்கப்படும். நரசிம்ம வேடம் தாங்குபவருக்கு ஆவேசம் வந்து விடுவதால், இரணியனைக் கொன்று அவன் குடலை மாலையாக அணியும் காட்சி நடத்தப்படுவதில்லை. அவருக்கு ஆவேசம் தணிய சில வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

நாடகம் தொடங்குவதற்கு முன்னர், கையால் தாளம் போட்டு விநாயகர் வழிபாடு ஒரு பகுதியாக தொன்று தொட்டு நடத்தப்பட்டு வருகிறது. கோணங்கி தாசர் என்ற விதூஷகன் மேடையில் தோன்றி நாடக ஆசிரியரைப் பற்றி புகழ்ந்து பாடி அபிநயம்பிடிப்பார். உடை, தலை அலங்காரம், ஒப்பனை போன்றவற்றில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்கின்றனர். பெண் வேடமிடுபவர் பரதநாட்டிய, உடையை அணிகிறார். ஆண் பைஜாமா உடையையும், கிரீடம் முதலியன அணிகிறார். நரசிம்மர் முகமூடியைத் தவிர விநாயகர், பிரமன், அரக்கர் போன்றோர் முகமூடி அலங்காரம்

உள்ளன. தஞ்சை மெலட்டூர் என்றாலே நாட்டிய நாடகம் என்ற எண்ணமே நினைவுக்கு வரும்.

## 124) ஹரிகதையின் தோற்றமும், வளர்ச்சியும்

'இலக்கிய இன்னிசைப் பேருரை' என்று இன்று விளங்கி வரும் கதாகாலட்சேபம் முதலியன மராட்டிய மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வந்த கலையாகும். ஆடற்கலை, இசைக்கலை, நாடகக் கலை என்றுள்ள கலைகள் ஒருங்கிணைந்து உருவான கலையே கதா காலட்சேபக் கலையாகும். மராட்டிய மன்னர்கள் காலத்தில் இக்கலை தஞ்சைத் தரணியில் தழைத்தோங்கியது.

18-ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட காமாட்சி பாய் சாகேப் என்பவரின் காலத்தில் மராட்டிய கலைஞர் இராமச்சந்திர மூர்கூர்பாவா என்பவர் மூலம் இக்கலை தஞ்சை மண்ணில் பரவியது. காமாட்சிபாய் சாகேப் என்ற இந்த அரசியின் விருப்பப்படி சில நாட்கள் ஹரி கதையை நிகழ்த்தினார். தஞ்சை மேல ராஜ வீதியில் உள்ள பங்காரு காமாட்சி அம்மன் கோயிலில் முதல் முதலாக மராட்டிய மொழியில் கதையை நடத்தினார். தஞ்சையிலிருந்த மராட்டியர்கள் இதை வெகுவாக ரசித்தார்கள். இம்மொழியை அறியாத மக்களும் இதை நன்கு ரசித்தனர். திருவையாறு தியாக பிரும்மம் தியாகையர், இவருடைய கதையைக் கேட்க தஞ்சைக்கு வருவாராம். அரசியின் வேண்டுகோளுக்கு இணங்க தஞ்சையிலேயே நாற்பது ஆண்டுகள் இராமச்சந்திர பாவா தங்கி விட்டார்.

கதா காலட்சேபக் கலை ஒரு கவின் கலையாகும். பழைய புராண இதிஹாசங்களை மக்களுக்கு அளிக்கும் கவின் கலைகளில் சிறப்பான இடம்பெறுகிறது. திருமாலின் அவதார மகிமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பயன்பட்டதால் முதலில் 'ஹரிகதை' என்று இக்கலை பெயர்பெற்றது. சிவனைப் பற்றி எடுத்துரைத்தாலும் கூட அதையும், ஹரிகதை என்றே கூறினர். நாற்பது ஆண்டுகள் கதா காலட்சேபம் நடத்திய இராமச்சந்திர பாவாவின் மறைவிற்குப் பின்னர் அவருடைய மகன் விஷ்ணு கதா காலட்சேபக் கலையை வளர்த்தார். கி.பி. 1847 முதல் 1903 வரை வாழ்ந்த ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் கதையில் புதிய உத்திகளைப் புகுத்தி மக்கள் மனத்தைக் கவர்ந்தார்.



தஞ்சையில் செல்வாக்குடன் விளங்கிய வேங்கட சுவாமி நாயுடு என்ற தஞ்சை பெரியண்ணா இக்கலைக்கு மிகவும் ஆதரவு நல்கினார். மராட்டிய முறையை மாற்றி தமிழ் முறைக்கு ஏற்ப கதா காலட்சேபம் செய்யும் முறையை வகுத்த பெருமை பெரியண்ணாவையே சாரும். அமைச்சராகப் பணி புரிந்த பெரியண்ணா ஓர் அந்தணச் சிறுவனை ஆதரித்து அவனுக்கு இசைக் கலை மற்றும் நிருத்தமும் கற்பிக்க ஏற்பாடு செய்தார். இச்சிறுவன் இராமச்சந்திர பாவாவிடம் பாடம் பயின்று, கதா காலட்சேபம் செய்யும் நுணுக்கங்களை அறிந்தான். தென்னாடு, வடநாடு பாணிகளை இணைத்து புதிய முறையில் கதா காலட்சேபத்தை நிகழ்த்தினான். அந்தச் சிறுவனே ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் என்ற பெயருடன் இக்கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தான்.

ஸ்ரீ கிருஷ்ண பாகவதர், ருக்மணி கல்யாணம், சீதா கல்யாணம், வத்சலா கல்யாணம், திரௌபதி மான ஸம்ரஷ்ணம் போன்ற கதைகளை மராட்டிய முறையிலிருந்து சற்று மாற்றி நடத்தி மக்கள் மனத்தைக் கவர்ந்தார். மக்கள் இவர் கதைகளைக் கேட்கப் பேரார்வம் காட்டினார்கள். மேடையில் முன்னும், பின்னும் நடந்தவாறு கதை கூறுவது

அன்றைய வழக்கமாக இருந்தது. பின்னர் நின்றவாறும், உட்கார்ந்தும் கதை நிகழ்த்தினர்.

ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் பெற்ற வெற்றியைக் கண்டு சிலர் இக்கலையின்பால் ஆர்வம் காட்டினர். தில்லை ஸ்தானம் நரசிம்ம பாகவதர், பிரும்ம ஸ்ரீ இலட்சனாச்சாரியார், திருப்பழனம் பஞ்சாப கேச சாஸ்திரியார் தஞ்சை பஞ்சாபகேச பாகவதர். பிரும்மஸ்ரீ குலமங்கலம் வைத்தியநாத பாகவதர். பிரும்ம ஸ்ரீ சிதம்பர பாகவதர், அரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களில் அரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் தலைசிறந்து விளங்கினார்.

பின்னர் வந்த கலைஞர்கள் ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் கையாண்ட முறையையே மேற் கொண்டனர். ஆனால் திருமுருக கிருபானந்த வாரியார் அவர் கள் அம்முறையை மாற்றி அமைத்து சிறப்பு பெற்றார். இவர் பக்கவாத்தியங்களுடன் தமக்கே உரித்த குரலில் இராமாயண இசைப் பேருரையை தஞ்சைப் பெரியகோயில் வளாகத்தில் 1955ஆம் ஆண்டு வைகாசி மாதம் நிகழ்த்தி வந்தார். அப்போது 10 நாட்கள் அவருடைய இலக்கியப் பேருரையை நான் கேட்டு மகிழ்ந்தேன்.

## 125) ஹரிகதை வல்லுநர் எம்பார் விஜயராகவாசார் யர்

மேற்கு வீதியில் பங்காரு காமாட்சி அம்மன் கோயிலும் அதனை ஒட்டி கிருஷ்ணன் கோயிலும் அமைந்துள்ளன. இந்த கிருஷ்ணன் கோயிலில் பலமுறை எம்பார் விஜயராகவாசார் யர் ஹரி கதை நிகழ்த்தி வந்தார். அவருடைய ஹரி கதையைக் கேட்பதற்கென மக்கள் திரண்டு வருவர். 1955ஆம் ஆண்டு கோடை விடுமுறையின்போது ஸ்ரீமத் பாகவதத்தை ஹரி கதையாக இவர் நிகழ்த்தி வந்தார். இவருடைய திவ்யப்



ரபந்த பயிற்சி பூர்வாசார்யர்கள் அருளிச் செய்த வ்யாக்யானங்கள், இசையுடன் கலந்த குரல் வளம் ஆகியவை இவருடைய ஸ்ரீமத் பாகவத இசைப் பேருரையை வளமிக்க ஒன்றாக ஆக்கியது.

மராட்டிய மொழியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நுழைந்த கதாகாலட்சேபம் எனும் இசையுடன் கலந்த புராணச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் மிகவும் புகழ் வாய்ந்தவர் எம்பார் விஜயராகவாச்சாரியார். 4.11.1908 - ஆம் நாள் சிதம்பரத்தில் பிறந்த இவர், பிற்காலத்தில் ஸ்ரீரங்கத்திலேயே வாழ்ந்து வந்தார். இவரது பாட்டனார் எம்பார் வரதாச்சாரியாரும், தந்தையார் எம்பார் ரங்காச்சாரியாரும் சிறந்த ஹரிகதாகாலட்சேபக் கலைஞர்களாகத் திகழ்ந்தவர்கள். இவரது பாட்டனார், வடலூர் அருட் பிரகாச வள்ளலாருடன் நல்ல நட்பு கொண்டிருந்தார்.

எம்பார் விஜயராகவாச்சாரியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வேதாந்த சிரோமணி, சாஹித்திய சிரோமணி முதலிய பட்டங்களைப் பெற்றுள்ளார். மகாமகோபாத்தியாய தண்டபாணி தேசிகரிடம் மாணாக்கராகத் தமிழ் பயின்றுஉள்ளார். தமிழ், ஸமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித் தியம் பெற்றவர். ஹரிகதா காலட்சேபத்தை தமிழ் நாட்டில் உள்ள பெரும்பாலான ஊர்களில் 60 ஆண்டுகள் தொடர்ந்து நிகழ்த்திய பெருமை இவருக்கு உண்டு. தமிழ்நாடு மட்டுமல்லாது இந்தியாவின் பல பகுதிகளிலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் பலமுறை சென்று ஹரிகதை நடத்தியுள்ளார்.

கீர்த்தன குலசேகர, சங்கீத சாகித்திய வல்லப, கலைமாமணி, சங்கீத கலாசிகாமணி போன்ற பல விருதுகளைப்

பெற்றவர். இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பின ராக வும், தஞ்சையில் தொடங்கப்பட்ட ஹரிகதை பள்ளியின் மு தல்வராகவும் இருந்துள்ளார். இவருக்கு மூன்று மகள்களும், நான்கு மகன்களும் இருக்கின்றனர். கதாகாலட்சேபக் கலையின் மிகச் சிறந்த வல்லுனரான எம்பார் விஜயராகவா சார்யர் 2.6.1991 - இல் ஆசார்யன் திருவடியை அடைந்தார்.

*(எம்பார் விஜயராகவாசார்யர் உபதேசரத்னமாலை என்ற தலைப்பில் மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலன் திருமுன்பு ஓர் உபன் ய ாஸம் செய்தார். இந்த உபன்யாஸத்தை என்னுடைய 24-ஆவது வய தில் கேட்கலுற்றேன். அன்று அவர் உபதேசரத்னமாலையின் அர்த்தத்தை எடுத்துக் கூறியது என் மனதில் ஆழமாகப் பதிந்தது. நம்மு டைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் உள்ள மற்றைய நூல்களைப் படித்து இன்புற வேண்டும் என்ற வேட்கையை என்னுள் எழுப்பியவர் எம்பார் விஜயராகவாச்சாரியர் ஸ்வாமி ஆவார். 1970 - ஆம் ஆண்டு (என்னுடைய 31வது வயதில்) ஹைதராபாத் மாநகரில் இந்த ஸ்வாமி முப்பது நாள் திருப்பாவைச் சொற்பொழிவாற்றினார். முப்பது நாளும் அவருடைய சொற்பொழிவைக் கேட்டு அடியேன் பயன் பெற்றேன்.)*

## 126) வையச்சேரியில் மாட்டுப் பொங்கல்

வையச்சேரியில் எங்கள் குடும்பத்திற்கு பல்வகை யிலும் உதவி புரிந்து வந்த சாம்பசிவ ஐயர் இல்லத்திற்கு எதிர் இல்லத்தில் குடிபுகுந்தோம். களப்பாலில் இருந்து எங்கள் வீட்டு சாமான்களோடு கால்நடையாக நடந்து வந்த இரண்டு பசுமாடுகள் கொட்டிலில் இருந்துகொண்டு அம்மா, அம்மா என்று குரல் கொடுத்துக் கொண்டிருக்கும். அந்த மாடுகளின் பின்னங்கால்களை பிணைத்து பால் கறப்பதற்கு எங்கள் தாயா ரால் மட்டுமே முடியும். தாயார் வீட்டுவிலக்கான நாட்களில் பால் கறக்கமாட்டோம். அனைத்து பாலும் கன்றுக்குட்டிக ளுக்கே விடப்படும். ஸங்க்ராந்திக்கு அடுத்த நாளான மாட்



டுப் பொங்கலன்று பசுமாடுகளை நன்றாகக் குளிப்பாட்டி நெற் றியில் குங்குமம் வைத்து கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, வண்ணமிகு நெட்டி மாலைகளை ***(குளங்களின் கரையோரங்க ளில் வளரும் ஒரு வகை தடித்த கோரையை அறுத்து வெயிலில் காய வைத்து அவற்றை பல வண்ணச்சாயக் கலவைகளில் ஊறவைத்து, மீண்டும் வெயிலில் காயவைத்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, அவற்றை மாலையாக்குவர். இந்த மாலைக்கு நெட்டிமாலை என்று பெயர்.)*** மாடுகளுக்கு அணிவிப்பர்.

அந்த மாடுகளை மாலை வேளையில் தெருவில் ஓட விடுவோம். மாட்டுப் பொங்கலன்று காலை மாட்டுக் கொட் டிலை நன்றாகப் பெருக்கிச் சாணமிட்டு மெழுகி, வண்ணக் கோலங்கள் இடப்படும். சாணியினாலான சிறு தொட்டிக்கு ள் மஞ்சள் நீர் சேர்த்து அதில் நெற்கதிர் நடப்பட்டிருக்கும். கொட்டிலுக்கு தீயினால் ஆபத்து நேராவண்ணம் ஊது பத்திகள் ஏற்றிவைக்கப்பட்டிருக்கும். மாடுகளுக்குக் குழை ந்த சாதத்துடன் வெல்லக்கட்டிகள் சேர்த்து தீவனமாக கொடு க்கப்படும். இவற்றில் அதிக அளவில் வாழைப்பழம் சேர்க்க ப்பட்டி ருக்கும். அன்றைய தினம் மாட்டுக்கொட்டில் ஒரு சீமானுடைய மாளிகை போல காட்சியளிக்கும்.

## 127) ஹாலாசியம் ஐயர் வீட்டிற்குக் குடிபெயர்ந்தோம்

நாங்கள் இருந்த வீட்டின் உரிமையாளர் வையச்சேரி க்கு மீண்டும் குடிவந்ததால் அதே அக்ரஹாரத்தில் ஆங் கரை திரு. ஹாலாசியம் ஐயர் என்பாருக்குச் சொந்தமான வீட்டிற்கு குடிபெயர்ந்தோம். திருச்சிராப்பள்ளி மாவட்ட சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய முன்னோடி வீரர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. ஹாலாசியம் அவர்கள். லால்குடி வட்டம் ஆங்கரையில் 7-5-1896 இல் நாராயணசு

வாமி ஐயர், பெருந்திரு. அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிற ந்தவர் ஹாலாசியம் அவர்கள்.

காந்தி, படேல், சரோஜினி நாயுடு, டி. பிரகாசம், நேரு, ராஜேந்திர பிரசாத் போன்றோர் தமிழகம் வரும்போது அவர் களது சொற்பொழிவுகளைத் தமிழில் மொழி பெயர்க்கும் பணியைச் சிற ப்பாகச் செய்துள்ளார். 1936 இல் கடவூர் ஜமீன்தாருடன் போட் டியிட்டு அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்று எம்.எல்.ஏவும் ஆனார். 1930 ஏப்ரல் திங்கள் 6ஆம் நாள் நடந்த வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகப் போரிலும், 1942 இல் நடந்த வெள்ளை யனே வெளியேறு இயக்கத்திலும் தீவிரமாகப் பங்கேற்றுச் சிறை சென்றவர்.

சுதந்திரப் போராட்டவாதியாகவும், இலக்கியவாதியா கவும், பேச்சாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கிய நா. ஹாலாசியம் அவர்கள் 1954 சனவரி 7ஆம் நாள் தனது 58 வய தில் இயற்கை எய்தினார். வையச்சேரி கிராமத்தில் பெரும்பாலான மக்களுக்கு ஹாலாசியம் ஐயர் வீடு என்று உச்சரிக்க வராது. அந்த வீட்டை யானைக்கால் ஐயர் வீடு என்றே அழைப்பர். ஹாலாசியம் ஐயருக்கு யானைக்கால் இருந்ததோ, இல்லையோ எனக்குத் தெரியா து. வையச்சேரியில் இருந்த வீடு அவருடைய மனைவிக்குச் சொந் தமான வீடு. அதாவது மஞ்சள் காணியாக வந்த வீடு. ***(வசதி படை த்தோர் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்கும்போது அவளுக்கு வீடு மற்றும் நிலங்களை எழுதி வைப்பதுண்டு. இதற்கு மஞ்சள் காணி என்று பெயர் -மஞ்சளுடன் அவள் நீடூழி வாழ்ந்திடவும் புகுந்த வீட்டில் மேம்பட்ட பொருளாதாரத்தைப் பெற்றிருக்கவும் அளிக்கப்படும் வீடு, நிலம் ஆகியவற்றிற்கு மஞ்சள் காணி என்று பெயர். அதுவே மருவி மஞ்சக்காணியாயிற்று.)***

## 128) முதல் ஐந்தாண்டுத்திட்டம் தந்த ஊக்கம்

இந்தியா சுததிரம் அடைந்தபிறகு 1951ஆம் ஆண்டு



முதல் ஐந்தாண்டுத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. நேரு வின் தலைமையிலான மத்திய அரசு கிராமக் கட்டமைப்பு வச திகளைப் பெருக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டது. கிரா மங்களை ஒருங்கிணைக்கும் சாலைகளை அமைப்பதற்கு இத் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

பெருமாக்கநல்லூர் கிராம முன்சீப்பான திரு. துரைசாமி மூப்பனாரின் முயற்சியால் சாலை வசதி சரிவர இல்லாத வையச்சேரியில் இருந்து சூலமங்கலம் கிராமத்திற்கு சுமார் 4 கி.மீ. தூரம் கொண்ட சாலை அமைக்கப்பட்டது. கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊர்மக்கள் ஒன்றுதிரண்டு ஒரு செயலைச் செய்ய முற்பட்டால் அதற்கு ஆன செலவில் 75 சதவீதம் மான்யமாக வழங்கப்பட்டது.

ஊர்மக்கள் தங்கள் உழைப்பை நல்கி புறம்போக்கு நிலங்களை இணைத்து இந்த சாலையை அமைத்தனர். அந்த ஆண்டு தமிழ்நாட்டில் மிகச்சிறந்த ஆக்கப் பணியை மேற்கொ ண்டதற்காக திரு. துரைசாமி மூப்பனாரும் அவருக்கு உதவி யாய் இருந்த என் தந்தையாரும் அரசாங்கத்தால் பாராட்டப் பெற்றனர். இந்த சாலை வழியாக வாகனங்களில் சூலமங்க லம் அக்ரஹாரத்தை அடையலாம். சூலமங்கலம் அக்ரஹா ரம் என்பது 60 அந்தணர் குடியிருப்புகளைக் கொண்டது.

பசுபதி கோயில் ரயில் நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது இந்த அக்ரஹாரம். பசுபதி கோயில் புகைவ ண்டி நிலையத்தையும் அய்யம்பேட்டையையும் இணைக்கும் சாலை முன்னரே அமைந்திருந்ததால் பெருமாக்கநல்லூர் மற் றும் வையச்சேரியிலிருந்து அய்யம்பேட்டைக்கு இரு சக்கர வண்டியிலோ அல்லது மாட்டுவண்டியிலோ சென்று வரலாம்.

## 129) சூலமங்கலம் சிவன் கோயிலும், சேது ராம னின் ஆராய்ச்சியும்

சூலமங்கலம் சகோதரிகள் என்ற புகழ்பெற்ற திரை இசைப் பின்னணிப் பாடகிகள்இந்த ஊரைச் சார்ந்தவர்கள். இந்த ஊரில் உள்ள சிவன் கோயில் பற்றி மிகச் சிறந்த தொல் பொருள் ஆய்வாளரான திரு. சேதுராமன் அவர்கள் எழுதிய கட்டுரையில் இந்தக் கோயிலைப் பற்றிய சிறப்புகள் தெரிவி க்கப்பட்டுள்ளன. அய்யம்பேட்டை செல்லும்போது இந் தக் கோயிலுக்குள் அமைந்திருந்த சிலைகளைக் கண்டு நான் வியந்ததுண்டு. அப்பர் பெருமானது க்ஷேத்திரக் கோவை பதினொன்று பாடல்களைக் கொண்டது. இதில் பத்தாவது பாடலில் ‘நரையூர், சித்தீச்சுரம், நள்ளாறு, நாரையூர், நாகேச் சுரம், நல்லூர், சூலமங்கை...’’ என்பதாகப் பல சிவத்தலங்கள் குறிப்பிடப்படுகின்றன.

சூலமங்கை என்னும் வைப்புத்தலம், சூலமங்கலம் என்னும் பெயரில் தஞ்சை மாவட்டம், பசுபதிகோயில் புகை வண்டி நிலையத்திற்கு அண்மையில் உள்ளது. இவ்வூரில் உள்ள சிவன் கோயிலின் கர்ப்பகிருஹம், அர்த்த மண்டபம் ஆகியவை கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ளன. இறை வனின் (*இன்றைய*) பெயர் க்ருதிவாசேஸ்வரர். யானையின் தோலில் வசிப்பவர் என்பது இதன் பொருள். கல்வெட்டு களில் கரி உரித்த நாயனார் ***(யானைத் தோலை உரித்தவர்)*** என்று கூறப்பட்டு உள்ளது. இப்பெயர் சிவபெருமானின் அஷ்டவீரங்களுள் ஒன்றான கஜசம்ஹாரத்தைச் சுட்டு கின்றது. சிவபெருமானுக்குரிய ஆயிரம் பெயர்களில் ***(சகஸ்ரநாமம்)*** க்ருதிவாசன் என்று எழுபத்து ஒன்றாவது பெயராக லிங்கபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.



இக்கோயிலில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. இவை எல்லாவற்றிலும் ஊரின் பெயர் நித்தவிநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்து பிரம்மதேயம் சூலமங்கலம் என்றே அழைக்கப் படுகிறது. கி.பி.1178 முதல் 1218 வரை அரசாண்ட மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல் வெட்டுகள் இரண்டு உள்ளன. ஒரு கல்வெட்டில் இறை வனின் பெயர் உடையார் கரி உரித்த நாயனார் என்றும், மற்றொன்றில் கரி உரித்த கண்டர் என்றும் கூறப்பட்டுள்ளன. பதினொன்றாம் திருமுறையில் சேரமான் பெருமானின் பொன் வண்ணத் திருவந்தாதிப் பாடல் 29இல், `கண்டங்கரியன் கரியீர் உரியன்’என்று சிவபெருமான் போற்றப் படுவதும் நோக்கத்தக்கது.

போசள மன்னன் வீரராமநாததேவனின் கல்வெட்டில் கரிஉரித்த நாயனார் கோயிலுக்கு நிலங்கள் அளித்தது சொல்லப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.1276 ஆகும். சோழ மண்டலத்தில் 13,14ஆம் நூற்றாண்டுகளில் சுந்தர பாண்டியன் என்ற பெயரில் 10 மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். இவர்களில் யாரோ ஒரு சுந்தர பாண்டியனின் 9ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் கரி உரித்த நாயனாருக்குத் திருக்குடந் தையைச் சேர்ந்த மூன்று அந்தணர் சகோதரர்கள் நிலங்களை விற்றுள்ளனர்.

சடையவர்மன் பராக்கிரம பாண்டியனின் 12ஆம் ஆண்டு (கி.பி.1327)கல்வெட்டில் திருநாவுடைய பிள்ளை யாரின் சிலை எழுந்தருள்விக்கப்பட்டது. இக்கோயில் முன் மண்டபத்திற்கு வெளியே கருங்கல்லில் வடிக்கப்பட்டுள்ள அபூர்வமான சிலை ஒன்று உள்ளது. இதன் உயரம் சுமார் நாலரை அடி இருக்கும். சிரசிற்கு மேல் மிகப் பெரிய சூலம் காணப்படுகிறது. சூலத்தை ஒட்டிக் கீழ்ப்பகுதியில்இரண்டு

கைகளையும் கட்டிக்கொண்டு நிற்கும் நிலையில் உள்ள உருவம் செதுக்கப்பட்டுள்ளது. சிரசின் மத்தியில் தழல் காணப்படுகிறது.

கழுத்தில் ஆபரணமாலைகளும், மார்பில் வேலைப் பாடுகளுடன் கூடிய பூணூலும் உள்ளன (*லதா யக்ஞோபவீதம்*), இரண்டு காதுகளிலும் தோடுகள் உள்ளன. முகத்தில் ஒரு பவ்யமான தோற்றம், பல்லவர் காலக் கலைப் பாணி. சிவபெருமானுக்குச் சூலப்படையினர் என்ற பெயரும் உண்டு. இதனை மூவர் முதலிகளின் தேவாரங்களில் காணலாம். பெருமானது கணங்களாகிய சூலப்படையினரில் ஒரு கணமாக இச்சிலை இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. சூலமங்கலம் என்னும் பெயருக்கு ஏற்பச் சூலப்படைக் கணங்களின் சிலை ஒன்று இவ்வூரில் இருப்பது ஆய்வுக் குரியது. இவ்வாய்வினைக் குஜராத் மாநிலத் திலிருந்து தொடங்குவோம்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் குஜராத்தில் லகுலீசர் என்னும் மகான் தோன்றினார். இவர் பாசுபத சைவ சமயத்தைப் பரப்புவதற்காகக் காரோணம் அல்லது காயா ரோஹனம் என்னும் இடத்தில் ஓர் மடத்தை நிறுவினார். அவ்வூர் இன்று பரோடா அருகே கார்வான் என்று அழைக்கப் படுகிறது. காயாரோஹனம் பாசுபத சைவச் சமயத் தலைமைப் பீடத்தின் தாக்கம் இந்தியா முழுவதும் பரவியது. தமிழ்நாட்டிலும் பாசுபதம் வேரூன்றியது.

காரோணம் அல்லது காயாரோஹனம் என்ற பெயரில் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், குடந்தை, நாகைப்பட்டினம் ஆகிய ஊர்களில் மூன்று சிவன் கோயில்கள் இருந்தன. இவற்றில் முதலாவது (காஞ்சியில்) மறைந்துவிட்டது. திருக்குடந்தைக்



காரோணம், திருநாகைக் காரோணம் என்னும் பெயரில் மற்ற இரண்டும் இன்றும் உள்ளன. ஏழாம் நூற்றாண்டில் அவதரித்த திருஞான சம்பந்தர் திருநாகைக் காரோணத்தின் பெரு மானைத் தரிசித்து, ‘புனையும் விரி கொன்றை’ என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். பதினோராவது பாடலில், ‘இப்பதிகத்தைப் பாடுபவர் கரையா உடலோடு கலி வானடைவர்’ என்று சிறப்பித்து உள்ளார்.

இது காயாரோஹனம் என்னும் பாசுபதத்தின் சிறப்பு முத்திரையுடன் ஒத்து வருகிறது. எனவே திருநாகைக் காரோணம் பாசுபத சைவத்துடன் தொடர்புடையது என்பதை அறியலாம். சூலமங்கலம் சிவன் கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனது (கி.பி.1200) கல்வெட்டைப் பார்ப்போம். செயமாணிக்க வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துச் சொழ குலவல்லிப் பட்டிணத்து திருக்காரோணம் உடையார் கோயிலின் கணக்கர்கள், தேவர்அடியார் பெண்கள் நால் வரைச் சூல மங்கலம் கரியுரித்த நாயனார் கோயிலுக்கு விலைப் பரிமாணஞ்செய்து விற்றதாகக் கூறப்பட்டுள்ளது. சோழ குலவல்லிப் பட்டினம் நாகப்பட்டினத்தைக் குறிக்கும் இதனால் நாகைக் காரோணத் திற்கும் சூலமங்கலத்திற்கும் தொடர்பு இருந்தது என்பதை அறிகிறோம். எனவே சூலமங்கலமும் பாசுபத சைவர்களின் இருப்பிடமாக இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்று கிறது.

பாசுபதத்திற்குக் காணாமுகம், காபாலிகம், வைரவம் (பயிரவம்), மாவிரதம் என்னும் கிளைகள் தோன்றின. இப்பிரி வினைச் சேர்ந்த அடியார்கள் கையில் கபாலமும் சூலமும் ஏந்தி இருப்பர். இவர்கள் காலப்போக்கில் வடநாட்டிலிருந்து தென் னாடு நோக்கி வந்தனர். திரு ஒற்றியூர் கோயில் பாசுபத காபாலிகர்களால் பராமரிக்கப்பட்டது என்பதைக் கல்வெட்டு

கள் கூறுகின்றன. திருமயிலை கபாலீஸ்வரர் கோயிலின் பெயரும் ஈண்டு நோக்கத்தக்கது.

சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரியபுராணத்தில் உள்ள சிறுத்தொண்டர் புராணத்தில் வைரவ(பயிரவ) சைவ சமய அடியாரின் கோலம் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. சிவபெருமான் திருக்கயிலையை விட்டு வைரவக் கோலத்துடன் தமிழ்நாட்டுச் செங்காட்டங்குடி சேர்ந்தார். தன் பெயரை உத்தராபதி என்றும் தனக்கு உணவாக மனித மாமிசம் வேண்டுமென்றும், சிறுத்தொண்டரிடம் ஆணை யிட்டார். சிறுத் தொண்டர் தனது மகன் சீராளனைப் பிள்ளைக்கறியமுது செய்து கொடுத்தார். வைரவக் கோலத்தில் இருந்த அடியார் மறைந்தார். அங்கே சிவ பெருமான் காட்சியளித்துச் சீராள னுக்கு உயிர்கொடுத்து, சிறுத்தொண்டருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆசி அருளினார்.

இப்புராண வரலாற்றில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உள்ளது. சிவபெருமான் எங்கும் நிறைந் தவர். கயிலையிலிருந்து வைரவக் கோலத்தில் தமிழ்நாடு நோக்கி வருவானேன்? உத்தராபதி அதாவது வடநாட்டுக்குத் தலைவர் என்று தன் பெயரை உரைப்பானேன்? பாசுபதத்தின் கிளைப்பிரிவாகிய வைரவம்(பயிரவம்) வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வந்தது என்னும் உண்மையே இவ்வினாக்களின் விடையாக அமைகிறது.

வைரவக் கோலத்தவர்கள் சூலம் ஏந்தியிருப்பர். இன்றும் வைரவர் பலர் சைவ சமயத்தைச் சார்ந்த தலத்துக்கு வருகின்றனர். தங்களிடம் உள்ள சூலத்தைக் குறிப்பிட்ட இடத்தில் நட்டுவிட்டுச் செல்வர், இவ்வாறு பல நூற்றாண்டு



களாக நடப்பட்ட ஆயிரக்கணக்கான சூலங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து சூலங்கள் நிறைந்த ஒரு பெரிய மரம் போன்று காட்சி அளிக்கும். நேரில் பார்த்து உள்ளேன். ***(கோரக்பூர் உத்தரபிரதேசத்தில் காசி க்ஷேத்திரத்திற்கு வடக்கில் அறுநூறு கிலோமீட்டர் துாரத்தில் இமயமலைக்கு வெகு அருகே உள்ளது.)*** நாகைப்பட்டினத்தின் அருகில் உள்ள திருவாரூர் தலத்தின் தெருக்களில் ருத்திரர், பல்கணத்தார், மாவிரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், கபாலிகர், ஆகியோர் வசித்து வந்தனர் என்று அப்பர் பெருமானும் கூறுகின்றார் (4,20,3).

சூலமங்கலத்திற்கு கிழக்கில் இருபது கிலோ மீட்டர் துரத்தில் குடமுருட்டி ஆற்றங்கரையில் உடையாளூர் என்னும் கிராமம் உள்ளது. சோழர்களின் கல்வெட்டுகளில் இவ்வூர் மாகேஸ்வர ஸ்தானம் (*பாசுபதர்களின் இருப்பிடம்*) என்று கூறப்பட்டுள்ளது. அருகில் உள்ள பழையாறையில் லகுலீச பண்டிதர் என்னும் அடியார் (*பாசுபத*) மாவிரத மடத்தை நிர்வகித்து வந்தார் என்று பஞ்சவன் மாதேவி ஈஸ்வரத்தில் உள்ள ராஜேந்திர சோழனின் கல்வெட்டும் கூறுகிறது. இதன் காலம் கி.பி.1019 ஆகும். சூலமங்கலத்துக்கு வடமேற்கில் சுமார் இருபது கிலோ மீட்டர் துாரத்தில் திருக்கண்டியூரிலும் லகுலீச பண்டிதரின் மாவிரத மடம் இருந்ததாக ராஜேந்திர சோழனின் கல்வெட்டு கூறுகின்றது.

திருக்கண்டியூரிலும் அருகில் உள்ள செந்தலையிலும் பாசுபத சைவத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட நான்கு தலைகளுடன் கூடிய சிவபெருமானின் திருஉருவச் சிலை களை இன்றும் காணலாம். (*இதனைப் பிரம்மா என்று தவறாகக் கூறுகின்றனர்.*) இச்செய்திகள் சூலமங்கலத்தைப் பற்றிய நமது ஆய்வுக்கு அணி கூட்டுகின்றது. தொகுத்து நோக்கினால்,

சோழமண்டலத்தில், குறிப்பாக, தலைநகருக்கு அருகிலேயே பாசுபத சைவத்தினர், வைரவர் ஆகியோர் இருந்துள்ளனர் என்பதை அறிகிறோம். இவர்கள் சூலமங்கலத்திலும் இருந்துள்ளனர். இத்தலத்தில் இறைவனைக் கரி உரித்த நாயனார் என்று அழைத்தனர்.

சிவபெருமானது அஷ்டவீரங்களுள் ஒன்றான கஜசம்ஹாரரின் சிலையில் கையில் சூலம் இருக்கும். அப்பர் பெருமான் திருச்சேறைப் பதிகத்தில் “கால பயிரவனாகி வேழம் உரித்து”... (4.73.6) என்று கூறுவது சூலமங்கலத்திற்கு மிகவும் பொருந்துகிறது. அக்காலத்தில் சூலமங்கலம் கோயிலில் கஜ சம்ஹாரரின் சிலையைச் சூலகண வாயிற்காப்பாளர்களுடன் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து இருக்கலாம். காலத்தின் கோலத்தில் ஒரு சூலகணர் மட்டும் தங்கிவிட்டார். கஜசம்ஹார மூர்த்தியும் மற்ற சூலகணரும் மறைந்துவிட்டனர் போலும்.

தஞ்சைப் பெரிய கோயில் ராஜராஜ சோழனால் கி.பி.1010 இல் கட்டி முடிக்கப்பட்டது. குடந்தை அருகே உள்ள தாராசுரம் ஐராவதேஶ்வரர் கோயிலில் இரண்டாம் இராஜராஜ சோழனால் கி.பி.1167 இல் கட்டப்பட்டது. இவ்விரு கோயில்களிலும் உள்ள மிகப்பெரிய துவார பாலகர்கள் சிலைகளின் சிரசுகளின் மேல் சூலங்கள் உள்ளதைக் காணலாம். இதனால் சோழர்களின் ஆட்சியில் பாசுபத சைவத் திற்கு அதிகமான செல்வாக்கு இருந்ததை அறியலாம்.

## 130) அம்மைநோயின் தாக்கமும், அங்கப்ரதக்ஷிணமும்

1955-ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் ஆண்டுத் தேர்வுகள் முடிவுற்றபிறகு நானும் எனது நண்பர்களும் K.R. டிரான்ஸ்போர்ட் பேருந்தில் தஞ்சை சென்றடைந்தோம். ராஜாமடத்தில் அம்மை நோய் பரவலாக இருந்த நேரம் அது. K.R.T. பேருந்து கரியால் இயக்கப்பட்டு வந்தது. பேருந்தின் பின்புறத்தில் இந்தக் கரித்தொட்டி பொருத்தப்பட்டிருக்கும். இதன் வலது மற்றும் இடது புறத்தில் பயணிகள் அமருவதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அன்றைய தினம் கரித்தொட்டியின் அருகில் அமர்ந்து நான் பயணம் செய்தேன். அந்த இருக்கையில் அமர்பவர்கள் மிகுந்த வெப்பத்தை எதிர்கொள்ளவேண்டும். அன்றிரவு தஞ்சையில் பள்ளித்தோழனான சேதுராமன் வீட்டில் தங்கியிருந்து மறுநாள் காலை வையச்சேரியை சென்றடைந்தேன். அன்றைய தினமே எனக்கு அம்மைநோய் கண்டது. இதன் தாக்கத்தால் சுமார் 22 நாட்கள் நான் அவதிப்பட்டேன். கீழே படுப்பதற்கு வாழை இலை, வேப்பிலையால் ஒருவர் வருடிக்கொண்டே இருக்கவேண்டும்.



இளநீர் மற்றும் பனை நுங்கு, கஞ்சி இவைதான் ஆகாரம். அம்மையின் கடுமையினால் முகத்தில் வடுக்கள் தோன்றின. கிராமங்களில் இவ்வாறு அம்மைநோய் கண்டால் அவர்கள் வீட்டிற்கு யாரும் வருவதோ போவதோ கூடாது. வீட்டில் கடுகு, மிளகாய் போன்ற பதார்த்தங்களைக் கொண்டு திருமணம் பரிமாறுவது கூடாது.

உள்ளூர் மாரியம்மன் கோயிலுக்கு விளக்கேற்றுதல், அபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்தல் போன்ற செயல்களை செய்தல் வேண்டும். கிராமத்தில் வாழ்பவர் யாராய் இருந்தாலும் அதாவது சைவர், வைணவர் என்ற வேறுபாடு இல்லாது மாரியம்மன் கோயிலின் அபிஷேகத்திற்கு கொடுக்க வேண்டும். என்னுடைய தாயார் படிப்பறிவு இல்லாதவள். ஆனால் கிராம மக்களின் பழக்கவழக்கங்களை அனுசரித்து நடக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவள்.

தஞ்சாவூருக்கு அருகில் உள்ள புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலுக்குத் தன் பிள்ளை குணம் அடைந்தால் அங்கப்பிர தக்ஷிணம் செய்வதாக வேண்டிக் கொண்டாள். ஒருவழியாக என்னுடைய நோய் தீர்ந்தது. ஆனால் எனது தாயார் வேண்டி க்கொண்டபடி மாரியம்மன் கோயிலில் அங்கப்பிரதக்ஷிணம் செய்ய நான் முற்படவில்லை. பல ஆண்டுகள் என்னை அங் கபிரதக்ஷிணம் செய்வதற்கு அழைத்தபோதிலும் இன்றுவரை நான் தாயாரின் அந்த வேண்டுதலை நிறைவேற்றவில்லை.

## 131) 1955 ஆம் ஆண்டு ஜனவரி 10 -ஆவடி காங்கிரஸ்

1955-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொங்கல் விடு முறைக்காக வையச்சேரிக்குச் சென்றேன். அந்த ஆண்டு ஜனவரி 10ஆம் நாள் சென்னையிலுள்ள ஆவடியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் குழு கூடிற்று. இந்தி யாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மாபெரும் கட்சி என் றளவில் காங்கிரஸ் கட்சி மீது எனக்கும் என் தந்தையாருக்கும் மிகுந்த ஈடுபாடு உண்டு. ஆவடி மகாநாட்டில் இந்தியாவை சோஷலிசப் பாதையில் காங்கிரஸ் வழிநடத்திச் செல்லவே ண்டும் இனி வரும் ஐந்தாண்டு திட்டங்களில் அரசுக்குச் சொந்தமான பொது நிறுவனங்கள் அமைக்கப்படவேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வெளிநாட் டுக் கொள்கைகளைப்பொறுத்தவரை நடுநிலைமை வகிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆவடியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகா நாட்டிற்குச் சென்றால் நேரு, அபுல் கலாம் ஆஸாத், கோவி ந்த வல்லப பந்த், ரபி அகமத் கித்வாய், கே.டி. மாளவ்யா, யு.என். தேபர் போன்ற தலைவர்களை நேரில் பார்க்கலாம்



என்ற அவா என்னுள் எழுந்தது. எங்கள் ஊரிலிருந்து எல்.பி. வெங்கட்ராமய்யர் என்பவர் இந்த மகாநாட்டிற்குச் செல்லப் பயணப்பட்டார். என் கையில் 20 ரூபாய் இருந்தது. இதை வைத்துக்கொண்டு ரயில் கட்டணத்தைச் சமாளித்துவிடலா ம். எல்.பி. வெங்கட்ராமய்யரோடு என்னைச் சென்னைக்கு அனுப்பிவைக்கும்படி என் தந்தையாரைக் கேட்டுக்கொண் டேன். ஆனால் அவர் என்னைச் சென்னைக்கு அனுப்ப மறுத்து விட்டார். ‘‘உன் கையில் 50 ரூபாய் பணம் கொடுத்து அனுப்பினால்தான் நீ சென்னைக்குச் சென்றுவரமுடியும். எ ன்னிடம் அதற்குப் பணம் இல்லை’’ என்று என் பயணத்தைத் தடுத்துவிட்டார். காங்கிரஸ் மகாநாட்டில் கலந்துகொண்டு என் உள்ளங்கவர்ந்த காங்கிரஸ் தலைவர்களை ஒரே மேடை யில் காணலாம் என்ற என் கனவும் கலைந்தது.

## 132) 1955-ஆம் ஆண்டு வீசிய புயல்

1955 ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் பெரும்புயல் ஒன்று தமிழகத்தைச் சூறையாடியது. குறிப்பாக நாகப்பட்டினம், வேதாரண்யம், ராஜாமடம் பகுதிகளில் இந் தப் புயலினால் பலர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான ஆடு, மாடுகள் இறந்தன. எண்ணற்ற மரங்கள் வேரோடு சாய்க்கப் பட்டன. எங்கும் நீர்வெள்ளம் சூழ்ந்திருந்தது. நாங்கள் தங்கி யிருந்த சத்திரத்தின் மேற்கூரை மங்களூர் ஓடுகளால் வேயப் பட்டிருந்தது. புயலில் அந்த ஓடுகள் வானத்தில் பறந்து வந்தன. தெருக்களில் ஆடுகளும், மாடுகளும் இறந்த நிலை யில் வீழ்ந்து கிடந்தன. சத்திரத்தில் சேமிக்கப்பட்டு வைத்தி ருந்த அரிசி மற்றும் உணவுப் பண்டங்கள் முழுமையாகச் சேத மடைந்தன. சத்திரத்தில் தங்கியிருந்த மாணவர்களுக்கு அவ ரவர் ஊர்களுக்குச் செல்லும்படி ஆணையிடப்பட்டது. புயல் ஓய்ந்தபோதும் மழை ஓயவில்லை. பேருந்துப் போக்குவர

த்து அடியோடு நிறுத்தப்பட்டது. அந்தக் கொட்டும் மழையில் நானும் எனது தஞ்சை நண்பர்களான பஞ்சனதம், சேதுராமன் ஆகிய மூவரும் சில பாடப்புத்தகங்களைத் தலையில் சுமந்துகொண்டுச் சாலை வழியாகப் பட்டுக்கோட்டையைச் சென்றடைந்தோம்.

எங்கள் மூவரிடமும் இருந்த மொத்தப் பணம் ரூ.3 தான். பட்டுக்கோட்டையிலும் புயலின் பாதிப்பு அதிகமாக இருந்தது. சென்ற வழியில் உணவு உட்கொள்வதற்கு கையில் காசும் இல்லை, அதற்கேற்ற உணவு விடுதிகளும் இல்லை. பட்டுக்கோட்டையிலிருந்து கால்நடையாகவே கொட்டும் மழையில் ஒரத்தநாடு சென்றடைந்தோம். ஒரு பகல்,ஒரு இரவு பயணம் செய்து ஒருவழியாக ஒரத்தநாடு சத்திரத்தைச் சென்றடைந்தோம். வழியில் எங்கள் உணவு வாழைப் பழங்களும், அவற்றின் தோலியுமே. வாழைப்பழத் தோலியைத் தூக்கி எறிய மனது இல்லை. ஆகவே அதையும் உட்கொண்டோம். ஒரத்தநாடு சென்றடைந்தபோது அனைவருடைய கால்களும் வீக்கமடைந்து காணப்பட்டன.

அங்கே சத்திரத்தில் 3 நாட்களுக்குப் பிறகு உணவைக் கண்ணால் கண்டோம். ஒவ்வொருவரும் 2 வேளைச் சாப்பாட்டை ஒரு வேளைச் சாப்பாடாக உண்டோம். அடுத்த நாள் காலையில் கால்களின் வீக்கத்தால் படுக்கையை விட்டு எழுந்திருக்க இயலவில்லை. சில எண்ணைகளை வைத்து தேய்த்துவிட்டனர் சக மாணவர்கள். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எங்களுக்குத் தஞ்சை செல்வதற்கும், அவரவர் வீட்டிற்குச் செல்வதற்கும் தேவையான பண உதவியைச் செய்தனர். மழையில் நனைந்த பாடப்புத்தகங்களையும், ஆசிரியர் தந்த குறிப்புகளையும் வெயிலில் அப்பளம் காயவைப்பதுபோல காயவைத்து எங்களுடன் எடுத்துச் சென்றோம்.



அந்த ஆண்டு கடலோரப் பகுதியில் பள்ளிக் கட்டிடங்கள் அனைத்தும் சேதமடைந்தன. 1956-ஆம் ஆண்டு பொங்கல் விடுமுறைக்குப் பிறகுதான் அனைத்துப் பள்ளிகளிலும் பாடங்கள் போதிக்கப்பட்டன.

## 133) S.S.L.C. பரீட்சை எழுதுவதற்கு முன் Selection தேர்வு

1955ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 11ஆம் வகுப்பிற்கான செலக்ஷன் பரீட்சை நடைபெற்றது. ஆயினும் ராஜா மடம் உயர்நிலைப்பள்ளியில் ஒன்றிரண்டு கட்டிடங்களைத் தவிர மற்ற யாவும் புயலால் சேதமடைந்துவிட்டது. ஆகவே 11-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் சத்திரத்தில் அனுமதி அளிக்கப்பட்டது. செலக்ஷன் பரீட்சை நடைபெற்ற நாட்களில் மட்டும் நாங்கள் சத்திரத்தில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டோம்.

## 134) அய்யம்பேட்டைக்கு M.K. தியாகராஜ பாகவதரின் வருகை

புயலினால் பாதிக்கப்பட்ட நான் வையச்சேரி சென்றடைந்தபோதும் என்னுடைய கால்கள் இயல்பான நிலைக்கு திரும்பவில்லை. சுமார் 10 நாட்கள் கிராம மருத்துவர் எண்ணையை வைத்து தேய்த்துக் குணப்படுத்தினார். வையச்சேரியில் தங்கியிருந்தபோது அய்யம்பேட்டைக்கு 1.11.55 ஆம் நாளன்று புகழ்பெற்ற பாடகரும், திரைப்படநடிகருமான எம்.கே. தியாகராஜ பாகவதர் வருகை தர உள்ளார் என்ற செய்தி கிட்டியது. என்னுடைய தந்தையார் சிறிது சங்கீத ஞானம் படைத்தவர். அவர் தியாகராஜ பாகவதருடைய பாடல்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். என் தந்தையாரும் நானும் அய்யம்பேட்டைக்குச் சென்று தியாகராஜ பாகவதரின்

பாட்டைக் கேட்பதற்காக எங்கள் எதிர்வீட்டிலிருந்த மணி ஐயர் என்பாரோடு மாட்டுவண்டியில் சென்றோம். போகும் வழி யில் மணி ஐயர் தியாகராஜ பாகவதரைப் பற்றி பல சுவை யான தகவல்களைக் கூறினார்.

## 135) M.K. தியாகராஜ பாகவதரின் மாட்சியும், வீழ்ச்சியும்

பழங்காலக் கலைஞர்களிடையே தனித்தன்மை வாய்ந்தஒப்பற்ற திறனும், ஆற்றலும் பெற்றவர்கள்தான் முன்னணி நட்சத்திரங்களாகத் திகழ முடியும். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த காலத்தில் தமிழ்மக்களின் ரசனையைத் தன் பக்கம் கவர்ந்து, தனக்கென ஓரிடத்தை திரையுலகில் வகித்து, மங்காப் புகழடைந்து அமரரானவர் தியாகராஜ பாகவதர். ஐம்பது நாட்கள் ஓடும் படத்தையும் நூறு நாட்கள் ஓட்டப்படும் படத்தையும் இப்போது நாம் பார்க்கிறோம். ஆயிரம் நாட்கள் ஒரே தியேட்டரில், ஒரே மூச்சில், யாரும் ஓட்டாமல் தானாகவே ஓடிய படத்தை நீங்கள் பார்த்தி ருக்கிறீர்களா? அந்த அதிசயம் 1944-ம் ஆண்டு இந்தத் தமிழகத்திலே நிகழ்ந்தது. அதை நிகழ்த்திய படம் 'ஹரிதாஸ்'. அதில் நடித்தவர் தமக்குப்பின்னால் தம்மைப் போல் என்று சொல்ல வேறு யாரையுமே விட்டுச் செல்லாத திரையுலகச் சக்ரவர்த்தி திரு எம்.கே.தியாகராஜ பாகவதர்.

'1944-க்கு முன்னாலும் அப்படி ஒரு படம் ஓடியதில்லை. அதற்கு பின்னாலும் ஓடப் போவதில்லை!' என்ற பெயரையும் பெருமையையும் நிரந்தரமாகவே பெற்றுவிட்ட அந்தப் படம் சென்னை பிராட்வே டாக்கீஸில் ஓடிக் கொண்டிருக்கிறது.

'ராதே, உனக்குக் கோபம் ஆகாதடி!
'மன்மத லீலையை வென்றார் உண்டோ?'



'மனமே ஈசன் நாமத்தை வாழ்த்துவாய்'

'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து, சுப்பிரமணி சுவாமி உனை மறந்தேன்!' போன்ற பாகவதர் பாடிய பாடல்களை இன்றும் மக்கள் விரும்பிக் கேட்கின்றனர்.

உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ? 'அசோக்குமா' ரில் கண்ணாம்பா நடனமாட, பாகவதர் பாடும் பாடல் இது. கண்ணாம்பாவைக் கண்டு யார் மயங்கி னார்களோ இல்லையோ, பாகவதரைக் கண்டு எல்லோரும் மயங் கினார்கள். அந்த மயக்கத்தில், 'பாகவதர்' எங்கள் மாவட் டத்தைச் சேர்ந்தவர்'என்றார்கள் தஞ்சாவூர்க்காரர்கள்; 'அதெல்லாம் ஒன்றும் இல்லை; அவர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான்'! என்றார்கள் திருச்சிக்காரர்கள். இரு சாரார் சொன்னதிலும் ஓரளவு உண்மை இருந்தது. பாகவதரின் தாயார் மாணிக்கத்தம்மாளுக்குத் தஞ்சாவூர்; தகப்பனார் கிருஷ்ண மூர்த்தி பிறந்தது தஞ்சையில்; வளர்ந்தது, வாழ்ந்ததெல்லாம் திருச்சியில். பிறந்த தேதி : 1.3.1910.

## 136) திரு. அண்ணாத்துரையும் பாகவதரும்

திரு. அண்ணாதுரை திருச்சிக்கு வரும் போதெல்லாம் பாகவதரைப் பார்க்காமல் போகமாட்டார். அதுமட்டு மல்ல;அவரைப் பாட வைத்து கேட்காமலும் திரும்பமாட்டார். முதன் முறையாக அவர் பாகவதரைச் சந்தித்த போது, 'எங்கே ஒரு பாட்டு பாடுங்கள்!' என்றார் வினயத்துடன்.

'சிவபெருமான் கிருபை வேண்டும்!
வேறென்ன வேண்டும்?
சிவபெருமான் கிருபை வேண்டும்!'

என்று வழக்கமான புன்னகையுடன் ஆரம்பித்தார்

பாகவதர். 'யாருக்கு?' என்று திடுக்கிட்டுக் கேட்டார் அண்ணாதுரை. 'உங்களுக்குத்தான்!' என்றார் பாகவதர், அவருடைய ஆட்சேபம் புரிந்தும் புரியாதவர்போல். 'எனக்கு அவருடைய கிருபை வேண்டாம்; அது உங்களுக்கே இருக்கட்டும்!' என்றார் அண்ணாதுரை. மென்சிரிப்புடன். இதைப் புரிந்துகொண்ட பாகவதர், அத்துடன் அந்தப் பாடலை விட்டுவிட்டு,

'மெஞ்ஞானத் தங்கமிது, மேலான தங்கமிது,
அஞ்ஞானத் தங்கமெல்லாம் என் தங்கமே,
அநித்திய தங்கமடி, ஞானத் தங்கமே!'

என்று ஆனந்தமாகப் பாட ஆரம்பித்தார்; அண்ணாதுரையும் அதைப் பரவசத்துடன் கேட்டு அனுபவித்தார். பாட்டு முடிந்தது; 'வேதநாயகனைப் பிடிக்காவிட்டாலும் வேதாந்தத்தைப் பிடிக்கும் போலிருக்கிறதே உங்களுக்கு?' என்றார் பாகவதர். இதற்குப் பின் திரு அண்ணாதுரை வந்தால் அவர் கேட்காமலே வேதாந்தப்பாடல்கள் சிலவற்றைப் பாகவதர் பாடுவதும், அவற்றைக் கேட்டு அனுபவித்து விட்டு அவர் போவதும் வழக்கமாயிற்று. இப்படியாக இவர்கள் நட்பு முதிர முதிர, 'பாகவதருக்கென்றே ஒரு கதை எழுதி, அவரை வைத்துப் படம் எடுத்தால் என்ன?' என்ற ஓர் எண்ணம் திரு. அண்ணாதுரையின் உள்ளத்தில் உதயமாயிற்று. அதைச் செயல்படுத்த அவர் உடனே பாகவதருக்குரிய கதையை அவரிடம் படித்துக் காட்டி, 'இந்தப் படத்தில் நீங்கள் நடிக்க வேண்டும்' என்றார்.

'மன்னிக்க வேண்டும்' என்றார் பாகவதர். 'எதற்காக?' 'இந்தப்படத்தில் நான் நடிக்கமுடியாமல் இருப்பதற்காக.' 'ஏன்?' 'உங்கள் கதைக்கு ஏற்ற கதாநாயகன் நான் அல்ல.' உங்களுக்கென்றே நான் இந்தக் கதையை எழுதியிருக்கும்போது நீங்கள் அவ்வாறு சொல்லக் காரணம்?'



## 137) M.K.T. பாகவதரின் உறுதிப்பாடு

**'தெரிந்தோ தெரியாமலோ, நடிக்கும் படங்களில் மட்டுமல்ல; வாழ்க்கையிலும் நான் தெய்வ பக்தி உள்ளவனாக இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் கதாநாயகனுக்கோ அந்த பக்தி இல்லை. அவனை மையமாக வைத்து எழுதப்பட்டிருக்கும் கதையில் நான் எப்படி நடிப்பேன்? நடிப்புக்காகக் கூட தெய்வ நிந்தனை செய்ய என்மனம் துணியவில்லையே !'** 'உங்கள் கொள்கை அதுவானால், அதில் நீங்கள் உறுதியோடு இருப்பது உண்மையானால், அதற்கு நான் தலை வணங்குகிறேன்!' என்றார் திரு. அண்ணாதுரை, தமக்கே உரிய பெருந்தன்மையுடன். 'அது என்ன கதை?' என்று தெரிந்துகொள்ள நீங்கள் விரும்புகிறீர்களல்லவா? 'அதுவே சொர்க்க வாசல்' பாகவதருக்குப் பதிலாக அதில் நடித்தவர் யார்? அவரே திரு.கே.ஆர்.ராமசாமி.

## 138) அசோக்குமார் படத்திலிருந்து ஒருபாட்டு

'அசோக்குமா'ரில் பாகவதரால் பாடப்பட்டுப் பிரபலமான பாடல்களில் ஒன்று 'பூமியில் மானிட ஜென்மம் எடுத்தும் ஓர்...' என்ற பாடலாகும். இது பெரியவர்களை மட்டுமல்ல; குழந்தைகளையும் எவ்வளவு தூரம் கவர்ந்தது என்ப தற்கு இதோ ஒரு கடிதம்: 4-1-69 அன்று புதுக்கோட்டையிலிருந்து திருமதி. சரஸ்வதி என்பார் எழுதியது.

இரண்டாவது உலகப்போரின் இறுதிக்கட்டம்; சிங்கப்பூர் மீது ஜப்பானிய விமானங்கள் குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்தன. எதிரிகளின் விமானங்கள்

வந்தால்போதும்; மூலைக்கு மூலை பொருத்தப்பட்டிருந்த அபாய அறிவிப்புச் சங்குகள் ‘ஓ’ வென அலறும். உடனே எல்லோரும் வீட்டை விட்டு வெளியே ஓடிவந்து, வீதிகளிலே தோண்டி வைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக் குழிகளில் பதுங்கிக் கொள்வார்கள். அப்படிப் பாதுகாப்புக் குழிகளுக்கு ஓடும்போதெல்லாம் ஒரு குடும்பத்தினர் மட்டும் தங்கள் குழந்தை குட்டிகளோடு ஒரு கிராமபோன் பெட்டியையும், ஓர் இசைத் தட்டையும் சேர்த்து எடுத்துக் கொண்டு ஓடுவார்கள். காரணம், அந்த வீட்டுச் சிறுமி, அவள் படுசுட்டி; கொஞ்சநேரம் சும்மா இருக்க மாட்டாள்.

ஆனால் இசை என்றால் அவளுக்கு இனிக்கும். ஜப்பானியரின் குண்டு வீச்சுக்குப் பயந்துஓடிப் பாதுகாப்புக் குழியில் பதுங்கிக் கொள்ளும் போதுகூட அவள் சும்மா இருக்க மாட்டாள். வெளியே போகவேண்டுமென்று அழுவாள்; அடம் பிடிப்பாள். ஓடுபவளைத்தடுத்துப் பிடித்தால் திமிறுவாள். அப் போது அவளுடைய பெற்றோர் கையோடு கொண்டு வந்த கிராமபோன் பெட்டிக்குச் சாவி கொடுத்து, அதில் தாங்கள் எடுத்து வந்த இசைத்தட்டை வைத்துச் சுழல விடுவார்கள். அவ்வளவுதான்;அடுத்த நிமிஷமே அவளுடைய அழுகை நின்றுவிடும். அத்துடன் அவள் வெளியேபோக அடம்பிடிப் பதையும் விட்டுவிட்டு, இசைத் தட்டிலிருந்து வரும் இனிய கீதத்தைக் கேட்க ஆரம்பித்துவிடுவாள். அந்தக்கீதம் என்ன கீதம் தெரியுமா? எழிலிசை மன்னர் திரு எம்.கே. தியாகராஜ பாகவதர் ‘அசோக்குமா’ரில் பாடிய ‘பூமியில் மானிட ஜென்மம் எடுத்தும் ஓர்...’ என்ற கீதம்தான்.

இப்போது ஜப்பானியர் குண்டு வீச்சிலிருந்து அந்தப் பால் மணம் மாறாப் பச்சிளங்குழந்தையைப் பாதுகாத்து வந்த



அப்பாடல் அவளையும், அவளைப் போன்ற ஆயிரமாயிரம் குழந்தைகளைப் பெற்றெடுத்திருந்த தமிழர்களையும் மட்டும் கவரவில்லை; ஆங்கிலேயர்களையும் கவர்ந்தது. அதற்கு உதாரணம் வேண்டுமானால் வேறெங்கும் போக வேண்டிய தில்லை; ‘எலிபெண்ட்வாக்’ என்ற ஆங்கிலப் படத்தைப் பார்த்தால்போதும் இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங் களில் தமிழர் வேலை செய்வதுபோல் அதில் ஒரு காட்சி வரு கிறது. அந்தக் காட்சியில் அவர்கள் வேலை செய்து கொண்டே பாடும் பாட்டு என்ன என்கிறீர்கள்? - ‘பூமியில் மானிட ஜென்மம் எடுத்தும் ஓர்...’ என்ற பாட்டுத்தான்!

பாகவதரின் எட்டாவது படம் ‘சிவகவி’. தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற பொய்யாமொழிப்புலவரின் வாழ்க்கை வரலாற்றைத்தான், அதைத் திரைக்கதையாக்கி வசனம் எழுதிய திரு இளங்கோவன் ‘சிவகவி’ என்று பெயர் வைத் திருந்தார். ஏற்கெனவே பல வெற்றிப் படங்களை எடுத்து வெளியிட்டிருந்த கோவை பட்சி ராஜா பிலிம்ஸார் இதையும் எடுத்து வெளியிட்டிருந்தார்கள். பாகவதரின் வாழ்விலும் தாழ் விலும் பங்கு கொண்ட திரு எஸ்.எம். ஸ்ரீராமுலு நாயுடு இதை டைரக்ட் செய்திருந்தார். அந்த நாள் திரையுலகத் தாரகையான டி.ஆர். ராஜகுமாரி பாகவதருடன் முதன் முதலாக நடித்த படம் இதுவே, ஆனால் கதாநாயகியாக அல்ல; சோழ நாட்டுப் புலவர் பெருமக்கள் குழுவைச் சேர்ந்த வஞ்சியாக.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார், திரு.ஆர்.கே. சண்முகம் செட்டியார், திரு.டி.கே.சிதம்பரநாத முதலியார், திரு. கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி, திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆகியோருடன் சேர்ந்து அப்போது தமிழிசையை வளர்த்துக் கொண்டிருந்த பாகவதர், இந்தப் படத்தில்,

'தமியேன் பைந்தமிழ் அன்னையின் பாலருந்தித்
தமிழ்ப் பாலன் தமிழ் வளர
உயிர் வாழும் ஊழியனென் றுலகறியும்... '

என்று பாடித் தமிழையும் வளர்த்தார். இதற்குப் பின் ஒன்பதாவது படமாக வந்து, ஏறக்குறைய ஆயிரம் நாட்கள் ஒரே தியேட்டரில் ஓடிய படம் 'ஹரிதாஸ்'. பாகவதரின் வாழ்க்கையில் பல திருப்பங்களை உண்டாக்கி வைத்த படமும் இதுவே.

## 139) பாகவதர்மீது தொடுக்கப்பட்ட கொலை வழக்கு

திரு. லட்சுமிகாந்தன் 1944ம் வருடம் நவம்பர் மாதம் 8ந் தேதி கத்தியால் குத்தப்பட்டு மாண்டார். லட்சுமிகாந்தன் உயிருடன் இருந்ததைவிட இறந்துபோனது பாகவதரைப் பல இன்னல்களுக்கு உள்ளாக்கி விட்டது. டிசம்பர் மாதம் 27ந் தேதி யன்று பாகவதர் கைது செய்யப்பட்டார். முதலில் அவர் ஜாமீனில் விடப்பட்டார் என்றாலும், பின்னால்-அதாவது 1945-ம் வருடம் பிப்ரவரி மாதம் 12-ந்தேதி ஜாமீன் ரத்துச் செய்யப்பட்டு, அவர் மீண்டும் காவலில் வைக்கப்பட்டார்.

தமிழ்நாட்டிலேயே மிகுந்த பரபரப்பை உண்டாக்கிய வழக்குகளில் பாகவதர் வழக்குக்குத்தான் முதல் இடம் கொடுக்க வேண்டும். பம்பாயிலிருந்து இந்த வழக்குக்காகவே வரவழைக்கப்பட்டிருந்த திரு கே.எம்.முன்ஷியும், சென்னை யைச் சேர்ந்த பிரபல வக்கீல்களில் சிலரும் ஒன்று கூடி இதில் வாதித்தனர். ஆயினும் 1945-ம் வருடம் மே மாதம் 3-ம் தேதி யன்று தீர்ப்பு கூறப்பட்ட இவ்வழக்கில், பாகவதருக்குத் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டு விட்டது. இந்தத் தண்டனைக்குப் பிறகு பாகவதரும் மற்ற எதிரிகளும் 'அப்பீல்' செய்துக் கொண்டனர். அப்பீல் வழக்கை அப்போது



பிரதம நீதிபதியாயிருந்த ஸர்லயனல் லீச்சும், நீதிபதி லட்சுமண ராவும் விசாரணை செய்து, அப்பீலைத் தள்ளி விட்டுத் தண்டனை யை உறுதிப்படுத்தினர்.

உண்மை அநீதியின் கண்களுக்கு மட்டுமல்ல; நீதி யின் கண்களுக்கும் சில சமயம் தெரியாமற்போய் விடு வதுண்டு. அதைத்தான் 'விதி' என்று அந்த நாளிலும் சரி, இந்த நாளிலும் சரி - சிலர் சொல்லி வந்தார்கள்; சொல்லி வருகிறார் கள். எது எப்படியிருந்தாலும் ஒன்று மட்டும் உண்மை- அமைதி யற்ற இந்த உலகில் மனிதன் ஓரளவு அமைதியுடன் வாழ வேண்டுமானால் அவன் தன்னுடைய செய்கை களுக்கும், அவற்றால் தான் அனுபவிக்க நேரும் கஷ்ட நஷ்டங்களுக்கும் அவ்வப்போது ஏதாவது ஒரு சமாதானம் தேடிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்தச் சமாதானங்களில் ஒன்றே விதி.

## 140) M.K.T. பாகவதரின் விடுதலை

இந்த விதி வசத்தாலோ என்னவோ, இரண்டு வருடங் கள், இரண்டு மாதங்கள், பதின்மூன்று நாட்கள் சிறைவாசம், செய்த பாகவதர் 25.4.47 அன்று விடுதலையானார். கடைசி யாக அவர் தஞ்சமடைந்த இடம் தஞ்சை மாரியம்மன் கோயில். அங்கேதான் திரு எஸ்.எஸ்.ராஜேந்திரன் அவரைச் சந்தித்து, 'வாருங்கள்;உங்களுக்கு நான் கனகாபிஷேகம் செய்து வைக்கிறேன்!' என்றார்;சொன்னதே போதும்; செய்து வைத்த மாதிரி! என்று சொல்லிவிட்டார் பாகவதர். அவர் பார்க்காத கனகமா? அவர் பார்க்காத வைர வைடூரியங்களா?

எல்லாவற்றையும் பார்த்து, அனுபவித்து, அலுத்துப் போன அவருக்கு, அப்போது இந்த உலகத்தில் எதுவுமே வேண்டியிருக்கவில்லை. எல்லாவற்றையும் தாண்டிய

நிலையில் அவர் நின்றார்! இந்தச் சந்தர்ப்பத்தில்தான் திரு எம்.ஏ.வேணுவின் பெருமுயற்சியில் 'சிவகாமி' உருவாயிற்று. இது பாகவதரின் பதினான்காவது படம். இந்தப் படம் முடிவதற்கு முன்னரே அவருடைய ஆயுள் முடிந்துவிட்டது. அவர் 1.11.1959ஆம் நாள் திருச்சியில் மரணமடைந்தார். அவர் மரணமடைந்தபோது நூற்றுக்கணக்கான கலைஞர்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## 140) கும்பகோணத்திற்கு குடும்பத்தினர் அனைவரும் பயணம் செய்தோம்

என்னுடைய மாதுலர்கள் இருவர் E.S.L.C. தனித் தேர்வு எழுதித் தேர்ச்சிபெற்றபின் ஆரம்ப ஆசிரியர் பள்ளி பயிற்சி நிறுவனங்களில் பயின்று வந்தனர். அதில் நம்பிள்ளை என்றழைக்கப்படும் மாதுலர்களில் ஒருவர் தஞ்சையில் மேம்பாலம் என்றழைக்கப்படும் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த அரசாங்க ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்று வந்தார். இன்னொரு மாதுலர் பெயர் கண்ணன். இவர் கும்பகோணம் சார்ங்கபாணி ஸந்நிதித் தெருவில் அமைந்திருந்த வீட்டில் தங்கியிருந்தார். கும்பகோணத்தில் தங்கியிருந்து கொண்டு ஆடுதுறைக்கு செல்லும் வழியில் அமைந்துள்ள குருக்கத்தி என்னும் ஊரில் தனியார் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பயின்று வந்தார்.

நான் விடுமுறைக்கு வையச்சேரிக்கு வந்திருக்கும் போது என் தம்பி, தங்கைகளை அழைத்துக் கொண்டு கும்பகோணம் சென்று வருவேன். தங்குவதற்கு இடம் இருப்பதால் இந்தப் பயணம் எளிதாக அமைந்திருந்தது. ஸந்நிதித் தெருவுக்கு அண்மையில் அமைந்துள்ளது டைமண்ட் டாக்கீஸ் என்னும் திரைப்பட அரங்கு. தஞ்சை யாகப்பா திரை



அரங்கு மற்றும் கும்பகோணம் டைமண்ட் டாக்கீஸ் திரை அரங்கு ஆகிய இரண்டிற்கும் உரிமையாளர் திரு. A.Y.S. பரிசுத்த நாடார் அவர்கள்.

## 141) டவுன் பஸ்

1955ஆம் ஆண்டில் மக்கள் விரும்பிப் பார்த்த மறக்க முடியாத தமிழ்ப்படங்கள் வரிசையில் கணவனே கண்கண்ட தெய்வம், மங்கையர் திலகம், டவுன்பஸ், மிஸ்ஸியம்மா ஆகியவைக் குறிப்பிடத்தக்கன. இவற்றில் டவுன்பஸ் மற்றும் மிஸ்ஸியம்மா ஆகிய படங்களின் கும்பகோணம் டைமண்ட் டாக்கீஸில் குடும்பத்தாரோடு சென்று பார்த்தோம்.

எம்.ஏ.வி. பிக்சர்ஸ்.(எம்.ஏ.வேணு) தயாரித்த டவுன் பஸ் படத்தில் நடிக-நடிகையர்: என்.என்.கண்ணப்பா, டி.கே.ராமச் சந்திரன், வி.கே.ராமசாமி, ஏழுமலை, கருணாநிதி, அஞ்சலி தேவி, எம்.என்.ராஜம், டி.பி. முத்து லட்சும், மற்றும் பலர். கதை, வசனம்: ஏ.பி. நாகராஜன். இசை: கே.வி. மகாதேவன். டைரக்ஷன்: கே. சோமு.

அஞ்சலிதேவியின் நடிப்பும் அவர் பாடுவதாக அமைந்த 'சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி சேதி தெரியுமா' (எம்.எஸ். ராஜேஸ்வரியின் குரலோசையை யாராலும் மறக்க இயலாது.) என்ற பாடல் காட்சியும் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை அடைந்தது. அடிக்கடி திரையிடப்பட்டு, இன்றுகூட ரசிகர்களை மகிழ்வித்து வருகிறது என்பதிலிருந்தே, இந்தப் படத்தின் ஈர்ப்பு சக்தியை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். கவி கா.மு.ஷெரிப் அவர்களின் பாடல்கள் நாகரிகத்தின் போலித் தன்மையைச் சாடி இருந்தன. கே.வி. மகாதேவன் இசை அமைப்பும், நாகராஜனின் கருத்தும், நகைச்சுவை கலந்த வசனங்களும், அனுபவ நடிகர்-நடிகையரின் நடிப்பும்

படத்தை தொய்வின்றி ரசிக்கும் படி உறுதுணையாக இருந்தன. பட ரசிகர்கள் பார்த்து மகிழ்ந்த வெற்றிப் படம். ‘பொன்னான வாழ்வு, மண்ணாகிப் போமா’ என்ற பாடல் இன்றும் வானொலி வாயிலாக, அந்தக் கால ‘டவுன் பஸ்’ படத்தை நினைவு கூறும் வகையில் ஒலித்து வருவது இந்தப் படத்தின் சிறப்பாகும்.

## 142) மிஸ்ஸியம்மா

விஜயா (நாகிரெட்டி-சக்ரபாணி) பிக்சர்ஸ் தயாரித்த மிஸ்ஸியம்மா படத்தில் நடிக-நடிகையர்: ஜெமினி கணேசன், சாரங்கபாணி, தங்கவேலு, நம்பியார், ரங்காராவ், கருணாநிதி, சாவித்திரி, ஜமுனா, ருஷ்யேந்திரமனி, மற்றும் பலர். கதை: சக்ரபாணி. வசனம், பாடல்கள்: தஞ்சை ராமையாதாஸ். இசை: ராஜேஸ்வர் ராவ். டைரக்ஷன்: பிரசாத்.

நகைச்சுவையும் காதலும் போட்டியும் பொறாமையும் நயவஞ்சமும் கொண்ட பல கதாபாத்திரங்களை மோத விட்டு அருமையான கதையைச் சக்ரபாணி அமைத்து வெற்றி கண்டிருக்கிறார். நடிக-நடிகையர் அனைவரும் தங்கள் திறமையைக் கையாண்டு அற்புதமாக நடித்துள்ளார்கள். ராஜேஸ்வர ராவின் இசை அமைப்பிலே, ‘முடியுமென்றால் படியாது’, ‘அறியாப் பருவமடா’, ‘எனையாளும் மேரி மாதா’, ‘பிருந்தாவனமும் நந்தகுமாரனும்’, ‘வாராயோ வெண்ணிலாவே’, ‘மாயமே நானறியேன்’ போன்ற பல பாடல்கள் மறக்க முடியாத தமிழ் படங்கள் இனிமையாக ஒலித்து, ரசிகர்களை மகிழ்வித்தன. தஞ்சை ராமையாதாஸின் பாடல்கள் ஜனரஞ்சகமாக இருந்தன. திறமைமிக்க பிரசாத் அவர்களின் திறமையான டைரக்ஷனில் மிஸ்ஸியம்மா, ஒப்பற்ற நகைச்சுவை அடங்கிய குடும்பச் சித்திரமாக அனைவரையும் மகிழ்வித்தது.



## 143) 'The Mail'

வையச்சேரி அக்ரஹாரத்தில் மொத்தம் 10 குடியிருப்புகள் அமைந்திருந்தன. அக்ரஹாரத்தில் எல்.பி. வெங்கட்ராமய்யர் என்ற பெரியவர் ஒரு வீட்டில் குடியிருந்தார். இவர் நன்றாக ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் படைத்தவர். இவர் ஹிந்து ஆங்கில நாளிதழைத் தபால் மூலம் பெற்று வந்தார். அவ்வப்போது என்னைக் கூப்பிட்டு அந்தப் பேப்பரை படிக்கச் சொல்வார். ராஜாமடம் போன்ற கிராமப் பள்ளிகளில் பயின்று வரும் என்னால் ஹிந்து போன்ற பத்திரிகையைப் படிக்க இயலாது.

அந்தக் காலகட்டத்தில் தி மெயில் என்ற ஆங்கில நாளிதழ் வெளிவந்துகொண்டிருந்தது. தட்டுத்தடுமாறி மெயில் இதழைப் படிக்க இயலுமே ஒழிய ஹிந்துப் பத்திரிகையைப் படிக்க இயலாது. அதன் ஆங்கிலநடை கடினமாக இருக்கும். அந்த நாளிதழில் பிழை இருக்காது. அனைவராலும் போற்றி வாங்கப்பட்டு வந்த பத்திரிகை ‘தி ஹிந்து’. குறிப்பாக இந்து சமயத்தின் வளர்ச்சிக்காகக் குரல்கொடுத்து வந்த பத்திரிகை என்ற பெயர் பெற்றிருந்தது.

***(ஆனால் இன்று தி ஹிந்து என்ற பத்திரிகை இந்துக்களின் நலனுக்கு எதிரான செயல்களையே மேற்கொண்டு வருகிறது. நாளும் காஷ்மீரிலும் மற்றைய இடங்களிலும் இந்துக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய செய்திகள் இந்த நாளிதழில் இடம்பெறுவதில்லை. மாறாக எங்கேயோ ஒரு கிராமத்தில் ஒரு சர்ச்சின் கண்ணாடிக் கதவுகள் காற்றில் உடைந்துவிட்டால் அது இந்து வெறியர்களுடைய செயல் என்று தலைப்பிட்டு முதற்பக்கத்தில் செய்தி வெளியிடும் நிலைக்குத் தன் தரத்தைத் தாழ்த்திக் கொண்டுள்ளது.)***

## 144) மரமல்லி மரத்து வீட்டு ஐயர்

இவருடைய வீட்டு வாசலின் இருமருங்கிலும் மர மல்லி மரங்கள் காணப்படும். அவருடைய வீட்டை அடை யாளம் காண்பிப்பதற்கு இந்த மரமல்லி மரங்கள் ஒரு குறி யீடாக அமைந்திருந்தன. இந்த மரத்திற்கு பன்னீர்ப் பூ மரம் (Indian Cork tree: Jasmine tree) என்றும் பெயர் உண்டு.

குளிர் காலத்தில் பூக்களைச் சொரிந்து, நறு மணம் பரப்பி, அதனடியிலே மலர் விரிப்பு அமைத்து, சுற்றுப்புறத்திற்கு அழகூட்டும் மரமே, மரமல்லி. மில்லிங் டோனியா ஹார்டென்ஸிஸ் (Millingtonia Hortensis L.f ) தாவரக் குடும்பம்: பிக்னோனியேசி. ஸர் தாமஸ்மில்லிங்டன் என்ற மருத்துவரின் நினைவாக, தாவரப் பாகுபாட்டியியல் தந்தை லின்னே மில்லிங்டோனியா என்ற முதல் பெயர் சூட்டினார். மலர்த்தோட்டங்களுக்குச் சம்பந்தப்பட்டது எனப் பொருள்படும், ஹார்டென்சிஸ், தோட்டங்களில் வளர்ப் பதைக் குறிப்பிடுகிறது. மரமல்லி பர்மாவிலுள்ள காடுகளில் வளரும் மரம். பிற இடங்களில் எல்லாம் அங்கிருந்து கொண்டுவந்து, தோட்டங்கள், வீடுகள், சாலைகள் ஆகியவற்றில் வளர்க்கப்படுகிறது.

மரமல்லி ஓங்கி உயரமாக வளரும். சாதாரணமாக 15-20 மீட்டர் உயரம் வளர்ந்திடும். ஈரச்செழிப்புள்ள இடங் களில் 24 மீட்டர் உயரத்தையும் எட்டிவிடும். பக்கவாட்டில் சுமாராகக் கிளைகளை வளர்த்துக் கொண்டு, நீண்ட கோபுரம் போன்ற தழையமைப்புடன் காட்சியளிக்கும். நெட்டிலிங்க மரத்தைவிடச் சிறிது அடர்ந்த தழையமைப்புடையது. 4.5-6.0 மீட்டர் விட்டத்திற்கு தழையமைப்பு இருக்கும். கிளைகள் தொங்கிய வண்ணம் காணப்படும்.



ஆகஸ்டிலிருந்து டிசம்பர் வரை அவற்றின் பூக்கும் காலமாகும். குளிர் காலத்தில் மரம் முழுவதிலும் பூங்கதிர்கள் அடர்ந்து பூத்துச் சொரிவதைக் காணலாம். 25 செ.மீ அளவுள்ள பூங்கதிர்களில் 2.5 போன்ற வெண்மை நிறப்பூக்கள் அடுக் கடுக்காக மலர்ந்து உதிரும். இப்பூக்கள் மல்லிகையின் மணம் உடையவை. சுற்றுப் புறமெங்கும் இம்மணம் பரவியிருக்கும். கிராமங்களில் சாலை மரமாக நடலாம். நகரங்களில் பெரிய கட்டிட வளாகங்களில், கட்டிடத்திற்குச் சற்றுதுாரம் தள்ளி மரமல்லியை நெட்டிலிங்கத்தைப் போன்று ஒரு வரிசையாக நடலாம். ஆலைப் பகுதியிலும் இவ்வாறே வளர்த்து, துாசி யைக் குறைக்கலாம்.

## 145) வைத்தியநாத ஐயர் வீட்டுத் தூங்குமூஞ்சி மரம்

எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் அமைந்திருந்தது வைத்தியநாதய்யருடைய குடியிருப்பு. இவர் கிராமப் பட்டா மணியம் (முன்சீப்) ஆக வேலைப் பார்த்துவந்தார். வைத்தி யநாதய்யர் தம்பதிகளுக்கு குழந்தைகள் கிடையாது. சுமாரான பணக்காரர். இவர்கள் வீட்டின் பின்புறம் பெரிய கிணறு அமை ந்திருந்தது. அதின் அருகில் நீர்த்தொட்டிகள் அமைக்கப்பட் டிருந்தன. சற்று அதிக நீள, அகலமும், உயரமும் கொண்ட தொட்டியில் வீட்டு வேலைக்காரன் எப்போதும் தண்ணீரை நிரப்பிவைத்திருப்பான். மின்சாரம் கிராமப்புறங்களை எட்டி ப்பாராத அந்தக் காலகட்டத்தில் பெரிய உருளை கொண்டு நீரை கிணற்றிலிருந்து முகர்ந்துகொள்ளவேண்டும். எங்கள் வீட்டின் பின்புறம் இருந்த கிணறு தூர்மண்டியதால் உபயோ கப்படுத்த முடியவில்லை.

அதனால் குழந்தைகளாகிய நாங்கள் குளிப்பதற்கு

வைத்தியநாதய்யர் வீட்டின் பின்புறம் அமைந்திருந்த கிணறு வசதியாக இருந்தது. வைத்தியாதய்யர் வீட்டு மாமியிடம் சொல்லிவிட்டு நாங்கள் குளித்துவிட்டு வருவோம். ஆனால் வைத்தியநாதய்யர் வீட்டில் இருந்தால் எங்களுக்கு பயம். அந்த வீட்டுப்பக்கமே செல்லமாட்டோம். வைத்தியநாதய் யர் வீட்டில் நான்கைந்து பசுமாடுகள் எப்போதும் காணப்படு ம். கொல்லையில் ஒரு வைக்கோல் போர் அதைத் தாண்டி காய்கறித் தோட்டம் மாட்டுக் கொட்டிலுக்கு அண்மையில் ஒரு தூங்குமூஞ்சி மரம் அமைந்திருந்தது. தஞ்சாவூர் ஜில் லாவில் ஊர்நத்தம், மேய்ச்சல் தரை, கண்மாய்க்கரை, சாலையோரம் எனப் பல இடங்களிலும் இந்தத் தூங்குமூஞ்சி மரத்தினைக் காணலாம்.

இந்த மரத்தை Rain tree என்று அழைப்பர். சிற்றிலைகளை வெளியிலே விரித்துக் கொண்டும், வெயில் தணிந்ததும் குவித்துக் கொண்டும் இயங்கி, நிழல் தேவைப் படும் நேரத்திற்கு ஏற்ப குடையாகச் செயல்படும் மரமே, தூங்குமூஞ்சி. கால்நடைகளுக்கு புரதம் நிறைந்த தழையை யும் நெற்றுக்களையும் சொரிந்திடும். தாவரவியல் பெயர்: சாமானிய சாமான் (Samanea saman (Jacq.) Merr.) தாவரக் குடும்பம்: மைமோசே, தூங்கு மூஞ்சியின் தாயகமான தென் அமெரிக்க வெனிசுவேலா நாட்டில் பெயரே முதல் மற்றும் இணைப்புப் பெயர்களாகச் சூட்டப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான சிகாட்ஸ் என்ற சிறு பூச்சிகள் தூங்குமூஞ்சி தழையில் வாழ்ந்து, கழிவுகளைச் சொட்ட விடுவதால், ஆங்கிலத்தில் இதற்கு மழை மரம் (Rain tree) என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. பனிக்காலத்தில் பனித் துளிகள் இலைகளில் படிந்து, பின்னர் நீர்த் திவலைகளாகச் சொட்டு வதால், இப்பெயர் ஏற்பட்டது எனவும் சிலர் விளக்கம் தரு



கின்றனர். தூங்குமூஞ்சி மரம் படர்ந்து பரவவிடும் தழை யமைப்புடைய பெரிய மரம். கடல் மட்டத்திலிருந்து, மலை களின் அடிவாரம் வரை காணப்படுகிறது.

சாதாரணமாக 15-20 மீட்டர் உயரம் வளரும். நடு மரத்தின் உச்சிப் பகுதியில் எட்டு திசைகளிலும் கிளைகளைக் கிடைமட்டத்திற்குச் சற்று மேலே சாய்த்து வளர்ந்துகொண்டு, 13.5 மீட்டர் சுற்றளவிற்கு குடை போன்ற தழையமைப்புடன் காட்சியளிக்கும். டிரினிடாட் நகரில் ஒரு நூற்றாண்டிற்கு மேல் வளர்ந்துள்ள ஒரு மரம், 45 மீட்டர் உயரமும் 55 மீட்டர் சுற்றளவுமுள்ள தழையமைப்பும் கொண்டுள்ளது;அதன் அடிமர விட்டம் 2.5 மீட்டர் ஆகும். இரட்டைக் கூட்டிலைத் தன்மையுடைய இலையில் 6-8 அடுக்குகளும், ஒவ்வொரு அடுக்கிலும் 4-8 ஜதை சிற்றிலைகளும் இருக்கும். சூரிய ஒளியில், இச்சிற்றிலைகள் விரிந்திடும். மேகமூட்டம், மாலை, இரவு வேளைகளில் இவை குவிந்திருக்கும். மார்ச்சு முதல் ஜூன் வரை இவைப் பூக்கும். கிளை நுனிகளின் இலைச் சந்து களில் காணப்படும் பூக்கள், சிறிது சிவந்த நிறமுடையவை; அவற்றின் நீண்ட மகரந்தத் தண்டுகள் வெளியே நீட்டியபடி இருக்கும். மற்றபடி, பூக்கள் பளிச்செனத் தெரியாது. எனினும், ஆங்காங்கே மார்ச்சு முதல் ஜூலை மாதம் வரை, மரத்தினடியில் புளியைப் போன்ற தடித்த நெற்றுக்கள் உதிர்ந் திருப்பதைக் காணலாம்; ஆனால் இந்த நெற்றுக்களில் கடினமான ஓடு இராது.

## 146) அதிராம்பட்டினத்தில் S.S.L.C. தேர்வு மையம்

1956 ஆம் ஆண்டு மார்ச் மாதம் S.S.L.C தேர்வு நடைபெற்றது. 1955 ஆம் ஆண்டுவரை ராஜாமடத்தில்

படித்துவந்த மாணவர்கள் 11 ஆம் வகுப்பிற்கான அரசுத் தேர்வினை எழுதுவதற்காகப் பட்டுக்கோட்டைக்குச் செல்ல வேண்டி இருந்தது. தேர்வு எழுதும் மாணவர்கள் தங்கள் சொந்தச் செலவில் தங்குவதற்கு இடம்பிடித்து உணவிற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டியிருந்தது. இதனைக் கருத்தில் கொண்ட சத்திரம் மற்றும் பள்ளி நிர்வாகம் 1956 ஆம் ஆண்டு அதிராம்பட்டினத்தில் காதர் மொஹிதீன் உயர்நிலைப் பள்ளியில் பதினோறாம் வகுப்பிற்கான தேர்வினை எழுதுவதற்கு அதிகாரிகளிடமிருந்து தக்க அனுமதியைப் பெற்றனர். சத்திரநிர்வாகத்தின் சார்பில் தேர்வு எழுதும் மாணவர்கள் அரசிற்குச் சொந்தமான பயணியர் விடுதியில் தங்க வைக்கப்பட்டனர். ராஜாமடம் சத்திரத்திலிருந்து கலன்களும், உணவுப் பொருள்களும் கொண்டு வரப்பட்டு சத்திரத்து சமையற்காரர்களால் உணவு தயாரிக்கப் பட்டது. தேர்வு நடைபெற்ற அனைத்து நாள்களிலும் சத்திரத்தைச் சார்ந்த 40 மாணவர்கள் அங்கேயே தங்கியிருந்து தேர்வை எதிர்கொண்டனர்.

## 147) ஒலிபெருக்கியால் ஏற்பட்ட ஆபத்து

முதல்நாள் தேர்வின்போது கேள்வித் தாள்கள் கொடுக்கப்பட்டு தேர்வினை எழுதத் தொடங்கியப் பின்னரும் சுமார் 30 நிமிடங்களுக்கு அண்மையில் இருந்த திருமண மண்டபத்திலிருந்து தொடர்ச்சியாக மிகுந்த ஒலியுடன் கூடிய திரைப் படப்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வந்தன. மாணவர்கள் அனை வரும் தங்கள் முழு கவனத்துடன் தேர்வினை எழுத இயல வில்லை. தேர்வுமையப் பொறுப்பாளரிடம் மாணவர்கள் அனைவரும் முறையிட்டனர். அதன் விளைவாகத் தேர்வு ஆரம்பிக்கப்பட்ட 60 நிமிடங்களுக்குப் பிறகு இந்த ஒலிபரப்பு நின்றது. ஆங்கிலம் முதல் தாளில் அந்த மையத்தில் தேர்வெழுதிய பல மாணவர்கள் அந்த ஆண்டு தோல்வியைத் தழுவினர். ***(இந்த நிகழ்ச்சி நடந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகிறது. திருமணமண்டபத்திற்கு அண்மையில் தேர்வு நடைபெறுகின்றதே அதைக் கருத்தில் கொண்டு திரைப்படப் பாடல்களைப் பெருத்த ஒலி யுடன் ஒலிபரப்புவது தவறு என்று திருமணக் கூடத்தில் இருந்தோர் எண்ணாததால் பலருடைய வாழ்க்கை திசைமாறிவிட்டது. நாம் செய்யும் செயல் பிறருக்குத் தீங்கு நேராவண்ணம் அமையவேண்டும் என்பதே இந்த நிகழ்ச்சி போதித்த நீதி ஆகும். இந்த நீதி எல்லாக் காலத்திலும் எந்த இடத்திலும் எல்லோருக்கும் பொருந்தும்.)***



## 148)காலைவாரிவிட்ட ‘அல்ஜிப்ரா’

ராஜாமடம் உயர்நிலைப்பள்ளி கிராமப்புறத்தில் அமைந்திருந்த பள்ளியாகும். நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்கள் பணியை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பலவகையிலும் முயற்சி செய்து அவர்களுக்கு விருப்பமான ஊர்களுக்கு மாற்றல் பெற்றுச் சென்று விடுவார்கள். இதனால் அனைத்து பாடங்களுக்கான வகுப்புகளும் பாடத்திட்டத்தின்படி நடைபெறாது. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க முடியாத பாடங்களாக சில பகுதிகள் விடப் பட்டிருக்கும். 1955 ஆம் ஆண்டு இறுதியில் வீசிய பெரும்புயலின் காரணமாக இரண்டு மாதங்களுக்குப் பாடங்கள் போதிக்கப்படவில்லை. கணித ஆசிரியர் திரு. நாராயணன் எவ்வளவோ முயன்றும் அவரால் கணிதத்தில் Algebra பகுதிப் பாடங்களை போதிக்க இயல வில்லை. இதன் விளைவாக 1956 ஆம் ஆண்டு S.S.L.C தேர்வில் கணிதப் பாடத்தில் நான் அதிக மதிப்பெண்களைப் பெற இயலவில்லை. நுற்றிற்கு 80 மதிப்பெண்களைத்தான் நான் பெறமுடிந்தது.

## 149) Autograph - Forget me

தேர்வும் முடிந்தது. அனைவரும் ஒருவருக்கொருவர் பிரியாவிடை பெற்றுக்கொண்டு ஊர் திரும்பினோம். பள்ளி மாணவர்கள் தங்களுக்கு பாடம் போதித்த ஆசிரியர் மற்றும் நெருங்கிய நண்பர்களிடமிருந்து Autograph வாங்குவது என் பதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு வரும் ஏதோ ஒரு பொன்மொழியை எழுதிக் கையெழுத்திட்டுத் தருவர். சமூகவியல் ஆசிரியரான திரு. குமரேசன் Autograph இல் "Forget me" என்று எழுதிக் கையெழுத்திட்டார். ஆறுமுகம் என்ற மாணவன் காலதாமதமாக வந்தான் என்று சொல்லி வெளியே அனுப்பப்பட்டபோது அவருக்கு எதிராக நிகழ்ந்த போராட்டத்தை மனத்திலே கொண்டு இவ்வாறு கையெழுத் திட்டார் என்று நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டோம்.

## 150) அன்னதானத்தின் உயர்வு

இவ்வுலகில் பசி என்னும் நோய் அனைவரையும் அனைத்து நேரங்களிலும் பீடித்து வருவதை நாம் காண்கின் றோம். பசி என்னும் நோய் மட்டும் இல்லையென்றால் இவ்வுலகே சொர்க்கபூமியாகக் காட்சியளித்திருக்கக்கூடும். நாம் உட்கொள்ளும் உணவே உடலில் ஜீரணிக்கப்பட்டு அதன் இயக்கத்திற்கான சக்தியைக் கொடுக்கிறது. பிறந்தது முதல் இறப்பு வரை பசியின் கொடுமைக்கு ஆளாகாத உயிரினமே இல்லை எனலாம். பசியில்லையென்றால் உலகில் யாரும் எந்தத் தொழிலையும் செய்யவேண்டாம் என்ற நிலை ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் நம்மைப் படைத்தவரோ பசி என்னும் தன்மையை உண்டு பண்ணி யுள்ளார். இதன் விளைவாக நாம் உழைக்கிறோம், பிறர்க்குரிய செல்வத்தின் மேல் ஆசைகொள்கிறோம், பொய் சொல்லு



கிறோம், கணக்கிட இயலாத இன்னும் எத்தனையோ முறை யற்ற செயல்களை மேற்கொள்கிறோம். ஒருவர்க்கு எவ்வளவு பொருள்களைத் தானமாகத் தந்தாலும் அவர் இதற்குமேல் இன்னும் தர்மத்தை வழங்கியவன் பொருள் கொடுத்தி ருக்கலாம் என்றே சொல்லுவார். ஆனால் உணவு உண்ட பிறகு, வயிறு நிறைந்த நிலையில் எத்துணை சுவையான பொருளை இட்டாலும் வேண்டாம், வேண்டாம் என்றேதான் சொல்லுவார். அத்தகையதொரு தன்மை அன்னமிடும் செயல் ஒன்றிற்கே அமைந்துள்ளது.

உலகிலேயே மிகச்சிறந்த தர்மமாகக் கருதப்படுவது அன்னதானமேயாகும். காதலால் கதிபெற்ற திருமங்கையாழ் வார் மேற்கொண்டதும், பாகவத ததீயாராதனம் எனப்படும் அடியார்களுக்கு அமுது படைத்திடும் கைங்கர்யம் ஆகும். எம் பெருமானை ஆராதிப்பது சிறப்புடையதே. அதைக் காட்டிலும் சிறப்புடையது அடியார்களை ஆராதிப்பதாகும் என்ற எண்ணம் கொண்ட திருமங்கையாழ்வார் ஒவ்வொரு நாளும் 1008 திரு மாலடியார்களுக்கு அமுது செய்வித்து வந்தார். திருமங்கை யாழ்வார் காட்டிய நெறிப்படி இன்றும் ஸ்ரீவைஷ்ணவர்கள் குறிப்பாக உத்ஸவங்களின்போது அடியார்களுக்கு அமுது படைத்து வருகின்றனர். பெரியாழ்வார் தமது திருமொழி 4-4-10 பாசுரத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

காசின்வாய்க்கரம்விற்கிலும் கரவாதுமாற்றிலிசோறிட்டு✸
தேசவார்த்தைபடைக்கும் வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர்✸
கேசவா! புருடோத்தமா! கிளர்சோதியாய்! குறளா! என்று✸
பேசுவார்அடியார்கள் எந்தம்மைவிற்கவும்பெறுவார்களே.

செல்வச்செழிப்புற்ற காலத்தில் மட்டும் திருமாலடி யார்களுக்கு அமுதுபடைத்திடுவதை குறிக்கோளாய்

கொண்டு வாழ்பவர்கள் அல்லர் திருக்கோட்டியூரில் வாழும் வைணவர்கள். பணவீக்கத்தின் (Inflation) கோரப்பிடியிலே அனை வரும் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது அதாவது ஒருபிடி நெல்லுக்கு ஒரு பிடி பொற்காசுகள் கொடுத்து வாங்க வேண்டிய காலத்திலும், பொருளை மறைத்து வைக்காமல் தமது இல்லத்துக்கு வருவோரிடமிருந்து எந்தக் கை மாற்றினையும் எதிர்பாராது சோற்றையிடும் புகழாளர்கள் வாழும் ஊர் திருக்கோட்டியூர் என்று பெரியாழ்வார் கொண்டாடுகிறார்.

இந்திய நாட்டு மக்கள் எக்காலத்திலும் அமோகமான உணவைப் பெருக்கி அதை தாராளமாகப் பலருடன் பகிர்ந்து உண்ணுதலையே மனித வாழ்க்கையின் அடிப்படைத் தரும மாய்க் கருதி வந்துள்ளனர். அன்னதானத்தை வாழ்க்கையின் அடிப்படைத் தருமமாய்க் கருதி வந்துள்ளனர். அன்னமும் அன்னதானமுமே வாழ்க்கையின் அடிப்படைக் கூறுகளாகும். மற்றனைத்தும், ஏன், அனைவரும் அடைய விழையும் இறுதிப் பேறாம் மோக்ஷத்தின் மீதான நாட்டமும் கூட இதன் அடிப் படையிலேயே பேசப்படுகிறது.

***(அன்னமளிக்கும் வயல்வெளிகளைத் தொழிற்சாலை அமைக்கும் நிலங்களாகவோ குடியிருப்பு நிலங்களாகவோ ஒரு போதும் மாற்றக் கூடாது. தரிசு நிலங்கள் மட்டுமே இத்தகைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் நிலங்களை தொழிற்சாலை களை அமைத்திடப் பயன்படுத்தக்கூடாது.)***

ததஸ்வான்னம் ததஸ்வான்னம் ததஸ்வான்னம் யு தி ஷ் டி ர
"யுதிஷ்டிரா! அன்னமளி! அன்னமளி! ஓயாமல் அளி!"

ஸ்ரீ பவிஷ்ய புராணத்தில் ஸ்ரீகிருஷ்ணர் யுதிஷ்டிரருக்கு அன்னதானத்தின் மகிமையைப் பற்றி உபதேசிக் கையில் இவ்வாறு ஆணையிடுகிறார்[1].



***(பவிஷ்ய புராணம் மஹாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ண ருக்கும் யுதிஷ்டிரருக்கும் நடந்த உரையாடலைக் கூறுகிறது. இது யுதிஷ்டிரர் யுத்தத்தில் வெற்றியடைந்த பின்னர் மேற் கொண்ட அசுவமேத யக்ஞத்தின் முடிவில் நடந்த உரை யாடல். யக்ஞத்திற்கு முன், யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணரின் விருப்பப்படி பீஷ்ம பிதாமஹரிடம் விரிவான தர்மோபதேசம் பெறுகிறார். யுதிஷ்டிரர் தம் சகோதரர்களுடன், ஸ்ரீ கிருஷ்ண ரின் முன்னிலையில் அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் பீஷ்ம பிதாமஹரின் காலடிகளில் அமர்ந்து தமக்கு உபதேசிக்குமாறு வேண்டுகோள் விடுக்க, அந்த வயது முதிர்ந்த பெரியவர் ஹஸ்தினாபுரத்தின் அரியணையில் புதிதாக அமர்ந்த அந்த அரசருக்குத் தருமத்தின் அனைத்து அம்சங்களையும் முக்கிய மாக ராஜ தருமத்தை விரிவாக உபதேசிக்கிறார். பீஷ்மபிதா மஹரின் உபதேசம் கிட்டத்தட்ட 25,000 சுலோகங்களுக்கு நீள்கிறது; மஹாபாரதத்தில் நாலில் ஒரு பகுதியாய் விளங்கும் இப்பகுதி சாந்தி பர்வம், அனுசாஸன பர்வம் ஆகிய இரண்டு பிரதான பர்வங்களைக் கொண்டுள்ளது. இந்த மாபெரும் உப தேசத்தைச் செய்த பிறகே பீஷ்மபிதாமஹர் தம் பூத உடலைத் துறக்கிறார். பின்னர், ஸ்ரீ கிருஷ்ணரும், கிருஷ்ண த்வைபாயன ரான வியாஸரும், யுத்தத்தில் உண்டான உயிர் நாசத்தாலும், பிதாமஹரின் மரணத்தாலும் துக்கித்திருந்த யுதிஷ்டிரரை மாபெரும் மன்னர்கள் நடத்தும் யாகமான அசுவ மேத யாகத் தை மேற்கொள்ளத் தூண்டுகின்றனர்.***

*அசுவமேத யாகத்தை மேற்கொண்டு நிறைவேற்றுவது அத்துணை எளிய செயல் அல்ல; அத்தகையதோர் யாகத்தை பெருமுயற்சி செய்து நடத்தி முடித்தபிறகு அந்த மாபெரும் பொறுப்பிலிருந்து விடுபட்ட யுதிஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ணரிட மிருந்தே தருமத்தின் நெளிவு சுளிவுகளைப் பற்றின உபதேசம் பெற*

*விரும்புகிறார். ஸ்ரீகிருஷ்ணரின் இந்த உபதேசங்கள் மேலும் 1300 சுலோகங்களாக நீள்கின்றன. இதுவே பவிஷ்ய புராணம்.*)

## 151) மராட்டிய மன்னர்களின் கொடையும், ஆங்கிலேயரின் ஆதிக்கமும்

பதினெட்டாம் நூற்றாண்டில் பாரதத்தில் பகிர்ந்தளித்து விருந்தோம்பும் சமூக அமைப்புகள் எவ்வாறு செயல்பட்டன என்பதைத் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த மராட்டிய மன்னர் காலத்துக் கடிதங்கள் (மோடி ஆவணங் களில்)வழி அறியப்படுகிறது. தஞ்சாவூர் கடற்கரைப் பகுதி யின் பெரும்பான்மையான பூமியின் மேல்வாரம் (வரி) அங்கிருந்த பல மடங்களுக்கும் சத்திரங்களுக்கும் மானியமாய் வழங்கப்பட்டிருந்தது. இந்த மடங்களிலும் சத்திரங்களிலும் யாத்திரிகர்களுக்கும் மற்ற யாசகர்களுக்கும் புகலிடமும் உணவும் அளிக்கப்பட்டு வந்தன. மேலும் மடங்கள் பல்வேறு துறைகளின் சிறப்பான கல்வி மையங்களாகவும் விளங்கின. இந்த சத்திரங்களில் மேலாண்மைப் பொறுப்பு பட்டத்து ராணிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. சத்திரங்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட பூமியும் அந்த ராணிகளின் நிர்வாகத்திலேயே இருந்து வந்தது.

தஞ்சாவூர் பகுதி 1799-இல் ஆங்கிலேயர் ஆட்சியின் எல்லைக்குள் வந்த உடனேயே பிரிட்டிஷ் அதிகாரிகள் பல்வேறு பொதுப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த பூமி மற்றும் மேல்வாரத்தைப் பற்றிய ஆய்வு நடத்தி அவற்றைப் பறிமுதல் செய்யும் முயற்சியைத் தொடங்கினர். இவ்வாறு சத்திரங்களின் நிர்வாகத்திற்கென ராணிகளின் பொறுப்பில் விடப்பட்டிருந்த கடலோர பூமியைப் பற்றிய விரிவான ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வின்போது ஆங்கிலேய அதிகாரிகளின் விசாரணைக்குப் பதிலளிக்கையில் அப்போதைய தஞ்சாவூர் மாமன்னர் ராஜா இரண்டாம் சரபோஜி மன்னர் ஆங்கிலேய 'ரெஸிடெண்ட்'டிற்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் சத்திரங்களின் பணிகள் மற்றும் நிர்வாகத்தைப் பற்றியும் மன்னர்களின் ஆட்சியில் இந்த அமைப்புகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தைப் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார்.



## 152) இரண்டாம் சரபோஜி மன்னரின் கடிதம்

1801-ம் ஆண்டு எழுதப்பட்ட இந்தக் கடிதம் அக்காலத்தைய சமூகச் சூழலைப் பற்றிய ஒரு மிக முக்கியமான ஆவண மாகும். மாமன்னர் சரபோஜி எழுதுவதாவது.

"என்னுடைய மூதாதையர் காலந்தொட்டு பொது சமூகப்பணிகளுக்கென பல்வேறு தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சர்வமானியம் அல்லது சுரோத்திரியம் வழியாக ஏராள மான நிலம் அளிக்கப்பட்டு வந்தது. அவற்றுக்கென்று ராஜ முத்திரையிட்ட ஆணைப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவது வழக்கம். ஆனால் ராஜ குடும்பத்தின் ராணிகளிடம் ஒப்படைக்கப்பட்ட சத்திரங்கள் அல்லது தான புண்ணிய காரியங் களுக்கென்று அளிக்கப்பட்ட நிதிகளுக்கு ஆணைப் பத்திரம் எதுவும் எழுதப்படவில்லை. ஏனெனில், தம் அமைச்சர்களோ அன்றி தம் புத்திரர்கள் அல்லது வாரிசுகளின் அமைச்சர்களோ, இவர்களில் யாருமே புண்ணிய காரியங் களுக்கென்று ராணிகளின் பொறுப்பில் விடப்பட்ட நிலத்திற்கான ஆணைப் பத்திரங்களைக் காண வேண்டு மென்று வற்புறுத்தமாட்டார்கள் என்று ஆட்சியில் இருந்த அரசர்கள் பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே, ராணிகளின் இந்த உடைமைகள் எப்பொழுதும் 'பர்வானா'

வழியினால் மட்டுமே அவர்களின் பாதுகாப்பில் இருந்து வந்தன.

**தரத்தில் குறைந்த நிலங்களை உடைய கட லோரப் பகுதியில் தான் பொதுநல புண்ணிய காரியங் களை ஆற்றும் இச்சத்திரங்கள் மிகுதியாக உள்ளன.** எனினும் இதுவே இராமேச்வரத்திற்குச் செல்லும் முக்கியமான வழியாதலால், பாரதத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், பனாரஸ், அயோத்தி, டில்லி, ஔரங்காபாத், பூனா முதலான பல இடங்களி லிருந்தும், ஆண்டுதோறும் சுமார் நாற்பதாயிரம் மக்கள் இவ்வழியே சென்றுவருகிறார்கள். இந்த யாத்திரிகர்கள் தங்குவதற்கென்றே இச்சத்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சத்திரத்துடனும் கோயில், விடுதிகள் மற்றும் பாட சாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. இனி, இந்த சத்திரங் களின் மூலமாக நடைபெறும் புண்ணிய காரியங்களின் தன்மைகளையும் அவை எத்துணை விரிவாக நடத்தப் படுகின்றன என்பது பற்றியும் விளக்குகிறேன்.

இங்கு வருகை தரும் எல்லாப் பயணிகளுக்கும், பிராமணர் முதற்கொண்டு பறையர் உள்பட அனைத்து ஜாதி யினருக்கும், ஜோகிகள், ஜங்கமர், அதீதர் மற்றும் பைராகிகள் உள்பட அனைத்து யாத்திரிகர்களுக்கும் அன்னம் அளிக்கப் படுகிறது. அன்னத்தை மற்றவரிடமிருந்து ஏற்றுக் கொள்ள விரும்பாதவர்களுக்காக பச்சரிசியும் சமையலுக்குத் தேவையான இதர பொருட்களும் உலுப்பையாக அளிக்கப் படுகின்றது. இந்த விநியோகம் நள்ளிரவு வரை இடையறாது நடக் கிறது. நள்ளிரவு ஆனதும் ஒரு மணி அடிக்கப்பட்டு உண்ணாதவர் யார் இருப்பினும் அவர்கள் வருகை தந்து உணவை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு அழைக்கப் படுகின்றனர். தம் பயணத்தைத் தொடர முடியாத யாத்திரி



கர்களுக்கு அவர்கள் பயணத்தைத் தொடரும் வரையிலும் உணவு வழங்கப்படு கிறது.

ஒவ்வொரு சத்திரத்திலும், நான்கு வேதங்களையும் கற்றுத் தரும் பொருட்டு நான்கு ஆசாரியர்களும், ஒரு பள்ளி ஆசிரியரும், மற்றும் பல்வேறு வியாதிகள், வீக்கங்கள், பூச்சிகளால் உண்டான விஷக்கடிகள் போன்றவற்றைக் குணப் படுத்தக்கூடிய வைத்தியர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர். இங்கு வந்து சேரும் அயலூர் மக்களின் அனாதைக் குழந்தை கள் பள்ளி ஆசிரியரின் பராமரிப்பில் விடப்படுகிறார்கள். அவர் களுக்குத் தினமும் மூன்று வேளை உணவு அளிக்கப்படு கிறது. நான்கு நாட்களுக்கு ஒரு முறை எண்ணெய்க் காப்பிடப் படுகிறது. தேவையானபோது மருந்துகள் அளிக்கப்படுகின்றன, உடைகள் வழங்கப்படு கின்றன. மிகுந்த கவனத்துடன் அவர்கள் பேணப்படு கின்றனர். அவர்களுக்கு எந்த சாஸ்திரத்தில் விருப்பம் உள்ளதோ அந்தச் சாஸ்திரத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. போதிய அறிவும் பயிற்சியும் பெற்றபின் அவர்களுக்குத் திருமணத்திற்கான செலவும் வழங்கப்படுகிறது.

யாத்திரிகர்கள் சத்திரத்திற்கு வந்த பிறகோ அல்லது வருவதற்கு முன்போ உடல் நலமின்றி இருந்தால் அவர் களுக்கு வேண்டிய மருந்துகளும், தகுந்த உணவும் அளிக்கப் பட்டு அன்புடனும் ஆதரவுடனும் அவர்கள் குணமாகும் வரையில் பேணப்படுகின்றனர். சத்திரத்தில் தங்கியிருக்கும் போது இறப்போர்க்கு அவரவர் ஜாதிப்படி ஈமக்கடன்கள் செய்யப்படுகின்றன.

சிறு குழந்தைகளுக்குப் பாலும், கர்ப்பிணிகளுக்கு வேண்டிய உணவு, மருந்துகளும் அன்புடன் அளிக்கப்படு

கின்றன. அப்பெண்கள் சத்திரத்திலேயே குழந்தையைப் பெற்றெடுக்க நேர்ந்தால், அதற்கான செலவுகளும் அளிக்கப்படுகின்றன. தேவையான மருந்துகளும் வழங்கப்பட்டு சத்திரத்திலேயே மூன்று மாத காலம் வரையில் அவர்கள் பேணப்படுகின்றனர். உபநயனம் செய்து கொள்ளவோ, திருமணத்திற்கோ அல்லது தம் தந்தையின் இறப்பிற்குப் பின் செய்ய வேண்டிய கருமங்களைச் செய்யவோ தங்களுக்கு வசதிகள் இல்லை யென்று யாரேனும் சத்திரத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களின் தேவைக்கு ஏற்ப நிதி அளிக்கப் படுகிறது.

இந்த சத்திரங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நிலம் செழிப்பானதல்ல என்பதால், பல சமயங்களில் போதிய மழையின்மையால், நிலத்தின் விளைச்சலிலிருந்து செலவிற்கு ஏற்ற அளவு போதிய வருவாய் கிடைப்பதில்லை. இத்தகைய நிலைமையில் என் தன்மானத்திற்கே மிகுந்த கௌரவச் சின்னமாக நான் கருதும் இந்தப் புண்ணிய காரியங்கள் எவ் விதத்திலும் தடைபடக் கூடாதென்ற ஆவலுடன் குறையைத் தீர்க்க வேண்டிய அளவு அரசு கருவூலத்திலிருந்து தனமும் தானியமும் எடுத்து அந்தச் சத்திரங்களுக்கு வழங்க நான் எப்பொழுதும் ஆயத்தம் செய்துவருகிறேன். மிஸ்டர் ஹேரிஸ் அவர்கள் அந்தப் பகுதியின் நிர்வாகியாக நியமிக்கப்பட்ட பிறகு நான் சத்திரங்களின் உபயோகத்திற்காகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரிடம் பெருமளவில் தானியம் கேட்டு விண்ணப்பித்தது அவருக்கு நினைவிலிருக்கும்.

இந்தச் சத்திரங்கள் இன்று நேற்று நிறுவப்பட்டவையல்ல. மணமேற்குடியிலுள்ள சத்திரமும், வேறு சிலவும் என் மூதாதையரான பிரதாபசிங்கரால் கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டவை. அன்று முதல்



இன்று வரை அவை புண்ணிய கருமங்களை இடையறாமல் ஆற்றி வருகின்றன. என் தந்தையார், சுவர்க்கவாசியான துளஜாஜி ராஜர் 25-30 ஆண்டுகளுக்கு முன் மீனமேசல், சுலக்ஷணாம்பாள்புரம், ராஜா மடம் ஆகிய சத்திரங்களை நிறுவினார். இவற்றுள் எந்தச் சத்திரமும் அமீர்சிங்கின் ஆட்சிக் காலத்திலோ அல்லது என் ஆட்சிக் காலத்திலோ நிறுவப் பட்டதல்ல.

இவை என்னால் உருவாக்கப்பட்டவையல்ல என்றாலும் இந்தப் பொதுநல அமைப்புகளை நான் என் இல்லத்தின் ஒரு அங்கமாகவும் என் பெருமைக்கும் மன நிறைவிற்கும் இன்றியமையாதவையாகவும் கருதுகிறேன். உலகெங்கிலும் தஞ்சாவூர் நாடு தன, தான, புண்ணிய காரியங்களுக்காகப் போற்றப்பட்டு வருகிறது. அது 'தரும ராஜ்யம்' என்றே புகழப் பெற்றுள்ளது.இப்பெயரால் பல நாடுகளிலிருந்தும் கிடைக்கும் பாராட்டுதல்களையும் புகழ்ச்சியையும் நான் என் அந்தஸ்திற்கு அளிக்கப்பட்ட மிக உயர்ந்த சன்மானமாகக் கருதுகிறேன். என்னுடைய மூதாதையர்களாலும் என் தந்தை யார் துளஜாஜி ராஜராலும் தான காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட மானியத் தொகை ஒருபோதும் நாட்டின் பொது வருவாயில் சேர்க்கப்படவில்லை. அவர்கள் இப்பணிகளை மதித்துப் போற்றிப் பாதுகாத்தனர். அவர்களைப் பின்பற்றுவதே என்னுடைய மனமார்ந்த ஆசை.

இந்த அமைப்புகளின் நிர்வாகப் பொறுப்பு எப்பொழுதும் முதிய ராணியிடமிருந்து இளைய ராணிக்குச் செல்கிறது. அது ராஜமாதாவின் காலம் வரையில் அவர் கையிலும் பின் அவருக்குப் பிறகு ஆட்சி புரியும் அரசரின் மனைவிக்கும் செல் கிறது. என் மூதாதையர்களின் இம்மரபு பிறழ்தலின்றி

தொடரப் படும் என்றும் என்னுடைய ஆட்சிக் காலத்தில் இம்மரபு நீக்கப்படும் அவமானத்திற்கு நான் ஆளாகமாட்டேன் என்றும் முழு மையான நம்பிக்கை கொண்டுள்ளேன்.

தஞ்சைக்கோட்டையை நவாப் கைப்பற்றுவதற்கு முன்பு பிரதாபசிங்கும், துளஜாஜி ராஜரும் வழங்கிய அதிகாரப் பத்திரங்களை இப்பொழுது கண்டுபிடிக்க இயலாது. நவாப் கோட்டையைக் கைப்பற்றிய பிறகு, அரண்மனையைச் சூறை யாடி, தர்பாரில் இருந்த பதிவுச் சான்றுகள் அனைத்தையும் பறித்துச்சென்று விட்டதால் அன்றைய தினம் வரையில் காக்கப்பட்டு வந்த பதிவேடுகள் எதுவும் இப்பொழுது இல்லை. கோட்டை மீண்டும் கைப்பற்றப்பட்டு தன் கைக்கு வந்த பிறகு, மறைந்த துளஜாஜி ராஜர் தம் முன்னோர் நிறுவிய நிறு வனங்களுக்கும் புது பர்கானாக்களை வழங்கினார். இவை என்னிடம் உள்ளன. சேதுபாவா சத்திரத்திற்கும் ஒரு முறை யான அதிகாரப் பத்திரம் உள்ளது. இதற்கு மேல் நான் என்ன சொல்வேன்!"

இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேதுபாவா சத்திர மும் மற்ற நான்கு சத்திரங்களும் புதுக்கோட்டையிலிருந்து இராமேச்வரத்திற்குச் செல்லும் கடலோரப் பெருஞ்சாலையில் உள்ளன. இப்பெருஞ்சாலையில் இவ் வைந்து சத்திரங்களின் அடையாளங்களை இன்றைக்கும் காணலாம். ஆனால் அவை இன்று மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளன.

## 153) நன்றிப்பெருக்கால் என் கண்களில் நீர் மல்கியது

**மராட்டிய மன்னர்களின் மாபெரும் தர்மசத்திர மான ராஜாமடம் சத்திரத்தில் 3 ஆண்டுகள் தங்கிப் படித்து நிறைந்த மதிப்பெண்ணோடு பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு ஊர் திரும்பும்போது என் கண்களில் நீர் மல்கியது. இத்தகைய தர்மசத்திரங்கள் ஏற்படுத்தி வைக்கப்பட்ட தாலன்றோ என் போன்ற ஏழை மாணவர்கள் கல்வி கற்க நேரிட்டது.**



## 154) பண்டைய இலக்கியங்களில் அமைந் துள்ள பசிப்பிணி மருத்துவர்களின் தன்மை பற்றிய பாடல்கள்

புறநானூற்றில் பசிப்பிணி மருத்துவன் பண்ணனின் சிறப்பு

யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறா அர்க் காண்டுங் கண்டும்
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே

புறநானூறு-173

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என் பவன் தன் நண்பன் சிறுகுடிகிழான் பண்ணன் பசித்தோரின் பசி அகற்றும் சிறப்பை எடுத்துக் கூறும் பொருட்டு இவ்வாறு பசித்துவந்த பாணன் ஒருவன் பாடுவதாக இப்பாடலைப் பாடி யுள்ளான்: "மரம் பழுத்தவிடத்துப் பறவைகள் தத்தம் கூட்டத் தோடு சென்று கனிகளை உண்டு ஆரவாரிக்கும் ஒலியைப் போல் பண்ணன் மனையில் உணவு உண்டதால் உண்டாகிய ஆரவாரமும் கேட்கிறது. மழை வருவதைக் காட்டும் காற்றைக்

கொண்டு அறிந்து தம் முட்டைகளை மேடான இடத்தில் அளைகளில் கொண்டு சேர்க்கும் எறும்பு கள் சாரை சாரையாய் ஒழுங்குடன் செல்வதுப் போல், இளஞ்சிறார்கள் சோறுடைக் கையராய் கூட்டம் கூட்டமாகப் போவதையும் காண்கிறோம். இவற்றை எல்லாம் கேட்டும் கண்டும் அமையாது வருந்தும் இந்த சுற்றத்தினரின் பசியைப் போக்கும் பசிப்பிணி மருத்துவனாகிய பண்ணனது இல்லம் அருகில் உள்ளதா? கூறுங்கள்.”

## 155) பட்டினப்பாலை போற்றும் பூம்புகார் அறச் சாலைகளின் சிறப்பு

அறம் நிலைஇய அகன் அட்டில்
சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந்து ஒழுகி
ஏறு பொரச் சேறாகி
தேர் ஓடத் துகள் கெழுமி
நீறு ஆடிய களிறு போல
வேறுபட்ட வினை ஓவத்து
வெண் கோயில் மாசு ஊட்டும்[8]

பட்டினப்பாலை-43-50 வரிகள்

பூம்புகார் நகரின் மாடமாளிகைகள் சுண்ணம் பூசப் பெற்று பல்வேறு வகைப்பட்ட வண்ண ஓவியங்களால் அழகு செய்யப்பெற்றுள்ளன. அந்நகரில் பல்வேறு வகைப்பட்ட அறச்சாலைகள் பெரிய பெரிய அடுக்களை களைக் கொண்டு உள்ளன. அவற்றில் எப்போதும் பெருந்திரளான சோறு வடிக்கப்பெறுகிறது. வடிக்கப்பெறும் கஞ்சி ஆறு போலத் தெருவெங்கும் பரந்து வருகிறது. அவற்றின் மீது எருதுகள் சண்டையிடுவதால் அது சேறாகிறது. அச்சேற்றின் மீது ஓயாது செல்லும் தேர்களால்



புழுது கிளம்ப அங்கு விளங்கிய வெண் கோயில்களை அவை மாசுபடுத்துகின்றன.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை.**

திருக்குறள் -41

இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப்படு பவன் அறவியல்பினை உடைய பிரஹ்மசாரி, வானப் பிரஸ்தன் ஸந்யாசி என்கிற மூவர்க்கும் அவர்கள் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற ஆதரவாய் விளங்கு கிறான்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்**
**கைம்புலத்தா றோம்பல் தலை.**

திருக்குறள்-43

பித்ருக்கள், தேவர்கள், விருந்தினர், சுற்றத்தார் இவர்களிடத்தும் மற்றும் தன்னிடத்தேயும் செய்ய வேண்டிய அறநெறிகளை, முக்கியமாக, உணவு அர்ப்பணித்து கடன் ஆற்றுதலை வழுவாமல் செய்தலே இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாகும்.

**செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.**

திருக்குறள்-86

தன்னிடம் வந்து செல்லும் விருந்தினர்களைப் பேணி வழிகூட்டி அனுப்பிய பின், இனி வரக் கூடிய விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இயல்புடையவன் வானுலகத்தில் தேவர்கள் போற்றும் சிறந்த விருந்தினன் ஆவான்.

மணிமேகலையின் பசிப்பிணி தீர்த்தலின் சிறப்பு

**குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்**
**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்**
**நாணணி களையு மாணெழில் சிதைக்கும்**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்**
**இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது**[22]
**மணிமேகலை பாத்திரம் பெற்றகாதை.**

மணிமேகலை 76-81 வரிகள்

பசிப்பிணி என்னும் கொடிய பாவமானது மக்களைப் பீடிக்குமேயானால், நல்ல குடியில் பிறந்தார்க்கு இயல்பாகவே உள்ள உயரிய பண்புகளை அழித்து விடும். அவர்கள் அடைந்த சிறப்புகளை இல்லை என்றாக்கிவிடும். நாணம் என்னும் அணிகலனைக் களைந்து விடும். மாட்சிமையுடைய அழகையும் அழித்துவிடும். தம்முடைய குடும்பத்தாரோடு தெருவில் நிறுத்திவிடும். இத்தகைய கொடிய பாவியிட மிருந்து காத்து மற்றவர்களின் பசியைப் போக்கும் உத்தமர் களின் புகழைச் சொல்வதற்கு எனது நாவிற்குத் துணிவு வர வில்லை. அத்தகு சிறந்த புகழ் உடையவர் பசிப்பிணி அகற்றி யோர்.

**மஞ்சாறு மாட மனைதோறும் ஐயம்**
**உளதென்று வைகி வரினுஞ்**
**செஞ்சாலி நெல்லின் வளர்சோ றளிக்கொள்**
**திருமுல்லை வாயி லிதுவே**

-சம்பந்தர் தேவாரம் தென்திருமுல்லை வாயில் பதிகம்-7

மேகங்கள் தவழும் மாட மாளிகைகள் தோறும் உணவு கிடைக்கும் என்ற உறுதியுடன் காலம் கழித்து வருவோருக் கும் மிக உயர்ந்த செஞ்சாலி நெல்லின் அரிசியால் ஆக்கப் பெற்ற சோறு பெருமளவில் கிடைக்கப்பெறும் சிறப்பு வாய்ந்த திருமுல்லைவாயில் இதுவே.



பெரியாழ்வார் போற்றும் திருவரங்கத்தின் சிறப்பு.

**மறைப் பெருந் தீ வளர்த்திருப்பார்**
**வருவிருந்தை அளித்திருப்பார்**
**சிறப்பு உடைய மறையவர் வாழ்**
**திருவரங்கம் என்பதுவே**

பெரியாழ்வார் திருமொழி : -4-8-2

வேதங்களில் கூறப்படும் முத்தீ வளர்த்துத் தம் இல்லத் திற்கு வரும் அதிதிகளைப் பேணிப் போற்றும் சிறப்புடை சான்றோரால் நிரம்பி விளங்குவது திருவரங்கம்.

**கம்பராமாயணத்தில் கோசல நாட்டின் சிறப்பு**

எறிதரும் அரியின் சும்மை எடுத்து வான் இட்ட போர்கள்
குறிகளும் போத்தின் கொல்வார் கொன்ற நெல் குவைகள் செய்வார்
வறியவர்க்கு உதவி மிக்க விருந்து உண மனையின் உய்ப்பார்
நெறிகளும் புதைய பண்டி நிறைத்த மண் நெளிய ஊர்வார்

கம்பராமாயணம்- பாலகாண்டம்- நாட்டு படலம் -20

கோசல நாட்டில் எங்கெங்கும் வளம் கொழித்தது. உழவர்கள் அரிந்த நெற்கதிரின் குவியல்கள் வானைத் தொட்டன. எருமைக் கடாக்கள் அவற்றைத் தம் கால்களால் மிதித்து இடித்தன. இவ்வாறு உதிர்ந்த நெல்லால் குவியல்கள் ஆக்கப்பட்டன. இதிலிருந்து வறியவர்களுக்கு நெல் அளிக்கப் பட்டது. மிகுந்த நெல் விருந்தினருக்கு உணவு

அளிப்பதற்காக வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

**வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**
**திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்**
**உண்மை இல்லை பொய் உரை இலாமையால்**
**வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்**

-கம்பராமாயணம்- பாலகாண்டம்- நாட்டுப்படலம்-53

அங்கு வறுமை இல்லாததால் ஈகையும் தானமும் காணப்பெறவில்லை. பகைவர்கள் இல்லாததால் அங்கு வீரத்தை வெளிக்காட்டுவோர் ஒருவரும் இருக்கவில்லை. அங்கு பொய்மை இல்லாததால் உண்மையைத் தனிப்பட்டு சிறப்பித்தல் என்பது இல்லை. அனைவரும் அறிஞர்களாய்த் திகழ்ந்ததால் அங்கு ஒருவருக்கும் ஒன்றும் விளக்கி எடுத் துரைக்கப்படவில்லை.

## 156) 20ஆம் நூற்றாண்டில் பசிப்பிணி போக்கிய அன்னதான சிவன்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தர்ம சிந்தனை யுடன் ஒரு ஏழை மனிதர் வாழ்ந்து வந்தார். சமூகத்தில் எந்தவித அந்தஸ்துமில்லாதவர். தஞ்சைத் தரணிக்கு பெருமை சேர்த்த வர்களில் அன்னதான சிவனும் ஒருவர் என்று என் தந்தையார் என்னிடம் கூறியுள்ளார். அன்னதான சிவனைப் பற்றிய பல்சுவையான செய்திகளை அவர் அவ்வப்போது கூறிவருவார்.

இந்த மனிதர் சிறு வயதில் ஒரு நாள் கோயிலில் நடை பெறும் விழாவினைக் காண வெளியூர் சென்றார் அங்கே அந்த விழாவிற்கு வந்த மக்கள் சாப்பாட்டுக்கு அல்லல் படுவதைக் கண்டார். தர்மசத்திர மணியகாரர்கள் இடமில்லை



என்று சொல்லி மக்களை விரட்டியது பாபநாசம் சிவனாகிய அந்தச் சிறுவனின் உள்ளத்தில் ஓர் ஆழமான வடுவை ஏற்படுத்தியது. வெளியூர்களிலிருந்து திருவிழாவினைக் காண வருகின்ற மக்களுக்கு உணவு படைத்தல் பெரும் தர்மகாரியம் ஆகும், இதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அந்தச் சிறுவன் மனதில் உண்டாகி, துளிர் விட்டது. ஒருமுறை ஒரு புகழ் பெற்ற திருத்தலத்தில் நடைபெற்ற திருவிழாவிற்கு வந்தவர்களுக்கு அன்னமிட பெரிய மனிதர்களை அணுகினான்.

அதற்கு அவர்கள், நீ முன் நின்று செய்தால் நாங்கள் உதவுகிறோம் என்றனர். அந்தத் திருவிழா வில் வெளியூர்க் காரர்கள் ஐநூறு நபர்களுக்கு மேல் உணவு வழங்கப்பட்டது. அதன்பிறகு ஒவ்வொரு கோயில் திருவிழா வின்போதும் பாபநாசம் சிவன் ஏற்பாடு செய்யும் சமாராதனைகள் (அடியார்களுக்கு உணவு படைத்தல்) இருந்து கொண்டே இருக்கும்.

இவ்வாறு கோயில் திருவிழாவினைக் காண வருபவர் கள் அனைவர்க்கும் அன்னதான கைங்கர்யத்தை மேற் கொண்டு செய்து வந்த சிவன், கும்பகோணத்தை அடுத்துள்ள தேப்பெருமா(ள்) நல்லூரில் 1852 ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் பள்ளிக்குச் செல்ல விருப்பமில்லாது, கோயிலுக்குச் சென்று வேதமந்திரங்களை ஓதி வந்தார். வயது இருபது வந்ததும், நல்ல படிப்பு இல்லாததால் திருவிடை மருதூர் செட்டியார் சத்திரத்தில் தங்குகிறவர்களுக்குச் சமைத்துப் போடும் வேலை கிடைத்தது. பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட சிவன் தனக்காக எதையும் சேர்த்து வைத்துக் கொள்ளாது தர்ம காரியத்திற்கு எல்லாவற்றையும் செலவழித்து விடுவார். இதன் பலனாக, பலர் நான், நீ என்று

போட்டிப் போட்டுக் கொண்டு தர்மகாரியத்திற்கு உதவ முன்வந்தனர்.

இவருடைய சமாராதனை நாளடைவில் ஐம் பதினாயிரம் மக்கள் உணவு கொள்ளும் வகையில் நடைபெற்றன. இவ்வாறு பல ஆண்டுகள் அன்னதான கைங்கரியம் செய்து ''அன்னதான சிவன்'' என்ற பெயரைப் பெற்றுவிட்டார் சிவன். இவர் சமாராதனை ஒன்றுக்கு ஊறுகாய்க்கு மாத்திரம் பன்னிரெண்டு வண்டி நெல்லிக்காய்கள் வந்தன. குறைந்தபட்சமாக நூறுவண்டிகள் விறகாவது செலவாகும் என்று கூறப்படுகிறது. இவர் பணமாகப் பெறுவதில்லை. பண்டமாகவே பெற்றுக்கொள்வார். எல்லோருக்கும் உணவு அளிக்கும் இவர் அங்கே சாப்பிடமாட்டார். தேப்பெருமாள் நல்லூருக்குச் சென்று அங்கு தட்சிணாமூர்த்திக்கு நிவேதனம் படைத்து அதையே உணவாக உண்டார்.பெரும் தனம்படைத்தோரால் சாதிக்க முடியாத கைங்கரியத்தை இந்த பரம ஏழை சாதித்து வந்தார்.

இவர் தெருவில் சென்றால் இவர் பின்னால் நாய்கள் பட்டாளம் செல்லும். ஏதாவது ஒரு உணவு விடுதியில் இருக்கும் இட்லிகளை வாங்கி, குண்டு நாய்க்கு ஒரு இட்லி, சோனிநாய்க்கு இரண்டு இட்லி என்று போடுவார். உணவு விடுதிக்காரர்களுக்கு அன்று பிரமாதமாக வியாபாரம் நடைபெறும். சிவன் வரவேண்டும் என அவர்கள் ஏங்குவார்கள். இவர் நினைவாக அன்னதான சிவன் 1939 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இறைவனடியை சேர்ந்தார். பல தர்ம ஸ்தாபனங்கள் எழுந்துள்ளன. தேப்பெருமா(ள்)நல்லூரில் ஹரிஜன நலவிடுதி ஒன்றும், முதியோர் இல்லம் ஒன்றும் இவர் நினைவாக செயல்படுகின்றன.



## 157) திருவையாறு சப்தஸ்தான விழா

தஞ்சைமாவட்டத்தில் நடைபெறும் பெரியவிழாக் களில் ஒன்ற திருவையாறு சப்தஸ்தானம். தஞ்சை நகருக்கு வடக்கில் எட்டு கல் தூரத்தில் உள்ள திருவையாறு, காவிரி யின் வட கரையில் உள்ளது. ஐயாறு என்பது ஐந்து ஆறு களுக்கு அண்மையில் அமைந்துள்ள தலம் என்று பொருள் படும். வடவாறு, வெண்ணாறு, அரசலாறு, குடமுருட்டியாறு, காவிரியாறு என்ற ஐந்து ஆறுகளுக்கு அருகில் உள்ள தலம் என்பதால் ஐயாறு என்று பெயர் பெற்றது என்று பொருள்படும்.

**''புலனைந்தும் பொறி கலங்கி, நெறிமயங்கி,**
**அறிவழிந்திட்டு, ஐம்மேலுந்தி,**
**அலமந்த போது ஆக, 'அஞ்சேல்' ! என்று**
**அருள்செய்வான் அமரும் கோயில்-**
**வலம் வந்த மடவார்கள் நடமாட,**
**முழவதிர, மழையென் றஞ்சி,**
**சில மந்தி அலமந்து, மரமேறி,**
**முகில் பார்க்கும் திரு ஐயாறே"**

-சம்பந்தர் தேவாரம் 130ஆவது பதிகம் முதல் பாட்டு

இத்தலத்தில் நடைபெறும் சப்தஸ்தானத் திருவிழாவே பெரிய திருவிழாவாகும். இத்திருவிழா சித்திரை பௌர்ணமிக்கு முன்வரும் விசாகத்தன்று தொடங்கும். சித்திரை பூர்ணிமை அன்று இவ்விழாவின் சிறப்பான நாளாகும். ஐயாறப்பர், நந்தி தேவருக்குத் திருமணத்தை திருமழபாடியில் நடத்தி வைத்தார். அதற்கு திருப்பழனத்தி லிருந்து பழங்கள் வந்தன. திருச்சோற்றுத் துறையிலிருந்து உணவுப் பொருட்கள் வந்தன. திரு. வேதிக்குடியிலிருந்து

வேதியர் வந்தனர். கண்டியூரிலிருந்து மகரகண்துருத்தி யிலிருந்து பூமாலைகள் வந்தன. திருநெய்த்தானத் திலிருந்து நெய் முதலியன வந்தன. திருவையாறிலிருந்து இறைவன் வந்தார். இந்த ஏழு தலங்களில் உள்ளோர் சேர்ந்து நடத்திய திருமணம் இது. இந்தத் திருமணம் முடிந்த பின்னர் இறைவன் ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகியுடன், நந்திதேவர், சுயம் பிராசை தேவி உடன்வர, ஏழுதலங்களுக்குச் சென்று நன்றி தெரிவித்துத் திருவையாறுக்குத் திரும்புவதே சப்த ஸ்தானத்திருவிழா (ஏழூர்த் திருவிழா) எனப் பெயர் பெற்றது.

வையச்சேரியிலிருந்து வெட்டாற்றின் வடகரையில் 2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள ஊர் நெடார். நெடார் என்ற அந்த ஊரிலிருந்து வெட்டாற்றின் வடகரை ஓரமாக 3 கி.மீ. தூரத் தைக் கடந்து சென்றால் கண்டியூரை அடையலாம். கண்டி யூரைச் சுற்றி அமைந்துள்ளன திருப்பூந்துருத்தி, திருநெய்த் தானம் ஆகிய ஊர்கள். சப்தஸ்தானம் நடை பெறும் போது ஆற்றங்கரை ஓரமாக நடந்துசென்று இந்த விழாவைக் காண பதற்காக வையச்சேரியிலிருந்து பலர் செல்வோம். 1956ஆம் ஆண்டு நடைபெற்ற சப்தஸ்தானம் விழாவை நானும் அவர்கள் கூடச் சென்று கண்டு களித்தேன்.

அலங்கரிக்கப்பட்ட கண்ணாடிப் பல்லக்கில் இறை வன், இறைவி, நந்தி தேவர், அவர் மனைவி புறப்பட்டு ஒவ்வொரு தலத்துக்கும் சென்று அவ்வூர் மூர்த்திகளோடு தங்கி, அவர்கள் பல்லக்குகள் உடன்வர, மறுநாள் காலையில் ஐயாற்றில் எழுந்தருள்வார்கள். திருவையாறு அதன் சுற்று வட்டாரமும், திருவிழா கோலம் பூண்டு சிறந்து காணப்படும் வழி நெடுகத் தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்பட்டிருக்கும்.



## 158) நவாப் ராஜமாணிக்கத்தின் தசாவதார நாடகம்

திரு.பாஸ்கர தொண்டைமான் என்பவர் தஞ்சை மாவட்ட ஆட்சியாளராக பணியாற்றி வந்தவர். இவர் கலை யார்வம் கொண்டவர். கல்கி, கலைமகள் போன்ற இதழ் களில் தொல்பொருள் ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை எழுதி யுள்ளார். இவருடைய பெருமுயற்சியின் காரணமாக தஞ்சைக் கலைக்கூடம் உருவாயிற்று. ஒவ்வொரு ஆண்டும் கோடை விடுமுறையின்போது அரண்மனை வளாகத்துள் சங்கீத மஹாலுக்கு வடபுறம் பெரியதொரு அரங்கமேடை அமைக்கப் பட்டு அதில் நாடகங்கள் நடைபெறும். இந்த நாடகங்களைக் காண்பதற்காகத் தனிக்கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. 1956ஆம் ஆண்டு கோடை விடுமுறையின்போது நவாப் ராஜமாணிக்கத்தின் தசாவதாரம் நாடகத்தைக் காண நேரிட்டது. மேடையில் கண்ணிமைக்கும் நேரத்தில் காட்சி யமைப்புகளை மாற்றிக் காட்டும் திறன் படைத்தவர் நவாப் ராஜமாணிக்கம். தசாவதார நாடகத்தில் ‘அமிர்தமதனம்’ என்றழைக்கப்படும் திருப்பாற் கடலைக் கடையும் காட்சியில் கடல் அலைகளுக்கிடையே பெரிய தொரு மலை, கடையும் கயிறாக வாசுகி என்ற நாகப் பாம்பு அதன் பணாமங்களி லிருந்து தீப்பிழம்பு அசுரர்கள் மற்றும் தேவர்கள் ஆகியோரைத் தத்ரூபமாகக் காணமுடிந்தது. இதுபோன்று பலகாட்சிகளில் நவாப் ராஜமாணிக்கம் வெளிப் படுத்திய கலைத்திறனை அனைத்து மக்களும் பத்திரிகை களும் பாராட்டி வந்தனர்.

காவல் துறையில் ஏட்டாகப் பணிபுரிந்த சுப்பிரமணிய பிள்ளையின் 3ஆவது மனைவிக்கு மகனாக 1906இல் பிறந்த வர் ராஜமாணிக்கம். 5 வயதில் தந்தையை இழந்த இவர் 3ஆம்

வகுப்பு வரை மட்டுமே படித்தார் 1927இல் மதுரை பால மீன லோசினி நாடகக் குழுவில் இணைந்து கள்ளபார்ட் வேட மேற்று நடித்துப் புகழ்பெற்றார். பின்னர் ஜகந்நாத அய்யர் நாடகக் குழுவில் சேர்ந்து கே. சாரங்கபாணி, எம்.ஆர். ராதா, ஆகியோரோடு இணைந்து நடித்தார்.

## 158) ராஜமாணிக்கம் நவாப் ராஜமாணிக்கம் ஆனார்

'பக்த ராமதாஸ்' என்ற நாடகத்தில் 'நவாப்' வேடத்தில் சிறப்பாக நடித்துப் புகழ் பெற்றதால் நவாப் என்ற பட்டம் இவரது பெயருக்கு முன்னால் சேர்ந்து கொண்டது. 1933ஆம் ஆண்டு "மதுரை தேவி பால விநோத சங்கீத சபா" என்ற குழுவைத்தானே ஏற்படுத்தினார். இக்குழுவால் இசைகான பிரேமகுமாரி, இராமாயணம், இராஜாம்பாள், இராஜபக்தி, ஏசு நாதர், பக்த ராமதாஸ், கிருஷ்ணலீலா, ஞான சௌந்தரி போன்ற நாடகங்கள் நடத்தப்பட்டன.

எம்.என். நம்பியார், கள்ளபார்ட் நடராஜன், இசைக் கலைஞர் சிதம்பரம் ஜெயராமன், இயக்குநர் கோபால கிருஷ்ணன் ஆகியோர் இவரால் உருவாக்கப்பட்டவர்கள். பிற் காலத்தில் தமிழ்நாட்டில் அய்யப்ப பக்தர்கள் அதிகமாவதற்கு இவரது "சபரிமலை அய்யப்பன்" நாடகமே அடித்தளமாக அமைந்தது. மலைக்கு மாலையணிந்து செல்வதைத் தொடங்கி வைத்தது இவரும், இவரது குழுவினரும் தாம்.

1936இல் தஞ்சையைச் சேர்ந்த அங்கையற்கண்ணி யை மணந்தார். பல ஆண்டுகளுக்குப்பிறகு பிறந்த தனது ஆண் குழந்தைக்கு 'தேவிபாதம்' என்று பெயரிட்டார். பிற் காலத்தில் தேவிபாதமும் தந்தையைப் போல நாடகத் துறை யில் புகழ்பெற்று விளங்கினார். நவாப் இராஜமாணிக்கத்தின்



நாடகக் குழுவில் 200 நடிகர்கள் இருந்தனர். நாடகக் குழு இடம் பெயர 40 லாரிகள் பயன்படுத்தப்பட்டன. அரங்க அமைப்பில் புகழ் பெற்றுத் திகழ்ந்தார். நாடகக் குழுவில் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் காப்பாற்றினார். கதராடை அணிவதையும், சபரிமலைக்கு மாலையிடுவ தையும் கட்டாய கடமையாக்கினார். தனது கலைப் பயணத்தில் நூற்றுக்கணக்கான விருதுகளைப் பெற்ற இவரது நாடகங்கள் பலமுறை மேடையேறி யுள்ளது. கிருஷ்ணலீலா நாடகம் மட்டும் 1418 முறை மேடை யேறியுள்ளது. இவர் திருவரங்கத்தில் வசித்துவந்தபோதுதான் இறைவனடி சேர்ந்தார்.

## 159) S.S.L.C -இல் தேர்ச்சிபெற்றேன்

1950-60 காலகட்டத்தில் S.S.L.C. தேர்வு முடிவுகள் பிரபல நாளிதழ்களில் வெளியிடப்பட்டு வந்தன. 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தேர்வு முடிவுகள் வெளிவந்தன. அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றதாக நான் அறிவிக்கப்பட்டேன். தேர்வு முடிவுகள் வெளிவந்த சில நாட்களுக்குப் பிறகு ராஜா மடம் சென்று S.S.L.C Certificate என்ற சிறிய புத்தக வடிவிலான சான்றிதழைப் பெற்று வந்தேன். (***இந்தச் சான்றிதழில் ஒன்பதாம் வகுப்புத் தொடங்கி ஆண்டுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள், பள்ளிக்கு வந்த நாட்கள், S.S.L.C அரசுத் தேர் வில் பெற்ற மதிப்பெண்கள், பிறந்த தேதி, உடம்பிலுள்ள குறிப்பிடத்தக்க அடையாளங்கள் ஆகியவை இடம்பெற்றி ருக்கும். தேர்வில் தேர்ச்சிபெற்றதாக Secretary to the Board of Secondary Education கையெழுத்திட்டிருப்பார்.*** )

## 160) கணித ஆசிரியர் திரு. நாராயணனின் பரிவு

தேர்வுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட பிறகு

கணித ஆசிரியர் திரு. நாராயணன் அவர்களைச் சந்தித்தேன். பள்ளியில் 500 மதிப்பெண்ணுக்கு 420 மதிப்பெண் பெற்று பஞ்சநதம் என்ற மாணவன் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டான். 500 மதிப்பெண்ணுக்கு 385 மதிப்பெண் பெற்று நான் இரண்டாம் இடத்தில் இருந்தேன். கணித ஆசிரியரிடம் Algebra பகுதியை எனக்குப் போதித்திருந்தால் இன்னும் கூடுதல் மதிப்பெண் பெற்றிருப்பேனே என்று கூறினேன்.

ஆனால் அவரோ "நீ பெற்றிருக்கும் மதிப் பெண்ணிற்கு எந்தக் கல்லூரி முதல்வரும் இடமளித்திடுவார். வாழ்க்கையில் நீ தடைகளை எதிர்கொண்டு முன்னேற வேண்டும். நீ வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைக் காண்பாய். பொரு ளாதாரச் சூழ்நிலையை காரணங்காட்டி மேல்படிப்பை தொடராமல் இருந்துவிடாதே எப்பாடு பட்டேனும் கல்லூரியில் சேர்வதற்கான முயற்சிகளை செய்" என்றெல்லாம் அறிவுரை வழங்கிப் பேருந்துநிலையம் வரை வந்து வழியனுப்பி வைத்தார். தற்போது 500/500 மதிப்பெண் வாங்குவதுபோல் அந்தக் காலத்தில் மதிப்பெண் பெற இயலாது. S.S.L.C.யில் தமிழ் நாட்டில் முதல் மாணவன் 500க்கு 440 தான் பெற்றிருக்கக்கூடும்.

## 161) பூர்வீகச் சொத்து

என்னுடைய தந்தையார் என்னைக் கல்லூரியில் சேர்ப் பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு முன்பு மேற்படிப் பிற்கான பணத்தைச் சேகரிப்பதற்கு மிகவும் பாடுபட்டார். என் தந்தையாருக்கும், சிறிய தகப்பனாருக்கும் சொந்தமான பூர்வீகச் சொத்தில் மூன்றுமா நஞ்சை நிலம், சில புஞ்சைத் திடல்கள், பத்து தென்னைமரங்கள், இரண்டு மாமரங்கள்,



மூதாதையர்கள் வாழ்ந்த வீடு ஆகியவை மட்டுமே விஞ்சியிருந்தன. நிலபுலன்களிலிருந்து ஆண்டிற்கு மிக மிகக் குறைந்த வருமானமே வந்து கொண்டிருந்தது. வீடு பூட்டிய நிலையில் தான் இருக்கும். (***ஆண்டுக்கொரு முறை என்னுடைய பிதாமஹரின் திருவத்யயனத்தின்போது குடும்பத்தார் அனைவரும் கூடுவோம். அதன்பிறகு கிராமச் சூழலில் மன மகிழ்ச்சியோடு சில நாட்கள் இருந்துவிட்டு ஊர் திரும்புவோம்.***)

கீழைப்பனையூர் கிராமத்திற்கு விடுமுறை நாட் களுக்குப் போகும்போதெல்லாம் எங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான தென்னை மரங்களிலிருந்து ஒன்றிரண்டு இளநீர் கிடைக்கும். மாரியம்மன் கோயில் குளக் கரையில் இருந்த கிளி மூக்கு மாமரத்திலிருந்து ஒரு கூடை மாங்காயைக் குத்தகைக் காரன் கொடுப்பான்.

***(இந்த மரத்து மாங்காயின் அடிபாகம் வளைந்து இருக்கும். அதனால் இதற்கு கிளிமூக்கு மாங்காய் என்று பெயர். வறுத்த வெந்தயம், வறுத்த மிளகாய், பச்சைக் கடுகுத் தூள், மஞ்சள் தூள், பெருங்காயம் (கலப்படமற்ற பெருங்காயம் அந்த நாளில் விற்பனை செய்யப்பட்டுவந்தது. இதற்குப் பால் பெருங்காயம் என்று பெயர். ஒரு வெள்ளைத் துணிப்பையில் பெருங்காய வியாபாரி சிறிய துலாக்கோல் கொண்டு ஒரு பலம் அல்லது இரண்டு பலம் பெருங்காயத்தை விற்பனை செய்வார். இதில் ஒரு சிறிதளவு எடுத்து பதார்த்தங் களில் சேர்த்தால் நல்ல மணம் இருக்கும்.) ஆகியவற்றை இடித்து நீர்படாத மாங்காய்த் துண்டுகளில் உப்பைச் சேர்த்து நல்லெண்ணையைக் காய்ச்சி அதன் மீது ஊற்றி அதன் வாயை நன்றாக மூடித் தினந்தோறும் குலுக்கிப் பக்குவப்படுத்திய பிறகு மூன்றாம் நாள் இந்த வெந்தய மாங்காய் ஊறுகாயை தொட்டுக்கொண்டு ஒரு படி அன்னத்தை சாப்பிடலாம். இதுவே ஆந்திர மாநிலத்தில் 'ஆவக்காய் மாங்காய்' என்று வழங்கப்படுகின்றது.)***

## 162) கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? வாங்கும் வீடெல்லாம் மூதாதையர் வாழ்ந்த வீட்டிற்கு ஒப்பாகுமா?

கல்லூரியில் சேர்வதற்கு வேறு யாரிடமிருந்தும் 400 ரூபாய் கடனாகப் பெறமுடியாததால் மூதாதையர் சொத்தில் எங்களுக்குரிய பாகத்தை சிறிய தகப்பனாரிடம் ஒப்படைத்து விட்டதாக விடுதலைப் பத்திரத்தை என் தந்தையாரும், நானும் ஒப்புதல் அளித்து எழுதிக் கொடுத்தோம். பல்வேறு சமயங் களில் சிறிய தந்தையாரிடம் என் தந்தையார் வாங்கிய 800 ரூபாய் கடனுடன் இந்த 400 ரூபாயையும் சேர்த்து 1200 ரூபாய் பெற்றுக்கொண்டு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுப்ப தாக அந்தப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

***(கல்லூரியில் பயின்றபின் பூண்டி புஷ்பம் கல்லூரி, திருச்சி தேசீயக் கல்லூரி ஆகியவற்றில் 3 ஆண்டுகள் பணிபுரிந்தேன். பிறகு 1963 ஆம் ஆண்டு இந்தியன் ஆயில் நிறுவனத்தில் சேர்ந்தேன். 34 ஆண்டுகள் பணியாற்றிய பின் 1997 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். தொழிலாளர் நலனை முன்வைத்து இயங்கும் இந்தியன் ஆயில் நிறுவனம் அதில் பணிபுரிந் தோருக்கு எத் தனையோ சலுகைகளை வாரி வழங்கியுள்ளது. இன்றும் வழங்கி வருகின்றது.***

***அத்தகையதொரு நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றபோது (1997 ஆம் ஆண்டு) சென்னை மாநகரில் அன்றைய தினம் 30 லட்சம் பெறுமான வீடும், பல லட்சங்கள்*** P.F, Gratuity ***யாக என்னை வந்தடைந்தபோதும் அவை யெல்லாம் மூதாதையர் வாழ்ந்த வீட்டிற்கு இணையாகாது என்ற எண்ணம் என் மனதில் இன்றும் குமிழிட்டுக் கொண்டு இருக்கின்றது. மூதாதையர்கள் வாழ்ந்த வீட்டின் ஒவ்வொரு கல்லும் நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் அடை யாளச் சின்னங்களாகும்.***



***பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு ஓரிரு வீடுகள் வாங்கியும், விற்றும் புதிதாகத் திருவரங்கத்தில் குடியிருப்பு ஒன்றினைப் பெற்ற போதிலும் கீழைப்பனையூரில் எம் முன்னோர்கள் வாழ்ந்த இருப்பிடத்தை என்றாவது ஒருநாள் ஏதாவது ஒரு வகையில் திரும்பப் பெற்று அதில் சில நாட் களேனும் நானும் என் எதிர்கால சந்ததியினரும் தங்கியிருக்க வேண்டும். அப்போதுதான் நம் எதிர்கால சந்ததியினர்க்கு நம் மூதாதையர் பக்கலில் மதிப்பும் மரியாதையும் ஏற்படும்; பொன் விளையும் பூமியான கீழைப்பனையூர் தோட்டங்களில் திருத் துழாய் நந்தவனம் அமைத்து ராஜமன்னார்குடி ஸ்ரீ வித்யாராஜகோபாலனுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு திருத் துழாய் மாலையை அணிவித்து கைங்கரியம் செய்ய வேண்டும் என்ற என்னுடைய எண்ணம் என்று ஈடேறுமோ? யார் அறிவார்?)***

## 163) திருச்சி தேசீயக் கல்லூரியில் இடம் கிடைத்தது

கல்லூரியில் சேருவதற்கு இவ்வாறு பணம் திரட்டு வதற்குள் இரண்டு மாதங்கள் கழிந்தன. 1956 - ஜூலை கடைசி வாரத்தில் அப்போது தஞ்சையில் தொடங்கப்பட்டு இருந்த சரபோஜி மன்னர் கல்லூரியில் சேருவதற்காக அந்தக் கல்லூரியில் கணக்காளர் வேலையில் இருந்த தூரத்து உறவினர் கோவிலூர் திரு. சந்தானம் அய்யங்கார் என்பா ருடைய உதவியை நாடினோம். அவர் இந்த 385 மதிப்பெண் ணுக்கெல்லாம் இந்தக் கல்லூரியில் இடம் கிடைக்காது. இந்த ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை யெல்லாம் முடிந்துவிட்டது அடுத்த ஆண்டு பார்க்கலாம் என்று சொல்லி எங்களை திருப்பி அனுப்பிவிட்டார்.

மனம் ஒடிந்த நான் கல்லூரியில் சேரும் என் ஆசையை இழந்தேன். பிறகு யார் யாரிடமோ விசாரித்து

திருச்சி தேசீயக் கல்லூரியில் G.வரதாசார்யார் என்பார் முதல்வராக இருக்கிறார். அவர் இளகிய மனது கொண்டவர். பிராமணச் சிறுவர்களுக்கு உதவி செய்பவர். அந்த ஆண்டு கல்வித்துறையில் கொண்டு வந்த மாற்றத்தின் விளைவாக புகு(து)முக வகுப்புகளுக்கு மேலும் மாணவர்கள் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதி கிடைத் துள்ளது. திருவானைக் கோவிலில் உள்ள ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் மாணவர்கள் தங்கி படிப்பதற்கு அந்த சத்திரத்தின் நீதிமன்றப் பாதுகாவலரான (Court Receiver) வைத்தியலிங்கம் அய்யரைச் சென்று பார்த்தால் ஏதாவதொரு வகையில் கல்லூரியில் சேரலாம் என்று கேட்டு அறிந்தார் என் தந்தையார்.

ஸ்ரீரங்கம் கோயில் செல்வ மணவாள மாமுனிகள் ஸந்நிதி ஆதீனகர்த்தரான கோமடம் திருவேங்கடாசார்யார் ஸ்வாமியின் ஜ்யேஷ்ட குமாரர் ஸ்ரீ.உ.வே. ஸம்பத் குமாராசார்யர் 1956 ஆம் ஆண்டு தேசீய கல்லூரியின் Intermediate படிப்பினை முடித்துவிட்டு அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் B.A (Honours) வகுப்பில் சேருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார். 1956ஆம் ஆண்டு தேசீயக் கல்லூரி முதல்வரான G. வரதாசார்யாரிடம் புகுமுக வகுப்பில் எனக்கு ஓர் இடம் தந்திடுமாறு இவர் பரிந்துரை செய்தார். (***1956 ஆம் ஆண்டிற்கு முன்பு பட்டப்படிப்பை மேற்கொள்வோர்*** Intermediate ***என்று அழைக்கப்பட்டு வந்த இரண்டாண்டு படிப்பினை முடித் திருக்க வேண்டும் அதன்பிறகுதான்*** B.A ***அல்லது*** B.Sc ***பட்டப் படிப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.*** Intermediate ***இல் அதிக மதிப்பெண் பெற்றவர்கள் மூன்றாண்டு முதுகலைப் பட்டப்படிப்பான*** Honours ***இல் சேர்த்துக் கொள்ளப்படு வார்கள்.***

***1956-60 கால கட்டத்தில் சென்னை, திருச்சி, பாளையங்கோட்டை, கோயம்புத்தூர் ஆகிய ஊர்களில் மட்டுமே*** Post



graduation ***என்று அழைக்கப்படும் முதுநிலைக் கல்வி அளிக்கப்பட்டு வந்தது. இந்த முதுநிலைக் கல்வி இரண்டு வகைப்பட்டிருக்கும் ஒன்று*** Intermediate ***முடித்த பிறகு மூன்று ஆண்டு*** Honours ***படிப்பு மற்றொன்று 2 ஆண்டுகள் இளங்கலை*** B.A., B.Sc., ***பட்டப்படிப்பு அதன்பிறகு*** M.A., M.Sc., ***ஆன இரண்டு ஆண்டுகள் முதுகலைப் பட்டப் படிப்பு. 1956 ஆம் ஆண்டு பல்கலைக் கழகப் பாடத்திட்டத்தில் பெரியதொரு மாற்றம் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாகக் கல்லூரி களில் இரண்டாண்டுகளுக்கு போதிக்கப்பட்டு வந்த*** Intermediate ***எனப்படும் பாடத்திட்டம் நீக்கப்பட்டு அதற்கு மாற்றாக ஓராண்டு பாடத்திட்டமாகப் புகுமுக வகுப்பு*** (Pre University) ***அமுல் படுத்தப்பட்டது (சில ஆண்டுகளுக்கு பிறகு*** Pre University ***வகுப்பு கல்லூரிகளிலிருந்து பிரிக்கப்பட்டு மேல்நிலைப் பள்ளி களுக்கு மாற்றப்பட்டது. +2 என்று வழங்கப்படும் வகுப்புகள் உயர்நிலைப் பள்ளிகளில் போதிக்கப்பட்டு வந்த பதினோறாம் வகுப்பு மற்றும் கல்லூரிகளி லிருந்து பிரிக்கப்பட்ட*** Pre University ***வகுப்பு ஆகிய இரண்டின் கலவையாகும்.)***

1956 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தின் ஒருநாளில் தேசியக் கல்லூரியைச் சென்றடைந்தோம். முதல்வர் அறையைச் சுற்றி மாணவர்களும், பெற்றோர்களும் சூழ்ந்து நின்றனர். விண்ணப்பப் படிவத்தை முதல்வரிடம் சேர்ப்பிப்பதற்குகூட முடியாத அளவிற்கு அவரைச் சூழ்ந்து பெற் றோர்கள் நின்றுகொண்டிருந்தனர். ஸ்ரீரங்கம் உயர்நிலைப் பள்ளி மற்றும் திருச்சி E.R High School மாணவர்கள் புகுமுக வகுப்பில் சேருவதற்கான முதல்வரின் அனுமதியைப் பெறுவதற்காகப் பெருமளவில் கூடியிருந்தனர். என்னுடைய விண்ணப்ப படிவம் மிகுந்த இடர்ப்பாடுகளிடையே முதல் வரைச் சென்று அடைந்தது. என்னுடைய விண்ணப்பப் படிவத்தையும், மதிப்

பெண்ணையும் பார்த்த முதல்வர் "Here is an application from Krishnamachari son of Ananthachari from Vaiyacheri who has scored 385 Marks out of 500. None of the applicants here have obtained this mark. You all tell me am I to give a seat to this boy or to your wards" என்று கூறிய வண்ணம் எனக்குக் கல்லூரியில் இட மளித்தார்.

## 164) கல்கியின் நினைவலைகளிலிருந்து சில வரிகள்

"திருச்சி தேசீயக் கல்லூரியின் இந்த முன் வாசல் வழியாக எத்தனையோ இளம்பிள்ளைகள் சிறந்த கல்வியும் பண்பாடும், தெய்வ பக்தியும், தேசபக்தியும் அடைந்தவர் களாக வெளியேறித் தேசத்தின் நானா திசைகளுக்கும் சென்று வாழ்கிறார்கள்.

மலைக்கோயிலைப் போலவே புகழுக்கும் பூஜைக்கும் உரியதான கலைக் கோயில்; திருச்சி நேஷனல் காலேஜ் என்று பெயர் பெற்றது. அறுபது வருஷங்களுக்கு முன்னால் மூன்று பரோபகார சீலர்களின் உள்ளத்திலே இந்தக் கலைக் கோயில் தோன்றிற்று. அந்தப் பரோபகார சீலர்கள்: ஜி. சேஷ அய்யங் கார், பி.எஸ். வேங்கடரமண சர்மா, பி.ஜி. சுந்தரரேச சாஸ்திரி யார். அவர்கள் மூவரும், கிறிஸ்துவப் பாதிரியார்கள் நடத்திய எஸ்.பி.ஜி. கல்லூரிப் பள்ளிக் கூடத்தில் ஆசிரியர்களாய் இருந்தார்கள்.

பாதிரிமார்கள் தீவிரமாய் மத போதனை நடத்தி மாணாக்கர்கள் பலரை மதம் மாற்றிக் கொண்டிருந்ததைப் பற்றி, அந்த இளம் ஆசிரியர்கள் அடிக்கடி கவலையுடன் பேசிக் கொண்டார்கள். ஒரு நாள் மாலை காவேரி ஆற்றின் மணலில் அமர்ந்தபடி அவர்கள் ஒரு திட்டம் போட்டார்கள்.



மூவரும் சேர்ந்து தனிப் பள்ளிக் கூடம் ஒன்றை அமைப்பது என்பதுதான் அந்தத் திட்டம். ஒரே நாளில் அவர்கள் கிறிஸ்துவப் பள்ளியிலிருந்து விலகி, தமது திட்டத்தை நிறைவேற்றுவதில் முனைந்தார்கள். பலருடைய உதவியை நாடிப் பெற்று 1886 ஜூன் மாதத்தில், "நேஷனல் ஹைஸ்கூல்" என்ற வித்தியா லயத்தை நிறுவினார்கள்.

காலத்துக்கு ஏற்றபடி ஆங்கிலக் கல்வி புகட்ட வேண்டியது தான். ஆயினும் ஆங்கிலக் கல்வியைக் கற்கும் மாணவர்கள் வேற்று மதத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் அடிமை ஆகாதபடி பாதுகாக்க வேண்டும்; ஹிந்து நெறிகளை யும் தேசீயப்பான்மையையும் மாணவர்களுக்கு ஊட்டி, உண்மையான பாரத மாந்தராய் அவர்கள் வளர்ந்து தாய் நாட்டுக்குப் பணியாற்றும்படி செய்ய வேண்டும்- இவைகளே அந்தக் கலாசாலையின் நோக்கம். அந்தக் கல்விக் கூடத்தை அமைக்கையிலும், அமைத்த புதிதிலும், நிறுவனர்கள் மூவரும் எத்தனையோ இடையூறுகளைக் கடக்க வேண்டிய தாயும், இன்னல்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டி யதாயும் இருந்தது. தியாக உணர்ச்சியுடன் அவர்கள் உழைத்த உழைப்பினால் அவர்களுடைய பள்ளி மேலும் மேலும் வளர்ந் தோங்கி, 1919இல் கல்லூரியாக விரிவடைந்தது. சோழ நாட்டு நிலக்கிழார்களும், நாட்டுக்கோட்டை தனவந்தர்களும் அதற்கு நிறைய நன்கொடை அளித்தார்கள்.

நன்கொடைகள் திரட்டுவதில் சேஷய்யங்கார் நிபுண ராய் இருந்தார். அவருடைய முயற்சியினால்தான் தேசீயக் கல்லூரியின் கட்டிடம் எழுந்தது. "தட்டினால் வெண்கலம் போல் சத்தம் கேட்கும்" என்று பலரும் பாராட்டும்படி அவ்வளவு உறுதியான கட்டிடத்தைக் கட்டியவர், கடைசி வரை, ஒரு கூரை வீட்டிலேயே குடியிருந்தார்.

கட்டிடம் எழுந்ததோடு சேஷய்யங்கார் அவர்களின் திட்டம் முடிந்துவிடவில்லை. சிருங்கேரி மடாதிபதியை அணுகினார். மடத்தின் செலவில் ஹைஸ்கூல் மாணவர் களுக்கு இந்து மதத் தத்துவங்களைப் போதிக்க ஒரு பண்டிதரை நியமித்தார். கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து வள்ளல். கனியூர் கிருஷ்ணய்யர், ஹெட்மாஸ்டர் சேஷய் யங்காருடைய கைங் கரியத்தில் அபிமானம் கொண்டார். இருபத்தைந்து ஏழை மாணவர்களுக்கு உணவு அளிக்கவும், இங்கிலீஷ் படிப்போடு வேதம் முதலியன ஓரளவு தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்யவும், நிரந்தரமான நன்கொடையாக, ஐம்பது ஏக்கர் அயன் நன் செய் நிலத்தை அந்தச் சீமான் எழுதி வைத்தார். அவர் ஏற்படுத்திய தருமம் இன்றளவும் விமரி சையாக நடந்து வருகிறது.

அதே மாதிரி இந்தக் காலத்தில் ஆங்கில பாஷையில் ஆங்கிலேயரைப் பார்த்து அதிசயிக்கும்படியான புலமை வாய்ந்த தலைசிறந்த புலவர் கோஷ்டியில் ஸ்ரீ சாரநாத அய்யங் கார் அவர்களையும், ஸ்ரீ ஏ. ராமய்யர் அவர்களையும் சேர்க்க வேண்டும். ஸ்ரீ சாரநாத அய்யங்கார் அவர்கள் ஆங்கிலப் புல மையுடன் தமிழிலேயும் அக்கறை உடையவர். ஸ்ரீ ஏ. ராமய்யரோ, ஆங்கிலம் தமிழோடு கூட, தேசீய பாஷை யான ஹிந்துஸ்தானியிலும் நிபுணர். இப்படித் தமிழ் நாட்டு ஆசிரியர் கோஷ்டியில் எத்தனையோ பேர் இருப்பதை எண்ணும்போது தான், "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்னும் பாரதியாரின் அருள் வாக்கு எத்தனை பொருள் பொதிந்த வாக்கு என்பதை உணர் கிறோம்.

ஸ்ரீ சாரநாதய்யங்கார், ஸ்ரீ ராமய்யர் போன்றவர்கள் சாதாரணமாய்க் கவர்ன்மெண்ட் கலாசாலைகளில் ஆசிரி யர்கள் பெறும் சம்பளத்தில் பாதிக்குக் குறைவாக வாங்கிக்



கொண்டும், அதிலும் ஒரு பகுதியைக் கலாசாலைக்குத் திரும்ப அளித்துக் கொண்டும் திருச்சி நேஷனல் காலேஜைப் போற்றி வளர்த்து வந்திருக்கிறார்கள்... தேசீயக் கல்லூரியின் வளைவுக்குள் இப்போது வேத வேதாந்த மண்டபம் உள்ள இடத்துக்குப் பின்னால், கனியூர் கிருஷ்ணய்யர் விடுதி அமைந்திருந்தது. அதில் தங்கும் மாணவர்களுக்குத் தினசரி ஒழுக்க முறைகள் சில உண்டு".

## 165) தேசியக் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கல்விச்சீலர் சாரநாதன்

"பிரச்சனைக்குரிய சூழ்நிலையின் ஒரு விந்தையான பிறப்பு" என்று தனது பிறப்பினைப் பற்றி கூறும் சாரநாதன் 1892 ஆம் ஆண்டில் ஜனவரி 6ந்தேதி கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருச்சேறை எனும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை வேங்கட சேஷாத்திரி தாத்தாச்சாரியார் புகழ் பெற்ற வேத விற்பன்னர். இளமையிலேயே தந்தையை இழந்த இவர் நெல்லை மாவட்டத்தில் உள்ள காருகுறிச்சி கிராமத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். மெட்ரிகுலேஷன் தேர்வில் மாவட்டத்தின் முதல் மாணவராகவும் பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டமும் பெற்றவர்.

திருச்சிராப்பள்ளி புனித வளனார் கல்லூரியில் பயிற்று நராக (Tutor) முதன்முதல் பணியில் சேர்ந்தார். அப்போது எம்.ஏ. பட்டம் பெற்றார். பின்னர் 1914இல் நெல்லை இந்து கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகவும் 1918இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் துணைப் பேராசிரிய ராகவும் திருச்சிராப்பள்ளியில் 1919இல் தேசீயக் கல்லூரியில் ஆங்கிலத்துறையின் தலைவராகவும் 1921 ஆம் ஆண்டில் அக்கல்லூரியின் முதல்வராகவும் பொறுப்பேற்றார்.

தேசீயக்கல்லூரியில் இவர் ஆற்றிய பணி மகத்தானது. கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், மாணவர்களின் கல்விக்காக வும் அல்லும் பகலும் அயராது உழைத்துள்ளார். அகில இந்திய அளவில் கல்வியாளர்களிடையே சாரநாதனின் கல்விப்பணி அக்காலத்தில் பேசப்பட்டது. இவர், தான் பெற்ற மாதச் சம்பளத்தில் பாதித் தொகையை ஏழை மாணவர்களின் கல்விக் காகக் கொடுத்து உதவி வந்தார். 1930ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 6 ஆண்டுகள் திறம்படப் பணி யாற்றினார். 1947 ஆம் ஆண்டில் முதல்வர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

சாரநாதன், அக்காலத்தில் தன்னுடைய எழுச்சிமிக்க எழுத்துக்களினாலும், கவிதைகளினாலும் மாணவர்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டி வளர்த்தார். இதனால் ஆங்கில அரசால் பெரிதும் கண்காணிக்கப்பட்டு வந்தார். சாரநாதன் மிகச்சிறந்த ஒரு படைப்பிலக்கிய கர்த்தா ஆவார். தமிழில் கட்டளைக் கலித்துறையிலும், ஆங்கிலத்திலும் நூற்றுக் கணக்கான கவிதைகளை இயற்றியுள்ளார். "இலக்கியத் திறனாய்வு", "கலைத்துறைக் கட்டுரைகள்", கல்வி பற்றிய கட்டுரைகள், சுய சரிதை போன்ற ஆங்கில நூல்களையும், வாழ்க்கைச் சிற்பம், நம் நாகரீகம், கல்வி, சில பேரறிஞர்கள், சமூகப் பிரச்னைகள், போன்ற தமிழ் நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டள்ளார்.

இவர் எழுதிய தினசரி நாட்குறிப்பை "சிந்தனைச்சுடர்" என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிட்டு உள்ளார். பல துறைகளிலும், பல கோணங்களிலும் தனது சிந்தனைகளை நூலாக வெளியிட்டுள்ள நூலாசிரியராகவும், கருத்துமிக்க கவிஞராகவும், கண்டிப்பான கல்லூரி



முதல்வராகவும், பழகுவதற்கு இனிய பண்பாளராகவும் திகழ்ந்தவர் கல்விச் சீலர் சாரநாதன்.

## 166) ரங்கூன் ரெட்டியார் தர்மசத்திரம்

கல்லூரியில் இடம் கிடைத்த பிறகு தங்கியிருந்து படிப்பதற்காகத் திருவானைக்காவில் அமைந்திருந்த ரங்கூன் ரெட்டியார் சத்திரத்திற்குச் சென்று ரிஸீவராக பணியாற்றிவந்த திரு. வைத்தியலிங்கம் அய்யரை சந்தித்தோம். இவர் ஒரு பாலக்காட்டு பிராமணர். சிதம்பரம் ரெட்டியார் வாரிசு களிடையே எழுந்த மோதலால் அவருடைய சொத்துக்கள் அனைத்தும் நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. அதன் விளைவு-நீதிமன்றக் காவலராக திரு. வைத்தியலிங்கம் பொறுப்பிலிருந்தார்.

திருவானைக்காவில் சந்நிதி வீதியின் தென்புறத்தில் கம்பீரமாகக் காட்சித்தரும் முதல் கட்டிடம் ரங்கூன் ரெட்டியார் சத்திரம் அதன் நிறுவனரான சிதம்பரம் ரெட்டியார் பெரம் பலூருக்கு அருகில் உள்ள வரகுப்பட்டியில் பிறந்தவர். தொழில் நிமித்தமாகப் பர்மாவிற்குச் சென்று அங்குத் துறை முகத்தில் விசைப்படகுகள் இயக்கும் தொழிலில் ஈடுபட்டுப் பெரும் நிதி சேர்த்து செல்வந்தரானார்.

ரங்கூனில் 1932இல் சுந்தரராஜ பெருமாள் கோவில் ஒன்றை தன் சொந்தப் பொருட்செலவில் கட்டியுள்ளார். மேலும் ரெட்டியார் உயர்நிலைப்பள்ளி ஒன்றையும் ரங்கூனில் தொடங்கி நடத்தி வந்தார். பர்மாவில் தான் ஈட்டிய செல் வத்தைத் திருச்சிராப்பள்ளிக்குக் கொணர்ந்து திருவானைக் காவில் இன்றுள்ள மிகப்பெரிய கட்டடத்தை உருவாக்கினார். மேலும் ரங்கூன் சிதம்பரம் ரெட்டியார் அன்னதான சத்திரம் என்ற அறக்கட்டளையையும் நிறுவினார்.

இந்த அறக்கட்டளைக்காக லால்குடி தாலுகாவில், ஆதிகுடி, சிறுதையூர், மேட்டுப்பட்டி, பல்லாவரம் முதலிய கிராமங்களில் 200 ஏக்கர் நன்செய் நிலங்களையும், மணக் கால் கிராமத்தைச் சுற்றி 300 ஏக்கர் நன்செய் நிலங்களையும் கிரயம் பெற்றார். மேற்கண்ட நிலங்களிலிருந்து கிடைக்கும் நெல் மூட்டைகளைப் பாதுகாக்க மணக்காலில் பிரமாண்ட மான நெல்கிட்டங்கி ஒன்றையும் கட்டினார். இந்த நிலங்கள் மூலம் கிடைக்கும் நெல்லை அரிசியாக்கி அதனை திருவானைக்காவில் உள்ள அன்னதான தர்மசத்திரத்தில் நாள்தோறும் இலவசமாக அன்னதானம் செய்வித்தார்.

இவர் ஏற்படுத்திவைத்த அறக்கட்டளையின் வருவாயில் இம்மாவட்டத்து கிராமப்புறங்களில் உள்ள ஏழை மாணவர்கள் இச்சத்திரத்தில் தங்கிப் படிக்கவும் நாள்தோறும் உணவு அருந்தவும்1897-98 ஆம் ஆண்டு முதலே உரிய ஏற்பாடுகளைச் செய்து வைத்தார். இதன் மூலம் ஆயிரக் கணக்கான ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் கல்வி அறிவு பெற்று வாழ்க்கையில் பெரும் முன்னேற்றம் அடைந்து உள்ளனர்.

பாரதி கூறியது போல் ஏழை ஒருவனுக்கு எழுத்தறி விப்பதற்காக அன்னதானமும் இடவசதியும் அளித்து இம்மாவட்டத்தில் கல்விச்சாலைக்குச் செல்லமுடியாத தூரத்தில் இருந்த பல ஏழை மாணவர்களை நகருக்கு அழைத்து வந்து அவர்கள் முன்னேற்றத்திற்குப் பெரும் துணை புரிந்த சிதம்பரம் ரெட்டியாரின் அருஞ்செயல் என்றும் நினைவு கூரத் தக்கதாகும். இத்தகையதொரு அன்ன சத்திரம் ஏற்படுத்தி வைக்கப்பட்டதால் தான் ஆயிரக்கணக்கான ஏழை மாணவர்கள் உயர் கல்வியைப் பெற முடிந்தது. அத்தகைய உயர் கல்வியை ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் எனக்கு அடைக்கலம் கொடுத்ததால்தான் நான் பெற முடிந்தது.



## 167) சத்திரத்து விதிமுறைகள்

இந்த சத்திரத்தில் ஆறாம் வகுப்பு தொடங்கி முதுகலை பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் வரை அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு சுமார் 400 மாணவர்கள் இந்தச் சத்திரத்தில் தங்கிப் படித்து வந்தனர். இவர்கள் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த பல்வேறு இனத்தவர்கள். இங்கு தங்கிப் படித்து வரும் மாணவர்களுக்குக் காலை 8.30 மணிக்கு சாப்பாடு போடப்படும். அதன் பிறகு கலந்த சாம்பார் சாதமோ அல்லது தயிர் சாதமோ சிறிதளவு மதிய வேளை சிற்றுண்டியாக அளிக்கப்படும். இதைச் சிற்றுண்டி உணவுப் பெட்டகங்களில்(Tiffen Box) எடுத்துச் செல்ல வேண்டும். இரவு 8 மணிக்குத்தான் மீண்டும் சாப்பாடு போடப்படும். மாலை வேளையில் பிராமணச் சிறுவர்களுக்கு ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சிறந்த உபாத்யாயரைக் கொண்டு சொல்லிக் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் காலை 5 மணிக்கு மணியோசை எழுப்பப்படும். அனைவரும் பெரியதொரு கூடத்தில் கூடவேண்டும். பதிவேட்டில் பெயர் படிக்கப் படும்போது அவரவர் தம் உள்ளிருப்பை எழுந்து நின்று தெரிவிக்க வேண்டும்.

## 168) கொள்ளிடத்தில் குளியல்

குளிப்பதற்கு சத்திரத்தின் உள்ளே வசதிகள் இருந்த போதிலும் நான் மட்டும் தினந்தோறும் வடதிருக்காவிரி என்று அழைக்கப்படும் கொள்ளிடத்திற்குச் சென்று குளித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். ஒரு சில நாட்கள் தென்திருக்காவிரிக்கும் செல்வதுண்டு. எனக்கு நண்பர்கள் பலர் இருந்த போதிலும் பெரும்பாலானோர் விடியற்காலை என்னுடன் கொள்ளிடத்திற்கு வருவதில்லை. ஒருவர் முகம்

ஒருவருக்கு புலப்படாத அந்த விடியற்காலை வேளையில் கொள்ளிடத்திற்குச் சென்று தெள்ளிய காவிரிநீரில் துணி களைத் துவைத்து நீராடி வருவது ஒரு தனி இன்பம். கொள்ளிடம் நீர் மாசுபடாத நிலையிலேயே காணப்படும்.

தேசீய நெடுஞ்சாலை பாலத்தின் கீழ் அமைந்துள்ள இந்த வண்ணான் துறையில் 6 மணிக்குள் குளித்திட வேண்டும். ஏனெனில் 6 மணிக்கு பிறகு வெள்ளாவி வைத்து வெளுக்கப்பட்ட துணிகளை துவைப்பதற்காக கழுதை மேல் ஏற்றப்பட்ட துணிகளை எடுத்துக் கொண்டு ஈரங்கொல்லிகள் பெருமளவில் வருகை தருவர். குளித்து விட்டு வரும்போது திருவானைக்காவிலிருந்து திருவரங்கம் செல்லும் பிரிவுச் சாலைக்கு அண்மையில் பெங்களூர் செல்லும் S.B.S.R. V.M.S பேருந்து நின்று கொண்டிருக்கும். 1956 ஆம் ஆண்டு நீண்டதூரப் பயணத்தை மேற்கொள்ளும் பேருந்துகள் மிகமிக குறைவான அளவிலேயே இயங்கி வந்தன. எழுத்துக்கள் பித்தளை உலோகத்தால் உருவாக்கப்பட்டு பேருந்தின் முகப்பில் பதிக்கப்பட்டிருக்கும். அந்தக் காலை வேளை சூரிய ஒளியில் தங்கம் போல் அந்த எழுத்துகள் மின்னும்.

## 169) மாதூஸ் கபே காஃபியும், மெயில் பாவியும்

சத்திரத்திற்குச் சென்று ஆடைகளை அணிந்து கொண்ட பிறகு மேற்கொள்ளும் முதல் வேலை திருவரங் கத்திற்குச் செல்லும் பிரிவுச் சாலையின் தென்புறம் அமைந்துள்ள "மாதூஸ் கபே"யில் காஃபி அருந்துவது. இரண்டணா கொடுத்தால் தரமுள்ள காஃபி கிடைக்கும். அதை அருந்திவிட்டு அன்றைய நாளுக்குரியதான பாட புத்தகங்களை எடுத்துக்கொண்டு திருவானைக்கா ஜம்பு கேஸ்வரர் கோயிலினுள் ஆள் நடமாட்டமில்லாத ஒரு



மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு உரக்கப் படிப்பது அடுத்த வேலையாகும். ஒரு மணிநேர காலம் இவ்வாறு படித்த பிறகு விடுதியை நோக்கிப் புறப்பட்டு வருவேன். வரும் வழியில் நாலு கால் மண்டபத்தின் அண்மையில் அமைந்திருந்த நூல்நிலையத்தில் நாளிதழ்களை அரை மணிநேரம் படிப்பது அன்றாடச் செயல்களில் ஒன்றாகும்.

நானும் எனது நண்பன் D. சுப்பிரமணியன் ஆகிய இருவரும் அனைத்து தமிழ் நாளிதழ்களை படித்து முடித்த பிறகு The Mail என்னும் ஆங்கில நாளிதழைப் படிப்பதற்காகப் பத்து நிமிடம் காத்திருக்க வேண்டும். எங்களால் ”மெயில் பாவி” என்று பட்டம் சூட்டப்பட்ட ஒரு முதியவர் மெயில் பத்திரிகையின் அனைத்து பக்கங்களையும் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டு முதல் பக்கத்தி லிருந்து கடைசி பக்கம் வரை மேலிருந்து கீழ், கீழிலிருந்து மேல் படித்த பிறகுதான் அந்த நாளிதழை பிறர் படிப்பதற்கு கொடுப்பார். சில பக்கங்களை படிப்பதற்குக் கேட்டால் கொடுக்கமாட்டார். இவரைப் பழி வாங்குவ தற்காகவே The Mail ஆங்கில நாளிதழை அவர் வருவதற்கு முன் ஆளுக்கொரு பக்கமாக என் நண்பர்களிடம் கொடுத்து விடுவேன். ஒரு வழியாக நூலகத்திலிருந்து வெளிவந்தால் எட்டறைமணிக்கு காலைச் சாப்பாட்டிற்கான மணி அடிக்கப்படும்.

இந்த சத்திரம் மிகுந்த பரப்பளவைக் கொண்டது. சமையல் செய்யுமிடத்தை ஒட்டிய கூடத்தில் பிராமணச் சிறுவர்கள் சாப்பிடுவதற்கென்று தனிப்பகுதியும், அடுத்த கூடத்தில் பிராமணர் அல்லாத சிறுவர்கள் சாப்பிடுவதற்கான கூடமும் அமைந்திருந்தன. ராஜாமடம் சத்திரம் போல் இங்கு பரிமாறப்பட்ட உணவு வகைகள் சுவை மிகுந்ததாக

அமைந்திருக்கவில்லை. உணவு பரிமாறுவதற்கு இருவர் தான் அமர்த்தப்பட்டிருந்தனர். 400 மாணவர்களுக்கும் இந்த இருவரே பரிமாற வேண்டும். தினந்தோறும் காலைச் சாப்பாட்டில் அன்னத்துடன் குழம்பு மற்றும் மோர் தான் பரிமாறப்படும். சாப்பாடு பரிமாறுவதற்கு 45 நிமிடங்கள் ஆகும். உணவுக் கூடத்தில் ஒருவருக்கொருவர் பேசுதல் கூடாது. அமைதி காக்க வேண்டும். சில நாட்களில் ரிஸீவர் வைத்தியலிங்கம் அய்யர் சாப்பாட்டு நேரத்தில் வருகை தருவார்.

## 170) ந(டை)டராஜா சர்வீஸே சிறந்த போக்குவரத்து சாதனம்

காலை உணவை உட்கொண்ட பிறகு நேரம் இருந்தால் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே காவிரி ஆற்றைத் தாண்டி சிந்தாமணி, சின்னையா பிள்ளை சத்திரத்தின் வழியாகச் சென்று தேசீயக் கல்லூரியை அடைவோம். சாப்பாடு தாமதமானால் திருவானைக்கா நாலு கால் மண்டபத்திலிருந்து புறப்படும்1A இலக்கமிட்ட TVS பேருந்தில் செல்ல வேண்டும். தினந்தோறும் பேருந்தில் செல்வதற்கு கையில் காசிருக்காது. சத்திரத்தில் கொடுக்கப்படும் மதிய உணவு சுவை கூடியதாய் இராது. (பெரும்பாலான நாட்களில் காவிரி அன்னைக்கு அது நிவேதனமாய் அளிக்கப்படும்.) ஆண்டார் வீதியில் அமைந்திருந்த ராமா கபேயில் மூன்றணாவிற்கு அடை அவியலை மதிய உணவாக உட்கொள்ள வேண்டும்.

பெருத்த மழை பொழியும் நாட்களை தவிர மற்றைய நாட்களில் கல்லூரியிலிருந்து திருவானைக் காவிற்கு நடந்துதான் செல்ல வேண்டும். இவ்வாறு ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் தங்கி படிப்பதற்கு ஆகிய செலவு ஒரு நாளைக்கு



ஒரு ரூபாய். ஆனால் மாதம் முப்பது ரூபாய் ஊரிலிருந்து வராது.

## 171) மணியார்டர் வந்து விட்டது!

அவ்வப்போது தந்தையாரால் பத்திரம் எழுதிக் கிடைக்கும் வருவாயிலிருந்து ஐந்து ரூபாய் அல்லது பத்து ரூபாய் மணியார்டராக கல்லூரி முகவரிக்கு வரும். கல்லூரியில் பாடம் நடைபெற்றிருக்கும்போது சீருடை அணிந்த தபால்காரர் வகுப்பு ஆசிரியரிடம் இந்தப் பெயர் கொண்ட மாணவனுக்கு மணியார்டர் வந்துள்ளது என்று தெரிவிப்பார். அந்த மாணவன் வகுப்பிற்கு வெளியே சென்று மலைபூவரசு மரத்தின் கீழ்க் கையெழுத்திட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். (தேசீயக் கல்லூரிக்கு இரண்டு நுழைவாயில்கள் உண்டு. கிழக்கு நோக்கிய வாயில் வழியாக ஸ்ரீரங்கம் பகுதியிலிருந்து வரும் மாணவர்கள் டவுன் ஸ்டேஷனில் இறங்கிக் கூட்டம் கூட்டமாக ஆண்டார் வீதி வழியாக வருவார்கள். மேற்கு நோக்கிய வாசல் வழியாக உறையூர், புத்தூர் பகுதி மாணவர்கள் வந்து சேருவார்கள்.)

## 172) தேசியக் கல்லூரியின் அமைப்பு

கல்லூரி வளாகத்தினுள் காந்தி உட்கார்ந்து இளைப்பாறிய வேப்பமரம், பாதையின் இருமருங்கிலும் வளர்க்கப்பட்டிருந்த மலைப்பூவரசு மரங்கள், ஸரஸ்வதி ஹால் என்று பெயரிடப்பட்ட கட்டிடம், அதன் முன் அமைந்திருந்த பூங்கா, பூங்காவின் வடபகுதியில் நூல்நிலையம், கல்லூரி ஆசிரியர்களின் ஓய்வறை, அதன் மாடியில் அமைந்திருந்த வேதியியல் ஆய்வுக்கூடம், ஸரஸ்வதி ஹாலின் கீழ்ப் பகுதியில் அமைந்திருந்த பௌதிக ஆய்வுக் கூடம், கிழக்கும் மேற்குமாய் அமைந்திருந்த வகுப்பறைகள், ஸரஸ்வதி

ஹாலின் பின்புறம் அமைந்திருந்த அலுவலகம், ஆங்காங்கே காணப்படும் வேப்பமரங்கள் மற்றும் மர மல்லிகை மரங்கள் ஆகியவையே அந்த நாள் தேசீயக் கல்லூரியின் கட்டமை ப்பாகும்.

அந்த ஆண்டு பாடத்திட்டத்தின் படி புகுமுக வகுப்பு மாணவன் ஆங்கிலம், தமிழ், Physical Sciences என்று அழைக்கப்பட்டு வந்த Physics and Chemistry அல்லது Botany and Zoology ஆகியவற்றுடன் Logic, Commerce, World History, Advanced Tamil ஆகியவற்றில் இரண்டு பாடங்களைப் பயில வேண்டும். நான் Commerce and World History பாடப்பகுதிகளை தேர்ந்தெடுத்தேன். ஆங்கிலப் பாடத்தில் Prose பாடப்பகுதிக்கு பேராசிரியர் எம்.கே.வி. என்று அழைக்கப்பட்டு வந்த எம்.கே. வெங்கட்ராமன், Poetry பகுதிக்கு C.K.S என்று அழைக்கப்பட்டு வந்த C.K. சேஷாத்திரி Nondetailed பகுதிக்கு N. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஆசிரியர்களாக பாடம் போதித்து வந்தனர்.

English Poetry வகுப்புகள் அனைத்து நாட்களிலும் மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு நடைபெறும். ஸரஸ்வதி ஹாலின் கீழ்ப் பகுதியில் Gallery அமைப்புக் கொண்ட வகுப்பில் நடைபெறும். ராஜாமடம் போன்ற கிராமச் சூழலில் படித்து வந்த என்னால் நகரச் சூழலில் ஆங்கிலத் திலேயே பேசிக்கொள்ளும் ER High School, Srirangam Boys High School மாணவர்களுடன் இயல்பாகப் பழக இயலவில்லை.

### 173) Alphaஎன்றால் என்ன Beta என்றால் என்ன?

மேலும் கணிதத்தில் General Mathematics படித்த



என்னால் Composite Mathematics இன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட புகுமுக வகுப்புக் கணிதப் பாடத் திட்டத்தைப் பயில இயலவில்லை. முதல் நாள் வகுப்பில் கணித ஆசிரியரான திரு.C.R. Srinivasan B.A (1956-60 கால கட்டத்தில் B.A பட்டம் பெற்றிருந்த சில ஆசிரியர்கள் கல்லூரி விரிவுரையாளர்களாகப் பணியாற்றி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.) அவர்கள் If Alpha and Beta are the roots of the quadratic equation (இருபடிச் சமன்பாட்டு விதிகளை ஆராயும் Algebra கணிதப்பகுதி) $ax^2+bx+c=0$ find the roots of Alpha by Beta, $Alpha^2 + Beta^2$ என்று சொல்ல நான் All for, Betar என்று எழுதிக் கொண்டேன். கணிதத்தின் ஒவ்வொரு பகுதியும் கடினமாகவே இருந்தது. சில நாள் இந்த அவலநிலையை எண்ணி கண்ணீர் சிந்தியுள்ளேன்.

***(ஆனால் PUC இறுதித் தேர்வில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் வாங்கி தேசீயக் கல்லூரியில் தேர்வை எதிர்கொண்ட 360 மாணவர்களில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஓரே மாணவன் நான் என்ற பெருமையையும் அடைந்தேன். இந்த இலக்கை அடைவதற்காக அனைத்து கணிதப் பகுதி வினாக்களையும் பலமுறை படித்து அதற்குரிய விடைகளை எழுதி ஆயத்த நிலையில் இருந்ததால் தேர்வன்று மூன்று மணிநேரம் ஒதுக்கப்பட்ட வினாத்தாளை இரண்டரை மணிநேரத்தில் எழுதிக் கொடுத்து விட்டு வந்தேன். என்னுடைய சகமாணவர்கள் ஏன் இரண்டரை மணிநேரத்தில் தேர்வு மையத்தை விட்டு வெளியே வந்தாய் என்று கடிந்து கொண்டனர். ஆனால் அவர்களிடம் நான் கேட்கப்பட்டிருந்த அனைத்து கேள்விகளுக்கும் உரிய விடையை எழுதி யுள்ளேன் என்று கூறினேன்.)***

## 174) Professor C.K. Seshadri தொடுத்த கேள்விக் கணைகள் என்மீது பாய்ந்தன!

ஒவ்வொரு நாளும் English Poetry வகுப்பு ஆசிரியரான திரு. சேஷாத்திரி வகுப்பறையில் கேள்வி கேட்டு அதற்கான பதிலைக் கூறு என்று என்னைப் பணித்திடுவார். என்னால் சரளமாக ஆங்கிலத்தில் பேச வராது. ஒவ்வொரு வகுப்பின் போதும் என்னிடமே கேள்வி கேட்டு அதன் மூலம் என்னுடைய தாழ்வு மனப்பான்மையை போக்கினார். இதை அவர் அறிந்து செய்தாரோ, அறியாமல் செய்தாரோ யான் அறியேன். ஆனால் நூறு பேருக்கு மத்தியில் ஆங்கிலத்தில் பேசுவதற்கு என்னைப் பழக்கிக் கொண்டேன். இதற்குத் துணைநின்ற திரு. C.K.S. க்கு நான் கடமைப் பட்டுள்ளேன்.

## 175) பேராசிரியர் ராதாகிருஷ்ணன்

தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கியவர் திரு. பாலசுப்பிரமணியம். ஆயினும் கல்லூரியின் மிகச் சிறந்த தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் திரு. R.R. என்று அழைக்கப் பட்டு வந்தபேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன் அவர்கள். இவரைச் சுற்றி எப்போதும் ஒரு மாணவர் கூட்டம் காணப்படும். தான் ஒரு பேராசிரியர் என்ற கர்வம் சிறிதும் இல்லாமல் அனைத்துத் தரப்பு மாணவர்களுடன் ஒன்றிப் பழகுவார். ஸரஸ்வதி ஹாலில் முன்பு அமைந்துள்ள புகு மண்டபத்தின் (portico) ஒரு பகுதியில் அமர்ந்து கொண்டு படித்துக் கொண்டே இருப்பார். இவருடைய கம்பராமாயணச் சொற்பொழிவு மக்களால் பெரிதும் விரும்பிக் கேட்கப்பட்டு வந்தது.



பட்டிமன்ற இலக்கிய வடிவத்தின் வாயிலாக கம்பன் காவியத்தையும் பெரியபுராணத்தின் கருத்துகளையும் தமிழகம் எங்கும் மேடைகளில் பரப்பிய பேராசிரியர் இராதாகிருஷ்ணன் கும்பகோணத்தில் ஒரு சிற்றூரில் பிறந்தவர். ஆனாலும் அவர் வாழ்ந்தது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தான். இவரது தந்தை இராமச்சந்திர அய்யர் காஞ்சி சங்கர மடம் மகாபெரியவரிடம் கஜானா பொறுப்பு வகித்தவர். கும்பகோணம் கல்லூரியில் முதலில் பி.ஏ. பௌதிகப் படிப்பும் பின்னர் பி.ஏ. தமிழ் இலக்கியமும் பயின்றார்.

கும்பகோணம் டவுன் உயர்நிலைப் பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக சில ஆண்டுகள் பணியாற்றினார். 1951 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி தேசீயக் கல்லூரியில் பயிற்சியாளராக (Tutor) 3 ஆண்டுகள் பணியாற்றி, பின்பு விரிவுரையாளராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் விளங்கினார். தமிழ் இலக்கியத்தின் மீது கொண்ட ஈடுபாட்டால் நாவன்மை மிக்க பேச்சாளராகத் திகழ்ந்தவர். அக்காலத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அறிமுகம் செய்த பட்டிமன்றக் கலையை திருச்சி மாவட்டத்தில் வேரூன்றிவளரச் செய்தவர்.

கி.வா. ஜகந்நாதனை மானசீகக்குருவாக ஏற்று அவர் வழியில் இலக்கியத்தில் சாதனை படைத்தவர். திருமுருகாற்றுப் படைக்கு இவர் எழுதிய உரை அறிஞர் பெருமக்களால் இன்றளவும் போற்றப்பட்டுவருகின்றது. கம்பன் காவியத்தைப் புதிய முறையில் அணுகிப் புதிய கோணங்களில் உரை கூறியவர்; காந்திய நெறியில் வாழ்ந்தவர். சாதி வேறுபாடுகளால் மனிதர்கள் பிளவு படக்கூடாது என்ற மேலான சமூக ஈடுபாடு கொண்டவர்.

அதற்கேற்பத் தான் பிராமணராயிருந்தும் தன் இல்லத்தில் திருக்குலத்து மாணவர்கள் தங்கிப் படிக்க இடமும் பொருளும் அளித்து உதவியவர். தான் ஈட்டிய பொருள் அனைத்தையும் எளியவர்களுக்குக் கொடுத்து உதவிய பெருமகனார்.

இவர்தம் பேச்சு வன்மையில் ஈர்க்கப்பட்டு இவரால் பயிற்றுவிக்கப்பட்ட பலர் இன்று தமிழகத்தின் பட்டிமன்ற மேடைகளில் வெற்றிக் கொடி நாட்டி வருகின்றார்கள். நாவக்கரசர் சோ. சத்தியசீலன், அ.வ. ராஜகோபாலன், புலவர் இராமமூர்த்தி, புலவர் திருவேங்கடம், முனைவர் சேகர், புலவர் மாது இவர்களில் சிலர். புலவர் மாது, பேராசிரியர் திரு. இராதாகிருட்டினன் அவர்களின் மகன் ஆவார்.

## 176) தேசீயக் கல்லூரி மாணவரான புலவர் கீரன்

தேசீயக் கல்லூரியில் படித்துக் பிற்காலத்தில் புலவர் கீரன் என்று புகழ் பெற்று விளங்கிய திரு. வைத்தியநாதன் B.A இறுதி ஆண்டு படித்து வந்தார். இவர் ம.போ. சிவஞானம் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் மிகச் சிறந்த பேச்சாளராவார். கல்லூரியில் நடைபெறும் இலக்கியம் சார் அனைத்துவிழாக்களிலும் இவர் பங்கு கொண்டு சிறந்ததோர் உயைாற்றுவார்.

## 177) தமிழரசுக் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்

1948ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இளைஞர்களை தம்முடைய அடுக்கு மொழிப் பேச்சால் திராவிடர் ஆரியர் என்ற பிரிவினையைப் புகுத்தி மாணவர்களிடையே நச்சு மரத்தின் விதைகளை வித்திட்டு வந்தனர். அந்தக் காலகட்டத்தில் அவர்களுடைய அர்த்தமற்ற வாதங்களையும் போலி பகுத்தறிவு பேச்சுக் களையும் எதிர்த்துத் போராட வல்ல சக்தியாகத் திகழ்ந்து



வந்தது தமிழரசுக் கட்சி.

## 178) ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி

இந்தியர்களிடையே பிளவையும், பேதத் தையும் உருவாக்க வேண்டுமென்றால், பிராமண சமுதாயத்தைக் குறிவைத்துத் தாக்கவேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சி யாளர்கள் முடிவு செய்தார்கள். அவர்களுடன் கிறித்துவ மத போதகர்கள் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் பிராமணர்கள் -பிராமணர் அல்லாதவர் என்ற பேதத்தை உருவாக்கி அதனை வளர்த்து வந்தனர்.

"பிராமணீயம் என்ற பலம் வாய்ந்த கோட்டையின் சுவர்கள் சூழ்ந்து கொள்ளப்பட்டு, முற்றுகையிட்டு, இறுதி யாக அழிக்கப்படும்போது தான், கிறித்துவ மதத்தின் வெற்றி முழுமை அடைந்ததாகக் கொள்ள வேண்டும்" என்று 1877-ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டில் நடந்த மத போதகர்கள் மாநாட்டில் மோனியர் வில்லியம்ஸ் குறிப்பிட்டார்.

ஆங்கிலேய அரசினரும், கிறித்துவ மத போதக வர்களும் திட்டமிட்டுச் செயல்பட ஆரம்பித்தார்கள். அதன் விளைவாகப் பிராமணருக்கு எதிரான ஓர் அமைப்பு அன்றைய சென்னை மாகாணத்தில் தோன்றியது. பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம் அரங்கேற ஆரம்பித்தது. இது குறித்து தமிழரசுக் கட்சியை நிறுவிய சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"அரசியல் திருத்தத்தை வழங்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அந்தச் சீர்திருத்தமானது தேச பக்தர்களான தீவிரவாதிகள் கைக்குப் போய்விடாதபடிச் செய்வதற்காகப் பிற்போக்காளர்களை ஒன்று திரட்டி, புதிய புதிய கட்சிகளைத்

தோற்றுவிப்பதையே ஒரு தொண்டாகக் கொண்டிருந்தது பிரிட்டிஷ் அரசு."

''வங்கப் பிரிவினையை அடுத்து மிண்டோ-மார்லி சீர்திருத்தம் அமுல்படுத்தப் படுமென அறிவிக்கப்பட்ட போது, அதற்கான மசோதாவை நாடாளுமன்றத்தில் சட்ட மாக்குவதற்கு முன்பு, அனைத்திந்திய ரீதியில் பிரிட்டிஷ் விசுவாசிகளாக இருந்த முஸ்லிம் பிரமுகர்களைக் கொண்ட அரசியல் கட்சி ஒன்றை உருவாக்க அப்போதைய வைசிராய் முயற்சி செய்தார்.

அதன் விளைவாக, 1906 டிசம்பர் 31-ஆம் தேதி கிழக்கு வங்காளத்தின் தலைநகரான டாக்காவில் நடைபெற்ற முஸ்லிம்கள் அடங்கிய ஒரு மாநாட்டிலே ''அனைத்திந்திய முஸ்லிம் லீக்'' தொடங்கப் பெற்றது.

''மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தை வழங்கியபோது கடைப்பிடித்த அதே பிரித்தாளும் தந்திரத்தை மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை நடைமுறைப் படுத்த முயன்ற போது பிரிட்டிஷ் அரசு கடைப்பிடித்தது. அதிலே, கிறிஸ்துவர்களுக்கும் ஆங்கிலோ-இந்தியருக்கும், ஆங்கிலே யருக்கும், தோட்ட முதலாளிகளுக்கும், நிலச்சுவான் தார்களுக்கும், வர்த்தக சமூகத்தி னருக்கும் தனித் தொகுதிகள் அமைக்கப்படுமெனப் பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

இதற்கெல்லாம் மேலாகத் தென்னிந்தியாவிலே ஒரு புதிய சாதிவழிக்கட்சியைத் தோற்றுவிக்க பிரிட்டிஷார் முயன்றனர். சென்னை மாகாண இந்துக்களைப் பிராமணர் என்றும், பிராமணரல்லாதார் என்றும் பிரித்தாள முயன்றனர். ஆங்கிலேய அரசினரின் அந்த முயற்சி அன்றைய சென்னை மாகாணத்தில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் வெற்றி பெற்று



விட்டது.

## 179) ஜஸ்டிஸ் பார்ட்டியின் தோற்றமும் அதன் கிளைகளான தி.க மற்றும் தி.மு.க வின் செயல் பாடுகளும்

இவ்வாறு, பிராமணர் எதிர்ப்பு இயக்கம் திராவிடர் இயக்கமாக அறிவிக்கப்பட்டு இயங்கியது. தென்னிந்திய நல உரிமைச் சங்கம், ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், ஈ.வெ.ரா. - மணியம்மை திருமணத்திற்குப் பிறகு தோன்றிய திராவிட முன்னேற்றக் கழகம் என்று பல அமைப்புகளும், கட்சிகளும் பிராமணர் எதிர்ப்பு என்ற அடிப்படையையே கொண்டிருந்தன.

பிராமணர் எதிர்ப்பு என்பது கடவுள் எதிர்ப்பு, பிள்ளையார் சிலை உடைப்பு, ராமர் சிலை உடைப்பு, சமஸ்கிருத மொழி எதிர்ப்பு, வட இந்தியர் எதிர்ப்பு என்றெல்லாம் விரிவடைந்தது. ''கடவுள் இல்லை, இல்லவே இல்லை; கடவுளைப் படைத்தவன் முட்டாள்; வழிபடுபவன் காட்டுமிராண்டி'' என்ற கோஷத்தை ஈ.வெ.ரா. எழுப்பினார். கடவுள் எதிர்ப்பு இயக்கத்தின் எதிரொலி, தமிழ்இலக்கியங்கள் மீதான தாக்குதலாக முடிந்தது. கம்பராமாயணமும், பெரிய புராணமும் தீவைத்துக் கொளுத்தப்பட்டன; சிலப்பதிகாரமும் இகழப்பட்டது. கம்பராமாயணத்தை இழிவு செய்யும் வகையில் ''கம்ப ரசம்'' என்ற நூலை திரு. அண்ணாதுரை எழுதினார்.

அண்ணாதுரை ''ஆரிய மாயை'' என்ற நூலை எழுதினார். 1943-ஆம் ஆண்டில் அதன் முதற்பதிப்பு

வெளியாயிற்று. அந்த நூல் பிராமணர்களை மிகக் கடுமையாக ஏசியது. மோசடி செய்பவர்கள், ஒழுக்க மற்றவர்கள், நய வஞ்சகர்கள், அடுத்துக் கெடுப்பவர்கள், பிறரை ஏமாற்று பவர்கள் என்றெல்லாம் ஏசப்பட்ட அந்த நூலில் அந்தணர்கள் கைபர் கணவாய் வழி இந்தியாவிற்குள் வந்தவர்கள் என்றும், அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்றும் திரு. அண்ணாதுரை எழுதியிருந்தார்.

பிராமணர் எதிர்ப்பு வன்முறை கலந்ததாகவே இருந்தது. **''பாம்பையும் பார்ப்பானையும் கண்டால், பாம்பை விட்டுவிடு, முதலில் பார்ப்பானைக் கொல்''** என்ற திராவிடர் கழகத்தின் வன்முறை வாசகம், பல இடங்களில் சுவர்களில் எழுதப்பட்டது. வன்முறையைத் தூண்டிய இத்தகைய வாசகங்களின் விளைவாகப் பிராமண எதிர்ப்பு, பகுத்தறிவுக்கு எதிரான வன்முறை நிகழ்ச்சிகளுக்கு இடமளித்தது.

பல இடங்களில் பட்டப்பகலில் பிராமணர் களின் பூணுல்கள் அறுக்கப்பட்டன; பிராமணர்களின் நெற்றியில் இருந்த நாமங்கள் நக்கப்பட்டு அழிக்கப்பட்டன; பிராமணப் பெண்கள் ஆபாச ஏச்சுக்கு உள்ளானார்கள்; வேதம் ஓதிய வைதிக அந்தணர்களின் உச்சிக் குடுமிகள் கத்தரிகளால் வெட்டப்பட்டன. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு எதிராக இத்தகைய பண்பாடற்ற செயல்கள் பல ஆண்டுகள் நடைபெற்றன என்பது வரலாறு. இந்த கரைபடிந்த அரசியல் வரலாற்றைப் பலர் இன்று அறியார்.

## 180) ம.பொ. சிவஞானத்தின் அரும்பணிகள்

திராவிட முன்னேற்றக் கழகம் 1949-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. திராவிடர் கழகமும், தி.மு.க.வும் கொள்கை ரீதியாக எதிர்க்கப்பட வேண்டியவை என்று



முதலில் குரல் எழுப்பியவர் சிலம்புச் செல்வர். ம.பொ. சிவஞானம் அவர்கள். 1951-ஆம் வருடம் மார்ச் மாதம் 24-ஆம் தேதி சென்னை ராயப்பேட்டையில் சிலப்பதிகார மாநாட்டையும், 25-ஆம் தேதி திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டையும் அவரது தலைமையில் ஒரு குழுவினர் நடத்தினார்கள்.

தமிழ்ப்புலவர்களையும்,தமிழ்ப் பண்பாட்டையும் திராவிட இயக்கங்கள் இழிவு படுத்துவதாக ம.பொ.சி. அவர்கள் திட்டவட்டமாக எழுதினார்.

திராவிடர் என்ற சொல் தமிழ் இல்லை என்றும், திராவிடர் என்ற பெயரால் இயக்கம் நடத்துவது தமிழர் நலனுக்கு விரோதமானது என்றும், திராவிட இயக்கங்களின் நடவடிக்கைகள் மனிதநேயப் பண்பாட்டுக்கு முற்றிலும் எதிரானவை என்றும் நடுநிலை நோக்குக் கொண்ட பல தமிழ்ப் பேரறிஞர்களும், மக்கள் தலைவர்களும் பலமுறை கூறியிருக்கிறார்கள்.

''திராவிட நாடு என்ற சொல் தமிழர் என்ற உணர்ச்சியைக் கொல்லும் நச்சு'' என்று ''திராவிடத்தாரின் திருவிளையாடல்கள்'' என்ற நூல் விவரித்தது. திராவிடக் கட்சிகளைக் கடுமையாகக் கண்டித்த பல நூல்கள் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்துள்ளன. ''கருஞ்சட்டை ஒழிக'', ''திராவிட இயக்கத்தாருக்குக் கேள்விகள்'' என்ற நூல்களை ஆர். உமாகாந்தன் எழுதினார். சென்னை மயிலாப்பூர் நக்கீரர் பதிப்பகம் இந்த நூல்களை வெளியிட்டது.

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்கள் ''திராவிடத்தாரின் திருவிளையாடல்கள்'' என்ற நூலையும்,

''திராவிடக் கழகமே, வேங்கடத்திற்கு வெளியே போ'' என்ற நூலையும் எழுதினார். முற்போக்கு எழுத்தாளர் கே. முத்தையா ''சுரண்டல் திராவிடம்'' என்ற நூலை எழுதினார். இந்த மூன்று நூல்களையும் சென்னை, மயிலாப்பூர் பகுதியில் இயங்கிவந்த இன்பநிலையம் என்ற பதிப்பகம் வெளியிட்டது.

சென்னை, பூங்கா நகர் செங்கதிர் பிரசுரம் ''திராவிடப் பூசாரிகள்'' என்ற நூலை வெளியிட்டது. திராவிட இயக்கங் களின் தமிழ் இலக்கியம் தொடர்பான தவறான பிரசாரத்தைச் சுட்டிக்காட்டி அம்பலப்படுத்திய ''இலக்கியத்திலும் பித்த லாட்டமா?'' என்ற நூலைக் கவிஞர் கா.மு. ஷெரிப் அவர்கள் எழுதினார். சேலம் சீரங்கப்பாளையம் சமுதாயப் பதிப்பகம் அந்த நூலை வெளியிட்டது. பிரபல எழுத்தாளர் அ.கயிலை ராஜன் ''திராவிட மாயை'' என்ற நூலை எழுதினார்.

தமிழரசுக் கழகத்தின் முன்னணி எழுத்தாளர்களான ''குத்தீட்டி'', கவிஞர் வானம்பாடி, ர. சண்முகம் (ரசம்), ரா. பூங்காவனம் ஆகியோர் ஏராளமான திராவிட இயக்க எதிர்ப்பு நூல்களைப் படைத்தார்கள். இவற்றில் பல நூல்களைச் சென்னை, திருவல்லிக்கேணி, அரசியல் நூலகம் வெளி யிட்டது. ''அண்ணாதுரைக்கு அறைகூவல்,'' ''தொழிலாளர் வர்க்கத்தின் துரோக சக்தி திராவிட இயக்கம்'', ''திராவிடத் தொற்றுநோய்'' ஆகியவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

திரைப்படத் துறையில் தனி முத்திரை பதித்தவரும் மிகச் சிறந்த இயக்குநராக விளங்கியவருமான கலைஞர் ஏ.பி. நாகராஜன் அவர்கள் திராவிட இயக்கங்களை மிகக் கடுமையாக எதிர்த்து ஏராளமான கட்டுரைகளை எழுதி யிருக்கிறார். அப்பழுக்கற்ற தேசியவாதியான அவர்,



ஒருவாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தும் திராவிடக் கட்சிகளைச் சாடி இருக்கிறார்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் மிகக் கடுமையாகத் திராவிட இயக்கங்களை 1950-ஆம் ஆண்டு முதல் 1966-ஆம் ஆண்டு வரையில் கண்டனம் செய்து வந்தார். ''விடுதலைப் போரில் தமிழகம்'' என்ற மாபெரும் நூலை அவர் படைத்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கைச் சரித்திர ஆதாரங்களுடன் மிகவும் விளக்கமாக விவரிக்கின்ற ஒரே தமிழ் நூல் அது மட்டுமே ஆகும். (2008-ஆம் ஆண்டு வரையில் இதுவே நிலை).

''விடுதலைப் போரில் தமிழகம்'' நூலில் திராவிடக் கட்சிகள் சம்பந்தமான பல அரிய உண்மைகள், செய்திகள் மறுக்க முடியாத ஆதாரங்களுடன் தரப்பட்டுள்ளன.

இந்தியா விடுதலை அடைந்த பிறகு நாமக்கல் கவிஞர் அவர்கள் அன்றைய மாநில அரசின் ஆஸ்தான கவிஞராக விளங்கினார். அவர் ''ஆரியராவது, திராவிடராவது'' என்ற தலைப்பில் ஓர் அருமையான நூலை எழுதியிருக்கிறார். அந்த நூலில் ஆரியர்-திராவிடர் பேதம் தீதானது என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஜஸ்டிஸ் கட்சியை வீழ்த்தும் முயற்சி தமக்கு ஒரு தொண்டாகவும் தோன்றியது என்று திரு.வி.க. அவர்கள் எழுதியிருக்கிறார்.

அக்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் ''ஜஸ்டிஸ்'' என்ற ஆங்கிலப் பத்திரிகையும், ''திராவிடன்'' என்ற தமிழ்ப் பத்திரிகையும் வெளியிடப்பட்டன. ''அவைகள் அதிகார வர்க்கத்தை ஆதரித்து, வகுப்புவாதத்தைப் பெருக்கித் தென்னாட்டில் காங்கிரசை வீழ்த்துவதில் முனைந்து நிற்பவை என்பது நன்கு விளங்கியது. ''திராவிடன்''

பத்திரிகை மூலம் சமயக் கொள்கைகள் இகழப்பட்டன; திருக்கோயில்கள் தாக்கப்பட்டன. அது பற்றிச் சென்னையில் பல இடங்களில் சமயச் சார்பில் மறுப்புக் கூட்டங்கள் நடைபெற்றன. அவைகளில் யானும் கலந்து, ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்கினேன்'' என்று திரு.வி.க. அவர்கள் எழுதியிருக்கிறார்.

ஈ.வெ.ரா. அவர்கள் தொடங்கி நடத்திய சுயமரியாதை இயக்கத்தையும் திரு.வி.க. அவர்கள் மிகக் கடுமையாக எதிர்த்தார். சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை திரு.வி.க. அவர்கள் மறுக்கப் புகுந்தது மகிழ்ச்சி ஊட்டுகிறது என்று, பழம் பெரும் புலவர் அறிஞர் வேங்கடசாமி நாட்டார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்ப் பேரறிஞர் நாட்டார் ஐயா அவர்களும் திராவிட இயக்கங்களை எதிர்த்தவர் என்ற உண்மையும் இங்கே தெளிவாகிறது.

ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய அனைத்தும் ஆங்கிலேய ஆட்சிக்கு ஆதர வாகவே செயல்பட்டன என்பதையும், இந்திய விடுதலை இயக்கத்தைக் கேலியும், கிண்டலும் செய்து எதிர்த்தன என்பதையும், அவை அப்பட்டமான தேசத்துரோக அமைப்புகளாகவே இறுதிவரையில் இயங்கி வந்தன என்பதையும் ''திரு.வி.க. எழுதிவைத்த வாழ்க்கைக் குறிப்பு'' நூலில் பல இடங்களில் அம்பலப்படுத்தி இருக்கிறார்.

## 181) கவிஞர் கா.மு. ஷெரிப்

தமிழகத்தில் கவிஞர்கள் நிறைந்து வாழ்ந்த காலத்தில் - கவிஞர் தேசீய விநாயகம்பிள்ளை, பாரதிதாசன், ராமலிங்கம் பிள்ளை, கண்ணதாசன், கம்பதாசன், வாணிதாசன், சுரதா, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்று வாழ்ந்த கவிஞர்



களிடையே வாழ்ந்த கவிஞர், கா.மு. ஷெரிப். மன்னார்குடிக்கு அருகில் உள்ள வேளுக்குடியில் பிறந்த இவர், இளமை யிலேயே தமிழ்ப்பற்று மிக்கவராகத் திகழ்ந்தார். தொடக்கத்தில் தேசிய இயக்கத்தில் பங்கேற்ற இவர், பின்னர் திரு. மா.பொ. சிவஞானம் அவர்களுடன் நட்புக்கொண்டு, அவர் தொடங்கிய தமிழரசுக் கட்சியில் சேர்ந்து பணி யாற்றினார். துடிப்பு மிக்க பேச்சாளராகவும், சிறந்த கவிஞராகவும் விளங்கினார்.

தமிழரசுக் கட்சியின் பத்திரிகையான 'செங்கோல்' இதழ், மற்றும் பல பத்திரிகைகளில் இவருடைய கவிதைகள் வெளிவந்தன. ஆந்திரமாநிலம் 1956ல் உருவானபோது ஆந்திரர்கள், திருப்பதியைக் கோரியதுடன், திருத்தணி யையும், ஆந்திரமாநிலத்துடன் இணைக்கவேண்டும் என்று கோரினர். திருத்தணியை ஆந்திர மாநிலத்துடன் சேர்க்காது தமிழ்நாட்டில் இருக்கவேண்டும் என்று திரு.மா.பொ.சி. அவர்கள் தலைமையில் போராட்டம் நடைபெற்றபோது அதில் முக்கிய தளபதியாக இருந்து மா.பொ.சி. அவர்களது வலதுகரமாகத் தொண்டாற்றினார்.

மக்கள் செல்வம் நிறையப் பெற்றிருந்த இவர் சென்னையில் குடியேறிப் பல திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதினார். இவருடைய பாடல்கள் பல முத்திரைப்பெற்ற பாடல்களாக அமைந்து மக்கள் மனதில் இடம்பெற்று சிறந்த கவிஞராகத் திகழ்ந்தார். 'ஏரிக் கரையின்மீது போறவளே, பெண்மயிலே' என்ற இவருடைய பாட்டு இன்னும் அனைவரையும் ஈர்க்கவல்லதாக உள்ளது. (1957ஆம் ஆண்டு வெளிவந்த முதலாளி படத்தில் T.M. சௌந்திர ராஜன் பாடிய K.V. மஹாதேவனின் இசை யமைப்பில் பாடப்பட்டது. இந்தப் படத்தின் மூலம் திரு.

முக்தா சீனிவாசன் திரைப்பட இயக்குநராக அறிமுகமானார்.) பல புகழ்பெற்ற பாடல்களை எழுதி தமிழகத்தில் சிறந்த கவிஞர் என்ற புகழைப் பெற்றார்.

மார்க்கநெறியில் தீவிரபற்றுள்ளவராக விளங்கிய இவர், சமரச நோக்குடையதாக இருந்தார். உள்ளத்தில் பட்டதை தெளிவாக எடுத்துச்சொல்லக் கூடியவர். தான் கொண்ட கொள்கைகளில் உறுதியாக நின்றவர். அரசியல், இலக்கியம், தத்துவம் இவற்றில் நிறைய அறிவுடையவராக இருந்தார். மேடைகளில் தன் உள்ளக் கருத்துக்களைத் தொகுத்து அழகாக எடுத்துரைக்க வல்லவர். எழுத்திலும் சிறந்து விளங்கினார். 'தமிழ் முழக்கம்' என்ற மாதம் இருமுறை இதழ் ஒன்றை நடத்தியவர், இவர்.பொதுவாக உலகம் இவரை நன்கு அறிந்திருந்தது. போற்றுதலுக்கும் புகழுக்கும் உரிய கவிஞராக மதித்தது. 1994ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். பல அரசியல் கட்சிப் பிரமுகர்களும், அறிஞர்களும், கலைஞர்களும் இவருடைய இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

## 182) மாநிலங்களின் சீரமைப்பு ஆணையம்

1953 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் தெலுங்கு பேசும் மக்களுக்கு 'ஆந்திரா' எனும் பெயரில் தனி மாநிலம் உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியின் பழைய மாகாண அமைப்புகள் மொழிவாரியான நிர்வாக மாநிலங்களாக மறுசீரமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நாடெங்கும் பரவியது. மாநிலங்களின் மறு சீரமைப்பு ஆணையம் (State Reorganisation Commission - SRC) 1953 டிசம்பர் 22 ஆம் நாள் அமைக்கப்பட்டது. அக்குழுவிடம் பல்வேறு அரசியல் கட்சிகளும், அமைப்பு களும், பொது மக்களும் தங்கள் கருத்துகளைத் தெரி



வித்தார்கள். 1955 அக்டோபரில் மாநிலச் சீரமைப்பு ஆணை யத்தின் பரிந்துரை வெளியானது. அதன் மீது 1956 மார்ச் மாதத்தில் சென்னை மாகாண சட்டமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. ராஜ்யப் புனரமைப்பு (மாநில சீரமைப்பு) மசோதா, இந்திய அரசியல் சட்டத்தின் 7-வது திருத்தமாகும். இம்மசோதா மக்களவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 1956 செப்டம்பர் 6-ல் ராஜ்யப் புனரமைப்பு (7வது அரசியல் சட்டத் திருத்தம்) மசோதா மக்களவையில் சட்டமாக நிறைவேறியது.

1956 நவம்பர் 1 ஆம் நாளிலிருந்து நடை முறைப் படுத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டது. 1956 நவம்பர் 1 ஆம் நாள் புதிய தமிழகம் மலர்ந்தது. நாஞ்சில் நாடான கன்னியாகுமரி மாவட்டமும், செங்கோட்டையும் திருவிதாங்கூர்-கொச்சி மாநிலத் திலிருந்து பிரிக்கப்பட்டன; தமிழகத்தோடு இணைக்கப்பட்டன. கூடலூர், நீலகிரி மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு தமிழகத்தில் இணைக்கப் பட்டது. 1952 இல் சென்னை மாகாணம் பன் மொழி பேசும் மாநிலமாக இருந்தது; தனுஷ்கோடியிலிருந்து விசாகப் பட்டினம் வரை பரவிக் கிடந்தது. அன்றைய சென்னை மாகாணத்தின் பரப்பளவு 1,97,700 சதுர மைல்கள். 1953 அக்டோபர் 1 ஆம் நாள் ஆந்திரம் தனியாகப் பிரிந்தது; மீண்டும் 1956 நவம்பர் 1ல் வட மலபார் பகுதி கண்ணனூர், பாலக்காடு மாவட்டங்களும், தென்கன்னடமும், கொள்ளே கால் தாலுகாவும் பிரிக்கப்பட்டன. ஒரே மொழி-தமிழ் மொழி பேசும் மாநிலம் - 1956 நவம்பர் 1 ஆம் நாள் புதிய தமிழகம் மலர்ந்தது. ஆயினும் ஆந்திரர்கள் சென்னை மாநகரை ஆந்திராவின் ஒரு பகுதியாகக் கொள்ள வேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர்.

திருப்பதியுடன் திருத்தணியையும் தம்முடைய நாட்டின் ஒரு பகுதியாக அளிக்கப்பட வேண்டும் என்ற போராட்டத்தை வலுப்படுத்தின. திரு. ம.போ.சி.யின் தலைமையில் மாபெரும் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக திருத்தணி இன்று தமிழகத்தின் ஒரு பகுதியாக கொள்ளப்பட்டுள்ளது. பலருடைய தியாகத்தின் விளைவாக இன்று நாம் பல பெருமைகளை அடைந்து உள்ளோம். ஆனால் அத்தகைய பெருமைகளை நமக்குப் பெற்றுத் தந்தவர்களை நாம் நினைவில் கொள்வதில்லை. நம்மால் மறக்கப்பட்டவர்கள் பட்டியலில் திரு. ம.போ.சி. யும் ஒருவர்.

## 183) திருவானைக்கா பார்த்தசாரதி விலாஸ்

1950-1960 காலகட்டத்தில் பெரும்பாலான உணவு விடுதிகள் பிராமணர்களால் நடத்தப்பட்டு வந்தன. இந்த உணவு விடுதிகளில் சுவையுள்ள உணவு வகைகள் பரிமாறப்பட்டதோடு மட்டு மல்லாமல் அவை கைதேர்ந்த சமையல் கலை ஞர்களால் சுகாதாரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு வந்தன. கலப்படப் பொருள்கள் மற்றும் தரமற்ற எண்ணெய் வகைகளை உப யோகத்தில் கொள்வது, பிறர் சாப்பிட்ட எச்சில் தட்டில் பரிமாறுவது, கண்ணாடி டம்ளர்களில் நீர் நிரப்பிக் கொடுப்பது, பீங்கான் கிண்ணங் களில் காஃபி கொடுப்பது, எச்சில் தட்டைத் தொட்டு சாம்பார் சட்னி பரிமாறுவது, சாப்பிட்ட கிண்ண ங்களை முறையாக சுத்தம் செய்யாமல் இன்னொரு வருக்கு உபயோகப் படுத்துவது போன்ற உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் செயல்களை அக்காலத்திய பிராமணர்களால் நடத்தப்பட்ட உணவு விடுதிகளில் காண முடியாது. இத்தகைய உணவு விடுதிகளில் ஒன்றுதான் திருவானைக்காவில் அமைந்தி



ருந்த பார்த்தசாரதி விலாஸ்.

திருவானைக்கா கோயில் சுற்றுச் சுவரையொட்டி இருக்கிறது மேல வீபூதி திருச்சுற்று. வீதியின் மையத்தில் அமைந்துள்ள "பார்த்தசாரதி விலாஸ்" உணவு விடுதி 1943-ல் ஆரம்பிக்கப் பட்டது. தோசையைப் பொன்னிறத்தில் ஒரு குழல் போல சுருட்டி இலையில் வைப்பார்கள்; சமையல் காரரின் கைப்பக்குவம் ரேகையாய் தோசையில் தெரியும்.

கடையை ஆரம்பித்த கே.எஸ். அனந்த நாராயணன், சுப்ரமண்யன் சகோதரர்கள். கல்லாப் பெட்டியில் உட்கார்ந்துக் கொண்டு இன்முகத்தோடு அனைவரையும் வரவேற்பார்கள். இளம் வாழை இலையில் மணங்கமழ நெய் தோசை சாப்பிடுவது ஓர் தனிப்பட்ட அனுபவமே. என்னுடைய இறந்து போன தமையனார் பெயரும் பார்த்தசாரதி என்பதை முன்னமே குறிப்பிட்டுள்ளேன். அவன் நினைவாக இந்த உணவு விடுதிக்கு வாரம் ஒருமுறை சென்று சிற்றுண்டி அருந்துவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

## 184) வரவில்லாமல் செலவு செய்வோமே

கல்லூரி வாழ்க்கை என்பது ஒருவருடைய வாழ்வின் இனிய பகுதியாகும். வரவில்லாமல் செலவு செய்தோமே என்ற கண்ணதாசனின் பாடல் இதற்கொரு உதாரணமாகும். பண்புள்ள தீய பழக்கங்கள் ஏதும் இல்லாத நண்பர்கள் குழாம் ஒருவருடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும். அந்தக் காலக் கட்டத்தில் பொழுதுபோக்கு சாதனங்கள் மிகக் குறைந்த அளவிலேயே அமைந் திருந்தன. சிலோன் ரேடியோ வர்த்தக ஒலி பரப்பில் மயில் வாஹனனின் இனிய குரலில் காலை பத்து மணி முதல் பதினொரு மணி வரையிலும் மாலைவேளைகளில் நான்கு மணி முதல் ஆறு மணி வரை

யிலும் ஒலிபரப்பப்பட்டு வந்த பாடல்களே பெரியதொரு பொழுதுபோக்கு சாதனமாகும். இவற்றைத் தவிர திருச்சி மாநகரில் இருந்த திரைப்பட அரங்குகளுக்குச் சென்று அவ்வப்போது படம் பார்ப்பது அடுத்த பொழுது போக்காகும்.

## 185) திருச்சி திரையரங்குகள்

திருச்சிராப்பள்ளி நகரத்தில் முதன்முதலாக நிறுவப் பட்ட திரையரங்கம் 'கெயிட்டி' திரையரங்கம் தான். ஆரம்ப காலம் முதல் 'இந்தி'ப் படங்கள் மட்டும் தான் திரையிடப் பட்டு வந்தன. இரண்டாவது திரையரங்கம் 'வெலிங்டன்'. மூன்றாவது திரையரங்கம் பாரமவுண்ட் தியேட்டர், பின்னர் இது லட்சுமி தியேட்டர் என்றும் தற்போது இது 'முருகன்' தியேட்டர் என்றும் பெயர் மாற்றம் பெற்றுள்ளது (இது கீழைப் புலிவார்டு (Boulevard) சாலையில் அமைந்துள்ளது. திரை யிடப்பட்ட அரங்குகளில் அதிக கட்டணம் செலுத்திப் படம் பார்க்க இயலாதவர்கள் முருகன் தியேட்டருக்குச் சென்று குறைந்தக் கட்டணத்தில் திரைப்படத்தைக் கண்டு களிப் பார்கள்.) நான்காவது 'ராயல்' தியேட்டர் பின்னர் இது 'பிரபாத்' எனப் பெயர் மாற்றமானது.

முதன்முதலில் தமிழ்நாட்டிலேயே ஒரே வளாகத்தில் இரண்டு திரையரங்குகள் அமைந்தி ருந்தது திருச்சிராப் பள்ளியில் மட்டும்தான். ஒரு திரையரங்கில் ஓடும் படத்தின் ஒலி, பக்கத்திலுள்ள திரையரங்கத்திற்கு கேட்காத அளவில் நுணுக்கமாக வெலிங்க்டன்-ராக்ஸிதிரையரங்கங்கள் கட்டப் பட்டன. இதற்கான நுணுக்க ஆலோசனைக்கூறியவர் விஞ்ஞான மேதை ஜி.டி. நாயுடு.

இதன்பிறகு நிர்மாணிக்கப்பட்டவை காந்தி மார்க்கெட் பகுதியில் அமைந்திருந்த சென்ட்ரல் தியேட்டர், மரக்கடை



பகுதியில் அமைந்திருந்த ஜுபிடர் மற்றும் ராமகிருஷ்ணா திரையரங்குகள். இப்ராஹிம் பூங்காவிற்கு அண்மையில் அமைந்திருந்த ராஜா தியேட்டர் (இன்று இந்தத் தியேட்டர் வணிக வளாகமாக மாற்றம் பெற்றிருந்த போதிலும் 1956-60 காலக் கட்டத்தில் மிகச் சிறந்த திரைப் படங்கள் இங்கே திரையிடப்பட்டன. இப்போதும் பேருந்துகளில் நடத்துனர் ராஜா டாக்கீஸ் ஸ்டாப் என்று சொல்லி பயணிகளை இறங்கச் சொல்வர். கல்லூரியில் படிக்கும் நாட்களில்திரையிடப்படும் படங்களை முதல் நாள் முதல் காட்சியில் பார்ப்பது என்பது சிலருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செயலாகும்.

அத்தகைய மகிழ்ச்சியில் அவ்வப்போது திளைத்தவன் நான். இந்தத் திரையரங்குகளில் காட்சி ஆரம்பிப்பதற்கு முன்பு நுழைவுச் சீட்டு கொடுக்கும்இடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட இருக்கைகள் இருக்கும். வரிசைப்படி ஒருவர் உட்கார்ந்து கொண்டிருந்தால் அவருக்கு நுழைவுச் சீட்டு கட்டாயம் கிடைக்கும். திரைப்படம் தொடங் குவதற்கு ஒரு மணிநேரம் முன்னதாகச் சென்றால் போதுமானது. அந்த நபர் ஏமாற்றத்தோடு வீடு திரும்ப மாட்டார். 1956 ஆம் ஆண்டு வெளிவந்த குலதெய்வம் திரைப்படத்தை ராஜா தியேட்ட ரிலும், அமர தீபம், மாதர் குல மாணிக்கம் போன்ற திரைப் படங்களை பிரபாத் தியேட்டரிலும், மதுரை வீரன், அலி பாபாவும் நாற்பது திருடர்களும் போன்ற திரைப் படங்களை வெலிங்டன் தியேட்டரிலும் கண்டு களித்தது என் நினைவில் இன்றும் பசுமையாகப் பதிந்துள்ளது. (ஒருவருடைய வாழ்க்கை நினைவுகளை ஏடுபடுத்தும்போது அந்தந்தக் கால கட்டத்தில் நிலவியிருந்த சூழ்நிலையில் அப்போதிருந்த மனநிலையில் எவ்வாறு இருந்தோம் என்பதையே எழுத வேண்டும்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கை வரலாற் றிலும் இன்பமும் துன்பமும் கலந்திருக்கும். கல்லூரி வாழ்க்கையை நினைவில் கொள்ளாதவர்கள் என்று யாரும் இருக்க முடியாது. ஒருவருடைய வாழ்க் கையில் நம் உணவு வகைகளை இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, காரம், கசப்பு ஆகியவை கலந்தே நிகழ்வுகள் நடைபெற்றிருக்கக் கூடும். கல்லூரி நாட்களில் நான் திரைப்படங்களைப் பார்ப்பதில்லை; சதா சகஸ்ர நாமம் தான் சொல்லிக் கொண்டிருப்பேன்; ஆன்மீக புத்தகங்களைத் தவிர வேறு எந்தப் புத்தகத்தையும் தொடு வதில்லை; என்றெல்லாம் எழுதினால் அது உண்மை க்குப் புறம்பான செய்தி களாகவே அவை அமையும்.)

## 186) ஆங்கிலப் பேராசிரியர் திரு. பட்

திரு. பட் என்ற ஆங்கிலப் பேராசிரியர் பி.ஏ மாணவர் களுக்கு வகுப்பு நடத்தும் போது வகுப்பறையைச் சுற்றி அமைந்துள்ள சாளரங்கள் வழி மற்றைய பாடப் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்கள் நின்று கொண்டு திரு. பட் ஆற்றும் உரைகளைக் கேட்டு மகிழ்வர். மற்றைய ஆங்கில பாடப் பகுதியை போதிக்கும் ஆசிரியர்களை விட மாணவர்கள் திரு. பட் பாடம் போதிக்கும் வகுப்பினில் அமர்வதற்கே விரும்பினர். கல்லூரியில் சேர்ந்த ஆறு மாதங்களிலே இவர் ஐ.ஏ.எஸ் பரீட்சையில் தேர்ச்சி பெற்று கல்லூரி விரிவுரையாளர் பதவியைத் துறந்தார். இவருக்கு அளிக்கப் பட்ட பிரிவு உபசார விழாவில் அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தேசீயக் கல்லூரியில் திரு. பட், புனித சூசையப்பர் கல்லூரியில் பௌதிகப் பிரிவு பேராசிரியர் திரு. கேப்டன் பிரபாகரன் ஆகியோர் முறையே 1956, 1957 ஆண்டுகளில்



கல்லூரிகளிலிருந்து ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாக தேர்வு பெற்றவர்கள். இவர்கள் மிகச் சிறந்த கல்லூரி பேராசிரியர்களாக திகழ்ந்து வந்தனர். அவர் களுடைய இந்த பணிமாற்றத்தால் மாணவர்கள் சிறந்த பேராசிரியர்களை இழந்தனர்.

## 187) சுமைமிகுந்த பாடத்திட்டம்

புகுமுக வகுப்பில் அந்த ஆண்டு பாடத் திட்டம் ஆசிரியர்களுக்கே சவாலாய் அமைந்தி ருந்தது. பௌதிகம் மற்றும் வேதியியல் படிக்கும் மாணவர்கள் அந்த ஆண்டு பாடத்திட்டத்தின்படி மொத்தம் இருபது செயல் முறை பயிற்சி ( Practicals) வகுப்புகளில் பங்குகொண்டு அதற் கான குறிப்புகளை தயாரித்திருக்க வேண்டும்.

இவை யாவும் 1957 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத் திற்குள் முடிக்கப்பட வேண்டும். என்று பல்கலைக் கழகம் ஆணையிட்டிருந்தது. எட்டு மாதங்களுக்குள் 360 மாணவர் களுக்கு செயல்முறை பயிற்சி அளிப்பதற்கு கல்லூரியில் போதிய கட்டமைப்பு வசதிகள் அமைந்திருக்கவில்லை. இதன் விளைவாக ஞாயிற்றுக் கிழமைகளிலும் செயல்முறை பயிற்சி வகுப்புகளுக்குச் செல்ல வேண்டியக் கட்டாயம் ஏற்பட்டது. இதன் நடுவில் டிசம்பர் மாத இறுதியில் அனைத்து கல்லூரிகளிலும் பல்கலைக் கழகத்தின் வழிகாட்டுதலின்படி செலக்ஷன் பரீட்சை நடைபெற்றது.

இந்தத் தேர்வில் வெற்றி பெற்றோரே இறுதித் தேர்வை எதிர்கொள்ள முடியும். செலக்ஷன் தேர்வை எதிர்கொள் வதற்காக அல்லும் பகலும் மாணவர்கள் அவதிப்பட்டனர். ஒவ்வொரு பாடப்பகுதியின் பாடத் திட்டங்கள் அளவிற்கு அதிகமாகவே சேர்க்கப்பட்டிருந்தன

(இதன் விளைவாக 1957-58 கல்வி ஆண்டில் பாடச் சுமை வெகுவாக குறைக்கப்பட்டது.) செலக்ஷன் பரீட்சையில் சில மாணவர்கள் தேர்ச்சி பெறாமல் போயினர். செலக்ஷன் பரீட்சை கணித பாடத்தில் என்னால் அறுபது மதிப் பெண்களே பெற முடிந்தது. ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒருவர் எவ்வளவு நன்றாக பதில் எழுதியிருந்தாலும் அதிக பட்சம் ஐம்பது மதிப்பெண்களே பெறமுடியும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் குறிப்பாக எம். ஏ. ஆங்கிலம் படித்தோர் நாடெங்கும் போற்றப்பட்டு வந்தனர். (திரு. ஏ.எல். லட்சுமணசுவாமி முதலியார் சென்னை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பல ஆண்டுகள் பணியாற்றி வந்தார். இவருடைய சகோத ரரான ராமசுவாமி முதலியார் மிகச் சிறந்த மகப்பேறு மருத்துவராக திகழ்ந்து வந்தார். இவர்கள் இருவரும் ஆற்காடு சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டு வந்தனர். துணை வேந்தராக விளங்கிய திரு. லட்சுமணசுவாமி முதலியார் அக்காலத்திய Legislator Council இன் எதிர்க் கட்சி தலைவராகவும் பொறுப்பு வகித்து வந்தார்.).

## 188) Suez canal Crisis

அவ்வப்போது ஸரஸ்வதி ஹாலில் நிகழ்ச்சிகள் பல நடைபெறும். நாட்டளவிலும், உலகளவிலும் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து விவாதக் கூட்டங்கள் நடைபெறும் . இவற்றில் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கு கொண்டு உரையாற்றுவர். 1956 ஆம் ஆண்டு Suez canal எகிப்து அதிபர் நாஸரால் தேசிய மயமாக்கப்பட்ட போது நாடெங்கும் இதுபற்றிய விவாதம் அரங்கேறியது. தேசீயக் கல்லூரியிலும் இவ்வாறு Suezcanal தேசிய மயமாக்கப்பட்டது சரியா தவறா



என்ற விவாதம் நடைபெற்றது. அவ்வாறு செய்தது சரியே என்ற அணியில் நான் பதினைந்து நிமிடம் உரையாற்றினேன். பல புதிய குறிப்புகளைத் தந்து அனைவருடைய பாராட்டுக் களையும் பெற்றேன். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் என்னுடைய "முகம்" மற்றைய மாணவர்களுக்குத் தெரிய லாயிற்று.

(மத்தியதரைக் கடலையும், சிவப்புக் கடலையும் இணைத்து ஒரு கனால் (Canal) 1859 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதுவே Suez canal ஆகும். இதற்கான முதலீட்டினை பெரு மளவில் பிரிட்டிஷ் அரசாங்கம் தந்துதவியது. இரண்டாம் உலகப் போருக்கு பிறகு, எகிப்திய அதிபர் Suezcanal பகுதியை விட்டு பிரிட்டிஷ் படைகள் அகன்றிட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். இதன் விளைவாக பிரிட்டிஷ் படையினர் அந்த இடத்தை விட்டு 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முழுமையாக விலகிச் சென்றனர்.

நைல் நதி மீதான அஸ்வான் அணை கட்டுவதற்கு உதவி செய்வதாக வாக்களித்த ஆங்கிலேய மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் மறுத்தன. இதன் விளைவாக எகிப்திய அதிபர் Gamal Abdal Nasser 1956 ஆம் ஆண்டு ஜூலை மாதம் Egyptian Canal Authority என்றதொரு அமைப்பை நிறுவி Suezcanal வழியாக செல்லும் ஆங்கிலேயருக்குச் சொந்தமான கப்பல்களுக்கு தடைவிதித்தார். 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் நாள் பிரெஞ்ச் மற்றும் பிரிட்டிஷ் படைகளோடு இஸ்ரேல், எகிப்து மீது வான்வெளித் தாக்குதலைத் தொடங்கியது. Suezcanal வழியாகச் செல்லும் உரிமையை தங்களதாக்கிக் கொள்ள பிரிட்டிஷாரும், பிரெஞ்ச் நாட்டவர்களும் முயற்சிகள்

பலவற்றை மேற்கொண்டனர். இதன் விளைவாக இந்தப் பகுதியில் போக்குவரத்து ஆறு மாதங்களுக்குத் தடைப்பட்டன. 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐக்கிய நாட்டு சபைகளின் மேற்பார்வையில் Suezcanal போக்கு வரத்துக்கு மீண்டும் திறந்துவிடப்பட்டது. எகிப்திய அரசாங்கம் ஆறு தவணைகளில் சுமார் 81 மில்லியன் பவுண்டுகளை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அவர்கள் அளித்த முதலீட்டிற்கு ஈடாகத் தருவதாக ஒப்புக் கொண்டது. 1963 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாள் எகிப்திய அரசாங்கம் தன்னுடைய கடைசி தவணையை பிரிட்டிஷ் அரசாங் கத்திற்கு செலுத்தியது.

இதன் பிறகு அந்தப் பகுதி வழியாக இஸ்ரேல் நாட்டு கப்பல்கள் அனுமதிக்கப்படவில்லை. 1967 ஆம் ஆண்டு எகிப்திற்கும் இஸ்ரேல் நாட்டிற்கும் நடந்த போரின் போது Suezcanal வழியான போக்குவரத்து மீண்டும் நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட இழப்பினை ஈடு கட்டுவதற்காக எகிப்து நாட்டிற்கு மற்றைய அரபு தேசங்கள் பொருளாதார ரீதியில் உதவி செய்தன. 1975 ஆம் ஆண்டு எகிப்திற்கும், இஸ்ரேலுக்கும் ஏற்பட்ட சமாதான உடன் படிக்கைக்குப் பிறகு Suezcanal மீண்டும் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டது.)

## 189) செயற்கை வைரங்கள்

திருவானைக்காவைச் சுற்றி செயற்கை வைரத்திற்கு மெருகேற்றும் தொழிலாளர் குடும்பங்கள் அமைந்திருந்தன. இவர்களைத் தவிர மூங்கில் கூடை, தட்டு, போன்றவற்றை முடையும் கைவினைக் கலைஞர்களும் இருந்து வந்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் செயற்கை வைரத்



தொழிலும் செழித்து வளர்ந்தது. (ரங்கூன்) பர்மாவில் இத்தொழிலில் தேர்ச்சி பெற்ற தொழி லாளர்கள் பலர் இம் மாவட்டத்தில் குடியேறினார்கள். மேலும் பர்மாவிலிருந்து இத்தொழிலுக்கான மூலப் பொருட்கள் தருவிக்கப்பட்டன. “ரங்கூன் ஜெம்ஸ்” என்ற வகைச் செயற்கை வைரம் மிகுதியாகத் தயாரிக்கப்பட்டது. இயற்கையில் கிடைக்கும் கற்களை ஆபரணங்களுக்கு ஏற்றவாறு துண்டித்தல், மெருகேற்றுதல் போன்ற தொழிலை, உறையூர், மண்ணச் சநல்லூர், மணிகண்டம், திருவானைக் கா பகுதிகளில் பெரும்பான்மையோர் ஈடுபட்டிருந்தனர். இதன்மூலம் வேலை வாய்ப்பும், நல்ல வருவாயும் ஏழை மக்களுக்குக் கிட்டியது. மிகக் குறைந்த முதலீட்டில் இத்தொழில் நடை பெற்றது.

## 190) ஊர்ப்பயணம்

ராஜாமடம் சத்திரத்தில் நடைமுறையிலிருந்த கட்டுப்பாடுகள் ரங்கூன் ரெட்டியார் சத்திரத்தில் அமுல் படுத்தப்படவில்லை. வெளியூர் செல்வதாய் இருந்தால் ஒரு கடிதத்தில் அனுமதி கேட்டு அந்தக் கடிதத்தை சக மாணவன் மூலமாக விடுதிக் காப்பாளரிடம் சேர்ப்பித்தால் போதும். ஒரு மாதத்தில் எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். அவர்களைப் பொருத்தவரை அந்த நாட்களுக்கான உணவுப் பொருள்கள் மிச்சம் என்ற கொள்கையையே கொண்டிருந்தனர். இதனால் மாதம் ஒருமுறை வையச்சேரிக்கு சென்று வந்தேன்.

## 191) 110 Fast Passenger:

திருச்சி ரயில் நிலையத்திலிருந்து தினந்தோறும் மாலை 04.20 மணிக்கு 110 எண் கொண்ட திருவனந்தபுரம்

-சென்னை விரைவுப் பயணிகள் தொடர் வண்டி (Fast Passenger) புறப்படும். இதில் பயணம் செய்தால் 05.10-க் கெல்லாம் தஞ்சையைச் சென்றடையலாம். சுமார் 50 நிமிடத்தில் இந்தத் தொடர் வண்டி தஞ்சையைச் சென்ற டையும். இந்த வண்டியில் பயணம் செய்வதே ஒரு தனி அனு பவம். ஆனி மற்றும் ஆடி மாதங்களில் மேலைத் திசையிலி ருந்து கிழக்கு நோக்கி அடிக்கும் காற்றின் உந்துதலால் இந் தத் தொடர் வண்டி பறந்து செல்வதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

1862இல் முதன் முதலில் நாகப்பட்டினம் - திருச்சிரா ப்பள்ளி கோட்டை மீட்டர் கேஜ் ரயில் பாதை அமைக்கப்பட் டது. அப்போது இருந்த "GREAT SOUTHERN INDIA RAILWAY COMPANY" இப்பணியை நிறைவேற்றியது. 1866-இல் இது கரூர் வரை நீட்டிக்கப்பட்டது. பின்னர் 1868 இல் ஈரோடு வரை அமைக்கப்பட்டது. 1875-இல் தஞ்சாவூ ரிலிருந்து சென்னைக்கு மெயின்லைன் அமைக்கப்பட்டது. 1879இல் 716 கிலோ மீட்டர் கொண்ட சென்னை-தூத்துக்குடி மெயின்லைன் தொடங்கப்பட்டது. 1929இல் விழுப்புரம்-திரு ச்சிராப்பள்ளி கார்டு லைன் தொடங்கப்பட்டது. 1930இல் புது க்கோட்டை - மானாமதுரையில் தடம் அமைக்கப்பட்டது.

## 192) விஞ்ஞானப் பாடம் சொல்லிக் கொடுக்கும் கலையைக் கற்றுக் கொடுத்த திரு.கோபாலரத்னம்

தேசியக் கல்லூரியில் பௌதிகத் துறை தலைவராக விளங்கியவர் ஸ்ரீவேதாந்த தேசிகன். இவரை S.V. என்றழைப் பார்கள். இந்தத் துறையைச் சார்ந்த A.C.பத்மநாபன் என்பவர் அனைத்து மாணவர்களுடன் கலந்து பழகுவார். இவரைச் சுற்றி எப்போதும் ஒரு மாணவர் கூட்டம் காணப்படும். தாம்



ஒரு பேராசிரியர் என்ற உயர்வினைச் சிறிதும் கொள்ளாமல் அனைத்து மாணவர்களுக்கும் பாடம் சம்பந்தமான ஐயங்களை அவ்வப்போது தெளிவுபடுத்தி வருவார். ***(இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்* B.Sc., (Honours) *பட்டம் பெற்றவர்).*** 1959-ஆம் ஆண்டு தேசியக் கல்லூரி திண்டுக்கல் சாலையில் அமைக்கப்பட்டிருந்த புதியதொரு வளாகத்திற்கு மாற்றம் பெற்றது. அந்த ஆண்டு பௌதிகத்தில் முதுகலைப் பட்டப் படிப்பான M.Sc., (Physics) தொடங்கி வைக்கப் பட்டது.

திரு. A.C.பத்மநாபன் அப்போதைய பாடத்திட்டத்தி னைப் போதிப்பதற்கு உரியவராகத் தம்மைத் தயார் செய்து கொள்ளும் பொருட்டு புனித சூசையப்பர் கல்லூரியில் M.Sc., (Physics) பாடப் பகுதியில் இரண்டாண்டு காலம் பயின்று 1959 ஆம் ஆண்டு தேசியக் கல்லூரியில் பௌதிகத் துறை பேராசிரியராகப் பதவியேற்றார் ***(விஞ்ஞானத்தின் வளர்ச்சி அளத்தற்கரியது. அதனால் பாடம் போதிக்கும் ஆசிரியர்கள் தம்மை அவ்வாறு போதிப்பதற்கு தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் திரு.A.C.பத்மநா பன். வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவை ஒருவர் அவ்வப்போது முய ன்று அறிந்து கொண்டாலொழிய அவரால் முறையான பாடத்திட்ட த்தைப் போதிக்க இயலாது).*** புகுமுக வகுப்பில் எனக்கு பௌதிக பாடம் போதித்தவர் திரு. நரசிம்மன் என்பார்.

வேதியியல் துறைத் தலைவராகப் பணியாற்றியவர் திரு. M.N.வரதராஜன் அவர்கள். ஆயினும், மற்றொரு பேராசிரியரான திரு.M.V.கோபாலரத்னம் மிகச் சிறந்த முறை யில் அனைவர் உள்ளத்திலும் பதியும்படி பாடங்களை நடத் திடுவார். ஒரு மாணவன் பாடங்களை ஊன்றிப் படிப்பதற்கும் நல்ல மதிப்பெண் பெறுவதற்கும் ஆசிரியர் ஒரு காரணமாக அமைகிறார். The subject can be marred or made by the

teacher என்ற சொற்றொடர்க்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்த வர்கள் பௌதிகத் துறையைச் சார்ந்த நரசிம்மனும், வேதியியல் துறையைச் சார்ந்த திரு.கோபாலரத்னமும் ஆவர். முன்னவர் பாடம் நடத்தினால் உள்ளதும் மறந்து போகும், பின்னவர் பாடம் நடத்தினால் மனத்திரையிலிருந்து அழிக்க இயலாது. திரு.கோபாலரத்னம் கரும்பலகையில் அழகாக எழுதும் திறன் படைத்தவர். அவர் பாடம் நடத்தும் 'பாணியே தனி'

'Ous' acid when reacts with an alkali will produce "ite" salt

$HNO_2 + NaOH = NaNO_2 + H_2O$

Nitr**ous** Acid + Sodium Hydroxide = Sodium Nitr**ite** + water

'Ic' Acid reacting with an alkali will produce 'ate' salt and water

$HNO_3 + NaOH = NaNO_3 + H_2O$

Nitr**ic** Acid + Sodium Hydroxide = Sodium Nitr**ate** + Water

திரு.கோபாலரத்னம் அவர்கள் இவ்வாறு கோடிட்டுக் காட்டி பாடம் போதித்து வந்ததால் அவர் மாணவர்களால் விரும்பப்படும் ஆசிரியராகத் திகழ்ந்தார். எப்போதும் Pant, Coat உடனும் நெற்றியில் ஸ்ரீசூர்ண இழையுடன் காணப்படும் இவருடன் 1962ஆம் ஆண்டு தேசியக் கல்லூரியில் வேதியியல் செய்முறைப் பயிற்சியாளராகப் பணி புரிந்தேன் (Demonstrator in Chemistry).



கணிதத் துறையின் தலைமைப் பேராசிரியராக திரு.V.ரங்கநாதன் பணிபுரிந்து வந்தார். மிக எளிமையான தோற்றம் கொண்டவர். இந்தத் துறையில் பணியாற்றி வந்த திரு.C.R. சீனிவாசனைப் பற்றி முன்னமே குறிப்பிட்டு உள்ளேன். வணிகத்துறை பேராசிரியர் திரு.B.கோபாலன் மற்றும் திரு.S. வரததேசிகன் ஆகியோர் முறையே Commerce, World History வகுப்பாசிரியர்களாக செயல்பட்டனர்.

## 193) மற்றைய மாணவர் விடுதிகள்

தேசியக் கல்லூரிக்கு அண்மையில் ஆண்டார் தெருவில் புகழ் பெற்ற Rama's Cafe என்ற பெயர் கொண்ட மிகச்சிறந்த உணவு விடுதி இயங்கி வந்தது. மதிய உணவு இடைவேளையின் போது அங்கு கூட்டம் நிரம்பி வழியும். Rama's Cafe ல் பரிமாறப்படும் அடை, அவியல் மிகவும் பிரசித்தி பெற்றது. கல்லூரி வளாகத்தை ஒட்டிய வாணப்பட்டறைத் தெருவில் கனியூர் மாணவர் விடுதி இயங்கி வந்தது. இந்த தர்மசத்திரத்தில் தங்கிப் படித்து வந்த மாணவர்களின் எண்ணிக்கை 12. இதில், தங்கிப் படிக்கும் மாணவர்கள் சிகையுடன், உபநயனம் ஆகியவராய் இருக்க வேண்டும். அவர்களுக்கு காலை வேளையில் ஸூக்தங்களும், உபநிஷத்துகளும் பயிற்றுவிக்கப்பட்டன. இந்த மாணவர் விடுதியில் தங்கிப் படித்து வந்த கோனேரிராஜபுரத்தைச் சேர்ந்த பஞ்சாபகேசன் என்பவன் என்னுடைய நண்பன். எங்கள் இருவரையும் சக மாணவர்கள் கிருஷ்ணன்-பஞ்சு என்றழைத்து வந்தனர்.

***(இயக்குனர்களாகத் திரையுலகில் தமக்கென ஓரிடத்தைப் பெற்றவர்கள் கிருஷ்ணன்-பஞ்சு ஆகிய இருவருமாவர். 1952 ஆம் ஆண்டு வெளிவந்த சிவாஜி கணேசன் முதன்முறையாக நடித்த 'பராசக்தி'.***

***1954 ஆம் ஆண்டு எம்.ஆர். ராதாவின் மிகச் சிறந்த நடிப்பில் வெளிவந்த 'ரத்தக்கண்ணீர்', 1956ஆம் ஆண்டு முரசொலி மாறனின் வசனத்தைக் கொண்டு வெளிவந்த 'குலதெய்வம்', 1957 ஆம் ஆண்டு சிவாஜி கணேசன், பத்மினி நடிப்பில் வெளிவந்த 'புதையல்', ஆகியவை கிருஷ்ணன், பஞ்சு இயக்கத்தில் வெளிவந்த மக்களால் மறக்க முடியாத திரைப்படங்களாகும்)***

திருவானைக்காவில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த மாணவர் விடுதி செயல்பட்டு வந்தது. இதில் 25 மாணவர்கள் தங்கிப் படித்து வந்தனர். இந்த விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் உருத்திராட்சக் கொட்டையை கட்டாயம் அணிந்து கொள்ள வேண்டும். நெற்றியில் விபூதி பட்டையோடு எந்நேரமும் காட்சியளிக்க வேண்டும். அவ்வாறு நெற்றியில் விபூதியைத் தரிக்காதவர்களுக்கு உணவு பரிமாறப்படமாட்டாது. இது போன்ற சத்திரங்கள் அன்றைய காலக் கட்டத்தில் ஏழ்மை நிலையிலிருந்த மாணவர்களுக்கு ஓர் புகலிடமாய் அமைந்திருந்தன. பணவசதி படைத்தோரே கல்லூரி மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்க முடியும். தேசியக் கல்லூரியில் மாணவர் விடுதி அப்போது அமைக்கப் படவில்லை. சில மாணவர்கள் பெரிய கடைத் தெருவில் அமைந்திருந்த வெங்கடா லாட்ஜ் போன்ற இடங்களில் தங்கியிருந்து படித்து வந்தனர். அப்போதெல்லாம் ஒரு மாதத்திற்கான வாடகை 30 ரூபாய். 3 மாணவர்கள் ஒரே அறையில் தங்கிப் படித்து வந்தனர்.

## 194) 24.11.1956ஆம் நாள் 103 எண் கொண்ட தூத்துக்குடி விரைவுத் தொடர் வண்டி விபத்துக்கு உள்ளானது

நவம்பர், டிசம்பர் மாதங்களில் காவிரியில் தெள்ளிய



நீர் ஓடிக் கொண்டிருக்கும். நன்றாக அமிழ்ந்து நீராடலாம். பழைய காவிரிப் பாலத்தின் மேற்குப் பகுதியில் அழகான படித்துறை அமைந்திருந்தது. ***(தற்போது அந்தப் படித்துறை இருந்த இடம் தொடங்கி புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது).*** ஒவ்வொரு நாளும் நீராடி விட்டுத் திரும்பும் போது ரயில்வே மேம்பாலத்தின் வழியாகத்தான் திருவானைக்காவிற்குச் செல்ல வேண்டும். காலை 5 மணி தொடங்கி குறிப்பிட்ட நேரங்களில் அன்றாட காலைப் பணிகளை மேற்கொண்டுவரும் பழக்கத்தை கொண்டிருந்ததால் தினந்தோறும் சென்னை-தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் திருச்சி சந்திப்பிற்கு செல்லும் காட்சியைக் காண்பதுண்டு. ஆனால் 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் நாள் காலை தூத்துக்குடி செல்லும் எக்ஸ்பிரஸ் வண்டியை நான் பார்க்க இயலவில்லை.

கல்லூரிக்குச் சென்ற பிறகு நவம்பர் 23ம் தேதி இரவு அரியலூரைத் தாண்டி அமைந்திருந்த காட்டாற்றில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் காரணமாய் தண்டவாளங்கள் அடித்துச் செல்லப்பட்டன என்றும் அதன் விளைவாக 24ஆம் தேதி விடியற்காலை அந்த வழியாக வந்த தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் வெள்ளத்தில் அகப்பட்டு விபத்துக்குள்ளானது என்ற செய்தி பெரும் கலக்கத்தை உண்டு பண்ணியது. அந்தக் கோர விபத்தில் 130 பயணிகள் உயிரிழந்தனர் 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டனர். உடைமைகளை இழந்து தவித்தனர். இந்த விபத்தின் எதிரொலியாக அப்போதைய ரயில்வேத் துறை அமைச்சர் திரு.லால் பகதூர் சாஸ்திரி தமது பதவியை ராஜினாமா செய்தார். ரயில்வே இணை அமைச்சராக பதவி வகித்து வந்த திரு.O.V.அழகேசன் ராஜினாமா செய்திட வேண்டுமென்று தி.மு.கழகத்தினர் *'அரியலூர் அழகேசரே நீர் ஆண்டது*

*போதாதா; மக்கள் மாண்டது போதாதா'* என்று சொற்றொடர்கள் கொண்ட சுவரொட்டிகளை தமிழ் நாடெங்கும் ஒட்டியதோடு மட்டுமல்லாமல் அழகேசன் ராஜினாமா செய்திட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தினர். ***(தற்போதைய ஆட்சியாளர்களின் நேர்மையையும் லால் பகதூர் சாஸ்திரி போன்றோருடைய நேர்மையையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்).***

## 195) ரயில் விபத்தும், மாதர்குலமாணிக்கம் திரைப்படமும்

1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளிவந்த மாதர் குல மாணிக்கம் என்னும் திரைப்படம் ஓர் ரயில் விபத்தின் விளைவாக நிகழ்ந்த குழப்பங்களை மையமாகக் கொண்டிருந்தது. இந்தப் படத்தில் காண்பிக்கப்பட்ட ரயில் விபத்துக் காட்சிகள் வடநாட்டில் நிகழ்ந்த ரயில் விபத்துக் காட்சியாகும். நாகேஸ்வரராவ், ஜெமினி கணேசன், ரங்காராவ், தங்கவேலு, சாரங்கபாணி, பிரண்ட் ராமசாமி, அஞ்சலிதேவி, சாவித்திரி, கண்ணாம்பா, எம்.என். ராஜம், கே.ஆர். செல்லம், எஸ்.டி. சுப்புலெட்சுமி ஆகியோர் நடித்த இந்தப் படத்திற்கு இசையமைத்தவர் எஸ். ராஜேஸ்வரராவ், இயக்கம்: டி. பிரகாஷ்ராவ்.

**கதைச் சுருக்கம்:** ரங்கநாதனின் ***(எஸ்.வி.ரங்காராவ்)*** மகள் லட்சுமி ***(சாவித்திரி)***, சென்னையில் படிக்கும் ரவியைக் ***(ஜெமினி கணேசன்)*** காதலிக்கிறாள். ரங்கநாதனும் சம்மதித்துத் திருமணம் செய்து வைக்க முயலுகிறார். ரங்கநாதனின் தங்கை, லட்சுமியைத் தன் மகனுக்கு மணம் முடிக்க நினைத்து ரவி வேறு ஓர் ஜாதியைச் சார்ந்த பெண்ணை மணம் செய்து கொள்ளப் போவதாக ரவியின் பெற்றோருக்கு மொட்டை கடிதம் எழுதுகிறாள். ரவியின் பெற்றோர், தாம்



நிச்சயம் செய்துள்ள பெண்ணை மணக்க ரவியை வற்புறுத்துகிறார்கள். வாதாடியும் பயனில்லாது போகிறது ரவிக்கு. தாய் தந்தையர் கண்ணீர் விட்டு அழுவதைப் பொறுக்க இயலாது ரவி மணமேடையிலுள்ள மங்கை யார் எனக் கூடப் பாராமல், லட்சுமியை நினைத்துக் கொண்டே அவளை மணக்கிறான்.

இதே நேரத்தில், பார்வதி ***(அஞ்சலிதேவி)*** என்ற ஏழைப் பெண்ணுக்குத் திருமணம் நடைபெறவிருக்கிறது. வரதட்சணை விவகாரமாக மாப்பிள்ளை வீட்டார் வெளியேறுகிறார்கள். பார்வதியின் சகோதரனின் நண்பன் சேகர் ***(நாகேஸ்வர ராவ்)*** முன்வந்து மூர்ச்சித்து விழுந்த பார்வதிக்கு மாலையிடுகிறான். இரு தம்பதிகளும் ஒரே ரயிலில் பயணம் செய்கிறனர். ரயில் விபத்துக்குள்ளாகி, மூலைலக்கொருவராகத் தூக்கி எறியப்படுகின்றனர்; ரவி மாலையிட்ட மங்கை மடிந்து விடுகிறாள்; சேகரின் மனைவி பார்வதி, ரவியின் அருகில் விழுந்து கிடக்கிறாள். ரவி, அவள்தான் தன் மனைவி என நினைத்துக் கொள்கிறான். சேகர் தன் மனைவியைக் காணாது ஊர் சேருகிறான். பார்வதி தன் மனைவியல்ல என்ற உண்மையை சில நாளில் ரவி உணர்கிறான்.

ரங்கநாதன், ரவியின் வீட்டுக்கு வந்து, அவனுக்கு மணமானதைக் கண்டு, கண்டபடி திட்டுகிறார். லட்சுமி, ரவிக்கு திருமணம் நடந்து விட்டது என அறிந்து நோய்வாய்ப் படுகிறாள். பார்வதி தன் மனைவி அல்ல என்று லட்சுமியிடம் கடிதம் வாயிலாகத் தெரிவிக்கச் சென்ற ரவி, அவமானப் படுத்தப்பட்டுத் திரும்புகிறான்.

பார்வதி அக்கடிதத்தைக் காண நேரிடுகிறது; ரவி தன் கணவனல்ல எனத் தெரிந்து வெளியேறுகிறாள். சேகரின் தாய் ***(கண்ணாம்பாள்)***, யாத்திரை செல்கிறாள். ஒரு சிறிய

விபத்தில் பார்வதி அவளைக் காப்பாற்றுகிறாள். தாய், பார்வதியைத் தன் ஊருக்கு அழைத்துப் போகிறாள். சேகரிடம் உன் தங்கையைப்போல் பார்த்துக் கொள் எனக் கூறுகிறாள். சேகரின் வீட்டில் தன் சகோதரனுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தைப் பார்த்து, சேகரே தன் கணவன் எனப் புரிந்து கொள்ளுகிறாள் பார்வதி. லட்சுமியின் நோய் குணமாக, இட மாற்றத்தைப் ஏற்படுத்துகிறார்கள் அவள் பெற்றோர். லட்சுமியைக் குணப்படுத்த டாக்டர் சேகர் வருகிறான். ரங்கநாதன், லட்சுமிக்கும் சேகருக்கும் மணம் முடிக்க விரும்பி, சேகரின் தாயாரைக் கலந்து பேச, அவளும் அதற்கு ஒப்புக் கொள்ளுகிறாள். இறுதியில் உண்மை வெளிப்பட குழப்பங்கள் நீங்கி, இன்பம் நிலவுகிறது.''

திரைக்கதை அமைப்பதில் சிறந்து விளங்கிய சதாசிவ பிரம்மம், தாகூர் எழுதிய 'புயல்' கதையை அருமையான திரைக்கதையாக்கிக் கொடுக்க, அளவான வசனத்தை ஸ்ரீதர் எழுதியிருந்தார். உணர்ச்சி பொங்கும் நடிப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் நாகேஸ்வரராவ், ரங்காராவ், கண்ணாம்பா, அஞ்சலிதேவி, சாவித்திரி, ஜெமினி கணேசன் மற்றும் பல அனுபவ நடிகர் நடிகைகள் சிறப்பாக நடித்திருந்தார்கள். தரமான படப்பிடிப்பும், இனிமையான படத்துடன் ஒன்றிய பாடல்களும் இசை அமைப்பும் சிறப்பாக அமைந்திருந்தன.

## 196) பரிட்சைக்கு முன்பு நான் நோய்வாய்ப் பட்டேன்.

1957 ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதியுடன் புகுமுக வகுப்பிற்கான பாடப் பகுதி நிறைவுற்று ஒரு மாதம் Study Holidays எனப்படும் தேர்வினை எதிர்கொள்வதற்கான விடுமுறை அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பாடப் பகுதியின் ஆசிரியரும் வகுப்பறையில் எவ்வாறு தேர்வுக்கு மாணவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும், என்ன மாதிரியான கேள்விகள் கேட்கப்படும், எப்படிப் பதில் எழுத வேண்டும் போன்ற குறிப்புகளை எடுத்துரைத்தனர். இவ்வாறு விடுமுறை அளிப்பதற்கு சில நாள் முன்பு என்னால் இரு கால்களையும் ஊன்றி நடக்க இயலவில்லை. காலைக் கீழே வைத்து நடந்தால் 1000 ஊசிகள் காலிலே ஏற்றப்படுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. 10 அடி கூட என்னால் நடக்க முடியாத நிலை. ஏதோ ஒரு வழியாக வையச்சேரியைச் சென்றடைந்தேன். நாளுக்குநாள் வலி அதிகமாயிற்று. கிராம வைத்தியர் ஏதேதோ பச்சிலைகளைக் கொண்டு வைத்தியம் செய்ய முற்பட்டார். கால்வலி கூடியதே ஒழிய அந்தப் பச்சிலை வைத்தியத்தினால் நான் கண்ட பயன் ஒன்றுமில்லை.



வையச்சேரி கிராமத்தில் எந்தப் பொழுதுபோக்கு சாதனங்களும் கிடையாது. பேட்டரியில் இயங்கும் ரேடியோ ஒன்றேஒன்று அதுவும் குருக்கள் வீட்டில் இருக்கும். பகலெல்லாம் 'கொர் கொர்' என்ற ஒலிதான் கேட்கும். இரவு எட்டு மணிக்கு மேல்தான் ஒலி துல்லியமாக கேட்கும். ஆகவே பகல் 12 மணி நேரமும் படிப்பதைத் தவிர வேறு எந்தச் செயலிலும் ஈடுபட இயலாது. அக்ரஹாரத்தில் பூட்டிக் கிடந்த ஒரு வீட்டில் கால் தரையில் படாதவாறு நீட்டிய நிலையில் தூணில் சாய்ந்து கொண்டு ஒரு கரும்பலகையில் (Slate) அனைத்துப் பாடப் பகுதிகளையும் பலமுறை எழுதித் தெளிவு பெற்றேன். நாட்கள் செல்லச் செல்ல கால்கள் இரண்டும் செயலிழந்து விட்டன. 1957 ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் நாள் தொடங்கவிருந்த தேர்வில் பங்கு கொள்ள முடியுமா என்ற அச்சம் என் பெற்றோர் தம் மனதில் எழுந்தது. பச்சிலை வைத்தியத்தால் குணமாக்க முடியாத இந்த நோய்க்கு ஆங்கில முறை வைத்தி

யத்தைத் தவிர வேறு வழியில்லை என்று என் தந்தையாரின் நண்பர்கள் அறிவுறுத்தினர். வையச்சேரியிலிருந்து, தஞ்சை செல்ல வேண்டுமானால் அதற்கேற்ற வாகன வசதி வேண்டும்.

வையச்சேரியிலிருந்து வெட்டாற்றின் வடகரைக்குச் சென்று அதன் கரை வழியே சென்றால் கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில் வெட்டாற்றின்மீது அமைந்துள்ள நெடார் பாலத்தை அடையலாம், அந்தப் பாலத்திலிருந்து மருத்துவர் திரு N.R.சாமிநாதன் மருத்துவமனையை அடைவதற்கு 10 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டும். நாளுக்கு நாள் நோயின் தாக்கத்தால் ஒரு அடி தூரம் கூட என்னால் நடக்க இயலவில்லை. ஆகாரத்தை உட்கொள்ளவும் இயலவில்லை. அது கோடைகாலமானதால் அறுவடைக்குப் பின்பு நெல் மூட்டைகளை ஏற்றிக் கொண்டு மாட்டு வண்டிகள் தஞ்சைக்குச் செல்லும். அவ்வாறு சென்ற மாட்டுவண்டிகளில் ஒன்றில் என்னை ஏற்றித் தஞ்சை N.R.S. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்தந்தையார். இரவு 8 மணிக்குப் புறப்பட்ட மாட்டுவண்டி காலை 5 மணிக்கு மருத்துவமனையைச சென்றடைந்தது. அங்கே மருத்துவமனையில் என்னைச் சேர்த்தனர். மருத்துவர் சில பரிசோதனைகளைச் செய்த பிறகு மாலை 6 மணிக்கு நரம்பின் வழியாக ஒரு ஊசியில் மருந்து ஏற்றி உடலில் செலுத்தினார். அப்போது வாயிலிருந்து பந்து போன்ற அளவில் ஒரு வாயு வெளிப்பட்டுச் சென்றது. காலிலிருந்த வலி காணாமல் போயிற்று, அது மட்டுமல்லாமல் பசிக்கவும் ஆரம்பித்தது. அன்றிரவு 2 கேரியர் அளவுச் சாப்பாட்டை நான் ஒருவனே உண்டேன். அதன் பிறகு வையச்சேரியிலிருந்து தஞ்சைக்கு ரயிலில் வந்து மேலும் 4 நாட்களுக்குத் தொடர்ந்து ஊசியைப் போட்டுக் கொண்ட பிறகு



மார்ச் 15ஆம் நாள் எவ்விதக் கலக்கமுமின்றி தேர்வை எதிர் கொண்டேன்.

*(ஓடுவாயு எனப்படும் **Rheumatic Pain** என்ற நோயின் தாக்கத்தால் ஒருவருடைய உடம்பிலுள்ள எலும்பு மூட்டுக்கள் மற்றும் தசைகளில் வலி ஏற்படும். இந்த வலி ஓரிடத்தில் இருக்காது. இந்த வாயு இடம் விட்டு இடம் பெயரும். காலையில் தோள்பட்டையில் குடிகொண்டிருக்கும் வாயு மாலையில் குதிங்கால் பகுதிக்குக் குடி பெயரும். இதன் விளைவாக காலையில் கையைத் தூக்க முடியாது. மாலையில் நடக்க இயலாது. இந்தக் கீல் வாயுவின் தாக்கத்தினால்தான் என் கால்களில் வலி ஏற்பட்டது. **Salicylate** இணைந்த மருந்து நரம்பு ஊசியாகப் போடப்பட்டதால் கீல் வாயு வாய் வழியே வெளியேறியது. இந்தக் கீல் வாயு ஒரு பரம்பரை நோய். இதன் தாக்கத்தால் இந்த வைத்தியத்திற்குப் பின்பும்1964ஆம் ஆண்டு வரை நான் அவதிப்பட்டேன்.*

*1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஊட்டிக்கு செல்லும் வழியில் அமைந்துள்ள அரவங்காடு **Cordite** தொழிற்சாலையில் கெமிஸ்டாக வேலையில் சேர்ந்த நான் மூன்றுமாத இறுதியில் அங்கு நிலவியிருந்த குளிரின் தாக்கத்தால் ஏற்பட்ட வலியின் காரணமாக மருத்துவரின் ஆலோசனைப்படி வேலையை துறந்து மீண்டும் கல்லூரியில் பணியில் சேர்ந்தேன்.*

*1963ஆம் ஆண்டு விசாகப்பட்டினம் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன். நான் பணிபுரிந்த அலுவலகம் கடற்கரை ஓரத்தில் அமைந்திருந்த காரணத்தால் கடலோரப் பகுதியில் உள்ள $O_3$ எனப்படும் **Ozone**ஐ பல நாட்கள் சுவாசித்ததால் உடலில் குடிகொண்டிருந்த கீல் வாயு முழுமையாக வெளியேறியது. அதன் பிறகு நான் ஹைதராபாத், ஹூப்ளி போன்ற குளிர் பிரதேசங்களில் பணிபுரிந்த போதும் கீல் வாயு என்னைத் தாக்கவில்லை. கடற்கரை ஓரக் காற்றை சுவாசிப்பவர்களுக்கு பல நோய்*

***களிலிருந்து விடுதலை கிடைக்கும் என்பது மருத்துவர்களுடைய கணிப்பாகும்).***

## 197) மருந்தாளுனரும், மக்களைப் பெற்ற மகராசி திரைப் படமும்

N.R.S.மருத்துவமனையில் பணியாற்றி வந்த மருந் தாளுனர் (Compounder) ஒரு சினிமாப் பைத்தியம். 1957ஆம் ஆண்டு பொங்கலுக்கு வெளிவந்த '**மக்களைப் பெற்ற மகராசி**' படத்தை 20 முறை பார்த்தவர். எப்போதும் அங்கு வரும் நோயாளிகளிடம் நீ '**மக்களைப் பெற்ற மகராசி**' படத்தை பார்த்து விட்டாயா, இல்லையென்றால் ஊசியை 'நறுக்' என்று குத்திவிடுவேன் என்று அச்சுறுத்துவார்.

***(இந்தப் படத்தைப் பற்றிய சில பயனுள்ள (?) குறிப்புகள்: தயாரிப்பு: ஸ்ரீலட்சுமி பிக்சர்ஸ், (ஏ.பி.நாகராஜன், வி.கே. ராமசாமி) நடிக நடிகையர்: சிவாஜி கணேசன், நம்பியார், சாரங்கபாணி, வி.கே. ராமசாமி, பானுமதி, கண்ணாம்பா, எம்.என். ராஜம், டி.பி. முத்துலட் சுமி மற்றும் பலர். கதை, வசனம்: ஏ.பி.நாகராஜன். பாடல்கள்: மருத காசி, கா.மு. ஷெரீப், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், தஞ்சை ராமையாதாஸ். இசை: கே.வி. மகாதேவன், டைரக்ஷன்: கே.சோமு. கிராமிய மணம் கமழும் வகையில் கதை அமைக்கப்பட்டிருந்தது. சிவாஜி கணேசன் குடுமியுடன், கொங்கு தமிழ் பேசி, தாய்க்கு அடங்கிய மக னாக சிறப்பாக நடித்திருந்தார். பானுமதியும் அதற்கு ஈடாக நடித்திருந் தார். நம்பியார், ராஜம், கண்ணாம்பா, சாரங்கபாணி, ராமசாமி ஆகி யோரும் மற்றவர்களும் கதைக்கேற்ப கதாபாத்திரங்களுக்கேற்பச் சிற ப்பாக நடித்திருந்தார்கள் 'மணப்பாறை மாடுகட்டி', 'சொன்ன பேச் சைக் கேக்கணும்', 'ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா'. 'அடி தாராபுரம் தாம்பரம்', 'ஏரு ஓட்டி ஜோரு காட்டும் ஆசை மச்சான்' போன்ற கிரா மிய மணம் கமழும் பாடல்களும், வசனமும் இந்தப் படத்திற்குப் புகழ்***



***சேர்த்தன. வெற்றிப் பட வரிசையில் மக்களைப் பெற்ற மகராசியும் ஒன்று).***

## 198) இடிமுழக்கமும் மின்னலின் தோற்றமும்

கோடைகாலங்களில் அவ்வப்போது பெருத்த ஒலியு டன் கூடிய இடியோசையையும், கண்ணைப் பறிக்கும் ஒளி கொண்ட மின்னலையும் அனைவரும் கேட்பர் காண்பர். 1957 ஆம் ஆண்டு தேர்வு விடுமுறையின் போது வையச்சேரிக்கு அண்மையில் ஒரு தென்னை மரத்தில் இடி விழுந்ததின் விளைவாக அதன் அண்மையில் இருந்த 2 மரங்கள் எரிவதை கண்டு நான் அச்சமுற்றேன். அன்றைய தினம் தாக்கிய இடி யின் ஓசை சுற்றுப்புற வட்டாரத்தில் இருந்த மக்களுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

சூரியனின் ஒளிக்கதிர்களால் பூமியில் உள்ள நீர் ஆவி யாக மாறி மேலே செல்கின்றது. அங்கே அவை மிகக் குளிர்ந்த நிலையை உடன் அடைவதால் இடி உருவாகிறது. மேலே சென்ற ஆவியானது சிறு சிறு நீர்த்துளிகளாக மாற்றம டைகின்றது. இவ்வாறு தோன்றும் கோடிக்கணக்கான நீர்த்து ளிகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன. இவ்வாறு இவை மோதிக் கொள்ளும் போது அந்த நீர்த்துளிகளின் உள்ளே உள்ள மின்னணுக்கள் ஒருவித மின்சக்தியை ஏற் படுத்துகின்றன. இவ்வாறு உருவாகும் மின்சக்தி வெளிப் படும் போது அதுவே மின்னலாகத் தோன்றுகிறது. அப்போது அதனைச் சுற்றி உள்ள காற்று மண்டலத்தை 30,000$^{\circ}$ C வெப்ப நிலைக்கு உயர்த்துகின்றது. ***(சூரியனிலிருந்து வெளிப் படுத்தப்படும் வெப்ப நிலை 6000$^{\circ}$C மட்டுமே. ஆனால் மின்னல் வெளிப்படுத்தும் வெப்பநிலை அதைவிட 5 மடங்கு அதிகமானது).*** இந்த வெப்பத்தினால் மின்னல் தோன்றும் இடத்தைச் சூழ்ந்

துள்ள காற்று வெகு வேகமாக விரிவடைகிறது. இதுவே இடி முழக்கமாக மாறுகிறது.

சில நேரங்களில் இடி முழக்கம் கேட்ட பிறகு மின்னலைக் காண்போம், சிலநேரங்களில் மின்னலைக் கண்ட பிறகு இடியோசையைக் கேட்போம். ***(ஒளியின் வேகம் ஒரு வினாடிக்கு 3 லட்சம் கிலோ மீட்டர் தூரம் ஆகும்).*** இவ்வாறு இடியுடன் கூடிய மழை பொழியும் போது அச்சமற்றிருக்க 'அர்ஜுனா, அர்ஜுனா' என்று குழந்தைகள் கூவுவர். அர்ஜுனனுக்கும் இடிமுழக்கத்திற்கும் என்ன தொடர்பு என்பது தெரியாது, ஒருவேளை வீரத்திற்கு புகழ் பெற்ற அர்ஜுனனை அழைப்பதால் அச்சமுறாமல் இருக்கலாம் என்பதற்காகப் பெரியோர்கள் இவ்வாறு குழந்தைகளுக்குச் சொல்லி வைத்தனர் போலவும். கிராமங்களில் உன் தலையில் இடிவிழ, உன்னை நல்ல பாம்பு கடிக்க போன்ற சாபங்கள் அவ்வப்போது இடப்படும். ஆனால் இடி விழுந்து சாவது என்பது ஒரு பரிதாபகரமான செயலாகும். பெரும்பாலும் கால்நடைகளும், மரங்களும், உயரமான கோபுரங்களும் இடி விழுந்து சேதமடையும். திருவரங்கத்தில் கிழக்குப் பகுதியிலுள்ள வெள்ளை கோபுரம், தொண்டரடிப் பொடியாழ்வார் ஸந்நிதி விமானம், தாயார் ஸந்நிதி விமானம் ஆகியவற்றின் மீது இடி விழுந்து மிகுந்த சேதம் ஏற்பட்டது என்றும், கி.பி.1495ஆம் ஆண்டுகளில் இடி விழுந்த கோபுரத்தை கந்தாடை ராமானுஜ முனி புனர்நிர்மாணம் செய்தார் என்றும் கோயிலொழுகில் காணப்படுகிறது.

***(உயர்ந்த கட்டிடங்களில் இடிதாங்கி என்ற ஒரு கருவி பொருத்தப்பட்டிருக்கும். மேலும் செப்புக் கம்பிகளைக் கொண்டு*** **Earthing** ***எனப்படும் முறை அனைத்து உயரமான கட்டிடங்களிலும் பொருத்தப்பட்டிருக்கும். எண்ணெய் கிடங்குகளில் குறிப்பாக*** **Naphtha, Petrol,** ***போன்ற எளிதில் தீப்பற்றி எரியக் கூடிய திரவப் பொருள் நிரப்பப்பட்டிருக்கும்*** **Tank**-***களில் அடிக்கடி மின்னல் தாக்குவதால் தீப்பற்றி எரியும். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மணலிப் பகுதியில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையில்*** **Naphtha Tank** ***இவ்வாறு தீப்பற்றி எரிந்தது.)***



## 199) தென்னையை வைத்தால் இளநீர், பிள்ளையைப் பெற்றால் கண்ணீர்

கோடையின் வெப்பத்தைத் தவிர்ப்பதற்கு இயற்கை பல கொடைகளை வழங்கியுள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்கன; இளநீரும், வெள்ளரிப் பழமும் ஆகும். வையச்சேரியைச் சுற்றியுள்ள வயல்களில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் பிஞ்சு வெள்ளரிக்காயும், மே மாதத்தில் வெள்ளரிப்பழமும் கிடைக்கும். இந்த வெள்ளரிப் பழம் பழுத்தால் தெறித்து விடும். ஆகவே, அவற்றை பனை ஓலைகளில் சுற்றி வீதி தோறும் எடுத்துச் செல்வர். கிராமத்தில் எங்கு நோக்கினும் புஞ்சைத் திடல்கள் காணப்படும். இந்தத் திடல்களில் நான்கு பக்கங்களிலும் தென்னை மரங்கள் நடப்பட்டிருக்கும். தற்போது நாம் எட்டு ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை கொடுத்து வாங்கி இளநீரைச் சுவைத்து வருகிறோம். ஆனால் கிராமங்களில் அப்போதெல்லாம் இரண்டணாவிற்கு ***(இன்றைய 12 பைசாவிற்கு சமம்.)*** ஒரு இளநீர் கிடைக்கும். இயற்கை மனிதர்களுக்கு அளித்த பெரியதொரு பரிசு இளநீராகும்.

தெங்கு அல்லது தென்னை தமிழர்களுக்கு மிகவும் அறிமுகமான தாவரமாகும். இது பிலிப்பைன்ஸ், பசிபிக் தீவுகளில் தோன்றி இலங்கை வழியாகக் கேரளத்தையும் தமிழ் நாட்டையும் அடைந்திருக்க வேண்டும். வடஇந்தியர்களுக்கு தென்னை பற்றி இடைக் காலத்தில்தான் தெரியவந்துள்ளது. இதன் பெயர் இதன் உறுப்புகளின் பெயர் தென்னிந்திய

மொழிகளில் பின்வருமாறு: தென்னை மரம், தென்னை, தேங் காய் ***(தமிழ்)***, தெங்கு ***(தமிழ், மலையாளம், கன்னடம்)***, தெங்காயி ***(தெலுங்கு)***, தெங்கினகாயி ***(கன்னடம்)***. இலங்கையிலும் இதன் பெயரைக் குறிக்கும் சொல் தெற்குத் திசையின் அடிப் படையில் அமைந்ததாகும். அனைத்துச் சொற்களுக்கும் வேர்ச் சொல் 'தென்' ஆகும்; அதாவது இது இந்தியாவிற்கு அதன் தெற்கில் அமைந்துள்ள ஒரு நாட்டில் இருந்து வந்தது என்பது தெளிவு. இவை பிலிப்பைன்ஸ், பாலினீசியா அல் லது பசிபிக் தீவுகள் ஆகியவைகளாக இருக்க வேண்டும்;

ஏனெனில் இங்கெல்லாம் தென்னை இயல்புத் தாவர மாக வளர்கிறது. அங்கிருந்து கடல் மூலம் பரவியோ, கடல் வாணிகம் மூலமாகவோ இது இலங்கையையும், கேரளா வழி யாகத் தமிழகத்தையும் அடைந்திருக்க வேண்டும். இதன் கார ணமாகவே கேரளாவில் இன்றும் பரவலாக உள்ள தெங்கு என்ற பெயரில்தான் தமிழகத்திலும் இது முதன் முதலில் அழைக்கப்பட்டது. தென்னையைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் தெங்கு ***(தென்னங்காயாகிய நுங்கு தேனை (இனிப்புத் திரவத்தை) அதிகமாகத் தன்னோடு சேர்த்து வைத்திருப்ப தால், தேன் + நுங்கு என்பது தெங்கு என மாறிவிட்டது என்றும், தேங் காய்க்குள்ளும் இனிப்பான தேன்சுவை நீர் இருப்பதால் முதலில் தேன் காய் என்றும் பின்னால் மருவி தேங்காய் என்று அழைக்கப்பட்டது என்றும் ஒரு சிலர் கருதுகின்றனர். எனினும், தென்னை மற்றும் தெங் கின் வேர்ச்சொல் 'தென்' என்பதில் ஐயப்பாடு இல்லை; 'தேன்' வேர்ச் சொல்லாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு)*** என்ற பெயரில் தான் காணப்படுகின்றன. குறிப்பாக கி.பி.250க்குப் பின்னால் எழுதப்பட்ட திருமுருகாற்றுப்படையில் தெங்கு பற்றி ***(தென்னை என்ற பெயரால் அல்ல) ('தென்னை' என்ற சொல் நால டியாரில் முதன் முதலில் காணப்படுகிறது: 'இடையாயார் தென்னை அனையர்')*** இரண்டு குறிப்புகள் உள்ளன.



கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பக்தி இலக்கியத்திலும், கோயில்களில் தேங்காய் உடைத்தல் பற்றிய குறிப்புகள் இல் லை. ஆனால், 7ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் தெங்கு நன்கு அறிமுகமாயிருந்தது. முதலாம் நந்திவர்மனின் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தண்டந்தோட்டம் செப்பேடு களில் 'இம்மனை உள்ளிட்ட தெங்கும் பனையும் ஈழவர் ஏறப் பெறாராகவும்' என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. 'தெங்கு நின்ற நந்தவனம்' என்ற தொடரையும் இந்நூற்றாண்டில்தான் நாம் காண்கிறோம். கி.பி.10ஆம் நூற்றாண்டு வரை கூட தேங்காய் இறைவனுக்குப் படைக்கப்படவில்லை.

## 200) இளநீர் இனிப்பதேன்?

தென்னை மரத்தின் வித்து உண்டாகுவதற்கு அடிப்ப டையாக அமைந்துள்ளது இளநீர். இதனை தாவர இயலார் Endosperm பகுதி என்று குறிப்பிடுவர். பூத்து மலர்ந்து காயாகிப் பழமாகும் அனைத்து தாவர வகைகளிலும் வியப் படையச் செய்யும் முறையில் கருக்கள் உருவாகின்றன. மனித இனப் பெருக்கத்திற்கு பெண்ணின் கர்ப்பப்பையில் X Chromosome மற்றும் Y Chromosome ஆகிய இரண் டும் இணைந்து கருமுட்டை உருவாகிறது. ஆனால் தென்னை யிலோ ஒரு ஆண் Chromosome இரண்டு பெண் Chro mosome-களோடு இணைந்து கரு உண்டாக்கப்படுகிறது. பூத்துக் காய்த்துப் பழுக்கும் தாவர இனங்கள் அனைத்திலும் இந்தச் செயல் காணப்படுகிறது. இவற்றில் கரு உருவாவத ற்கு மூன்று Chromosome-கள் தேவைப்படுகின்றன.

இவ்வாறு மூன்று Chromosome இணைவதை Nuclear, Cellular, Helobial என்று வகைப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய தாவரயினங்கள் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் இவ்வுலகில் உள்ளனவாகக் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய தாவர இனங்களுக்கு Angiosperm என்று பெயரிடப்பட்டு ள்ளது.

தென்னை மரத்தில் உண்டாகும் வித்துக்களின் உற்பத்தி Nuclear Type வகையைச் சார்ந்ததாகும். இளநீர் 50 மில்லிமீட்டர் நீளம் கொண்டதாய்க் காணப்படும் போது அவற்றில் வெவ்வேறு வகையைச் சார்ந்த உயிரணுக்கள் மிதந்த நிலையில் அமைந்துள்ளன. இவையே தேங்காய் ஓட்டின் மீது படிகின்றன. தேங்காய் 100 மில்லிமீட்டர் நீளம் கொண்டதாக வளரும் போது ஓடுகளில் படிந்த உயிரணுக்கள் வெள்ளை நிற திடப் பொருளாகப் படிமம் கொள்கின்றன. இந்த வெள்ளைப் படிமத்தின் புறத்தே அமைந்துள்ள நீரே இளநீராகும். அதில் உள்ள உயிரணுக்கள் பல்லாயிரக்கணக்காகப் பெருக்கமடைகின்றன. அவற்றில் Ariginine, Alanine, Cystine and Serine ஆகிய அமினோ அமிலங்கள் அதிக அளவில் உற்பத்தி ஆகின்றன.

***(தாவரம், மனிதன், விலங்கு ஆகியவற்றின் வடிவத்தில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் அமினோ அமிலங்கள் தேவை. மரபணுக்கள் என்று அழைக்கப்படும் DNA (Deoxyri bonucleic acid) அமினோ அமிலங்களைக் கொண்டது. அமினோ அமிலங்கள் இல்லையேல் வாழ்க்கையே இல்லை எனலாம். சிறுவர்களுக்கு L-Isoleucine 90%, L-Lysine 90%, L-Threonine 90%மும் அவர்கள் உண்ணும் உணவில் அமைந்திருக்க வேண்டும். இவையே வளர்ந்த நிலையில் முறையே மனிதனுக்கு 10.4, 8.8, 5.5-பெண்களுக்கு 5,2,3.3, 3,5 ஆக அமைய வேண்டும்.)*** இளநீரிலுள்ள புரதச் சத்து பசும்பாலில் அமைந்துள்ள புரதச்சத்தை விட பன்மடங்கு உயர்ந்தது. மேலும் இளநீரிலுள்ள Glucose உடலுக்குத் தேவையான சக்தியையும் அளிக்கிறது. ***(நாம் உட்கொள்ளும் உணவிலிருந்து Glucose பிரித்தெடுக்கப்பட்டு இரத்த ஓட்டத்துடன் கலந்து உடலின் பல்வேறு பாகங்களுக்குக் குறிப்பாக மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அதனால்தான் நாம் உணவு உட்கொள்ளாத போது சோர்வினையும், உட்கொண்ட பின் புத்துணர்ச்சியையும் பெறுகிறோம்).***



இளநீரில் பொட்டாசியம் என்ற உலோக தாதுப் பொருள் அமைந்துள்ளது. மேலும் இளநீரில் வைட்டமின்-சி எனப்படும் Ascorbic Acid 2.2 to 3.7 mg/100cc அமைந்துள்ளது. இளநீர் முற்றிய தேங்காயாக வளர்ச்சியடையும்போது அதில் புரதச் சத்துக்கள் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன.

## 201) எந்தப் பாடத்தில் தேர்வானாலும் எனக்குக் கவலையில்லை

மார்ச் 15ஆம் நாள் 1957ஆம் ஆண்டிற்கான புகுமுக வகுப்பிற்கான பல்கலைக்கழகத் தேர்வு ஆரம்பமாயிற்று. தேசியக் கல்லூரி மாணவர்களுக்கு தேர்வு புனித சூசையப்பர் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள லாலி ஹாலில் நடைபெற்றது. என்னுடைய பதிவு எண்: 8642 ***(இந்த எண்ணை எவ்வாறு ஞாபகத்தில் வைத்துக் கொண்டுள்ளேன் என்பதற்கான விடை இந்த எண்ணிலேயே இருக்கிறது.)*** லாலி ஹால் 800 பேர் உட்கார்ந்து கொண்டு தேர்வு எழுதக் கூடிய வசதி கொண்டது. அந்த ஆண்டு நிலவிய கடும் கோடையினால் இரவு நேரங்களில் குறிப்பாக 7 முதல் 10 மணி இடைப்பட்ட நேரத்தில் அவ்வப்போது ஒரு மணி நேரத்திற்கு மின்வெட்டு அமுலில் இருந்தது. இதனால் மாணவர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளானார்கள். தேர்வை எதிர்கொள்வதற்கு முன்னதாகவே பாடக்குறிப்

புகளை பலமுறை பயின்று வந்ததால் தேர்வைப் பற்றிய எந்த அச்சமும் நான் கொள்ளவில்லை.

தமிழ் 2ஆம் தாள் தேர்விற்கு முதல் நாள் நான் மட்டும் திரைப்படம் பார்க்கச் சென்றிருந்தேன். திருச்சி பெரியகடைத் தெருவில் அமைந்திருந்த வெலிங்டன் தியேட்டரில் ‘மாயாபஜார்’ படத்திற்கு சென்று எந்தக் கவலையும் கொள்ளாமல் அடுத்த நாள் தேர்வை எதிர் கொண்டேன்.

## 202) மாயா பஜார்

அந்தக் கால கட்டத்தில் புகழ் பெற்ற திரைப்படத் தயாரிப்பு நிறுவனமாக விளங்கி வந்தது விஜயா புரொடக்ஷன்ஸ். இவர்களுக்குச் சொந்தமான வாஹினி படப்பிடிப்பு அரங்கில் பல தரமுள்ள படங்கள் படமாக்கப்பட்டுள்ளன. மாயா பஜார் படத்தில், நடிக நடிகையர்: என்.டி. ராமாராவ், ஜெமினி கணேசன், எஸ்.வி. ரங்காராவ், தங்கவேலு, டி.பாலசுப்ரமணியம், ஆர்.பாலசுப்ரமண்யம், நம்பியார், சாவித்திரி, ருஷ்யேந்திரமணி, ராஜகாந்தம், லட்சுமி பிரபா, சந்தியா, டி.பி. முத்து லட்சுமி மற்றும் பலர் நடித்திருந்தனர். கதை: பிங்களி நாகேந்திரராவ், வசனம், பாடல்கள்: தஞ்சை ராமையாதாஸ், இசை: கண்டசாலா, டைரக்ஷன்: கே.வி. ரெட்டி. இத்திரைப்படத்தில் சுவைமிக்க நிகழ்ச்சிகளைக் குழப்பமின்றிக் கதையாக்கிய பிங்களி நாகேந்திரராவின் திறமையும், டைரக்டர் கே.வி.ரெட்டி, திரைக்கதை அமைப்புக்கு உதவி புரிந்த தன்மையும், இந்தப் படத்தைப் பார்க்கும் போது தெரிய வரும். நட்சத்திர நடிகர்கள் பலரைப் பாத்திரங்களுக்கேற்ப அமர்த்தி, அவர்களிடம் நல்ல நடிப்பை வரவழைத்துள்ளார் இயக்குனர். நடிக-நடிகையரும் திறம்பட நடித்துள்ளார்கள். ஸ்ரீகிருஷ்ணனாக ராமாராவும், கடோத்கஜனாக ரங்காராவும் நடித்து ரசிகர்களைக் கவர்ந்தனர். வத்சலாவாகத் தோன்றிய சாவித்திரி, மாய வத்சலாவாக மாறி ரங்காராவ் பாணியில் நடித்திடும் போது ‘ஆகா’ என்று வியக்காதவர்கள் இல்லை. தரமான ஒளிப் பதிவும் ஒலிப்பதிவும் அரங்கக் காட்சிகளும் தந்திரக் காட்சிகளும் இந்தப் படத்துக்கு மிகவும் துணை புரிந்தன. இனிமையான இசையமைப்பும் பெரும்பங்கு வகித்துள்ளது.



தொழில்நுட்பக் கலைஞர்களின் கூட்டு முயற்சி இந்தப் படத்தின் வெற்றிக்கு ஒரு காரணமாகும். கண்டசாலாவின் குரலில் ‘நீதானா என்னை நினைத்தது நீதானா என்னை அழைத்தது’, ‘ஆஹா இன்ப நிலாவினிலே ஓஹோ ஜகமே ஆடிடுதே’, திருச்சி லோகாநாதனின் பின்னணிக் குரலில் பாடப்பட்ட ‘கல்யாண சமையல் சாதம்’ போன்ற பாடல்களும் அவற்றின் இசை அமைப்பும் ரசிகர்களை மிகவும் கவர்ந்தன. மார்க்கஸ் பார்ட்லேயின் ஒளிப்பதிவு, கண்டசாலாவின் இசை, ராமாராவ் ***(ஸ்ரீகிருஷ்ணன்)*** ரங்காராவ் ***(கடோத்கஜன்)*** சாவித்திரி ***(வத்சலா),*** அபிமன்யுவாக ஜெமினிகணேசன் ஆகியோரின் நடிப்பும் கே.வி. ரெட்டியின் சீரான இயக்கமும் பட உலகினரே வியந்து பாராட்டும் வண்ணம் அமைந்திருந்தன. தந்திரக் காட்சிகள், மாயா பஜார் காட்சிகள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. இது காலத்தால் அழிக்க முடியாத ஓர் திரைக் காவியம். எல்லாத் தலைமுறையினரும், எந்தக் காலத்திலும் பார்த்து மகிழக் கூடிய சிறந்ததோர் திரைப்படம்.

## 203) கணிதத்தில் நூற்றுக்கு நூறு

கணிதக் கேள்வித்தாளில் கொடுக்கப்பட்டிருந்த அனைத்து கேள்விகளுக்கும் இரண்டரை மணி நேரத்தில் விடையளித்தேன். அந்தக் காலகட்டத்தில் அனைத்து கேள்விகளுக்கும் ஒருவர் விடையளிக்கலாம். அதில் சரியான

விடைகளுக்கு மதிப்பெண் வழங்கப்படும். கணிதத் தேர்வில் நான் நூற்றுக்கு நூறு மதிப்பெண் கிடைக்கும் என்ற உறுதியுடன் விடைத்தாளை ஆசிரியரிடம் கொடுத்தபோது அதை அவர் வாங்க மறுத்து விட்டார். புனித சூசையப்பர் கல்லூரியில் தேர்வுக்காக ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைவதற்கு முன்பு விடைத்தாள்களை வாங்க மாட்டார்கள்.

ஆயினும் நான் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்து விட்டேன் இனிமேல் எழுதுவதற்கு ஒன்றுமில்லை என்றுகூறி அவர் கையில் விடைத்தாளைத் திணித்து விட்டு லாலி ஹாலை விட்டு வெளியேறினேன். அனைத்து மாணவர்களின் பார்வை என் மீது திரும்பியது. என்னுடைய சக மாணவர்கள் என்னைக் கடிந்து கொண்டனர் என்பதை முன்னமே தெரிவித்துள்ளேன். நடக்க முடியாமல் முடங்கிக் கிடந்தபோது பாடங்களைப் பலமுறை மனனம் செய்தும், எழுதிப் பார்த்தும், போட்டுப் பார்த்தும் தேர்வுக்கு என்னைத் தயார் செய்து கொண்டதால் எவ்விதக் கலக்கமுமின்றி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற முடிந்தது. அன்றிலிருந்து இன்று வரை அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கும் தகுதியை பெற்ற பிறகே தேர்வு மையத்திற்குள் நுழைவேன்.

## 204) 1957ஆம் ஆண்டு நயா பைசா புழக்கத்தில் வந்தது

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட நாணயங்களும் ரூபாய் நோட்டுகளும் புழக்கத்திலிருந்து வந்தன. சுதந்திர இந்தியாவின் 1950ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் புதிதாக நாணயங்களும் ரூபாய் நோட்டுகளும் வெளியிடப்பட்டன. ஒரு ரூபாய்க்கு 16 அணாக்கள். ஒரு ரூபாய் 192 பைசாக்கள் கொண்டது. இந்த நாணயங்களில் மூன்று சிங்கங்கள் இடம்



பெற்றிருந்தன. மற்றொரு பக்கத்தில் இந்திய நாட்டு விலங்குகள் மற்றும் வேளாண் வளர்ச்சியைக் குறிப்பதான கதிர்களும் பொறிக்கப்பட்டிருந்தன. 1955ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்திய நாணய இயல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது.

தசம முறையை பின்பற்றி ஒரு ரூபாய்க்கு 100 நயா பைசாக்கள் என்ற நாணய முறை உருவாக்கப்பட்டது. நயா பைசா என்ற சொல் 1-6-1964 ஆம் நாள் மாற்றமடைந்து பைசா என்ற சொல்லே வழக்கத்தில் கொண்டு வரப்பட்டது. தசம முறையைப் பின்பற்றி 1-4-1957ஆம் நாள் புதிய நாணய முறை நடைமுறைக்கு வந்தது. இதன்படி ஒரு ரூபாய்க்கு 100 நயா பைசாக்கள், 25 நயா பைசாக்கள் 4 அணா என்ற மாற்று முறை கொண்டு வரப்பட்டது. வழக்கம்போல் அரசியல் கட்சிகள் இந்த நாணய மாற்று முறைக்கு எதிர்ப்பைத் தெரிவித்தன. பாமரர்கள் பெரும் இன்னலுக்கு ஆளானார்கள். ஆயினும் கால ஓட்டத்தில் இவையெல்லாம் மறைந்து ஒழிந்தன. தற்போது நூறு ரூபாயின் வாங்கும் சக்தி (Purchasing power) அக்காலத்திய ஒரு ரூபாய்க்குச் சமம். 1992இல் 10 பைசா நாணயத்தின் வடிவம் மட்டுமல்ல அதன் மதிப்பும் சுருங்கியது.

## 205) தேசியமயமாக்கப்பட்ட ஆயுள் இன்ஷுரன்ஸ் தொழில்

ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் பல மோசடிகளில் ஈடுபட்டு வந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு (1939-45) அனைத்து நாடுகளிலும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. நாட்டில் நிகழ்ந்த சுதந்திரப் போராட்டங்கள் பொருளாதாரத்தைப் பாதிப்படையச் செய்தது. இதன் விளைவாக சில இன்ஷுரன்ஸ் கம்பெனிகள் இரவோடிரவாக மூடப்

பட்டன. அவையெல்லாம் திவாலான கம்பெனிகளாக அறிவிக்கப்பட்டன. இதனால் மக்கள் தனியார் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளைக் கண்டு அச்சம் கொண்டனர். நாட்டில் பணப் புழக்கத்தைத் தடுத்து முதலீடு செய்யுமளவிற்கான வலிமை கொண்டவைகளாய் இந்த இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் ஒரு காலத்தில் விளங்கி வந்தன. இத்தகைய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டைக் காப்பதற்காக மத்திய அரசின் நிதி அமைச்சரான சிந்தாமணிராவ் தேஷ்முக்கின் பரிந்துரைப்படி ஓர் இரவில் நாட்டிலுள்ள அனைத்து இன்ஷூரன்ஸ் கம்பெனிகளும் தேசிய உடைமையாக்கப்பட்டதாக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

பண முதலைகளும் கொள்ளையடிப்போரும் நிதியமைச்சரின் இந்தச் செயலுக்கு பெருத்த கண்டனம் தெரிவித்தனர். 19-6-1956ஆம் நாள் Life Insurance Act of India பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேறியது. 1-9-1956ஆம் நாள் L.I.C., உருவானது. ஐந்து பிராந்திய அலுவலகங்கள், 33 வட்டார அலுவலகங்கள், 212 கிளை அலுவலகங்களுடன் L.I.C., தன் பணியைத் தொடங்கியது. தேசிய மயமாக்கப்பட்ட சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக L.I.C.of India இன்றும் திகழ்ந்து வருகிறது.

## 206) கொள்கைக்காகப் பதவியைத் துறந்த C.D.தேஷ்முக்

14-1-1896ஆம் ஆண்டு பிறந்த C.D. தேஷ்முக் ஆங்கிலேயர்கள் நாட்டை ஆண்ட காலத்தில் 1943ஆம் ஆண்டு தொடங்கி ரிசர்வ் வங்கியின் ஆளுனராகப் பணியாற்றி வந்தார். இவர் ஒரு I.C.S. அதிகாரி ஆவார். இவருடைய மனைவி திருமதி. துர்காபாய் தேஷ்முக் மிகச் சிறந்த சமூகப் பணியாளராகத் திகழ்ந்து வந்தார். 1950ஆம் ஆண்டு தொடங்கி



56ஆம் ஆண்டு ஈறாக நேரு தலைமையிலான மத்திய அமைச்சரவையில் நிதி அமைச்சராகப் பணியாற்றியவர்.

1956ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலச் சீரமைப்பு ஆணையத்தின் பரிந்துரைப்படி மற்றைய மாநிலங்கள் உருவானபோது மராத்தி மற்றும் குஜராத்தி பேசும் மக்களிடையே நிகழந்த பாம்பே யாருக்குச் சொந்தம் என்ற போராட்டத்தின் காரணமாக மஹாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்கள் உருவாக்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து C.D. தேஷ்முக் தம் பதவியைத் துறந்தார். திரு T.T. கிருஷ்ணமாச்சாரி புதிய நிதி அமைச்சராக பொறுப்பு ஏற்றுக் கொண்டார். நாடு ஒரு மிகச் சிறந்த நிதியமைச்சரை இழந்தது. திரு.C.D.தேஷ்முக் 1982ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி மரணமடைந்தார்.

## 207) 1957ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட தி.மு.க. எடுத்த முடிவு

1956ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மாநில புனரமைப்புச் சட்டத்தின்படி 1957ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாநில சட்டசபைக்கான இரண்டாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் முதன்முறையாகப் போட்டியிட்ட தி.மு.க. 15 சட்டசபைத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. 1957ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் திருச்சிராப்பள்ளி 1வது தொகுதியில் இ.பி. மதுரம் சுயேச்சையாக 21,022 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். திருச்சிராப்பள்ளி 2வது தொகுதியில் எம்.கல்யாணசுந்தரம் 19026 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். ஸ்ரீரங்கம் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வாசுதேவன் வெற்றி பெற்றார். 1956-ஆம் ஆண்டு ஜூன் மாதம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு திருச்சி நகரில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்தவர்கள் எல்லோரையும் ஒரே மாதிரியான இரண்டு கருப்பு, சிவப்புப் பெட்டிகள் வரவேற்றன. திராவிட முன்னேறக் கழகம் தேர்தலில் போட்டியிட வேண்டுமா? கூடாதா? இதுதான் கேள்வி. போட்டியிடலாம் என்கிறவர்கள் சிவப்புப் பெட்டியிலும், போட்டியிட வேண்டாம் என்று நினைக்கிறவர்கள் கருப்புப் பெட்டியிலும் தங்களுடைய வாக்குகளைப் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப் பட்டது. பதிவான வாக்குகளின்படி தி.மு.க. தேர்தலில் போட்டியிடலாம் என்று ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். சுமார் நான்காயிரம் பேர் போட்டியிட வேண்டாம் என்று தங்கள் மறுப்பைத் தெரிவித்திருந்தார்கள்.

1957ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், காங்கிரஸை எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடும் என்கிற செய்தியை அன்றைய தினமே அறிவித்தார் திரு. அண்ணாத் துரை. அந்தத் தேர்தலில், நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் போட்டியிடத் தீர்மானித்தது தி.மு.கழகம். திரு. அண்ணாதுரை காஞ்சிபுரத்திலும், திரு.நெடுஞ்செழியன் சேலத்திலும், திரு.மு.கருணாநிதி குளித்தலையிலும், திரு.க.அன்பழகன் எழும்பூரிலும் போட்டியிட்டனர். திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுடைய தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் அனைத்திலும், காங்கிரஸைத்தான் குறி வைத்துத் தாக்கியது. தமிழகக் காங்கிரஸ், எப்போதும் மத்திய அரசுக்குப் பணிந்துதான் நடக்கும். தமிழர்களின் நலம் கருதாது என்கிற குற்றச்சாட்டை முன் வைத்த தி.மு.க., 'தமிழர்களின் ஆட்சி வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்தது. 1957ஆம் ஆண்டு தேர்தலையொட்டி, தி.மு.கழகம் முன் வைத்த முக்கியமான வாக்குறுதிகளில் சில:

(1) மாநிலங்களுக்கு அரசியல் சமத்துவம், மத்திய அரசின் அதிகாரங்களுக்கு வரம்பு (2) நிலச்சீர்திருத்தத்தை வலியுறுத்துவது. (3) ஹிந்தித் திணிப்பை எதிர்ப்பதுடன் எல்லோரும் தாய் மொழி தான் படிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவது.



அதிகப் பணபலம் இல்லாவிட்டாலும், பெரும்பான்மைத் தலைவர்கள், தொண்டர்கள் தங்களுடைய கைக் காசைச் செலவழித்துத் தேர்தல் பணிகளைச் செய்தார்கள். தி.மு.க. அப்போது தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப் படாத கட்சி என்பதால், அதன் வேட்பாளர்கள் சுயேச்சைச் சின்னங்களில்தான் போட்டியிட வேண்டியிருந்தது. சுயேச்சை வேட்பாளர்களுக்காகத் தரப்பட்டிருந்த சின்னங்களுள், சுவர்களில் வரையச் சுலபமான, திராவிட முன்னேற்றக் கொள்கையின் நோக்கத்தைப் புலப்படுத்தும் ஒரு சின்னத்தை, அவர்கள் தேர்வு செய்ய வேண்டியிருந்தது. இப்படி சிந்தித்து அவர்கள் தேர்ந்தெடுத்த சின்னம், உதயசூரியன். கூடுமானவரை கழகத் தோழர்கள் எல்லோருக்கும் அந்தச் சின்னம் கிடைக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார் தேர்தல் அதிகாரி.

அப்போதும், நெடுஞ்செழியன் உள்ளிட்ட சிலருக்கு அந்தச் சின்னம் கிடைக்கவில்லை. மொத்தம் 112 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்ட தி.மு. கழக வேட்பாளர்கள், பதினைந்து இடங்களில் வென்றார்கள். பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களோடு, பாராளுமன்றத் தேர்தலிலும் இரண்டு இடங்களைக் கைப்பற்றியது திராவிட முன்னேற்றக் கழகம். ஈ.வெ.கி. சம்பத், ஆர். தர்மலிங்கம் ஆகிய இருவரும் கழகத்தின் முதல் இரு பாராளுமன்ற உறுப்பினர்களானார்கள். 1957ஆம் ஆண்டு ஏப்ரல் 13ம் நாள், காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் அரசு பதவியேற்றது.

## 208) B.Sc. Chemistryஇல் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தேன்

1957ஆம் ஆண்டு ஜூன் மாதம் பல்கலைக் கழக தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. திருச்சி மையத்திலிருந்து தேர்வை எதிர்கொண்ட புனித சூசையப்பர் கல்லூரி, தேசிய கல்லூரி, உருமு தனலெட்சுமி கல்லூரி மற்றும் ஜமால் முகமது கல்லூரி ஆகிய ஆடவர் கல்லூரிகளிலிருந்து சுமார் ஆயிரம் பேர் புகுமுக வகுப்புத் தேர்வினை எதிர் கொண்டனர். அந்த ஆயிரம் மாணவர்களில் 4 பேர் மட்டுமே முதல் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றனர். அவ்வாறு தேர்ச்சிப் பெற்றவர்களில் நானும் ஒருவன் என்பதை இன்றும் பெருமையுடன் எண்ணிப் பார்க்கிறேன். கல்லூரியில் மதிப்பெண் சான்றிதழை வாங்கிக் கொண்ட அன்றைய தினமே பி.காம்., வகுப்பில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு அறிமுகமில்லாத யாரோ ஒருவர் ‘தம்பி நீ நல்ல மார்க் வாங்கியுள்ளாய் பி.காம்., படித்தால் உனக்கு எதிர்காலத்தில் வேலை கிடைக்காது செயின்ட் ஜோசப் காலேஜில் இந்த வருஷம் பி.எஸ்.சி. கெமிஸ்ட்ரி வகுப்புகள் தொடங்க உள்ளன. பி.எஸ்.சி., கெமிஸ்ட்ரி படித்தால் உனக்கு உடனே வேலை கிடைக்கும் ஆகவே அந்தக் காலேஜிற்குப் போய் அப்ளிகேஷன் கொடு என்று அறிவுரை வழங்கினார். இந்த அறிவுரையே என் வாழ்க்கையின் திருப்புமுனையாய் மாறியது. என் தந்தையாரைக் கலந்தாலோசித்து எந்த முடிவையும் எடுக்க இயலாது. அவருக்கு இன்ன படிப்பு படித்தால் இன்ன வேலை கிடைக்கும் என்பதைப் பற்றியெல்லாம் தெரியாது. ஆகவே நானே முடிவெடுத்து அதற்கான விண்ணப்பப் படிவத்தை செயின்ட் ஜோசப் காலேஜில் கொடுத்து விட்டு ஊர் திரும்பினேன்.

**(3ஆம் பகுதி முற்றிற்று)**